# பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்

# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – 636 011.

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**மூன்றாமாண்டு**

**தாள் – 14 : தகவல் தொடர்பியலும் நாட்டுப்புறவியலும்**

**பாடமாக்கம்**
முனைவர் சு. வேலாயுதன்
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636 011

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**மூன்றாமாண்டு**

**தாள் – 14 : தகவல் தொடர்பியலும் நாட்டுப்புறவியலும்**

அலகு – 1 தகவல் தொடர்பு கொள்கை
அலகு - 2 இதழியல்
அலகு - 3 செய்தி
அலகு – 4 நாட்டுப்புற இலக்கியம்
அலகு – 5 நாட்டுப்புறக் கலைகள்

தகவல் தொடர்பியலும் நாட்டுப்புறவியலும்

அலகு – 1

தகவல் தொடர்பு கொள்கை - தகவல் தொழில் நுட்பம் - தகவல் தொடர்பு சாதனங்கள் - தொலை உணர்தல் - தகவல் மையங்கள்- சைகை மொழி - குறிப்பறிதல் - கணினியின் பங்கு - தமிழ் இணையம் - வானொலி- தொலைக்காட்சி - திரைப்படம் - தொலைபேசி.

அலகு -2

இதழியல் - அச்சுக் கலையின் தோற்றம்- தமிழக இதழ்கள் - இதழ் வகைகள் - இதழியல் சட்டங்கள் - தணிக்கை முறைகள் - இதழியலும் வணிகமும் - இதழியலும் பொறியியலும் - இதழியலும் ஆளுமையும்

அலகு-3

செய்தி - செய்தி களங்கள் - வகைகள் - செய்தியாளர்கள் - செய்தி சேகரிப்பு – நேர்க்காணல் - செய்தித்தலைப்பு – தலையங்கம் - விளம்பரம் - செய்தி நிறுவனங்கள் - கடிதங்கள் - படங்கள் - இதழியல் மொழிநடை.

அலகு – 4

நாட்டுப்புற இலக்கியம் - ஏட்டிலக்கியங்களில் நாட்டுப்புறவியல் தாக்கம் - நாட்டுப்புறக் கதைகள்.

அலகு – 5

நாட்டுப்புறக் கலைகள் - கும்மி, கோலாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், பெய்க்கால் குதிரை, தோற்பாவை, நாட்டுப்புற நம்பிக்கைகள் - நாட்டுப்புறவியலும் மொழியியலும்

**பாடநூல்கள் :**

1. கி.ராசா. ‘மக்கள் தகவல் தொடர்பியல்’ (பார்த்திபன் பதிப்பகம், திருச்சி)
2. வெ. கிருட்டிணசாமி ‘ தகவல் தொடர்பியல்’ (மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108)
3. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு (மணிவாசகர் பதிப்பகம், சென்னை)

பார்வை நூல்கள் :


1. அந்தோனி இரா. டாக்டர் ஆ.பி. ‘இதழியல் ஓர் அறிமுகம்’ ஆரோக்கிய பதிப்பகம், திருச்சி 1986.
2. அரங்கசாமி டாக்டர். பழநி, ‘செய்தி உலகம்’, முத்தமிழ் நிலையம், மதுரை-1986.
3. ஆதித்தனார். சி.பா. ‘பத்திரிக்கை எழுத்தாளர் கையேடு’ ராணிமுத்து சென்னை-1978.
4. இளங்கோவன், மா.ரா. ‘ இந்திய இதழ்கள்’. சேகர் பதிப்பகம் சென்னை-1981.
5. கலைவாணி. S ‘ இதழியல் உத்திகள்’ ஸ்ரீ பராசக்தி வெளியீடு, ஸ்ரீ.பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம் 1982.
6. கிரி. பி.வி.வி, ‘செய்தி இதழ்களின் கதை’ சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1981.
7. குளத்தூரான். கூ, ‘ தமிழ்ப் பத்திரிக்கைகள்’ ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் , நாகர்கோவில் 1975.
8. கோதண்டபாணி, இரா. ‘இதழியல்’ கற்பக நூலகம் , மதுரை
9. சம்பந்தன் , மா.சு. ‘ அச்சுக்கலை’, தமிழர் பதிப்பகம், சென்னை,1976.
10. சம்பந்தன், மா.சு ‘ தமிழ் பத்திரிக்கை’, தமிழர் பதிப்பகம், சென்னை.
11. சாமி சு.மா ‘ தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி’, நவமணி பதிப்பகம், சென்னை-1987.
12. செல்லையா.எம் ‘ செய்திகள்’ – பழனியப்பா பிரதர்ஸ் திருச்சி1978
13. சோமலெ ‘ தமிழ் இதழ்கள்’ – சென்னை பல்கலைக்கழகம் , சென்னை 1975.
14. தமிழரசி.து, டாக்டர் விஜயலெட்சுமி.க, இ. ரங்கநாதன். என் ‘ ஒரு நாழிதல் உருவாகிறது’, சங்க பலகை வெளியீடு, மதுரை 1987.
15. பாட்டாபிராமினன். க, ‘ தமிழ் பத்திரிக்கைகள்’ அருணோதயம் சென்னை 1968.
16. புரட்சி கவிஞர் பாரதிதாசன் ‘ பாரதிதாசன் கவிதைகள்’ செந்தமிழ் நிலையம் இராமச்சந்திரபுரம் 1985.
17. மருதகாலகவுண்டர் வி.ந. ‘இந்திய பத்திரிக்கை தொழிலில்’ P.G Pavi & Co சென்னை 1935
18. வேம்புஸ்வாமி, ‘செய்திக்குப்பின் , தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு, சென்னை 1981.

## அலகு – 1

## தகவல் தொடர்பு கொள்கை

### அறிமுகம்

உணவு, உடை, உறையுள் போன்றே ஒவ்வோர் உயிர்க்கும் தகவல் தொடர்பு (communication) இன்றியமையாததாகும். தகவல் தொடர்பு அறுந்து போனால் (Ex-communicate) வாழ்க்கைத் தொடர்பே அறுந்து போகும்.

தகவல் தொடர்பு என்பது மனிதனுக்கு மட்டுமே உரித்தானதன்று. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூட தகவல் தொடர்பு உணர்வுகள் உள்ளன. அவை ஒன்றுக்கொன்று பல்வேறு மூலங்கள் வழியாகத் தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன. தேனீக்கள் தம்முடைய ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு செய்தியைச் சொல்லுகின்றன. இதனைத் தேனீமொழி (Bee languge) என்று அழைக்கின்றனர். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்ற பழந்தொடரும் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது. யானைகளின் மொழியைக் கற்று, பாகர்கள் அவற்றை அடக்கி ஆளுகின்றனர் என்பதை அறிவோம். சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டுள் ஒன்றான முல்லைப்பாட்டில்,

சுவை முட்கருவியின் வடமொழி பயிற்றி

கல்லா இளைஞர் கவளம் கைப்ப" ( முல்லைப்பாடல் **35–36** )

என்று போர்க்களத்தில் புண்பட்ட யானைகளுக்கு ஆறுதல் மொழி சொல்லி அவற்றுக்கு உணவு தந்த பாகர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது.

### தகவல்

புறத்தூண்டுதலின் விளைவாக ஓர் உயிரினம் காட்டுகின்ற எதிருணர்ச்சிக் குறிப்பே தகவல் எனப்படுகிறது. இது தகவல் என்பதற்கான அடிப்படை விளக்கம் ஆகும். புறத்தூண்டுதல் உயிரினத்தின் மீது எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையெனில் அங்கு எதிர் உணர்ச்சிக் குறிப்பு இருக்காது. இதுபோன்ற சமயங்களில் தகவல் சென்று சேரவில்லை என்றே பொருள் கொள்கிறோம். உயிருள்ள ஒரு பாம்பை ஒரு கம்பினால் தொட்டால் அந்தப் புறத்தூண்டுதலின் விளைவாகச் சீறுவதன் மூலம் தனது எதிருணர்ச்சியை அப்பாம்பு காட்டுகிறது. அதே சமயம் மயக்க நிலையில் உள்ள பாம்பைக் கையால் தொட்டால் கூட அது எந்தவித பாதிப்பையும் வெளிப்படுத்துவதில்லை.

வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போதோ, கூட்டத்தில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போதோ அதைக் கேட்பவர்கள் அசையாமல், முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் அமர்ந்திருந்தால், சொல்பவர் தரும் செய்தி அவர்களிடத்தில் சென்று சேரவில்லை என்று பொருள்படும் . எனவே தகவலின் பண்பும் பயனும் எதிர் உணர்ச்சிக் குறிப்பை அல்லது விளைவைப் பொருத்தே கணக்கிடப்படுகிறது.

சொற்கள் மட்டுமே தகவல்களாக அமையும் என எண்ணலாகாது. குறியீடுகளும் தொடு உணர்ச்சிகளும், மெய்ப்பாடுகளும் கூட (Non verbal) தகவல்கள் ஆகின்றன. இவற்றையும் கடந்து இகைப்புத்திறனும் (conduction) உகைப்புத்திறனும் (Convenction) கதிர்வீச்சுகளும்கூட (Radiation) ஆற்றலைக்

கடத்துகின்ற, கொண்டு செல்கின்ற தன்மை உடையதால் அவற்றையும் தகவல் பண்பு உள்ளவைகளாகக் கருதுகின்றனர்.

**விளக்கம்**

குறைந்த செலவில்அதிகமான தகவல்களைப் பெரும்பாலான மக்களுக்கு வழங்கும் முறையே மக்கள் தொடர்பு எனப்படுகிறது. மக்கள் தகவல் தொடர்பியல் என்பதை ஆங்கிலத்தில் Mass Communication என்று அழைக்கின்றனர். Communis என்பது Common (பொது) என பொருள்படும். இலத்தீன் சொல், பொதுவாக்குதல் (To make Common) பகிர்ந்தளித்தல் (To Share) என்ற பொருள்படுகின்றது. இவ்வாறு பகிர்ந்தளித்தலின் முலம் பொதுமை உணர்வு வலுக்கிறது . ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்ற உணர்வு இதன் மூலம் நிலைபேறடைகிறது. ஓர் இனக்குழு அல்லது சமுதாய உறுப்பினர்களுக்கு இடையே உள்ள உறவுச் சங்கிலி வலுப்பெறுவதற்குத் தகவல் தொடர்பு உதவுகிறது.

**Communication, Communuications**

ஆங்கிலத்தில் Communication, Communications என்ற இருபதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. Communcation என்பது தகவல் தொடர்பின் வழிமுறைகளைக் குறிக்கின்றது. (Process of Communciation) Communications என்பது செய்திகளைக் குறிப்பிடுகின்றது (Mesage conveyed)

எட்வர்ட் சாபிர் (Edward sapir 1935) என்பார், தகவலுக்கும் தகவல் தொடர்பின் வழிமுறைகளுக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை எடுத்துக்காட்டியுள்ளார். எந்தவிதக் கருவிகளின் குறுக்கீடுமின்றி, மக்கள் இயல்பாகச் சொற்களாலோ, குறியீடுகளாலோ மெய்ப்பாட்டினாலோ தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்படும் தகவல்களையே அவர் தகவல்கள் (Communications) என்று அழைத்தார். இதனைத் தகவல் தொடர்பின் முதல்நிலை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கருவிகளின் உதவியோடும் குறிப்பிட்ட வழிமுறைகளைக் கொண்டும் மக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் தகவல்களைக் கருவிவழிப்பட்ட தகவல்கள் (Communication) என்று சாபிர் அழைத்தார். இதனைத் தகவல் தொடர்பின் இரண்டாம் நிலை என்று அவர் குறிப்பிட்டார்.

**மக்கள் தகவல் தொடர்பியல்**

மக்கள் தகவல் தொடர்பியல் என்பதற்குப் பிறிதொரு விளக்கமும் தருகின்றனர். தொழில்துறை சார்ந்த சமுதாயத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட தொழில் நுட்பத் திறனின் உதவியோடு மக்களுக்கு வழங்குவதற்காகப் பொதுத் தகவல்களைத் தயாரிக்கும் முறையே மக்கள் தகவல் தொடர்பியல் எனப்படுகிறது என்று கருதுகின்றனர்.

மக்களுக்கான தகவல்களைத் தயாரித்து வழங்குவதில் இரு குறிப்புகளை மனதில்கொள்ள வேண்டும் என விப் (Wiebe 1952) வலியுறுத்துகிறார். அவையாவன:

1. அனைத்து தரப்பு மக்களுக்கும் தகவல்கள் எளிதில் சென்று சேரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. இத்தகவல்களை மிகவும் குறைந்த செலவில் அவர்கள் பெறுதல் வேண்டும்.

**எட்வர்ட் சாபிர் தகவல்களைப் பின்வரும் இருவகைகளாகப் பிரித்துப் பார்க்கிறார்.**

1. மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதன் மூலமாகவும், பிற தகவல் வாயில்கள் மூலமாகவும், தகவல்களைத் தெரிந்து கொள்வது (புறவழி )
2. தமக்கு ஏற்படும் அனுபவம் , ஞானம், உள்ளுணர்வு ஆற்றல், பிறருடைய நடவடிக்கைகள் ஏற்படுத்திய தாக்கத்தின் வாயிலாகத் தம்மைத்தாமே மாற்றிக் கொள்ளும் தன்மை போன்றவற்றின் மூலமாகத் தகவல்களை உணர்ந்து கொள்வது (அகவழி)

மேயல் (Meier 1956) என்பார் தகவல் தொடர்பினைப் பின்வருமாறு பகுத்துக் காண்கிறார்.

1. ஒருவருக்கொருவர் நேரடியாகக் கொள்ளும் தொடர்பு (Face to face)

   (எ.டு) மணவிழா, பூசை போன்றவற்றின் போது உறவினர்கள் தமக்குள் உரையாடுதலும் கருத்தரங்க உரையாடல்களும்
2. படித்தலின் வழியாகக் கொள்ளும் தகவல் தொடர்பு
3. மனிதனும் இயந்திரமும் கொள்ளும் தகவல் தொடர்பு

   (எ.டு) பலவித மின் அளவுக்கருவிகள் நுண்பெருக்காடி (Mircoscope) முதலியவை
4. மக்கள் கருவிகள் மூலமாகத் தங்களுக்குள் கொள்ளும் தொடர்பு

   (எ.டு) தந்தி, தொலைபேசி, செல்பேசி, வானொலி போன்றவை
5. இந்திரமும், இயந்திரமும் கொள்ளும் தகவல் தொடர்பு

   (எ.டு) முழுவதும் இயந்திரமயமாக்கப்பட்ட (Automation) நிறுவனங்களில் ஊழியர்கள் தமக்குள் கொள்ளும் தகவல் தொடர்பு

**தகவல் தொடர்பின் அடிப்படைகள்**

ஹெரால்ட் வாஸ்வெல் (Herald losswell 1948) என்பார் தகவல் தொடர்பின் அடிப்படைகளாகப் பின்வருவனவற்றைக் கருதுகிறார்.

1. சொல்வது யார் (Who says)
2. எதன் மூலம் சொல்கிறார் (In what channel)
3. எப்படிச் சொல்கிறார் (How?)
4. யாருக்குச் சொல்கிறார் (To whom?)
5. அதன் விளைவு என்ன (With what effect)

இந்த அடிப்படைகளின் வாயிலாக, தகவல் பரிமாற்றத்துக்கு, அனுப்புபவர் (sender who) செய்தி (mesage what) பின்னூட்டு அல்லது எதிர்விளைவு (Feedback) என்பவை இன்றியமையாது வேண்டப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**தகவல் தொடர்பு சாதனங்கள்**

நாளிதழ்களும் (Newspapers) பருவ இதழ்களும் (Magazines) அச்சுவழித் தகவல் தொடர்புச் சாதனங்களாகக் கருதப்படுகின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களுள் அச்சுவழிச் சாதனங்களே மிகவும் மூத்தவை. இவை நீண்ட நெடிய சுவையான வரலாற்றை உடையவை.

தகவல் தொடர்புச் சாதனங்கள் வரலாறு சைகை மொழி முதற்கொண்டு தொடங்குகிறது. சைகை மொழியே (Gesture Language) அனைத்து வகைத் தொடர்பியல் நிலைகளுக்கும் மூலமாக கருதத் தகுவதாகும். ஆதிமனிதன் தன்னுடைய கருத்துக்களைக் சைககைகளின் மூலமாக வெளிப்படுத்தினான்.கை தட்டுதல், கைகோர்த்தல், கைபிடித்தல் ஆகிய சைகைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. எனினும் அவற்றுள்காணப்படும் நுண்ணிய வேறுபாடுகளைக் கூட ஆதிமனிதர்கள் அறிந்திருந்தனர். கைதட்டுதலின் மூலம் ஆதிமனிதர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். கைகோர்த்தலின் மூலம் தமக்குள் நிலவும் கூட்டுறவு மனப்பான்மையை வெளிப்படுத்தினர். கைப்பிடித்தலின் மூலம் தாம் கொண்ட நட்பைப்புலப்படுத்தினர். கைவிரல் சைகையால் காட்டுகின்றஊமை மொழியும் (Deaf and dum language) சைகை மொழியும் வேறு வேறானவை. ஊமை மொழி, எழுத்து மொழியின் மறுவடிவமே ஆகும்.

சைகை மொழியின் வளர்ச்சியாக ஓவிய மொழி (Picture writing) உருவானது. ஆதிமனிதன் தான் வாழ்ந்த குகைகளில் வரைந்த ஓவியங்கள் ஏதோவொரு செய்தியைப் புலப்படுத்தும் வண்ணம் அமைந்தன. எகிப்தியரிடமும் மெக்சிகோ பழங்குடி மக்களிடமும் காணப்படும் ஓவிய எழுத்துக்கள் (Hierograpcs) குகை ஓவிய மொழியின் வளர்ச்சியாகக் கருதத்தகுவனவாகும். சுமோரியாவிலும், பாபிலோனியாவிலும் ஆப்பு வடிவ (Cuniform) எழுத்துக்களாக இவை வளர்ச்சியுற்றன. எழுத்தின் வடிவத்திலும் ஓவியம் போன்ற பொருள் புலப்படுமாறு (Hing shing pictures and Sound) சீனர்கள் இதில் வளர்ச்சி கண்டனர். இது ponetic wrting எனப்படுகிறது.

இத்தகு எழுத்துமுறை குறிப்பிட்ட வட்டாரத்தினர்க்கே புரியும் வகையில் இருந்தது. இவற்றால் சிலபோது நிகழ்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த இயலவில்லை. இந்த இடர்ப்பாடுகளைக் களைவதற்கானமுயற்சியில் இன்றைய ஒலிவடிவ எழுத்துக்கள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்னரேயே சீனர்கள் ஆப்பு வடிவ எழுத்துக்களை அச்சேற்ற முறையைத் தெரிந்திருந்தனர். (கி.பி. 868) இதற்கு முன்னர் கி.பி. 793ல் தாட்கள் தயாரிக்கும் முறையை அராபியர்கள் அறிந்திருந்தனர். இந்தப் பின்னணியில் உலகில் முதல் நூல் சீனாவில் கி.பி. 968ல் அச்சேற்றப்பட்டது. உலோக எழுத்து அச்சுக்களைக் கண்டுபிடிப்பதிலும் சீனர்களே (கி.பி. 1932) முன் நின்றனர். ஆனால் ஜெர்மனியில் கட்டன்பார்க்( Johannes gutabberg 1450) என்பவர் நிறுவிய முதல் அச்சுப் பொறி, தகவலியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகத் திகழ்ந்தது. கடினமாக உழைத்து கையால் எழுதியும், அச்சிட்டும், சில படிகளை உருவாக்கிய நிலைமை தோன்றியது. குருமார்கள் கைகளில் மட்டும் நூல்கள் இருந்த நிலைமை மறைந்து பெரும்பாலார் கைகளில் நூல்கள் தவழும் நிலை வந்தது. மாதா கோவில்களில் மதப்பிரச்சாரத்துக்கு மட்டும் நூல்கள் பயன்பட்டு வந்த நிலைமை தேய்ந்து நாற்சந்தியிலும் கூட்டம் கூட்டமாக நின்று பல நூல்களைப் படிக்கும் பழக்கமும்,

படித்தவற்றைக் காரசாரமாக விவாதிக்கும் பண்பும் வளர்ந்தது. இதுவே பின்னர் தொழிற்புரட்சிக்கும், அமெரிக்கா, பிரான்சு முதலிய நாடுகளின் விடுதலைப் புரட்சிக்கும் மூலகாரணமாக அமைந்தது.

**முதல் செய்தித்தாள்**

கி.பி. 1702 இல் இலண்டனில் வெளியிடப்பட்ட 'Daily current' எனும் நாளிதழே உலகில் முதல் செய்தித்தாள் என்ற பெருமையைப் பெற்றது. நாளிதழ் வெளியிடும் கலையில் கைவரப்பெற்ற ஆங்கிலேயர்கள் இந்தியாவிலும் அச்சுக்கலையை அறிமுகம் செய்து, நாளிதழ் வெளியீட்டில் முன் நின்றனர். இந்தியாவில் முதல் செய்தித்தாள் Bengal gazette என்பதாகும். இதனை கி.பி. 1780ல் ஹிக்கி என்பார் வெளியிட்டார். இந்தியாவில் அதிகார வர்க்கமாக விளங்கிய ஆங்கிலேய ஆட்சியாளர்களின் சீர்கேடுகளை அம்பலப்படுத்துவதில் பெங்கால் கெசட் ஆர்வம் காட்டியது. எவராலும் ஊக்குவிக்கப்படாத, எல்லாத் தரப்பு மக்களுக்கும் பொதுவான வாராந்தர அரசியல் வணிக ஏடு (weekly Political and commercial paper open to all parties but influenced by none) என்று இவ்விதழ் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டது. ஆளும் வர்க்கத்தினரைக் குறிப்பாக அப்போதைய கவர்னர் ஜெனரலான வரன் ஹேஸ்டிங்கின் அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றிய ஆதாரப்பூர்வமான தகவல்களைப் பரப்பரப்பாக வெளியிடுவதில் இவ்விதழ் முனைந்து நின்றது. எனவே இவ்விதழ் அரசின் கண்காணிப்புக்கு ஆளாகியது. இதழைத் தொடங்கிய அடுத்து ஆண்டிலேயே (சூன் 1181) ஹிக்கி சிறையில் அடைக்கப்பட்டார். இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அச்சகம் மூடப்பட்டு முத்திரையிடப்பட்டது. செய்திகள் வரும் வாயில்கள் அனைத்தும் கடிதங்கள் உட்பட அடைக்கப்பட்டன. இவ்வாறு இந்திய இதழியல் வரலாற்றின் முதல் கட்டமே எதிர்ப்புணர்வும் அடக்குமுறையும் கலந்ததாக மலர்ந்தது.

**ஊடகத் துறைகள்**

**1.இதழியல்**

நமது நாட்டில் நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளோடு பத்திரிக்கைத் துறையையும் வலிமையான நான்காவது பிரிவாகக் கருதலாம். இப்பத்திரிக்கைத்துறை சுதந்திரத்தோடு நேர்மையாகவும் பொறுப்பாகவும் செயல்படும்பொழுது மக்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது எனலாம். எனவே தான் வாள்முனையை விடப் பேனாமுனை கூர்மையானது எனப் போற்றப்படுகிறது.

**2.வானொலி**

மார்கோனி கண்டுபிடித்த வானொலி காதால் கேட்கும் வகையில் மட்டும் அமைக்கப்பட்டிருப்பது. வானொலிச் செய்திகள், வயலும் வாழ்வும் ஒலிச்சித்திரங்கள், திரையிசைப் பாடல்கள், சான்றோர் சிந்தனைகள், வானொலி நாடகங்கள், நேர்காணல்கள் முதலான நிகழ்ச்சிகள் வானொலியில் ஒலிப்பரப்பப்படுகின்றன.

தொலைக்காட்சிகள், தொலைக்காட்சித் தொடர்கள், கணினிப் பயன்பாடு ஆகியவற்றால் வானொலி ஓரளவு மக்களால் மறக்கப்பட்டிருக்கிறது. ஆனால்

பார்வையற்றோருக்கு வானொலி வரப்பிரசாதமாகவே இன்றும் இயங்குகிறது எனலாம்.

**3.திரைப்படம்**

19ஆம் நூற்றாண்டின் வலிமையான ஊடகமாகத் திரைப்படம் திகழ்ந்தது. தொடக்கக் காலத்தில் கருப்பு வெள்ளைப் படங்களும், திக்கற்ற பார்வதி போன்ற பேசாத ஊமைப்படங்களும் வந்தன. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களினால் வண்ணத்திரைப் படங்களாகி வெள்ளித்திரையாக விளங்கி வருகின்றது. ஆரம்ப நாட்களில் வீரபாண்டிய கட்டபொம்மன் முதலான வரலாற்றுப் படங்கள் சுதந்திர எழுச்சியை ஊட்டும் ஊடகமாகத் திரைப்படங்கள் எழுந்தன. பாரதியார், பாரதிதாசன், பாடல்களைப் பாமரர்களும் அறிவதற்கான களனாகவும் இருந்தது. பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான் எனப் பள்ளி மாணாக்கர்களுக்கு பாடம் புகட்டும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் வாயிலாக கல்விப்புலத்திற்கு உதவவும் உறுதுயையாகவும் திரைப்படம் இருந்தது. மெல்லமெல்ல காதல் படங்கள், மசாலா படங்கள், சண்டைப்படங்கள் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

**4.தொலைக்காட்சி**

கண்ணையும் கருத்தையும் கவரும் திரைப்படத்திற்கு எதிராகத் தோன்றியதைப் போல் தோற்றம் காட்டி திரைப்படத்துறையினரைக் கிளர்ச்சி செய்ய வைத்த ஊடகம் தொலைக்காட்சி. இன்று திரைப்படத்துறையினரின் ஊடுருவல் ஊடகமாகவும் தொலைக்காட்சி விளங்குகிறது. தொடக்கத்தில் அரசாங்கத்தினரால் மட்டுமே டி.டி. மற்றும் பொதிகை சேவைகள் ஒளிப்பரப்பட்டன. இன்று கலைஞர், சன், ஜெயா, Z தமிழ், ராஜ், ஸ்டார் விஜய், மக்கள் தொலைக்காட்சி எனப் பலபப்பல தனியார் தொலைக்காட்சிகளின் படையெடுப்புகள் மிகுந்துள்ளன. சரித்திரத் தொடர்கள், நகைச்சுவைத் தொடர்கள், சிறுவர் தொடர்கள் மர்மத் தொடர்கதை, மாயாஜாலத் தொடர்கள் அறிவுரை மற்றும் அறிவியல் தொடர்கள், குடும்பத் தொடர்கள், கல்வித் தொடர்கள் சமையல் தொடர்கள் என வாழ்வியலின் அனைத்துத் தளங்களையும் தொலைக்காட்சி தொடுகின்றது.

**5.தொலைபேசி வகைகள்**

**(1)உள்ளிடப் பேசி (Landline)**

கண்ணுக்குப் பத்திரிகைக்கள், காதுக்கு வானொலி, என்றிருந்த நாட்களில் வாய்க்குத் தொலைபேசி வந்து சேர்ந்தது. கடல் கடந்து கண்ணில் காண முடியாதவர்களையும் காதுக்கருகில் கொண்டு வந்து சேர்க்கும் பாலமாகத் தொலைபேசி விளங்கியது. வீட்டின் உள்ளிடத்தில் மட்டுமே பொருத்த முடியும். உடன் எடுத்து செல்ல முடியாது. எனவே, உள்ளிடப்பேசி என்னும் பெயரும் இதற்கு உண்டு.

**(2)செல்லிடப்பேசி (Cell phone)**

செல்லும் இடங்களிலும் கையில் வைத்துக் கொள்ள செல்லிடப் பேசி பயன்படுகின்றது. அனைத்துச் செல்லுலர் நிலையங்களையும் கட்டுப்படுத்தும் நிலையம் MSC(Mobile switching centre) ஒன்று இருக்கும். செல்லிடப்பேசியில் உள்ள எண்களை அழுத்தினால் அவை தொலைபேசிக் கருவிக்குள்ளேயே

ரேடியோ அலைகளாக மாற்றப்பட்டு காற்றில் அனுப்பி வைக்கப்படுகின்றது. செல்லிடப்பேசி இருக்கும் நகரப்பகுதியில் அமைந்துள்ள செல்லுலர் நிலையம் அழுத்தப்பட்ட ரேடியோ எண் அலைகளைப் பெற்று MSC நிலையத்திற்கு அனுப்பி வைக்கும். எம்.எஸ்.சி நிலையம் அந்தத் தொலைச் செய்தியின் எண்ணைத் தொலைபேசி நிலையத்திற்கு அனுப்பிவிட்டு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிடும். இந்தியாவில் செல்லிடப்பேசி சேவையை பெரும்பாலும் தனியார் நிறுவனங்களே நடத்துகின்றன. பாரத் சஞ்சார் நிகம் (BSNL) என்ற பெயரில்அரசு நிறுவனமும் செல்லிடபேசி சேவையை அளிக்கிறது.

**(3) இணையவலைத் தொலைபேசி**

இணையவலை மூலமாகத் கணிப்பொறியை இணைத்துக் கொண்டபின் இன்டர்நெட்போன் என்னும் மென்பொருள் (சாப்ட்வேர்) பயன்படுத்தி தொலைபேசி மூலம் பேசுவது இன்டர் நெட் தொலைபேசி.

**(4) வீடியோ தொலைபேசி (Video phone)**

வீட்டுத் தொலைபேசியில் இணைக்கப்பட்ட ஒரு சிறிய கணிப்பொறி திரையில் நம்மை அழைப்பவரின் உருவம் தெரியும். தொலைபேசியோடு கேமராவும், திரையும் வீடியோ சிக்னலைச் செயல்படுத்தியும் இணைக்கப்படுமாயின் இத்தகைய வசதியைப் பெறலாம்.

**(5) வீடியோ கான்பெரன்ஸிங் (Video confernncing)**

இரண்டுக்கு மேற்பட்டோர் தொலைபேசித் தொடர்பு வாயிலாகவே விவாதித்து, ஆலோசித்துக் கொள்வது இதற்கெனத் தகவல் தொடர்புக் கருவிகள் பயன்பாட்டில் உள்ளன.

(1) இருமுனைகளிலும் குரல் மூலம் மட்டும் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது

(2) ஒரு முனையில் குரலும், மறுமுனையில் குரலுடன் உருவமும் தெரிதல்

(3) இருமுனைகளிலும் குரலும் உருவமும் தெரிதல்

வீடியோ கான்பரன்சிங் முறையில் 2002 நவம்பர் 13 புதன்கிழமை அன்று அமெரிக்காவில் நட்ராய்டில் வசிக்கும் திருச்சி மாணவி ஜெசினா பாத்திமாவிடம் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் இருந்தபடியே எம்.சி.ஏ. வுக்கான வாய்மொழித்தேர்வு நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**6.கணிப்பொறி**

(1) மின்னணு அஞ்சல்

Electronic mail என்பதன் சுருக்கமே E.Mail என்பது. இதன் தமிழ் வடிவமே மின்னணு அஞ்சல். தொலைபேசித் தொடர்பு கட்டமைப்பின் வழியாக கணிப்பொறிகள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது மின்னணு அஞ்சல் எனப்படும். எழுத்துக்களால் ஆன உரை (text) வடிவில் மின்னணு அஞ்சல் அமையும்.

ஒரே அலுவலகத்தில் உள்ள கிளைக் கணிப்பொறிகள் நோட் (node) எனக்குறிக்கப்படும். தகவல்களைத் தரும் தலைமைக் கணிப்பொறியைச் சர்வர் (Sever) என்பர்.

(1) கணிப்பொறி (2) தொலைபேசி(3) டிஜிட்டல் சிக்னலாகச் செய்தியை அனுப்ப உதவும் மோடம் இம்மூன்று இருந்தால் வெளியூர்களுக்கு மின்னணு அஞ்சல் செய்ய முடியும்.

மின்னணு அஞ்சல் செய்தியைப் பெற்றுக் கொள்ள நாம் காத்திருக்கத் தேவையில்லை. ஆள் இல்லாத பொழுதும் கணிப்பொறி வழியாக மின்னணு அஞ்சல் நமது கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கும். நேரம் வாய்க்கும்பொழுது கணிப்பொறியில் மின்னணு அஞ்சல்கள் ஏதேனும் பதிவாகி உள்ளனவா எனப் பார்த்துக் கொள்ளலாம்.

**7.இணையம்**

இன்டர்நேஷனல் நெட்வார்க் என்பதன் சுருக்கமே இன்டர்நெட். பல கணிப்பொறிகளை ஒரு மையக் கணிப்பொறியுடன் இணைத்துச் செயல்படுத்துவது இணையம் (நெட்வொர்க்) எனப்படும். ஓர் அறையில் அல்லது ஓர் அலுவலகத்தில் இந்த இணையச் செயல்பாடு நிகழுமாயின் அதனை டுயடீ (local are network) எனக்குறிப்பிடுகின்றனர். வெவ்வேறு ஊர்களில் உள்ள ஒரு நிறுவனத்தின் கிளைகளை ஒரு மையக் கணிப்பொறியில் இணைப்பதனை (wide area network) என அழைக்கின்றனர். இணைய வலையில் விளம்பர வசதியும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

**மின்னணு வணிகம் (இ–காமர்ஸ்)**

இணைய வலை மூலமாக நடைபெறும் வணிகமே மின்னணு வணிகம் எனப்படும். குறிப்பிட்ட வெப்சைட் வாடகைக்கு எடுத்துக் கொள்ள முடியும். அந்த வெப்சைட்டில் நமக்குத் தேவையான விளம்பரங்களைச் செய்து கொள்ளலாம். எஞ்சியுள்ள பக்கங்களைப் பிறர் விளம்பரங்களுக்கு வாடகைக்கு விட்டும் பொருளீட்டலாம்.

**9. இணையத் தளத்தில் தமிழ்**

**(1) தமிழ் மென்பொருள்கள் (Tamil softwre)**

தமிழர்களால் ஏறத்தாழ 350 தமிழ் மென்பொருள்கள் தோன்றி உள்ளன. சொல்லாளர்களான (word Áocessor) கலைஞர் 99, கவிதாச் சொல்லாளர், முரசு, இளங்கோ 2000, சுரபி 2000, அமுதம் இன்ஸ்கிரிப் 2000, ஆக்ருதி, பொன்மொழி 2, 3 முதலானவை கணினியில் தமிழ் உள்ளீடு செய்வதற்குப் பயன்படும் தமிழ் மென்பொருள்கள்

**(2) பல்லூடக வட்டுக்கள் (Multi meica cd roms)**

சென்னைக் கவிகளின் குறளமுதம் முதல் தமிழிலக்கிய பல்லூடக வட்டு சாப்ட்வியூவின் அமுதம், ஆத்திச்சூடி, திருக்குறள் இலக்கியங்களை உள்ளடக்கியது. தேன்மொழி மற்றும் அறிவோடு விளையாடு என்னும் பல்லூடக வட்டுக்கள் தமிழ் கற்றலின் இனிமை சேர்க்கும் கணினி விளையாட்டுக்களைக் கொண்டவை. அனைத்ந்திய மொழிகளையும் தமிழ் வழி கற்க, தமிழ் வழி ஆங்கிலம் கற்கவும் உதவுவது இந்தியா ஸ்பீக்ஸ்.

**(3) தமிழ் எழுத்துருக்கள் (Tamil fonts)**

சொல்லாளர்களில் பயன்படுத்தத் தேவைப்படும் தமிழ், எழுத்துருக்கள் இணைமதி, மயிலை, முரசு, துணைவன், நளினம் போன்றவை

குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சில நெகிழ் வட்டுக்களிலும் (floe discs) பல இணையத்திலும் கிடைக்கின்றன.

www.tamilsoftware.com.www.murasu.com.www.mylai.com.www.thunaivan.com, www.tamilosai.com என்னும் இணையத் தளங்களில் (website) இருந்து இறக்கம் செய்து (Downlod) கொள்ளலாம்.

**(4) தேடுபொறிகள் (searh engines)**

இணையத்தில் சிதறிக்கிடக்கும் தமிழ் சார்ந்த செய்திகளைத் தேடி தருவதற்கு பல தேடுபொறிகள் உள்ளன. சிங்கப்பூரைச் சார்ந்த **www.lagent .it.govsg** தமிழில் முதல் தேடுமொழியாகிறது.

**www.siisch.edu.sg/bnsoot/tamil/links,htm** என்னும் தேடு பொறி தமிழ்தளங்களின் தொகுப்பாக உள்ளது. **www.kanni.com. www.tamilaruvi.com** என்பன தமிழ்க் களஞ்சியங்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

**(5) இணையத்தகவல் தொகுப்பு (Internet directory)**

தமிழ் தொடர்புடைய கருத்துக்களின் கருவூலங்களாக சில இணையத் தளங்கள்உள்ளன.

**www.geocities.com/athens/5180/index.www.tamil.com.www.tamilworld.com. www.intamm.com** என்பன குறிப்பிடத்தக்கன.

**(6) மின்நூல்கள் (E-texts)**

திருக்குறள், ஔவையார் படைப்புகள், திருவாசகம், திருமந்திரம் ஆகிய இலக்கியங்கள் முனைவர் கே. கல்யாண சுந்தரம் குழுவினராலும், பேராசிரியர் திலிபன் குழுவினரால் திவ்ய பிரபந்தமும் ராம் எம்.ரவிச்சந்திரன் என்பரால் ஆத்திசூடி, திருப்பாவை, புறநானூறும் மின்னாக்கம் செய்யப்பட்டு **www.tamil.net/Áotjectmadurai** என்ற இணையத்தளத்தில் உள்ளது. 17,000க்கும் மேற்பட்ட நூல்களின் பட்டியல் காந்தளகம் என்று **www.tamilnool.com** என்ற இணையத் தளத்தில் உள்ளது.

**(7) இணையச் சமூகம் (Internet society)**

தகவல் தொழில் நுட்பப் புரட்சியால் உலகமே குக்கிராமமாக மாறி வருகிறது. இணையம் இதயங்களை இணைக்கின்றது. ஒத்த எண்ணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழ்ச் சமூகம் இணையச் சமுகமாக மாறிவருகிறது. அதற்கான இணையத் தளங்கள் பல உண்டு. அவற்றுள் சில ww.kanithamixh.co. www.tamilboard www.tamil.net www.tamilforum.com www.tamilurioãan com. www.singticcom.www.æthcom.com.

**(8) மின்இதழ்கள் ( E Magazines)**

தமிழில் வெளியாகும் பல நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் மின் இதழ்களாக இணையத்தில் வெளிவருகின்றன. இணையத்தில் முதல் மின்இதழ் என்னும் பெயர் பெற்றது. தேனீ www.tail.nt/theni/ ஆறாம் திணை www.aarmthinai.com என்ற தளத்தில் வெளியாகிறது. மேலும் சில www.singailnayam.com www.amblam.com.

**(9) இணைய வழித்தமிழ்க்கல்வி (web based tamil edcuation)**

கடல் கடந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினர் தம் சந்ததியினர் மொழியால், இனத்தால், பண்பாட்டால் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்கத் தமிழறிவைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய சூழலில் பல தமிழ்க்கல்வி தளங்களை உருவாக்கியுள்ளனர். அவற்றுள் குறிப்பிடும்படியான சில தமிழில் தனிப்பயிற்சி வழங்க முனைவர் எஸ்.இளங்கோ என்பரால்

www.geocities.com/athenes/acroolis/4715.www.geocities.com\thensa\acrooli/8780 தளங்களை உருவாக்கியுள்ளார். பெரியண்ணன் கருப்பசாமி என்பராவல் தமிழாசிரியர் மென்பொருளை www.kalvi.com. தளத்தில் உருவாக்கியுள்ளார். சென்னையில் உள்ள இணையப் பல்கலைக் கழகம் இணைய வழித் தமிழில் பெரும்பங்காற்றி வருகிறது. ராம் எஸ். ரவிச்சந்திரன் பேச்சுத் தமிழ் பயிற்சியினை www.sa.von.edu என்னும் தளத்தில் உருவாக்கியுள்ளார். பார்வையற்றோருக்கான தகவல் தொழில் நுட்ப மேம்பாடுகள் பற்றி ஒளிபெறும் விழிகள் என்னும் நூலில் டாக்டர் அர.ஜெயச்சந்திரன் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

**மக்கள் தொடர்புச் சாதனங்கள்**

**தொலைக்காட்சி**

மனிதன் கிணற்றுத் தவளையாக வாழ நினைக்கக்கூடாது. அவன் பரந்த அறிவு பெற்ற மனிதானக வாழவேண்டும். மனிதன் மனிதனாக மதிக்கப்படுவதற்கு அவனது அறிவுத்திறனே காரணமாகிறது. மனிதனுக்குத் தகவல் துறையே அறிவை வழங்குகின்றன. தகவல் துறையில் தொலைக்காட்சியே இன்று சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

**டெலிவிஷன் பெயர் தோன்றிய முறை**

தமிழில் தொலைக்காட்சி என்பதை ஆங்கிலத்தில் டெலிவிஷன் என அழைக்கின்றோம். டெலிவிஷன் என்ற கருவி தோன்றுவதற்கு முன்பே டெலிவிஷன் என்ற சொல் தோன்றிவிட்டது. 1892ம் ஆண்டு மாக்ஸ் பிளெஸ்னா் என்ற பத்திரிக்கையாளா் டெலக்ராஸ்கோப் என்ற பொருளில் ஒரு கட்டுரை எழுதினாா். அக்கருவியில் நாடகங்கள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், சொற்பொழிவுகள், மாதாகோவில் வழிப்பாடுகள் பந்தயங்கள், பேரணிகள், தலைவா்கள் மக்களுக்கு நிகழ்த்தும் உரை ஆகிய காட்டப்படும் என்று அறிவித்திருந்தாா். ஆனால் எப்படிக் காட்டப்படும் என்று அவா் எழுதவில்லை. 1990 ஆம் ஆண்டு பிரெஞ்சு நூலகா் ஒருவா் மின்சார அஞ்சல்முறையில் படங்களைத் தரும் கருவி என்ற வகையில் ஒரு கருவிக்கு பெயா் வைக்க முனைந்தாா். டெலஸ்கோப், எலக்டிரிகல் டெலஸ்கோப், டெலராக்ஸ்கோப் எனப்

பல பெயர்கள் அப்போது இருந்தன. அந்நூலகர் அப்பெயர்களை விட்டுவிட்டு, டெலிவிஷன் எனப் பெயர் சூட்டினார். அப்பெயரேநிலைபெற்றது. இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிச் சொற்களின் அடிப்படையில் டெலிவிஷன் என்ற சொல் உருவாயிற்று. மின்சார முறையில் ஓரிடத்தில் இருந்து, வேறொர் இடத்திற்கு அஞ்சல் செய்வது என்பதே டெலிவிஷன் என்ற சொல்லின் பொருளாகும். டெலிவிஷன் என்பது பின்னர் தமிழில் தொலைக் காட்சி ஆயிற்று.

**தொலைக்காட்சியின் தோற்றம்.**

1925இல் ஜான்லகி பெயர்டு என்பவர் தொலைக்காட்சிக் கருவியைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டினார். பெயர் மட்டும் தோன்றி அதற்குரிய கருவி இல்லாத நிலையில் ஸ்காட்லாந்து நாட்டவரான அவ்விஞ்ஞானி மிகவும் முயன்று, 1926ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் நாள் தாம் கண்டு பிடித்த கருவியை இயக்கிக் காட்டினார். அவர் சில அடிதூரத்தில் இருந்த சிலுவை ஒன்றின் நிழலைத் திரையில் அஞ்சல் செய்து விட்டார். நாற்பதுக்கும் மேலான விஞ்ஞானிகள் அப்புதுமையைக் கண்டு மகிழ்ந்தனர். அதன் பின்னர் மேலும் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. 1928ல் பிரிட்டிஷ் வானொலி சோதனை முறையில் தொலைக்காட்சியை இயக்கியது. மேலும் பத்தாண்டுகளக்குப்பின்னரே வணிக முறையில் தொலைக்காட்சி தொடங்கியது.

தொலைக்காட்சி பலவகை நோக்கு

தொலைக்காட்சியைப் பலவற்றின் தொகுதி எனலாம். 1) ஒளியையும் ஒலியையும் ஈர்க்கும் காமிரா, மைக் 2) ஒளி, ஒலியைச் சீராக இயக்க ஒரு கட்டுப்பாட்டு அமைப்பு 3) அஞ்சல் செய்வதற்கு வசதி உண்டாகும் திட்டம் 4) நிகழ்ச்சியைக் காண ஒரு தொலைக்காட்சி பெட்டி ஆகியவற்றின் தொகுதியே தொலைக்காட்சியாகும். மனோதத்துவ முறையில் ஒரு நிகழ்ச்சியை ஒரே சமயத்தில் ஒருவர் ஒரு இடத்தில் இருந்து (நிகழ்ச்சி நடக்கும் நிலையம், வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி) பார்ப்பது போன்ற உணர்வைப் பெறுவார். இது வரலாற்று முறையில் இப்புதிய யுகத்தின் குறிப்பிடத்தக்க ஒப்பற்ற தனிக்கண்டுபிடிப்பாகும். சமுதாய நோக்கில் கல்வி, விளம்பரம், பிற செய்திகளைத் தெரிவித்தல் ஆகிய வகைகளில் தொலைக்காட்சி பயன்படுகிறது. பொருளாதார நோக்கில் பார்த்தால் அது பலருக்குவேலை வாய்ப்பைத் தருகின்றது.

**வானொலி**

**இந்தியாவில் வானொலி**

இந்திய நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு மக்களின் முழு ஆதரவு வேண்டும். மக்கள் நாட்டு நடப்புப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் போதுதான் நாட்டுக்காக மக்கள் ஏதேனும் செய்ய முடியும். மக்களுக்குத் கேள்வி அறிவினை அளிப்பது வானொலியாகும்.

**வரலாறு**

மார்கோனி, 1896ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வானொலியைக் கண்டுபிடித்துப் பதிவு செய்தார். இங்கிலாந்தில் முதன்முதலில் தோன்றிய வானொலி பின்னர் உலக நாடுகளுக்கு பரவத் தொடங்கியது. தோன்றியதில் இருந்து 28 ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்கு வானொலி வந்தது. 1924 மே

திங்கள் வானொலிக்குழு அமைக்கப்பட்டது. அதே ஆண்டு ஜீலை 31இல் சென்னை மாகாண ரேடியோ கிளப் ஒலிபரப்பைத் தொடங்கியது. 1927ஆம் ஆண்டு ஜீலைத் திங்கள் 23ஆம் நாள் இர்வின் பிரபு பம்பாயில் வானொலியைத் தொடங்கி வைத்தார். அது 1.5 கிலோவாட் ஆற்றலுள்ள அமைப்பு முறையிலும் தொடங்கி வைக்கப்பட்டதாகும். அதே ஆண்டில் 40 நாள்களுக்குப் பின்னர் கல்கத்தாவில் 1.5 கிலோ வாட் ஆற்றலுள்ள மற்றொரு வானொலி நிலையம் வங்காள ஆளுநர் சர்ஸ்டான்லி ஜான்சன் என்பவரால் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டு அக்டோபரில் மதராஸ் மாகாண ரேடியோ கிளப் கலைக்கப்பட்டது. 1930 ஏப்ரல் முதல் நாள் சென்னை நகராட்சிக் கழகம் முறையான ஒலிபரப்பைத் தொடங்கியது.

**இந்திய வானொலி வளர்ச்சி**

1935ஆம் ஆண்டிலிருந்து இந்திய வானொலி நல்ல வளர்ச்சியைப் பெற்றது. அந்த ஆண்டு செப்டம்பர் 10இல் மைசூரில் ஆகாசவாணி நிலையம் ஏற்பட்டது. 1936ஆம் டில்லி நிலையம் ஒலிபரப்பை இயக்கிற்று. 1938இல் சென்னையில் ஆளுநர் எர்ஸ்கின் பிரபு வானொலி நிலையத்தைத் தொடங்கி வைத்தார். 1939இல் திருச்சி வானொலி நிலையத்தையும் அவரே தொடங்கி வைத்தார். இந்தியா விடுதலைப் பெற்றபின் 1951 வரை கூட வானொலி அவ்வளவாக வளர்ச்சிப் பெறவில்லை. விடுதலை பெற்றபிறகு இந்தியாவில் 6 வானொலி நிலையங்கள் இருந்தன. ஆறில் இரண்டு தமிழ்நாட்டில் இருந்தது. அவை சென்னை திருச்சி ஆகிய இடங்கள். மற்றவை புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, லக்னோ ஆகிய நகரங்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வானொலிக்கு முக்கிய இடம் தரப்பட்டது. 16 ஒலிப்பரப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

7ஆம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 205 வானொலி நிலையங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டதாக மத்திய அரசு அறிவித்தது. 97.5 சதவிகித மக்கள் வானொலியின் பயன் அடைந்தனர்.

**வானொலியின் நோக்கமும் தனித்தன்மைகளும்**

மக்களுக்குத் தகவல் அளிக்கும் பொறுப்பைத் தனது தலையாய பணியாக வானொலி ஏற்றுக் கொண்டுள்ளது. கற்பித்தல், தகவல் அளித்தல், மகிழ்ச்சியூட்டல் ஆகிய மூன்றும் வானொலியின் நோக்கங்களாக உள்ளன.

வானொலி காதுகுரிய கருவி. ஒலியின் வாயிலாகவே கேட்பவர்களின் சிந்தனையைத் துாண்டி எழுச்சியைத் தருகின்றது. வேலையைச் செய்து கொண்டே தகவல்களைக் கேட்கலாம். வானொலி, கேட்போரை விரைந்து சென்று சேரும் ஆற்றல் உடையது. சூட்டோடு சூடாக எச்செய்தியினையும் வானொலி நிருபர் வானொலி வழியாக நமக்கு அறிவிக்க வாய்ப்புண்டு. வானொலிப் பெட்டி இன்று, ஏழை, எளியவர் மத்தியிலும் மலிவாகக் கிடைக்கும் கருவியாக உள்ளது. இவ்வகையில் இந்தியாவில் வானொலி படிப்படியாக வளர்ந்து சிறந்த நோக்கங்களையும் தனித்தன்மையாகவும் கொண்டு விளங்குகின்றது.

**குழுவினர்க்கான நிகழ்ச்சி**

குழந்தைகள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோருக்குத் தனித்தனி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவையன்றி

விளையாட்டு நிகழ்ச்சிகள், கவியரங்குகள் ,இலக்கிய நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள் அறிவியல் நிகழ்ச்சிகள், முதலியனவும் நடைபெறுகின்றன. திறமையை வெளிப்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும். குழந்தைகள் மனத்தில் ஊக்கம், நேர்மை, இரக்கம் முதலான குணங்கள் வளரவேண்டும் எனக் குழந்தைகள் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

பெண்கள் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் அவர்களுக்குத் தேவையான குடும்பக்கலை, குழந்தை வளர்ப்பு, தாய்சேய் நலம், வீட்டு நிர்வாகம், குடும்ப வரவு செலவு முதலான செய்திகள் ஒலிப்பரப்பாகின்றன. மக்கள் நல்ல உடல்வளம் பெறவும், மனநலம் பெறவும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. குடும்ப நெறி சிறப்பாக அறிவுறுத்தப்படுகின்றது.

இளைஞர்களுக்கு முக்கியமான வேலைவாய்ப்புச் செய்திகள், ஒலிபரப்பாகின்றன. கலைத்திறனை வெளிப்படுத்தும் இசை, நாடகம், முதலிய நுண்கலைகளில் இளைஞர்களுக்கு உள்ள ஈடுபாட்டை இளைஞர்கள் நிகழ்ச்சி பயன்படுத்துகின்றது. தொழிற்சாலைகளில் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், அவர்களின் பொழுது போக்குக்கு உதவும் நிகழ்ச்சிகள் ஆகியன அக்குழுவினருக்குரிய நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெறுகின்றது.

இந்திய நாடு விவசாய நாடு, வானொலியில் விவசாய நிகழ்ச்சிகள் முக்கியமானவை. வேளாண்மை உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறவேண்டும் என்பதே இவ்வொலி பரப்பின் நோக்கம். வானொலி அறிமுகப்படுத்திய நெல், வானொலி நெல் என அழைக்கப்பட்டது. பண்ணை ஒலிப்பரப்பில் முற்போக்கான வேளாண்மை உத்திகள் எடுத்துக் கூறுப்படுகின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், விவசாயத் துறைகளும் தத்தம் கருத்துக்களை வலியுறுத்திக் கூறுகின்றன.

விளையாட்டு நிகழ்ச்சிகள் உலக அளவில் மக்கள் மனத்தைக் கவரக்கூடியன. கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் ஆகியவை மக்களுக்கு இலக்கிய ஈடுபாட்டினை ஏற்படுத்துவதோடு பரந்த அறிவையும் தருகின்றன வானொலியில் நடைபெறும் கல்வி நிகழ்ச்சிகளில் கற்பித்தலில் புதிய உத்திகள் பாட நடத்தும் முறை ஆகியன விளக்கப்படுகின்றன.

**வானொலிக் கோட்பாடுகள்**

இந்திய வானொலி, தனக்கென்று சில கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளது. நட்பு நாடுகளைக் குறைகூறக் கூடாது. குறிப்பிட்ட ஓர் இனத்தையோ, இனத்தைச் சார்ந்தவரையோ குறைகூறக் கூடாது. வன்முறையைத் தூண்டும் வகையில் ஒலிபரப்பு செய்யக்கூடாது. நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும்,குடியரசுத் தலைவரின் செயல்முறைகளுக்கு எதிரான வகையிலும் ஒலிபரப்பு செய்யக்கூடாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளையுமாறும், தனிப்பட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுப் புகழுமாறும் ஒலிபரப்புச் செய்யக்கூடாது. தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் உறுப்பினரோ, தொடர்புடையவரோ வானொலியில் பங்கேற்கக்கூடாது. சமுதாயத்தில் யாருடைய மனத்தையும் புண்படுத்தக்கூடாது என்பதால் குருடர், செவிடர் எனக்கூறாமல் பார்வை அற்றோர் கேட்க இயலாதவர் என்ற சொற்களை உபயோகிக்க வேண்டும்.

**பயன்கள்**

வானொலியால் விளையும் பயன்களை ஆராய்ந்து வருகின்றனர். அதற்காகத் தனிப்பிரிவும் (நேயர் ஆய்வுப்பிரிவு) உள்ளது. உடல்நலம், கிராம வளர்ச்சி, சிறு குடும்ப நெறி, மகளிர், நலம் போன்ற செய்திகளுக்கு வானொலி முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்புவதினால் பல நன்மைகள் விளைவித்துள்ளன. வானொலி, நாட்டு ஒருமைப்பாட்டையும் வளர்க்கின்றது. ஒரு மொழிக்குரிய கலைகளையும், இலக்கியங்களையும் பிறமொழிக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அகில பாரத நிகழ்ச்சியாக வானொலி நடத்துகிறது. தேசிய அலைவரிசை என்ற ஒன்றினை ஏற்படுத்தி அதற்கெனத் தனி நிகழ்ச்சிகளை வானொலி ஒலிபரப்புகிறது. வானொலியை ஒலிக்களஞ்சியம் எனலாம். செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்று வள்ளுவர் கூறிய கருத்தினை வானொலி உறுதிப்படுத்துகின்றது.

**திரைப்படம்**

**நிழற்படம்**

மக்களை அதிகமாகக் கவரும் ஆற்றல் சினிமாவுக்குண்டு. இஃது உலகம் அறிந்த உண்மை. கினி என்ற லத்தீன் சொல்லுக்கு அசைவு என்று பொருள். திரையில் அசையுமாறு செய்யும் நிலை வந்த பின்னர் கினிமா என்றனர். நாளடைவில் கினிமா என்ற லத்தீன் சொல் சினிமா என மாறியது. நாம் திரைப்படம் எனத் தமிழில் அழைக்கின்றோம். 1840இல் நிழற்படம் கண்டுபிடிக்கப்பட்டது. மனிதனின் கண் அமைப்பும், மூளையும் தான் அசையும் படமாகத் திரைப்படம் தோன்றக் காரணமாயிற்று.

**பேசும் படங்கள்**

1927ஆம் ஆண்டு பேசும் படங்கள் வந்தன. வார்னர் பிரதர்ஸ் தயாரித்த தி ஜாஸ்சிங்கர் என்ற படத்திற்குப் பாட்டு ஒலிப்பதிவு செய்யும்போது தான் பேசும் படம் தயாரிக்க முடியும் என்ற எண்ணம் தோன்றியது. மேலை நாடுகளிலும் திரைப்படத்துறை வளரத் தலைப்பட்டது.

**இந்தியாவில் திரைப்படம்**

இந்தியாவில்தான் உலகிலேயே திரைப்படம் மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றது. இந்திய நகரங்களில் சென்னையில்தான் அதிகமான திரைப்படங்கள் தயாராகின்றன. ஐரோப்பாவைச் சார்ந்த லூமியர் சகோதரர்கள் 1896ஆம் ஆண்டு ஜீலைத் திங்கள் 7ஆம் நாள் துண்டுப் படங்களைக் காட்டினார். சகாராம படவடேகர் என்னும் மராட்டியர், பம்பாய் தொங்கும் தோட்டத்தில் நடந்த குத்துக்சண்டையைப் படம் எடுத்துப் புகழ் பெற்றார். ஜி.எப். மதன் என்பவர் 1907இல் கல்கத்தாவில் ஒரு திரையரங்கைக் கட்டினார். இவையெல்லாம் முன்னோட்டங்களாக இருந்தன.

இந்திய திரைப்படக் கலையின் தந்தை டி.கே. பால்கே என்பவர் இங்கிலாந்து சென்று ஹெப்வர்த் என்பவரிடம் திரைப்பட நுட்பங்களைக் கற்று வந்தார். அவர் 1913இல் ராஜா ஹரிச்சந்திரா என்ற படம் எடுத்தார். இதுவே இந்தியாவின் முழுநீளப்படமாகும். இந்தியாவில் தயாரான முதல் இந்தியப்படம் ஆலம் ஆரா 1931ஆம் ஆண்டு மார்ச் திங்களில்அப்படம் திரையிடப்பட்டது. 12 பாடல்கள் அதில் இடம் பெற்றன. அர்திஷீர் இராணி என்பவர் இயக்கினார்.

புகழ்பெற்ற இயக்குநர் சாந்தாராம் என்பவர் 1932இல் அயோத்தியயேஷ்யராஜா என்ற படத்தையும் 1948ல் உதயசங்கர் என்பவர் கல்பனா என்ற படத்தையும் இயக்கி வெளியிட்டார். அதே ஆண்டு எஸ்.எஸ். வாசன் சந்திரலேகா என்ற படம் எடுத்துப் புகழ் பெற்றார். இந்தியாவிலேயே அதிகப் பிரதிகள் எடுக்கப்பட்ட படம் அதுவாகும். கேன் திரைப்பட விழாவில் 1954இல் விமல்ராய் என்பவர் இயக்கியதோபிகா ஜமீன் என்ற படத்திற்கும் 1955இல் சத்யஜித்ரே என்பவர் இயக்கிய பதேர் பாஞ்சாலி என்ற படத்திற்கும் பரிசுகள் கிடைத்தன. 1956இல் வெனிஸ் படவிழாவில் சத்தியஜித்ரேயின் அபராஜிதோ என்ற படம் முதல் பரிசு பெற்றது.

**தமிழகத்தில் திரைப்படம்**

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் எட்வர்டு என்பவர் 1897இல் விக்டோரியா பப்ளிக் ஹாலில் முதன்முதல் படங்களைத் திரையிட்டார். தமிழகத்தில் இக்காட்சி விஞ்ஞானப் புதுமையாக அமைந்தது. தமிழ்நாட்டில் பொதுமக்களுக்குரிய திரைப்பட பணி 1900 ஆம் ஆண்டு தொடங்கியது. மேஜர் வார்விக் என்பவர் எலக்ட்ரிக் தியேட்ர் என்றதிரையரங்கை நிறுவினார். இதுவே தமிழகத்தின் முதல் திரையரங்கமாகும். இது தற்போது அண்ணாசாலையில் தலைமைத் தபால் நிலையக் கட்டிடமாக விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த டு பாண்டு என்பவர் பல இடங்களில் திரைப்படங்களைக் காட்டிக் கொண்டிருந்தார். அவர் காட்டிய திரைப்படங்களில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு குறிப்பிடத்தக்கது. அவர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் தம்முடைய புரொஜக்டர், படங்கள் முதலியனவற்றை திருச்சியைச் சேர்ந்த சுவாமிக்கண்ணு வின்சென்ட் என்பவரிடம் கொடுத்துவிட்டு தாய்நாடு சென்றுவிட்டார். வின்சென்ட் தனது திரைப்பட வெளியீட்டுக்கு எடின் சினிமாடோ கிராப் என்று பெயரிட்டு திருச்சி முழுவதும் சென்று திரைப்படங்களைக் காட்டினார். பின்னர் இந்தியாவின் பல இடங்களிலும் சென்று படங்கள் காட்டலானார். டூரிங் கொட்டகைகளின் தந்தை என்று அவர் இன்றளவும் புகழப்படுகிறார்.

வேலூரைச் சேர்ந்த நடராஜ முதலியார், என்பவர் பூனாவுக்குச் சென்ற அங்கு ஒளிப்பதிவாளராய் இருந்த ஸ்டூவர்ட் ஸ்மித் என்பவரிடம் திரைப்பட நுணுக்கங்களையும் கற்று வந்தார். நடராஜ முதலியார் மோட்டர் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். அவர் தர்மலிங்க முதலியாருடன் இணைந்து இண்டியாபிலிம் கம்பெனியை 1918ல் தொடங்கினார். கீழ்ப்பாக்கம் மில்லர் ரோடில் ஒரு ஸ்டுடியோவும் அமைத்தார். இதுவே தென்னகத்தின் முதல் திரைப்படக் கூடமாக அமைந்தது. 1916இல் கீசவதம் என்ற படத்தை அவர் வெளியிட்டார். 1917இல் திரௌபதி, வஸ்தாபுராணம் முதலிய படங்களைத் திரையிட்டு மேலும் வேலூருக்குச் சென்று, மயில்ராவணா, மார்க்கண்டேயா முதலிய படங்களைத் தயாரித்தார். பண முதலீடு இல்லாமையால் ஊமைப்படக்காலத் தந்தை எனப் போற்றப்படும் நடராசு முதலியார் அத்தொழிலில் இருந்து விலகினார்.

சென்னை விக்டோரியா ஹாலில் ஆர். வெங்கயா என்பவர் ஊமைப்படங்களுடன் ஒலியை இணைத்துக் காட்டினார். சென்னையில் கெயிட்டி (1918) கிரௌன் (1914) குளோப் முதலிய திரையரங்குகளைக் கட்டினார். தன் மகனை இலண்டனுக்கு அனுப்பிப் படத்தொழில் பற்றிய பயிற்சி பெற்று வருமாறு

செய்தார். சென்னையில் 1 லட்சம் ரூபாய் செலவில் நவீன ஸ்டுடியோவைக் ராக்கி தியேட்டர் பின்புறம் கட்டினார். 1921இல் பீஷ்மபிரதிக்ஞா என்ற படத்தைத் தயாரித்தார். ஈஸ்ட்பிலிம் கம்பெனி என்ற பெயரில் படங்களைத் தயாரித்து இந்தியாவிலும், இலங்கை, பர்மாவிலும் திரையிட்டார். எ .நாராயணன் கோழிக்கோடு, சென்னை முதலிய இடங்களில் திரையரங்குகள் கட்டிப் படவிநியோகம் செய்தார். தமிழ்நாட்டில் ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் மூலம் அதிக ஊமைப் படங்களைத் தந்தவர் என்ற பெருமைப் பெற்றார்.

**இதழியல் சட்டங்கள்**

இதழியல் துறையில் பணிபுரிவோரின் பணி முறைகளையும் தகுதிகளையும் உரிமைகளையும் இச்சட்டம் வரையறை செய்கிறது. இதனால் கிடைக்கும் சலுகைகள் வருமாறு : ஊதிய விபரம், ஊதிய நிர்ணயம், நிறுவனத்தாருடன் ஊதியம் தொடர்பாக ஏற்படும் பிரச்சனைகள், போனஸ், வைப்புத் தொகை, கட்டாயச் சேமிப்பு, ஆயுள் காப்பீடு, விடுமுறைகள், மகப்பெறு விடுப்பு, ஈட்டுத் தொகைகள்

செய்தித்தாள், புத்தகப் பதிவுச் சட்டம்

இச்சட்டம் காலந்தோறும் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகியுள்ளது. டில்லியில் பத்திரிக்கைப் பதிவாளர் ஒருவரை இந்திய அரசு நியமித்துள்ளது. இந்தியாவில் வெளியாகும் அனைத்துப் பத்திரிக்கைகளின் பட்டியல் இவரிடம் இருக்கும். புதிதாகப் பத்திரிக்கைகைத் தொடங்கும் முன் இவரிடம் சான்றிதழ் பெற வேண்டும். இவர் பத்திரிக்கையின் ஒவ்வொரு படியையும் பாதுகாத்து வைப்பார். அரசியல் சட்டம் 19(2)ன்படி இதழ்களுக்குத் தேவையான அனைத்து உரிமைகளையும் இச்சட்டம் பாதுகாக்கும். பத்திரிக்கை பதிவு அதிகாரியிடம் பின்வரும் விவரங்கள் இருக்கும். பத்திரிக்கையின் பெயர்/தலைப்பு மொழி, காலஅளவு (தினசரியா வாரஇதழா) ஆசிரியர், பதிப்பாசிரியர், வெளியாகும் இடம், பக்க அளவு,பக்க எண்ணிக்கை ஓராண்டில் எத்தனை முறை வெளியாகிறது? தினமும் எத்தனை படிகள் அச்சிடப்படுகின்றன? உரிமையாளர் பெயரும் முகவரியும் முதலியவை.

புத்தகங்களை வெளியிடுவோர் அவற்றைப் பதிவு செய்து வைத்துக் கொள்ளவும் இச்சட்டம் உதவுகிறது. தமிழ்நாட்டில் உள்ளோர் சென்னையில் தலைமைச் செயலகத்தில் உள்ள புத்தகப் பதிவாளருக்குத் (Register of Books) தம் நூல்களை அனுப்புதல் வேண்டும். கூடவே கொல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம் (National library) மும்பையிலுள்ள பொது நூலகம் (Public library) டெல்லியிலுள்ள மைய நூலகம் (Central library) சென்னையில் உள்ள கன்னிமாரா பொது நூலகம் ஆகியவற்றிற்கும் தம் நூல்கள் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

**பிரஸ் கவுன்சில் சட்டம் 1978 (Press Council act)**

இந்தியாவிலுள்ள இதழியல் நிறுவனங்களின் உரிமையைப் பாதுகாக்கவும், அந்நிறுவனங்களின் மூலம் வெளியாகும் பத்திரிக்கைகளின் தரத்தை உயர்த்தவும், செய்தி நிறுவனங்களின் பணியை வரையறுக்கவும் 1978இல் பிரஸ் கவுன்சில் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டத்தை அமுல்படுத்த ஒரு குழுவை இந்திய அரசு நியமித்துள்ளது. இக்குழுவில் ஒரு தலைவரும், ஒரு

நடுவரும் உறுப்பினர்கள் இருபத்தியெட்டு பேர்களும் இருப்பர். இதழியல் துறையில் பணியாற்றுபவர்களில் பதினொன்று பேர்களும், செய்தித்தாள் நிறுவனங்களின் சார்பாக ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் ஆக இருபத்தைந்து பேர் இக்குழுவில் அடங்குவர். பிரஸ் கவுன்சில் குழுவைப் பாராளுமன்ற தலைவரும், இந்திய மேல்சபைத் தலைவரும் பாராளுமன்ற தலைவரும், இந்திய மேல்சபைத் தலைவரும் பத்திரிக்கை நிறுவனங்களிலிருந்து ஒருவரும் இணைந்து தேர்வு செய்வர். இவர்கள் மூவரையும் சேர்த்து பிரஸ் கவுன்சில் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தியெட்டாகக் கணக்கிடப்படுகிறது.

**காவல் துறைச் சட்டம் (The Police Incitement of Dissaffection Act 1922)**

காவல்துறையினரிடையே ஒழுங்கைக் கெடுப்பதாகவும், அவர்தம் பணியைச் சரிவரசெய்ய விடாமலும் நாளிதழ்கள் குறுக்கிடுமானால் அரசு இச்சட்டத்தின் முலம் தொடர்பு உடையவர்களைத் தண்டிக்க வாய்ப்பிருக்கின்றது.

**அரசு இரகசிய காப்புச் சட்டம் (Official secrets Act 1923)**

அரசு ஆவணங்களையும் இரகசியச் செயல் முறைகளையும் பாதுகாக்கப்பட்ட இடங்களைப் புகைப்படம் பிடித்து வெளியிடுவதையும் இச்சட்டம் தடை செய்கிறது. குறிப்பிட்ட நாளிதழ் அரசின் நற்பெயருக்கு அவதூறு விளைவிக்கும் உண்மைச் செய்திகளை வெளியிடுமானால் இச்சட்டம் அந்நாளிதழின் மேல் பாய்கிறது.

**மந்திர மருத்துவ தடுப்புச் சட்டம் (The Drugs and Magic Remedies Objectionable Advertisement)**

**மந்திர முறைகளில் மருத்துவ சிகிச்சை**

மந்திர முறைகளில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் என்பது போன்ற விளம்பரங்களையும், பாலியல் குறைபாடு சிகிச்சை விளம்பரங்களைப் பொதுநலன் கருதி இச்சட்டம் தடைசெய்கிறது.

**குற்றவியல் தடுப்புச் சட்டம் (Criminal Óocedure code 1973)**

பொதுநலனுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய செய்திகளை வெளியிட்டால், அவ்விதழைப் பறிமுதல் செய்வதற்குரிய உரிமையை அரசுக்கு இச்சட்டம் அளிக்கிறது.

**இளையோர் தீங்கிழைப்புத் தடுப்பு சட்டம்**

இளம் வயதினரின் ஒழுக்கத்திற்கு ஊறு செய்கின்ற அவர் தம் பாலுணர்வைத் தூண்டுகின்ற அவர்களைச் சமூக விரோதிகளாக்குகின்ற எந்தவொரு செய்தியையோ, விளம்பரத்தையோ வெளியிடுவதை இச்சட்டம் தடை செய்கிறது.

இந்திய அரசியல் சட்டம் **19(i) (a)** பிரிவு எழுத்துரிமையையும், பேச்சுரிமையையும் மக்களுக்கு வழங்குகிறது. அதன் விவரம் வருமாறு

1. ஓர் இந்திய குடிமகன் தன்னுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பொதுமக்கள் மத்தியில் எடுத்து வைக்க உரிமை வழங்கப்படுகிறது.

(the right to lay what sentiments he place before the public or the right to impart information and idea)

2. மற்றவர்களிடமிருந்து சட்டத்திற்குட்பட்ட வழிகளில் செய்திகளைப் பெற்றுக் கொள்ளவும் உரிமை வழங்கப்படுகிறது. (the right to receive inforation and ideas from others through any lawful medium)

ஆயினும் நாட்டின் ஒற்றுமை கருதியும் மக்களின் நலன் கருதியும் இந்திய அரசியல் சட்டம் 19(2)ஆம் பிரிவு இவ்வுரிமைகளுக்குச் சில வரன்முறைகளை விதித்துள்ளது. அவை வருமாறு

இதழ்களில் வெளியிடும் செய்திகள்

1. நாட்டின் சுதந்திரத்தையும் தனித்தன்மையையும் பேணி காக்க வேண்டும் (Souvernity and integraty of state)
2. நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு செய்யக்கூடாது (Security of the state)
3. வெளிநாடுகளுடன் உள்ள சுமூக உறவைப் பாதிக்கக்கூடாது (Friendly relation with forign govts)
4. மக்கள் ஒற்றுமையைப் பேண வேண்டும் (ßblic order)
5. இழிவான செய்திகளை வெளியிடக் கூடாது (Decency or morality)
6. நீதிமன்றத்தை அவமதிக்கக்கூடாது (contemé of court)
7. அவதூறு செய்திகளை வெளியிடக்கூடாது (Defamation)
8. குற்றத்திற்கு துணை போகக்கூடாது (Incitement to an offence)

இத்தகு உரிமைகளையும் வரன்முறைகளையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படும் நாளேடு, மக்களாட்சி மரபைக் காக்கும் நான்காவது தூண் என்று கருதப்படுகிறது. அரசு, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று தூண்கள் மக்களாட்சியைத் தாங்கினாலும், நாளிதழ் என்ற நான்காவது தூண் (fourth estate) இல்லையெனில் மக்களாட்சி மரபு மண்ணாகிப் போகுமன்றோ.

நிக்கோலா மேனுசி என்னும் வெனிசு நாட்டுப்பயணி ஔரங்கசீப் அவையைப் பற்றி தம் நூலில் கூறிப்பிட்டுள்ளார். அக்கடிதங்கள் எட்டு அங்குல நீளமும், நாலரை அங்குல அகலமும் கொண்டவை. அவை பெர்சியன்அல்லது உருது மொழியில் கையினால் தாளில் எழுதப்பட்டிருந்தன. செய்திக்கடிதம் எழுதும் போது ஏற்படும் தவறு பேரரசையே கலக்கிவிடும். தக்காணப் பீடபூமியில் ஔரங்கசீப்பின் தோல்விக்குக் காரணம் செய்திக் கடிதத்தில் இருந்த தவறான செய்தியே என்று ஜான்புரையர் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் பெரும் வணிகர்கள், தங்கள் கையெழுத்துப் படிகள் எழுதவும் அதற்குரியவர்களை அமர்த்தியிருந்தனர்

**மறுமலர்ச்சிக்காலம்**

**அச்சு**

கி.பி. 1300 முதல் 1600 வரை ஐரோப்பாக்கண்டம் முழுவதும் அறிவு வளர்ச்சி பரவியது. அறிவு வளர்ச்சியின் காரணமாக நூல்களின் தேவை அதிகரித்தது. கைப்படிகள் மக்களின் தேவையை நிறைவு செய்ய முடியவில்லை.

இந்தச் சிக்கலை அச்சிடும் முறை தீர்த்து வைத்தது. பல நூற்றாண்டுகளாக ஆசியாக்கண்டத்தில் அறியப்பட்டிருந்த அச்சுக்கலையை ஐரோப்பியர்கள் 1400 வரை அறியவில்லை. ஐரோப்பிய அச்சாளர்கள் முதலில் நூல்களை அச்சிடாமல், விளையாட்டுச் சீட்டுகளில் உள்ள படங்களைப் பட அச்சுக் கட்டையாகத் (பிளாக்) தயாரிக்கும் முறையைக் கண்டறிந்தனர். இதனால் பட அச்சுக் கட்டையைத் தயார் செய்வதற்கு நீண்ட காலம் ஆனது. தனித்தனி அச்சுக் கண்டுபிடிப்பு அச்சிடும் முறையை விரைவாக்கியது. இதில் செதுக்கப்பட்ட எழுத்துக்களை மாறி மாறி அடிக்கடி பயன்படுத்தலாம். ஒரு பக்கம் அச்சடித்து முடிந்தபின் எழுத்துக்களைக் கலைத்துவிட்டு அடுத்த பக்கத்திற்காகச் சேர்க்கலாம். இந்த நகரும் எழுத்து முறை கி.பி. 1000இல் ஆசியாக் கண்டத்தில் இருந்துள்ளது. ஆனால் ஐரோப்பாவிற்கு பரவவில்லை.

**ஜான்குட்டன் பெர்க்கு**

ஜான்குட்டன் பெர்க்கு என்னும் ஜெர்மானியர் கி.பி. 1399இல் மெயின்கயில் பிறந்தார். இவர் ஸ்டராஸ்பாக்கில் சில காலம் வாழ்ந்துள்ளார். இவர் வணிகராவும், பொற்கொல்லராகவும் பணியாற்றியுள்ளார். இவர் கி.பி. 1430இல் திராட்சைச் சாறு பிழிய பயன்படுத்திய கருவியிலிருந்து மர அச்சுப் பொறியை முதலில் கண்டுபிடித்தார். அவர் மரத்திற்குப் பதில் உலோகத்தையும், அச்சுப்படிமைக்குப் பதில் தனித்தனி எழுத்துக்களையும் உருவாக்கினார். அச்சுத் துறையில் பல புதுமைகளைப் புகுத்தினார். ஐரோப்பாவில் முதன்முதலில் அச்சுக்கூடத்தை நிறுவினார். இதனால் கையெழுத்துப் படியின் காலம் முடிந்து அச்சுக்காலம் தோன்றியது. அதன் பின் அச்சுக்கலை தகவல் தொடர்பின் சிறப்பான சாதனமாக விளங்கியது. இருப்பினும் மக்களில் பலர் அச்சுக்கலையைச் சைத்தானின் மாயவித்தை என்றனர். எனவே அச்சாளர்கள் மக்களின் மனத்தை மாற்றவும், அச்சுக்கலையின் மேன்மையை உலகில் பரப்பவும் அறிவியல் நூல்களை வெளியிடாமல் விவிலியம் போன்ற சமய நூல்களை வெளியிட்டனர். மக்கள் சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டதால், அவர்களால் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மக்களின் மனமாற்றத்திற்காகவும், தங்கள் சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் விவிலியம் மிகுதியாக அச்சடிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் மக்கள் சமயத்தைப் பற்றியும் விவிலியத்தைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொண்டனர். அதன் விளைவாக சிலர் கத்தோலிக்கச் சமயத்தின் நடைமுறைச் செயல்களைக் கேள்வி கேட்கத் தொடங்கினர். புரட்சியாளர்கள் பிராட்டஸ்டண்டு சமயத்தைத் தோற்றுவித்தனர். கத்தோலிக்கச் சமயத்தைத் திருத்துதவதற்காக ஏற்பட்ட அவ்வியக்கம், பிராட்டஸ்டண்டு சமயமாக முடிவடைந்தது.

அச்சும் தாளும்

கி.பி. 1600இல் அச்சுக்கலை வாணிகத்திற்கும் பயன்பட்டது. நூரம்பர்க்கு ஆண்டன் கோபர்கா என்பவர் அச்சகம், பதிப்பகம், விற்பனை ஆகிய மூன்று தொழில்களையும் ஒரே சமயத்தில் செய்து வந்தார். இவர் பிற நகரங்களிலும் தம் நூல்களை விற்பனை செய்தார். இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவர் அச்சகம் ஒன்றை நிறுவினார். இவர் இங்கிலாந்தில் உள்ள கெண்டு மாநிலத்தைச் சேர்ந்தவர். 1471இல் நெதர்லாந்தில்உள்ள கோலோன் என்னும் இடத்தில் அச்சுக்கலை பயின்றார். 90 நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். 20 நூல்களை

மொழி பெயர்த்துள்ளார். இவர் அச்சிடுபவராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், பதிப்பாளராகவும் இருந்தார். அச்சுக் கலையின் வளர்ச்சியால் மேலை நாடுகளுக்கிடையே விரைவான தொடர்பு ஏற்பட்டது. கண்டுபிடிப்புகளம் எழுத்தோவியங்களும் மக்களுக்கு உடனே கிடைத்தன. கிருத்தவர்களுக்கே அறிவு உரியது என்னும் கொள்கை மடிந்து, அறிவு பொதுவானது என்னும் கருத்து உருவானது. மக்களிடம் உலகக் கண்ணோட்டத்துடன் தேசிய உணர்வும் வளர்ந்தது. அந்நிய மொழி மோகம் மறைந்து தாய்மொழிக்கல்வியும் தாய்மொழிப்பற்றும் ஏற்பட்டன. மக்களிடம் உலகக் கண்ணோட்டத்துடன் தேசிய உணர்வும் வளர்ந்தது. அந்நிய மொழி மோகம் மறைந்து தாய்மொழிக் கல்வியும் தாய்மொழிப்பற்றும் ஏற்பட்டன. மக்களிடம் நூல்கள் வாங்கிப்படிக்கும் பழக்கம் உண்டாயிற்று. அதனால் மிகுதியான தாய்மொழி நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவந்தன. சில்லன்பா போன்ற எழுத்தாளர்களுக்கு நோபல் பரிசு கிடைத்தது. மொழி செம்மைப்படுத்தப்பட்டது. பேச்சு மொழியும், எழுத்து மொழியும் ஒழுங்கு படுத்தப் பெற்றன.

உலகத்தின் முதல் பத்திரிக்கை 1605ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் வெளிவந்தது. வாணிகம் மிக்க நாடுகளில் செய்தித்தாள் போன்ற தோற்றமுடைய குராண்டோ என்று அழைக்கப்பெற்ற அச்சிடப்பெற்ற செய்திதாள் தோன்றத் தொடங்கியது. வாணிகச் செய்திகள் கப்பல் துறைமுகத்திற்கு வந்து சேரும் நேரம் கப்பலில் கொண்டு செல்லும் பொருள்கள், விளம்பரங்கள் போன்றவைஅவ்விதழின் உள்ளீடாக, பொருளடக்கமாக சேர்த்தால், அது ஒரு செய்தித்தாள் ஆனது. கி.பி. 1700 வரை செய்திகளைப் புத்தகங்கள், பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் தந்தன. சில நாடுகளில் அஞ்சல் துறை நிறுவப்பட்டது. ஆனால் கடிதங்களை மனிதர் மூலமும் கப்பல் மூலமும் அனுப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது.

**புதிய கண்டுபிடிப்புகள்**

தொடர்பைப் புரட்சிகரமானதாக ஆக்கப் பல புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி. 1811இல் பிரீடு ரிங்கோயிங் என்பவர் அச்சு இயந்திரத்தை இயக்க நீராவிஇயந்திரத்தைப் பயன்படுத்தி டைம்ஸ் ஆப் இலண்டன் மற்றும் பல செய்தித்தாள்கள் அதிக எண்ணிக்கையில் அச்சிடப்பட்டன. பிரிட்டனில் வெளிவந்த முதல் பத்திரிக்கை ஆக்ஸ்போர்டு கெசட் ஆகும். கி.பி. 1702இல் டெய்லி கௌரசும் கி.பி. 1719இல் டெய்லி போட்டும் வெளிவந்தன. டைம்ஸ் என்னும் நாளிதழ் கி.பி. 1785இல் தொடங்கப்பட்டது. இது உலகின் மிகச் சிறந்த நாளிதழ்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. அப்போனி நாட்டு முதல் நாளிதழான தாரபோனி கி.பி. 1913இல் வெளிவந்தது. ஆஸ்திரியா நாட்டின் முதல் வார இதழ் 1605லும், முதல் நாளிதழ்கி.பி.1714ல்லும் வெளிவந்தது. பெல்ஜியம் நாட்டின் முதல் பத்திரிக்கையான நியூவிடிச் டிஸ்ஷெர் கி.பி. 1605ல் வெளிவந்தது.பல்கேரிய மொழியில் கி.பி. 1844இல் முதல் பத்திரிக்கை வெளியாயிற்று.செக்ஸலோவேகிய நாட்டின் முதல் பத்திரிக்கையான பிராஸ்கோ நோவினி கி.பி. 1719இல் வெளிவந்தது. டென்டான்ஸ்கோமர் குரியா என்னும் டென்மார்க் நாட்டின் முதல் பத்திரிக்கை கி.பி. 1666இல் வெளிவந்தது.பிரெஞ்சு மொழியின் முதல் பத்திரிக்கையான லர்கெசட் கி.பி. 1631இல் வெளியாகியது. ஆமெரிக்க நாட்டின் முதல் பத்திரிக்கையான தி பள்ளிக் அக்கரன்ஸிஸ் கி.பி.

1690இல் அச்சிடப்பட்டது. கி.பி.1840இல் அமெரிக்காவில் இருந்த தலைசிறந்த செய்தித்தாள்கள் 30,000படிகளுக்கு மேல் விற்பனையாயின.

கி.பி. 1890இல் தாமசு ஆல்வா எடிசனும் ஆய்வாளர்கள் பிறரும் திரைப்படம் உருவாக்குவதில் வெற்றி கண்டனர். தாமசு ஆல்வா எடிசன் சினிட்டோஸ்கோப்பு என்னும் சலனப்படக் கருவியைக் கண்டுபிடித்தார். ஜீல்லியம் பிரிசுகிரீன் என்பவர் சினிமோட்டோகிராபி என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். ஏட்வர்டுமுப்பிரிட்சு என்பவர் சூப்ராக்சு கோப்பைக் கண்டுபிடித்தார். லூமியர் சகோதரர்கள்சினிமாட்டேகிராபியைக் கண்டுநிடித்தனர். அதன்பின் திரைப்படம் மிகப்பெரிய பொழுதுபோக்கு கருவியாகவும், விளம்பரச் சாதனமாகவும், செய்திகளை விளக்கிக் கூறும் தகவல் தொடர்புக் கருவியாகவும் மாறியது.

**மின்னியல் காலத் தொடக்கம்**

மனித இனம் தோன்றிய நாள் முதல் இந்நாள் வரை அறிவியலாளர்கள் தொடர்புத்துறையில் புதுப்புதுக் கருவிகள் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கின்றனர். மனிதன் வசதியாக வாழ்வதற்கே புதியவற்றைக் கண்டுபிடித்தான். மனித வாழ்வின் வேகம், எதையும் விரைவாகச் செய்ய வேண்டும் என்னும் உந்துதல் போன்றவை புதிய கண்டுபிடிப்புகளுக்குச் சில காரணங்களாகும். புதிய கண்டுபிடிப்புகள் நாகரீகத்தின் வளர்ச்சி எனலாம். பண்பாட்டை அகத்தோற்றத்தாலும், நாகரிகத்தைப் புறத்தோற்றத்தாலும் அறியலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் அணு கண்டுபிடிக்கப்பட்டது.அதன்பின் அறிவியலில் பல முன்னேற்றங்களும் மாற்றங்களும் ஏற்பட்டன. அதற்கு முன் விரைவுத் தொடர்புக்குத் தொலைபேசியும் , தந்தியும் பயன்பட்டன. மின்னியல் காலத்தில் தகவல் குறியீடுகள் விண்வெளி மூலமாக அனுப்பிப் பெறப்பட்டன.

**கணிப்பொறி**

தமிழ்நாட்டில் கோணூல் இருந்தது. கோணூல் கலையில் வல்லவர்கள் கோணூலார், காலக்கணிதர், கணியன் என அழைக்கப்பட்டனர். சங்கப் புலவர்களில் ஒருவர் கணியன் பூங்குன்றனார் ஆவார். சீனர்களின் மணிச்சட்டத்திலிருந்து இன்றைய கணிப்பொறியின் வரலாறு தொடங்குகிறது. கம்ப்யூட்டர் என்னும் சொல்லுக்குக் கணிக்க உதவும் கருவி என்பது பொருளாகும். இன்று கணிப்பொறியும் விரைவான தகவல் தொடர்பிற்கு பயன்படுகிறது. இன்று மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் கணிப்பொறி பயன்படுகிறது. எதிர்காலத்தில் கணிப்பொறியே உலகை ஆட்டி வைக்கும்.

**பன்னாட்டுச் செய்தித் தொடர்பு அமைப்பு**

உலக நாடுகளிடையே விரைவான தகவல் தொடர்புப் பரிமாற்றம் நடைபெற 1962இல் பன்னாட்டு செய்தித் தொடர்பு அமைப்பு உருவாக்கப்பட்டது.அதில் 1,14,000பங்குதாரர்கள் உளர். அதை நிருவகிக்கப் பதினைந்து நிருவாக இயக்குநர்கள் உளர். அது 1965இல் முதற் பறவை என்னும் செயற்கை கோளை வானில் அனுப்பியது. பின்னர் உலகத் தொடர்பிற்குப் பயன்படும் பல புதிய கோள்களை வானில் அனுப்பியுள்ளது. அது பன்னாட்டு தகவல் தொடர்பிற்கு உறுதுணையாக உள்ளது.

**பைபர் கண்ணாடி**

எதிர்காலத்தில் தகவல் தொடர்பிற்கு ஒளிவீச்சு, கதிர்வீச்சு போன்றவறை அதிகமாகப் பயன்படுத்தலாம். கதிரவனின் ஒளியாற்றலைப் பலவற்றிற்கு பயன்படுத்துவர். பைபர் கண்ணாடியைப் பயன்படுத்தி மிக வேகமாகச் செய்திகளை அனுப்புவார். ஒரு பைபர் கண்ணாடி தலைமுடி அளவுத் தடிப்பாக இருக்கும். ஒரு கொத்து பைபர் கண்ணாடி ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொலைபேசி அழைப்புகள் போன்றவற்றை ஒலிபரப்பும். கதிர்வீச்சு முறை முப்பரிமாண நிழல்படத்துறையிலும் பயன்படுத்தப்படும்.

**தமிழகத்தில் இதழியல் வளர்சசி**

இந்தியாவில் இதழியல் வளர்ச்சியைச் சார்ந்து தமிழகத்தில் இதழ்கள் வளர்ந்தன.இருந்தாலும், இங்கிருந்த சூழ்நிலைக்கேற்ப தமிழகத்தின் இதழியல் வளர்ச்சியில் சில தனித்தன்மைகள் காணப்படுகின்றன. ஆதலால், தமிழகத்தின் இதழியல் வளர்ச்சி வரலாற்றை அறிந்து கொள்வதன்மூலம் தற்காலத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் சில எழுச்சிமிகு வளர்ச்சிப் போக்குகளையும் புரிந்து கொள்ள இயலும்.

**1.இதழ்களின் தொடக்கக் கால வளர்ச்சி**

அச்சுக்கலையும் இதழ்களும் : தற்கால இதழியல் வளர்சசி அச்சுக்கலையைச் சார்ந்திருக்கின்றது. அச்சகம் அமைந்த பிறகுதான் பத்திரிக்கைகள் வெளிவரத் தொடங்கின. இந்தியாவில் முதன்முதலில் நூற்களை அச்சிடவும் அச்சகத்தை அமைக்கவும் கிறித்துவப் பாதிரிமார்கள் முயன்றனர். அவர்கள் அச்சிட்ட நூற்களின் துணையோடு கிறித்துவ சமயத்தைப் பரப்ப முயன்றனர்.

முதன்முதலில் தூத்துக்குடி வட்டாரத்திலிருந்து, பாதிரியார்கள் 1554இல் போக்கச்கல்லில் லூசே தமிழ் வினாவிடை என்ற நூலை ரோமன் எழுத்து முறையில் அச்சிட்டு வெளியிட்டனர். ஆனால் இந்தியாவில் முதல் அச்சகம் கிறித்துவப் பாதிரியார்களால் 1556இல் கோவாவில் அமைக்கப் பெற்றது.

தமிழகத்தில் அன்டிக் பாதிரியார் 1578இல் தூத்துக்குடிக்கும் திருச்செந்தூருக்கும் இடையிலுள்ள புன்னைக்காயலில் தூத்துக்குடி மீனவர்கள் அளித்த நானூறு ரூபாய் உதவியில், அச்சகத்தை அமைத்தார். அதன்பின்பு தமிழ் நூல்களை தமிழகத்தில் அச்சிடும் நிலை வந்தது. படிப்படியாகத் தமிழகத்தில் அச்சுக்கலை வளர்ந்தது. சென்றநூற்றாண்டின் மத்திய காலத்தில் சென்னையில் பத்து அச்சகங்கள் இருந்தன.

**இதழியல் தொடக்கம்:**

இதழ்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்பொழுது வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சிப் பெற்றுத் திகழ்கிறது. பத்திரிக்கைத்துறை நாழிகைதோறும் வளர்ந்து வரும் அறிவியலால் ஆக்கம் பெற்று மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கம் அடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகிறது. பத்திரிகைத்துறை, பத்திரிகை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே என்னும் அளவுக்கு மக்களின் அன்றாட நடைமுறையில் பத்திரிகை இடம்

பெற்றுவிட்டது' என்று சோமலே கூறுகின்றார். தமிழகத்தில் இதழ்கள் தோன்றி வளர்ந்த வரலாறு இவரது கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

இந்தியாவில் வேறுபகுதிகளில் ஏற்பட்டதைப்போன்றே தமிழகத்திலும் இங்கிருந்த ஆங்கிலேயர்களின் தேவைக்காக ஆங்கிலச் செய்தித் தாட்களை முதன்முதலில் வெளியிட்டனர். முதன்முதலில் சென்னையில் மெட்ராஸ் கெஜட், கவர்ன்மென்ட் கெஜட், மெட்ராஸ் கூரியர் ஆகிய மூன்றும் வார இதழ்களாக வெளிவந்தன. இவற்றில் மெட்ராஸ் கூரியர் என்னும் இதழை ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 578இல் தொடங்கினார். அவரது நோக்கம் வெள்ளையர்களுக்கு வேண்டிய செய்திகளை வழங்குவதாகும். ஆனால் செய்திப் போக்குவரத்து வளராமையால், செய்திகளைக் காலம் தாழ்த்தியே தொடக்க கால இதழ்கள் அச்சிட்டு வெளியிட்டன. அரசின் கெடுபிடிகளும், சட்ட திட்டங்களும் கடுமையாக இருந்தன. பொது மக்களிடம் ஆங்கில அறிவும் மிகுந்திருக்கவில்லை. இத்தகைய காரணங்களினால் தொடக்க கால இதழ்கள் குறுகில காலமே வாழ்ந்தன.

**கிறித்துவப் பாதிரியார்களும் இதழ்களும்**

தமிழகத்தில் அச்சுக்கலையை வளர்த்து, பொதுமக்கள் படிக்கும் வகையில் இதழ்களை வெளியிட்டவர்கள் கிறித்துவப் பாதிரியார்களே. 1772இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடியில் டேனிஷ் கிறித்தவ சங்கத்தினர் அச்சகத்தை அமைத்தனர். தமிழ் எழுத்துக்களை வளர்ப்பதிலும் அச்சுக் கோப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. கிறித்துவப் பாதிரியார்கள் தங்களது சமயங்களைப் பற்றிய நூற்களையும், மத மாற்றம் பற்றிய செய்திகளையும் வெளியிட்டனர்.

கிறித்துவ சமயத்தில் பல உட்பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தனி அச்சகத்தை அமைத்துக் கொண்டு மதக் கருத்துக்களைப் பரப்ப போட்டியிட்டனர். தங்களது மதத்தைப் பரப்பும் பணிக்கு உதவும் வகையில் கல்விக்கூடங்களையும் மருத்துவ மனைகளையும் அமைத்து மக்களுக்கு தொண்டு செய்தனர். இதனால் மக்கள் மத்தியில் எழுத்தறிவு வளர்ந்தது. தமிழ் இதழ்கள்தொடங்குவதற்கான சூழல் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது.

முதல் இதழ்கள் தமிழில் வெளிவந்த முதல் இதழ் எது என்பது பற்றி திட்டவட்டமாகத் தெரியவில்லை. பொதுவாக 1831இல் கிறித்துவ சங்கத்தினர் நடத்திய தமிழ்மேகசின் **(Tamil magazine)** என்பது தான் தமிழில் வெளிவந்த முதல் இதழ் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் அ.மா.சாமி முதல் தமிழ் இதழ் 1812ஆம் ஆண்டிலேயே வெளிவந்துவிட்டது. அதன் பெயர் மாசத் தின சரிதை என்பது என்று கூறுகின்றனர்.

1856இல் பெர்சிவால் பாதிரியார் சென்னையில் தொடங்கி நடத்திய தினவர்த்தமானி தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழில் செய்திகள் மட்டும் இன்றி கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவை பற்றி கருத்துரைகளும் இடம் பெற்றன. தமிழ் இதழியல் வளர்ச்சியில் இதனை ஒரு மைல்கல் என்று கருதலாம்.

1870இல் அரசின் கல்விதுறையின் ஆதரவில் ஜநவிநோதினி என்ற தமிழ் மாத இதழை வெளியிட்டனர். ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளை மொழி பெயர்த்து இதழில் வெளியிட்டனர். கல்வி வளர்ச்சித்தான் இந்த இதழின் தலையாய குறிக்கோளாயிருந்தது.

1887இல் தமிழில் முதல் நாளிதழாக லலிதபிரசனோதயா என்ற இதழ் வெளிவந்தது. 1882இல்ஜி. சுப்பிரமணிய ஐயரால் வார இதழாக தொடங்கப் பெற்ற சுதேசமித்திரன் 1899ல் நாளிதழாக மாறியது.

**இதழ்களின் வளர்ச்சி**

தொடக்க காலத்தில் இதழ்களின் வளர்ச்சி மெதுவாகவே இருந்தது. கருத்துக்களைப் பரப்ப ஆற்றல்மிக்க சாதனமாக இதழ்கள் இருப்பதை உணர்த்வர்கள் முதலில் இதழ்களைத் தொடங்கி, பல்வேறு வகையான இடர்பாடுகளுக்கு இடையில் நடத்தினர். இந்த இதழியல் சோதனையாளர்களை எல்லாம் சாதனையாளர்கள் என்று கருதலாம்.

1870இல் தற்சிந்தனையாளர் சங்கத்தின® (free thinkers association) பிரிதிங்கர் (free thinker) என்ற ஆங்கில இதழை நடத்தினர். இக்காலத்தில் வெளிவந்த இதழ்களில் தஸ்பெக்டேட்டர் (1836) மெட்ராஸ்டைம்ஸ் (160) மெட்ராஸ் மெயில்(1868) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

சென்னையில் இந்தியர்கள் நடத்திய இதழ்கள் சென்ற நூற்றாண்டின் பின்பகுதியில் வெளிவந்தன. லெட்சுமி நரசு செட்டியார் தொடங்கிய கிரஸண்ட் ராஜாசர் மாதவராவ் நடத்திய நேட்டிவ் பப்ளிக் ஒப்பீனியன், இராமச்சந்திர ஐயர் தோற்றுவித்த மெட்ராஸி பரமேசுவரம் பிள்ளை பொறுப்பேற்றிருந்த மெட்ராஸ் ஸ்டாண்டர்டு ஆகிய இதழ்கள் இந்தியர்களின் கருத்துக்களை ஒலித்தன. 1896ல் காந்தியடிகள் சென்னை வந்தபொழுது அவரை வரவேற்று, அவரது தொண்டுகளைச் சிறப்பித்து எழுதிய பெருமை பரமேசுவரம் பிள்ளையையும் அவரது இதழையும் சேரும்.

தமிழக இதழியல் வளர்ச்சியில் தனியிடம் பெறுகின்ற ஹிந்து இதழை, சுதேசமித்திரனைத் தொடங்கிய ஜி. சுப்பிரமணிய ஐயர் தொடங்கினர். அவருக்குத் தோளோடு நின்று 1878ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள் வெளிவந்தது. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்து நடத்த, அவருக்கு துணையாக சி.கருணாகரமேனன், கே. சுப்பாராவ், கே. நடராஜ ஐயம் ஆகியோர் பணிபுரிந்தனர். இன்று ஹிந்து உலக அளவில் உயர்ந்து, நிற்பதற்கு இதற்கு அமைந்த அடிப்படை ஒரு காரணமாகும். 1883இல் வார இதழாகவும் 1889இல் வாரம் மும்முறையாகவும் இவ்விதழ் வளர்ந்தது. 1905ல் இதன் சட்ட ஆலோசகராக இருந்த எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார் இவ்விதழை வாங்கி நடத்தினார். இன்று வரை இவரது குடும்பத்தினர் சீரோடும் சிறப்புபோடும் நடத்தி வருகின்ற இவ்விதழ் இந்தியாவில் முன்னணி நாளிதழ்களில் ஒன்றாகத் திகழ்கிறது. முதன்முதலில் நமது நாட்டில் தொழில் நுட்பத்தில் சிறந்த நேர்படி ஒளிப்பட அச்சு முறையை (facs mils mthod) பின்பற்றிய பெருமையும் இதற்குரியதாகும்.

இக்காலத்தில் வெளிவந்த இதழ்களில், காமாட்சி நடராஜன் 1890இல் தொடங்கிய இந்தியன் சோசியல் ரிபார்மல் இதழும் 1906இல் திருநெல்வேலியில்

வேதமூர்த்தி முதலியார் நடத்திய சர்வ ஜனமித்திரன் இதழும் நினைவு கூரத்தக்கவை.

**தமிழ் இதழ்கள்:** சென்ற நூற்றாண்டின் தமிழ் இதழ்கள் எத்தகைய வளர்ச்சிப் பெற்றிருந்ததென்பதை அன்றைய மாநில அரசு வெளியிட்டு இருக்கும் அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ளலாம். 1887ம் ஆண்டில் 12 தமிழ் இதழ்கள் வெளிவந்ததையும் அவை பற்றிய கீழ்க்கண்ட விவரங்களையும் அந்த அறிக்கை [3] வழங்குகின்றது.

| இதழின் பெயர் | வெளியான இடம் | காலம் | விற்பனையான படிகள் |
|---|---|---|---|
| 1. இந்து ஜனபூசணி | சென்னை | வாரஇதழ் | 200 |
| 2. வெற்றிக்கொடியோன் | சென்னை | வாரஇதழ் | 250 |
| 3. சுதேசாபிமானி | சென்னை | வாரஇதழ் | 480 |
| 4. சூஜனமனோரஞ்சனி | பாளையங்கோட்டை | வாரஇதழ் | 220 |
| 5. தத்துவ விலாசினி | சென்னை | வாரஇதழ் | 140 |
| 6. திருவாங்கூர் அபிமானி | நாகர்கோவில் | மாதம் மும்முறை | 350 |
| 7. கலாநிதி | கோவை | வாரம் இரு முறை | 275 |
| 8. சுதேசாபிமானி | சேலம் | வாரம் இருமுறை | 150 |
| 9. சுதேசமித்திரன் | சென்னை | வாரம் இரு முறை | 1120 |
| 10. லலிதாபிரசனோ தயா | சென்னை | வாரம் இரு முறை | 150 |
| 11. பிரமஞானி போதினி | பெங்களூர் | வாரம் இரு முறை | 110 |
| 12. திராவிட வர்த்தமானி | பெங்களூர் | வாரம் இரு முறை | 250 |

அப்பொழுது வெளிவந்த இதழ்களில் பெரும்பாலானவை வார இதழ்கள், அவை குறைந்த அளவிலேயே பிரதிகளை வெளியிட்டு வந்தன.

## II. விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்கள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியை இந்திய விடுதலை இயக்க காலமாகக் கொள்ளலாம். பெருவெள்ளம் போன்று நாட்டுப்பற்றும், விடுதலை உணர்வும் பெருக்கெடுத்து ஓடியதால், இதழ்களிலும் விடுதலை இயக்கத்தின் தாக்கம் இருந்தது. இக்காலத் தமிழ் இதழ்களின் வளர்ச்சிப் போக்கில் இதனை

வெளிப்படையாகக் காணலாம். இதழ்களை நடத்தியவர்களும், இதழ்கள் பணியாற்றியவர்களும், எழுதியவர்களும் பெரும்பாலும் தேசிய இயக்கங்களில் நேரடியாகப் பங்கு பெற்றவர்கள். ஆதலால் இதழ்களும் அவர்களது வழியிலேயே நடை பயின்றன.

**சுதேசமித்திரன் :**

தமிழில் முதல் அரசியல் இதழொன்றைப் புகழுகுரிய சுதேசமித்திரனை **188**இல் வார இதழாகத் தொடங்கி, 1882இல் வாரம் மும்முறையாக்கி, 1889இல் நாளிதழ் ஆக மாற்றி நடத்தி வந்த ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்திய தேசிய காங்கிரசில் தொடக்கத்தில் இருந்தே பெரும் பங்கு பெற்றவர். ஆதலால் தேசிய உணர்வின் உந்துதலோடு சுதேசமித்திரனையும் நடத்தினார். **1918**இல் ஏ. ரெங்கசாமி ஐயங்கார் இதன் ஆசியரானார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் சி.ஆர். சீனிவாசன் இதன் ஆசியராகி, ஐம்பதாண்டுகள் இதனை நடத்தி வந்தார்.

**1904**இல் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். அக்கினிக்குஞ்சாக விளங்கிய அவரது புரட்சி கருத்துக்களாலும் வளமான உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது. கவிதையில் உரைநடையின் எளிமையையும் உரைநடையில் கவிதையின் வளத்தையும் ஏற்றிய பாரதியாரின் எழுத்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பியது.

**இந்தியா:**

**1905**இல் வங்காளத்தைப் பிரித்தபொழுது நாடே கொதித்தெழுந்தது. மகாகவிபாரதியார், இந்திய அரசியலில் தீவிரவாதிகளின் தலைவராக விளங்கிய பாலகங்காதர திலகரைப் பின்பற்றிப் புரட்சிக் கவிஞராக ஒளிர்ந்தார். தன்னைப் போன்ற தீவிரக் கருத்துக் கொண்டவர்களோடு சேர்ந்து **1907**இல் இந்தியா என்ற தமிழ் மாத இதழையும் பாலபாரதி என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.

மகாகவி பாரதியார் இந்தியா இதழை ஒரு புரட்சிகரமான இதழாக நடத்தியதை அவர் அறிவித்திருந்த சந்தா விவரத்திலிருந்தே அறிந்து கொள்ளலாம். இந்தியா இதழுக்கு அவர் அறிவித்திருந்த ஆண்டுச் சந்தா விவரம்

எல்லா கவர்மெண்டாருக்கும் ரூ.**50**

ஜமீன்தாரர்கள், ராஜாக்களுக்கு ரூ.**30**

மாதம் ரூ.**200**க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு ரூ.**15**

மற்றவர்களுக்கு ரூ.**3**

அரசின் கடுமையான போக்கின் விளைவாக மகாகவி பாரதியார் பாண்டிச்சேரியில் குடியேறினார். அவர் நடத்திய இதழ்கள் சென்னையிலும் புதுச்சேரியிலுமாக வெளிவந்தன. நிதிநெருக்கடியால் அவரால் தொடர்ந்து நடத்த இயலவில்லை. **1910**இல் அவை நின்று விட்டன. பாரதியார் சென்னைக்குத் திரும்பிய பின் மறுபடியும் சுதேசமித்திரனில் பணியாற்றினார். அவர் தனது **39**ஆம் வயதிலேயே காலமாகிவிட்டதால் அவரது இதழியல் சாதனைகளும் நடுவிலேயே நின்று போயின.

**தேசபக்தன் :**

மணிப்பிரவளாமாக, மனம்போல் பிற சொற்களைக் கலந்து பத்திரிக்கைகளில் பலரும் எழுதி வந்தபொழுது, நல்ல பழகு தமிழில் பத்திரிக்கையை நடத்தி, இதழியில் தமிழுக்கு வளம் சேர்த்தவர் தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரானர். நல்ல தமிழ்ப்புலமைமிக்க இவர் சென்னையில் வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். நாட்டில் விடுதலை இயக்கம் வளர்ந்த பொழுது நாட்டுக்குத் தொண்டு செய்யக் கருதி ஆசிரியப்பணியிலிருந்து விலகி இதழியல்ப் பணியை மேற்கொண்டார்.

திரு.வி.க. **1917**இல் தேசபக்தன் என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழகத்தின் முரசு கொட்டிய நாளிதழ் தேசபக்தன் திரு.விக தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். சிறந்த சீர்திருத்த உள்ளத்தினர் இவற்றோடு அவரது தமிழ் புலமையும் சேர, தேசபக்தன் தெருவெங்கும் தமிழ் முழக்கமும் தேசிய முழக்கமும் செய்கின்ற இதழாக வெளிவந்தது. அன்று தமிழகத்தில் இளைஞர்களின் உள்ளம் கொண்ட இதழாக, தேசபக்தன் திகழ்ந்தது. பின்னர் வவே.சு. ஐயர் இவ்விதழ் பொறுப்பேற்றார். ஆனால் **1920**இல் இவ்விதழ் நின்றது.

திரு.வி.க. அவர்களின் இதழியல் பணி தொடர்ந்தது. அவர் நவசக்தி என்னும் வார இதழினைத் தொடங்கினார். இருபது ஆண்டுகள் இவ்விதழைத் திறம்பட நடத்தினார். இவ்விதழின் மூலம் எழுத்துலகிற்கு வந்து புகழ் பெற்றவர்கள் கல்வி இதழின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியும், கலைமகள் இதழாசிரியர் கீ.வா. ஜகந்நாதனும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**சில குறிப்பிடத்தக்க இதழ்கள் :**

**1917**இல் திராவிடன் என்ற இதழ் ஆதிதிராவிடர்களின் நலம் காக்கும் இதழாக வெளிவந்தது. காலப்போக்கில் பிராமணல்லாதாரின் கொள்கைகளை எடுத்தக் கூறும் இதழாகியது. பின்னர், அரசினோடு ஒத்துழைத்த நீதிக்கட்சியின் இதழாகப் பணியாற்றியது.

**1953**இல் காரைக்குடி சொ. முருகப்பா ‘‘குமரன்’’ என்ற இதழைத் தொடங்கினார். நல்ல இலக்கிய இதழாக இது இருபதாண்டு காலம் நடைபெற்றது. இவர் சண்டமாருதம் என்ற நாளிதழை சில காலம் நடத்தி வந்தார்.

**1926**இல் டாக்டர் பி. வரதராஜீலு நாயுடு தமிழ்நாடு என்ற நாளிதழைத் தொடங்கினார். நல்ல நடையில் வெளிவந்த இவ்விதழ் சுதந்திரப்போராட்ட இதழாக விளங்கியதால் மிகக் குறுகிய காலத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது. ஆனால் 1930இல் காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தை ஆதாரிக்காததால், காங்கிரசின் இதழைத் தொடங்கினார். அந்த இதழும் தொடர்ந்து வெளிவரவில்லை.

1935இல் செட்டி நாட்டில் சமயத்தைப் பரப்பவும் நாத்திகத்தைச் சாடவும் கதர்மம் என்ற நாளிதழ் வெளிவந்தது. ஆனால் குறுகிய காலமே வாழ்ந்து முடிந்தது. இதனைப் போன்றே குறுகிய காலமே நடைபெற்ற மற்றொரு நாளிதழ் ஜெயபாரதி . இது ஒரு தேசிய இயக்க இதழாகும்.

சுதந்திர வேட்கையை வளர்த்த மற்றோர் இதழ் சுதந்திரச் சங்கு, இதனை கணேசன் தொடங்கி நடத்தினார். இதில் பணிபுரிந்து, இதன் வளர்ச்சிக்கு உதவியவர் சங்கு சுப்பிரமணியம்.

1934இல் சதானந்தம் தினமணி நாளிதழைத் தொடங்கினார். நாட்டுப்பற்றை வளர்த்த இவ்விதழில் முதல் எட்டு ஆண்டுகள் தெ.ச. சொக்கலிங்கம் ஆசிரியராகப் இருந்தார். அதன்பின்பு நீண்ட காலம் ஏ.என். சிவராமன் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒரு தமிழிதலில் நீண்டகாலம் பணியாற்றியவர் என்ற புகழுக்குரியவர் ஏ.என்.சிவராமன், தமிழில் நீண்ட காலம் நடைபெறும் இதழும் இதுவாகும்.

தமிழ் இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தவர்களில் பெரியார் ஈ.வே. ராமசாமி குறிப்பிடத்தக்கவர். இவர் குடியரசு என்ற இதழினைத் தொடங்கி நாட்டின் விடுதலை இயக்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தேடினார். இவர் காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறிய பிறகு இவ்விதழும் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டது. தந்தை பெரியார் பிராமணர் அல்லாதாரின் நல இயக்கத்தில் ஈடுபட்ட பின் 1936இல் விடுதலை இதழைத் தொடங்கினார். திராவிட இயக்கத்தின் தாய் இதழ் இதுவாகும்.

1937ல் ப.ஜீவானந்தம் ஜனசக்தி என்ற இதழைத் தொடங்கி நடத்தினார்.

தமிழ்நாடு இதழில் முதலில் பணியாற்றிய தெ.ச.சொக்கலிங்கம், பின்னர் அவரே காந்தி என்ற வாரம் இருமுறை இதழையும் வந்தேமாதரம் என்ற நாளிதழையும் தொடங்கி நடத்தினார். 1934 முதல் 1943 வரை தினமணியில் பணியாற்றிய இவர் 1944இல் தினசரியைத் தொடங்கினார். இவர் பின்னர் ஜனயுகம் பாரதம் நவசக்தி ஆகிய இதழ்களையும் நடத்தினார். தேசியம் வளர்த்த இதழாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர்.

இக்காலத்தில் எஸ்.எஸ். வாசன், ஆனந்த விகடன் வார இதழைத் தொடங்கினார். இவ்விதழ் விடுதலை இயக்கத்திற்கு ஊக்கம் தந்தது. 1930இல் அரசு இதனை ரூ.1000 ஈட்டுத் தொகை கட்டும்படி ஆணையிட்டது. முதலில் இந்த இதழில்தான் கல்கி கிருஷ்ணமூர்த்தி பணி செய்தார்.

நாட்டின் விடுதலைக்கு முன்பு தோன்றிய நாளிதழ்களில் தனியிடம் பெறுவது தினத்தந்தி. இதனைத் தமிழர் தந்தை என்று தமிழகத்து மக்களால் போற்றிப் புகழப் பெறுவம் சி.பா. ஆதித்தனார் 1942இல் தொடங்கினார். முதலில் இந்த இதழும் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டது. பின்னர் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டது. மக்களின் பேச்சுத் தமிழில் செய்திகளை வெளியிட்டு பொதுமக்களிடம் செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தைக் கொண்டு வந்தவர் சி.பா. ஆதித்தனாரே

இவை தவிர இன்னும் பல இதழ்கள் வெளிவந்தன. பெரும்பாலானவை குறுகிய காலமே நடைபெற்றன. பொதுவாக எல்லா இதழ்களும் நாட்டின் விடுதலை இயக்கத்திற்கும் துணை செய்தன.

## III தற்காலத் தமிழ் இதழ்கள்

நாடு விடுதலை பெற்ற பிறகு இதழ்களைத் தொடங்கி நடத்த முழுச் சுதந்திரம் கிடைத்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு புற்றீசல்கள் போல

இதழ்கள் தோன்றின. தமிழ் இதழ்களின் எண்ணிக்கை இக்காலத்தில் மிகுந்துள்ளது.

நாளிதழ்கள்: நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாளிதழ்கள் தோன்றின. இவற்றில் தனித்தமிழில் செய்திகளை வெளியிடும் நோக்கில் மதுரையில் கருமுத்து தியாகராச செட்டியார் தொடங்கி நடத்திய தமிழ்நாடு இதழ் குறிப்பிடத்தக்கது. தமிழ் வளர்ச்சிக்க அரும்பணியாற்றிய இவ்விதழ் தொடர்ந்து நடைபெறவில்லை. சில காலம் வார இதழாக வெளிவந்தது.

தற்காலத்தில் வெளிவரும் நாளிதழ்களில் தினத்தந்தி தினமணி, நவசக்தி, நவஇந்தியா மதுரைமணி, தினமலர், தினகரன், தினசரி , காலைக்கதிர் ஆகியவை பொதுவான நாளிதழ்களாகும்.

முரசொலி, தீக்கதிர், விடுதலை, அண்ணா, மறவன் மடல், பொன்மனம் ஆகியவை அரசியல் இதழ்களாகும்.

விடுதலைக்குப் பின் நாளிதழ்களில் ஏற்பட்ட ஒரு சிறந்த வளர்ச்சி, மாலை இதழ்கள் வெளிவருவதாகும். அந்தந்த வட்டாரச் செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து மாலை நாளிதழ்கள் வெளிவருகின்றன. முதல் மாலை நாளிதழை பா.சிவந்தி ஆதித்தன் 1959ல் மாலைமுரசு என்ற பெயரில் தொடங்கினார். 1984ல் இவ்விதழ் வெள்ளிவிழா கொண்டாடியது. இப்பொழுது ஆறு நகரங்களில் மாலைமலர் என்ற பெயரில் மாலை இதழ்கள் வெளிவருகின்றன.

**பருவ இதழ்கள்:**

நாடு விடுதலை பெற்ற பிறகு எண்ணற்ற பருவ இதழ்கள் மலர்ந்திருக்கின்றன. இதனைப் பற்றி கூறுகையில், நாளிதழ்கள் அரசியலையே அரைத்துக் கொண்டு இருப்பதால், பருவ இதழ்கள் குறிப்பாக வார இதழ்கள் வேகமாக வளர்ந்து கொண்டு வருகின்றன. ஆனால் இந்த இதழ்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே என் அ.மா.சாமி குறிப்பிடுவதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தற்காலத்தில் தோன்றிய நிறைய வாசகர்களைப் பெற்றிருக்கும் வார இதழ்கள், குமுதம், ராணி, தேவி , குங்குமம் ஆகியவைகளாகும்.

திரை இதழ்களும், பல்வேறு துறைகளைச் சார்ந்த இதழ்களும் பெருகியுள்ளன. இவற்றைப் பட்டியலிட்டால் அதுவே ஒரு தனி நூலாகும்.

ஒரு நாவலை ஓர் இதழாகவெளியிடும் பழக்கத்தை ராணி முத்து 1968இல் தொடங்கி வைத்தது. இப்பொழுது நாவல்களை வெளியிடும் பல இதழ்கள் வெளிவருகின்றன.

**மதிப்பீடு:**

தமிழ் இதழ்கள் எண்ணிக்கையில் பெருகியுள்ள போதிலும், பெரும்பாலான இதழ்களின் தரம் பெருமைப்படும் வகையில் இல்லை. பாலுணர்ச்சியையும், வன்முறையையும் தூண்டும் வகையில் உணர்ச்சிமிக்க செய்திகளையும், கதை, கட்டுரைகளையும் வெளியிட்டு இதழ்கள் தங்களது விற்பனையைப் பெருக்கிக் கொள்ள முயல்கின்றன. இம்முயற்சியில் உண்மையைக் களபலி கொடுக்க அவை தயங்குவதில்லை.

அரசியலில் செல்வாக்கும், திரைப்படங்களின் ஊடுருவலும் மிகுதியாக உள்ளன. சில புகழ்பெற்ற நாள், வார இதழ்களில் விளம்பரங்களே பெரும்பாலான பக்கங்களை அடைத்துக் கொள்கின்றன. வெளிவருகின்ற ஒவ்வொரு இதழிலும் மக்களுக்குப் பயன்படக்கூடியவை எவை என்று கணக்கிட்டுப் பார்த்தால் ஏமாற்றம் தான் எஞ்சும்.

மக்கள் கல்விக்குத் துணை செய்து, மக்களாட்சி வெற்றி பெற தமிழ் இதழ்கள் பாடுபட வேண்டும். அப்பொழுது தான் அவற்றின் எதிர்காலம் பயனுடையதாக இருக்கும்.

**தலையங்கம்**

**தலையங்கத்தின் பங்கு**

தலையங்கப் பகுதி நாளிதழின் கண்ணாடியும், கைநாடியும் போன்றது. நாட்டு நடப்புக்களைப் பற்றி இந்த நாளிதழ் என்ன கருதுகிறது என்பதைக் காட்டும் கண்ணாடியாகவும், நாளிதழின் கருத்தைக் கணிக்க உதவும் கைநாடியாகவும் தலையங்கம் விளங்குகிறது. பிற பகுதிகளைப் போன்று தலையங்கப் பகுதி பெரும்பாலோரால் விரும்பிப் படிக்கப்படுவதில்லை. என்றாலும் நாட்டின் அறிவுஜீவிகளும் கருத்துக் கணிப்பாளர்களும் தலையங்கத்தை ஊன்றிப் படிக்கின்றனர். ஒரு நாளிதழின் செல்வாக்கிற்கு அதன் தலையங்கம் பெரும்பங்காற்றுவதுண்டு.

**தலையங்க செய்தி**

தலையங்களத்தில் இன்ன செய்தியைப் பற்றித்தான் எழுத வேண்டும் என்று வரையப்பது கடினம். பொதுவான அரசியல் பிரச்சனைகளும், சமுதாய சீர்கேடுகளும் அரசினர் போக்கும் தலையங்கத்திற்குக் கருப்பொருளாவதுண்டு. முந்தைய நாட்களின் முதன்மைச் செய்திகளும் தலையங்கப் பொருட்கள் ஆவதுண்டு.

**தலையங்கப் பகுதிகள்**

பொதுவாக தலையங்கம் சிக்கல், விளக்கம், தீர்வு என்ற மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலில் சிக்கலை மக்கள் மத்தியில் எடுத்து வைப்பதாகத் தலையங்கம் அமையவேண்டும். எதைப்பற்றி எழுதுகிறோம் என்பதைத் தலையங்கத்தின் தொடக்கவரிகள் உணர்த்தவேண்டும். பின்னர் அச்சிக்கலைப் பற்றிய விளக்கங்களைத் தரவேண்டும். இறுதியில் இவ்விளக்கங்களின் அடிப்படையில் தீர்வுகளைச் சொல்ல வேண்டும்.

(எடு)

தலைப்பு இலங்கையில் மாகாணத் தேர்தல்கள்

சிக்கல் இலங்கையில் ஜனநாயக முறையில் தேர்தல் நடத்த குறைந்த பட்ச தகுதிகள் என்ன

தீர்வு இலங்கையில் அமைதி ஏற்பட்டாலன்றித் தேர்தல்கள் நடத்திப் பயனில்லை. அமைதி ஏற்படதுப்பாக்கி மட்டும் போதாது. பேச்சு வார்த்தைகளைத் தொடங்க வேண்டும். போர் நிறுத்தம் ஏற்பட முத்தரப்பினரும் முன் நிபந்தனைகளை கைவிட வேண்டும். இலங்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேறு வழியே கிடையாது.

**தலையங்க அமைப்பு**

தலையங்கம் நேரடியாகவும், தெளிவாகவும், அமைய வேண்டும். செய்திகளில் வருவதைப் போன்று என கூறப்படுகிறது என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. நம்பத்தகுந்த வட்டாரங்கள் கருதுகின்றன என்றெல்லாம் பிறரது கூற்றாகவோ, ஒளித்து மறைத்தோ எழுதக்கூடாது. தலையங்கம் என்பது பத்திரிக்கையயின் குரலாததால் அதில் வெளிப்படையான தகவல்களே இடம் பெறவேண்டும். செய்திகளில் சொந்தக் கருத்துக்கே இடமில்லை. ஆனால் தலையங்கதில் சொந்தக் கருத்துக்கே முதல் இடம் தரப்படும். தீர்வுகளைச் சொல்லும்போது பத்திரிக்கையின் கருத்தைச் சொல்ல தயக்கம் காட்டக்கூடாது. தயங்கும் தலையங்கம், முதுகெலும்பற்ற மனிதனைப் போன்றது திரைச்சீலை இல்லாத வீட்டைப் போன்றது. மஞ்சள் இல்லாத மங்களம் போன்றது.

**மாதிரி வினாக்கள்:**

1. தகவல் தொடர்பு கொள்கை என்றால் என்ன?
2. Communication, Communications தொடர்பு படுத்துக?
3. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் எவை?
4. தகவல் தொடர்பின் அடிப்படைகள் யாவை?
5. சிறு குறிப்பு வரை –
   (1) இதழியல்
   (2) வானொலி
   (3) திரைப்படம்
   (4) தொலைக்காட்சி
6. தொலைபேசியின் வகைகள் குறித்து எழுதுக?
7. இணையதளத்தில் தமிழ் இடம் பெறும் பாங்கினை எழுதுக?
8. இதழியல் சட்டங்கள் யாவை?
9. தற்கால இதழியல் போக்கு குறித்து கட்டுரை வரைக?

**இவ்வலகிற்கான பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1. தகவல் தொடர்பியல் - வெ. கிருட்டிணசாமி – மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு பாரிமுனை சென்னை – 108.

2. முனைவர் ச. ஈஸ்வரன், இரா. சபாபதி - இதழியல் - பாவை பப்ளிகேசன்ஸ் - சென்னை.

## குறிப்பு

## அலகு - 2
## இதழியல் மொழிநடை

ஓர் இதழுக்கு சிறப்புச் சேர்ப்பவற்றுள் ஒன்று அதனுடைய மொழி நடையாகும். மொழி கருத்துக்களை வெளிப்படுத்தும் கருவி, அதனை எப்பொழுதும் ஒன்று போல் நாம் பயன்படுத்துவதில்லை.

நாம் மற்றவர்களோடு பேசும்பொழுது பயன்படுத்தும் தமிழ், ஒன்று அது பழகு தமிழ், கொச்சையாக இருக்கலாம். ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்த கையாளும் தமிழ் நடை வேறு. அது ஓரளவு கட்டுப்பாடாக இருக்கும். மேடை ஏறி முழங்கும் பேச்சாளர்கள் பயன்படுத்தும் நடை மற்றொன்று அதில் எதுகை, மோனை பின்னிவரும் ஒலிக்கு அங்கு தனி இடமுண்டு.

எழுதுகின்ற மொழி நடையும் கூறுகின்ற பொருளுக்கேற்ப வேறுபடுகிறது. பெரும்புலவர்களில் இலக்கியக் கட்டுரைகளில் சொற்செறிவு இருக்கும் நடை கடினமாக அமையலாம். சிறு கதைகளில் சொல் சிக்கனமிருக்கும். நாவல்களில் அணி சேர்க்கும் அடைமொழிகளும் உவமைகளும் மிகுந்திருக்கும்.

இதழியல் மொழிநடை இவற்றிலிருந்து பெரிதும் மாறுபட்டது. படிக்கத் தெரிந்தவர்கள் அனைவரும் எளிதாகப் படித்து, புரிந்து கொள்ளக்கூடிய மக்கள் மொழிநடையில் இதழியல் எழுத்துக்கள் இருக்க வேண்டும். அகராதியின் துணை கொண்டு புரிந்து கொள்ளும் நடையிலிருந்தால், பொது மக்கள் அந்தச் செய்தித்தாளை வாங்கிப் படிக்கமாட்டார்கள். ஆதலால் தான் சி.பா. ஆதித்தனார், இதழியல் மொழி பற்றிக் கூறுகையில், ''பேச்சு வழக்கில் இருக்கும் தமிழே உயிருள்ள தமிழ். அதைக் கொச்சை நீக்கி எழுத வேண்டும்'' என்றும், ''புரிகின்ற தமிழில் எழுதினால் மட்டும் போதாது: பேசுகிற தமிழில் எழுத வேண்டும்,'' என்றும் கூறுகின்றார்.

**தமிழ் இதழியல் நடை வளர்ச்சி** : நமது நாட்டில் ஆங்கில இதழ்களின் மொழிநடைக்கும் தமிழ் இதழ்களின் மொழி நடைக்கும் இடையில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு.

ஆங்கில இதழ்களில் தொடக்கக் காலத்திலிருந்து ஓரளவு அங்கில மொழிப்புலமை மிக்கவர்களே பணியாற்றினார்கள். செய்தித்தாட்களை நடத்துவதில் இங்கிலாந்து நாட்டு மரபுகளைப் பின்பற்றினார்கள். மேலும், அவற்றின் வாசகர்களும் பெரும்பாலும் நல்ல ஆங்கில அறிவு பெற்றவர்களாக இருந்தனர். ஆதலால் ஆங்கில இதழ்களின் மொழி நடை உயர்வானதாக அமைந்தது. இப்பொழுது தான் ஆங்கில இதழ்களில் மொழிநடை தேய்ந்து வருகின்றது. இதனை ரங்கசுவாமி பார்த்தசாரதி, ''இந்தியவிலிருக்கும் ஆங்கிலமொழி நாளிதழ்களின் மொழியும் நடையும் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகின்றது'' என்று கூறுகின்றார்.

தமிழ் இதழ்களை முதலில் தொடங்கியவர்கள் பெரும்பாலும் தமிழ் மொழிப்புலமை பெற்றவர்களாக இருக்கவில்லை. அரசியல் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கும் நோக்கில் பத்திரிக்கைகளைத் தொடங்கினர். எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் மிகவும் குறைவாகவே இருந்திருக்கலாம். ஆதலால் மொழி உணர்வின்றியே இதழ்களை நடத்தினர். இதழ்களில் எழுதுகின்றவர்கள் தங்களது பேச்சுத்தமிழல் எழுதுவதையே இதழியல் தமிழாகக் கருதினர்.

ஆங்கிலமும் வடமொழியும் கலந்த ஒருவகைக் கலப்பு நடையே தமிழ் இதழியல் நடையாக இருந்தது. அன்றைய நடைக்கு எடுத்துக்காட்டாக, ஒரு செய்தியின் தலைப்பாக, ஒரு நாளிதழ் ''தஞ்சை டெல்டாவுக்கு மேட்டூர் அணை

ஜலம்-பிப்.11ந் தேதி வரை இந்த சப்ளை நீடிக்கும்.'' என்று எழுதியதை, சோமலெ கூறுகின்றார். தமிழ் நாளிதழ்களில் மலிந்து விரைவாகச் செய்தியைப் படிக்கும் பொழுது, நீண்ட வாக்கிய அமைப்பு படிக்கத் தடையாக இருக்கும்.

நீண்ட வாக்கியமாக எழுதும் பொழுது இலக்கணப் பிழை ஏற்படலாம். மேலும், வாசகர் புதிய சொற்களைப் பயன்படுத்தும் பொழுது கவனமாக அவற்றிற்கு விளக்கம் தரவேண்டும். இல்லையேல் வாசகரால் செய்தியை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.

கால்புள்ளி, அரைப்புள்ளி, புள்ளி போன்ற நிறுத்தக் குறிகளைச் சரியான இடத்தில் போடுவதும் மொழித் தெளிவுக்கு உதவும். நிறுத்தப் புள்ளிகளைச் சரியாகப் போடாவிட்டால், செய்தியைப் படிக்கும் வாசகர் தடுமாற நேரிடும்.

இருபொருள்படும் சொற்களைப் பயன்படுத்துகின்று பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சொற்களைத் தவிர்த்திடுதல் சிறந்தது.

வேற்றுமை உருபுகளைத் தக்க இடங்களில் பயன்படுத்த வேண்டும்.

**சிறப்புத்தேர்ச்சி (specialization)** : முன்பு ஓர் இதழியாலாளர் எல்லாத் துறைகள் பற்றியும் எழுத வேண்டியிருந்தது. இப்பொழுது காலம் மாறி விட்டது. ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறைபற்றி எழுதுவதில் தனிச்சிறப்புப் பெற்று விளங்க வேண்டியிருக்கின்றது.

வாணிபம், பொருளாதாரம், அரசியல், நாட்டு நடப்பு, திரைப்படம், விளையாட்டு, முன்னேற்றத் திட்டங்கள் என்று ஒவ்வொன்றைப் பற்றியும் எழுத தனித்தனி இதழியலாளர்கள் உள்ளனர். ஆதலால், ஒவ்வொருவரும் தங்களது துறை பற்றி எப்படித் திறமையாக கூறுவதென்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான சிறப்புத் தேர்ச்சிபெற தனக்குத்தானே பயிற்சியளித்துக் கொள்ள வேண்டும்.

சிறப்புத் தேர்ச்சி பெற, முதலில், தனது எழுத்தைப் பற்றிய தெளிவான, சரியான மதிப்பீடு தேவை. குறைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். நிறைவான இயல்புகளைத் தக்கபடி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

''எது பற்றி, யாருக்காக எழுதுகின்றோம்,'' என்ற உணர்வுடன் எழுத வேண்டும். முதலிலேயே எழுதப் போவதைத் திட்டமிட்டு வகுத்துக் கொள்ளுதல் தேவை. எப்படிக் கூறப் போகின்றோம் என்பதைத் தீர்மானித்துக் கொண்டு எழுதவேண்டும்.

மொழி நடையில், வாக்கிய அமைப்பில் நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்துவதில் தமக்கு என்றொரு முறையை வகுத்துக் கொள்வது சிறந்தது. வைரத்தைப் பட்டை தீட்டுவதைப் போல மொழி நடையையும் சீர்படுத்திக் கொள்ள இயலும்.

இதழியல் எழுத்து இலக்கியமாகாவிட்டாலும், நல்ல எழுத்து இலக்கிய மதிப்பைப் பெறலாம். புதிய வரலாறு படைக்கும் கலை இதழியல், அதில் எழுதுவதும் ஆக்கப் படைப்புத்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**மொழி நடை நூல் (Style Book)** : வெளிநாடுகளில் செய்தித்தாட்கள் வழிகாட்டும் மொழி நடைநூலைப் பயன்படுத்துகின்றன. மொழி நடைநூலில் ஒரு செய்தியாளர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும், கையாள வேண்டிய மொழிநடையையும் பற்றிய நுட்பமான குறிப்புகள் இருக்கும் இதழியலாளர்கள் இதனை 'வேதநூலாகப்' பின்பற்றுகின்றனர். செய்தித்தாளின் தரத்தைக் கட்டிக்காக்க மொழிநடை நூல் பெருந்துணை செய்கின்றது.

நமது நாட்டில் பெரும்பாலான செய்தித்தாட்கள் சில மரபுகளை உருவாக்கிக் கொண்டு செயல்படுகின்றன. திட்டவட்டமாகப் பின்பற்றக் கூடிய மொழி நடை நூல் இல்லாததால், சில இதழ்களில் மொழிநடையில் குழப்பத்தைக் காணலாம். இதனால் வாசகர்கள் தெளிவின்றித் தவிக்க நேரிடுவது உண்டு.

தமிழில் மொழிநடை நூலை உருவாக்கிப் பெருமை பெற்றவர் சி.பா. ஆதித்தனார். அவர் பத்திரிகைத் துறையில் 35 ஆண்டுகள் பெற்ற அனுபவத்தின் விளைவாக, தனது நாளிதழ்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு எழுதியனுப்பிய குறிப்புகளின் தொகுப்பாக அமைத்த நூல் 'பத்திரிகை எழுத்தாளர் கையேடு'. தமிழில் வெளிவந்த முதல் இதழியல் மொழிநடை நூல் இது தான். இந்நூலில் 44 அத்தியாயங்கள் உள்ளன. சுருக்கமாக, தெளிவாக, தக்க எடுத்துக்காட்டுகளுடன் இந்நூல் சிறப்பாக அமைந்துள்ளது.

ஒரு செய்தித்தாளில் மொழிநடைச் சிறப்பிற்கு மொழிநடை நூல் வழிகாட்டும் ஆனால் மொழிநடை அமைவது அதில் பணி செய்கின்ற ஆசிரியர், துணையாசிரியர்கள், செய்தியாளர்கள், ஆகியோர் மொழியைக் கையாளும் ஆற்றலைச் சார்ந்தது. ரங்கசுவாமி பார்த்தசாரதி 'எந்த ஒரு மொழிநடை நூலும் தொழில் முறைச் செய்தியாளர், துணையாசிரியர் ஆகியோரின் முத்திரைகளாக விளங்குகின்ற கடின உழைப்பு, பெற்றிருக்கும் ஆற்றல்கள் இயல்பான கலைத்திறன் ஆகியவற்றிற்குப் பதிலாக முடியாது'' என்று கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

**தனி நடை:** இதழியல் மொழிநடை என்பதை எல்லாச் செய்தித்தாட்களும் ஒரே மாதிரி எழுத வேண்டும் என்ற பொருளில் கூறுவதில்லை. வாசகர்களுக்குச் செய்திகளை அறிவித்தல் செய்தித்தாட்களின் தலையாய நோக்கமாதலால், அவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் மொழிநடை இருக்க வேண்டும் என்பதையே இது கூறுகின்றது.

ஒருவர் மற்றவரைப் போல் நடப்பதில்லை. மொழி நடையும் அப்படித்தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி மொழியைக் கையாளலாம். ஆனால் எளிமையும், இனிமையும் சுருக்கமும் செறிவும் செய்தித்தாளின் மொழியின் உயிர் மூச்சாக விளங்க வேண்டும்.

ஒரு செய்தி, செய்திச் சிறப்புக்கட்டுரை, தலையங்கம் இவற்றைப் படிக்கின்றவர்கள் இதனை இவர் தான் எழுதியிருக்க முடியும் என்று மொழி நடையைக் கொண்டு தீர்மானிக்க முடிந்தால், அதனை எழுதியவர் மொழி நடையைக் கையாள்வதில் வெற்றி பெற்று விட்டார் என்று கருதலாம்.

**பிழையற்ற மொழி நடை:** செய்தித்தாள் நடை இலக்கிய நடையாக இருக்க வேண்டுமென்பதில்லை: ஆனால் இலக்கணப் பிழைகளையும் தவிர்க்க வேண்டும்.

பிழையின்றி எழுத வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட எம்.செல்லப்பா, ஒரு தமிழ் நாளிதழ் செய்தியைச் சுட்டிக் காட்டி, ''தலைப்பிலும் செய்தியிலும் 'அக்கரை' என இடையின 'ர' எழுதப்பட்டிருக்கிறது. இத்தவறுக்கு காரணம், இதை எழுதியவருக்கு விஷயத்தில் போதிய அக்கரை இல்லை என்பது தான்'' என்று வேடிக்கையாகக் கூறுகின்றார்.

எழுத்துப் பிழைகளும், வாக்கிய அமைப்புத் தவறுகளும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய தவறுகள் செய்திகளின் பொருளையே தவறாக வாசகர்கள் புரிந்து கொள்ள வாய்ப்பளித்து விடும்.

**தெளிவு** : இதழியல் மொழிநடை மிகவும் தெளிவானதாக இருக்கவேண்டும். சொல்லுகின்ற கருத்துக்களை நேரடியாகச் சொல்லுதல் நல்லது. ஒன்றினைச் சுற்றி வளைத்துச் சொல்லுகின்ற பொழுது, வாசகர் செய்தியின் உட்பொருளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாற நேரிடுகின்றது.

மொழி நடை தெளிவாக அமைய எதனையும் உடன்பாடு (Affirmative) வாக்கியங்களில் கூறுவது தேவை. எதிர்மறை (Negative) வாக்கியங்களைத் தவிர்த்தல் நலம்.

சிறு சிறு வாக்கியங்களாக அமைந்தால் கருத்துகள் தெளிவாக இருக்கும். நல்ல, தொடர்ந்த பயிற்சி இருந்தால் மட்டும் தான் சிறு சிறு வாக்கியங்களாக எழுத இயலும். மிக நீண்ட வாக்கியமாக எழுதும் பொழுது இலக்கணப் பிழை ஏற்படலாம். மேலும், வாசகர் விரைவாகச் செய்தியைப் படிக்கும் பொழுது, நீண்ட வாக்கிய அமைப்பு படிக்கத் தடையாக இருக்கும்.

கால்புள்ளி, அரைப்புள்ளி, புள்ளி போன்ற நிறுத்தக் குறிகளைச் சரியான இடத்தில் போடுவதும் மொழித் தெளிவுக்கு உதவும். நிறுத்தப் புள்ளிகளைச் சரியாகப் போடாவிட்டால், செய்தியைப் படிக்கும் வாசகர் தடுமாற நேரிடும்.

இருபொருள்படும் சொற்களைப் பயன்படுத்துகின்று பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சொற்களைத் தவிர்த்திடுதல் சிறந்தது.

வேற்றுமை உருபுகளைத் தக்க இடங்களில் பயன்படுத்த வேண்டும்.

**சிறப்புத்தேர்ச்சி (Specialization)** : முன்பு ஓர் இதழியாலாளர் எல்லாத் துறைகள் பற்றியும் எழுத வேண்டியிருந்தது. இப்பொழுது காலம் மாறி விட்டது. ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறைபற்றி எழுதுவதில் தனிச்சிறப்புப் பெற்று விளங்க வேண்டியிருக்கின்றது.

வாணிபம், பொருளாதாரம், அரசியல், நாட்டு நடப்பு, திரைப்படம், விளையாட்டு, முன்னேற்றத் திட்டங்கள் என்று ஒவ்வொன்றைப் பற்றியும் எழுத தனித்தனி இதழியலாளர்கள் உள்ளனர். ஆதலால், ஒவ்வொருவரும் தங்களது துறை பற்றி எப்படித் திறமையாகக் கூறுவதென்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான சிறப்புத் தேர்ச்சிபெற தனக்குத்தானே பயிற்சியளித்துக் கொள்ள வேண்டும்.

சிறப்புத் தேர்ச்சி பெற, முதலில், தனது எழுத்தைப் பற்றிய தெளிவான, சரியான மதிப்பீடு தேவை. குறைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். நிறைவான இயல்புகளைத் தக்கபடி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

‘‘எது பற்றி, யாருக்காக எழுதுகின்றோம்,’’ என்ற உணர்வுடன் எழுத வேண்டும். முதலிலேயே எழுதப் போவதைத் திட்டமிட்டு வகுத்துக் கொள்ளுதல் தேவை. எப்படிக் கூறப் போகின்றோம் என்பதைத் தீர்மானித்துக் கொண்டு எழுதவேண்டும்.

மொழி நடையில், வாக்கிய அமைப்பில் நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்துவதில் தமக்கு என்றொரு முறையை வகுத்துக் கொள்வது சிறந்தது. வைரத்தைப் பட்டை தீட்டுவதைப் போல மொழி நடையையும் சீர்படுத்திக் கொள்ள இயலும்.

இதழியல் எழுத்து இலக்கியமாகாவிட்டாலும், நல்ல எழுத்து இலக்கிய மதிப்பைப் பெறலாம். புதிய வரலாறு படைக்கும் கலை இதழியல், அதில் எழுதுவதும் ஆக்கப் படைப்புத்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**தலையங்கம்**

ஓரிதழில் - அது நாள். வார, திங்கள், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழாக இருந்தாலும் - தலையங்கம் முதன்மையான இடத்தைப்பெறுகின்றது எல்லா ஆங்கில இதழ்களிலும் தலையங்கத்தைக் காணலாம்.

தற்காலத்தில் தமிழில் வெளிவரும் நாளிதழ்களில் சில தலையங்கம் இல்லாமலேயே வெளிவருகின்றன. எப்பொழுதாவது அவற்றில் தலையங்கம் வெளிவரும் ஆனால், 'தினமணி' போன்ற சிலவற்றில் நாளதோறும் தவறாமல், தலையங்கம் வெளிவருகின்றது.

தலையங்கத்தை எல்லா வாசகர்களும் படிப்பதில்லை. ஓரிதழின் வாசகர்களில் ஏறத்தாழ 15 சதவிகித வாசகர்கள் தான் தலையங்கத்தை படிப்பதாக கணக்கிட்டுள்ளார்கள்.

ஜான் ஹோஹன்பர்க் (John Hogenberg) என்பவர். 'செய்தித்தாளில், மிகவும் புறக்கணிக்கப் பெறுகின்றஇ குறைவாக மதிப்பிடப் பெறுகின்ற பகுதி தலையங்கமாகும். ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட அமெரிக்க நாளிதழ்கள் தலையங்கம் வெளியிடுவதில்லை. இருந்தாலும், பொது மக்களுக்கு தொண்டு செய்யும் இதழியலின் ஒரு தலையாய கருவியாக இது இருக்கின்றது' என்கிறார்.

நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கத்தின் சமுதாயப் பயனை நினைத்துப் பார்த்தால், அதன் முக்கியத்துவம் விளங்கும்.

பயன்பாடுகள் : இதழியல் வல்லுனர்கள் ஒவ்வொரு இதழிலும் தலையங்கம் இடம்பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றனர். ''எண் சாண் உடம்பிற்கு சிரசே (தலையே) பிரதானம்'' என்பது போல், தலையங்கனம், இதழில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

எம்.வி. காமத் தலையங்கம் பற்றி, ''தலையங்கத்தைச் செய்தித்தாளின் கருத்துக் கண்ணாடி என்றும், மிகப்பெரிய, அழிவற்ற ஆன்மா என்றும், அதனுடைய மனச்சான்று என்றும் பெரிதாகப் போற்றுகின்றனர் என்றும், ''ஒரு நல்ல தலையங்கம் செயலைத் தூண்டுகின்றது. பணிகளை முடுக்குகின்றது. சட்டத்தை திருத்துகின்றது. புரட்சியைத் தோற்றுவிக்கின்றது'' என்றும் கூறுகின்றார்.

டி.எஸ். மேத்தா, ஒரு குறிப்பிட்ட கொள்கை, திட்டம், நிகழ்ச்சி பற்றிய இதழின் கண்ணோட்டத்தைத் தலையங்கம் வெளிப்படுத்துகின்றது. அது, குறிப்பிட்ட கருத்தை அல்லது கொள்கையைத் தூண்டவோ, விளக்கவே, கவர்ந்திழுக்கவோ, குறை கூறவோ, மறுக்கவோ செய்யும் கருத்தைக் கூறுவதன் மூலம் பொதுமக்களின் கருத்தை உருவாக்க முயல்கின்றது. வாசகர்களைத் தனது கருத்துக்குமாற்றவும் தலையங்கம் பயன்படலாம்.'' என்று கூறுகின்றார்.

காந்தியடிகள், மகாகவி பாரதியார், திரு.வி. கலியாண சுந்தரனார் போன்றவர்கள் எழுதிய தலையங்கங்கள் பொது மக்களின் கருத்துக்களை உருவாக்குவதில் அருமையாகப் பணி செய்தன.

சில செய்திகளின் முக்கியத்துவத்தை அவற்றைப் படிக்கின்ற வாசகர்கள் உணர மாட்டார்கள். செய்திகளை வெளியிடுகின்ற பொழுது அவற்றைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல் அப்படியே வேண்டுமென்பது இதழ்கள் பின்பற்ற வேண்டிய அறநெறியாகும். அதன்படி செய்திகளைத் தனியாக வெளியிட்டுவிட்டு, அவற்றை விளக்கித் தலையங்கம் எழுதும் பொழுது வாசகர்கள் வெளிவு பெறுவார்கள் எடுத்துக்காட்டாக, அரசின் வரவு-செலவு திட்டம் பற்றிய தலையங்கத்தைக் கூறலாம். தலையங்கத்தில் சில குறிப்பிட்ட

வரிகள் எப்படி மக்களுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கின்றன வென்பதை விளக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட கருத்தை மக்களிடம் உருவாக்கத் தலையங்கம் துணை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, மதுவின் கொடுமைகளை விளக்கியும் மது விலக்கின் அவசியத்தை வலியுறுத்தியும் தலையங்கங்கள் வெளி வந்தால் பொது மக்களின் கருத்தை அந்த நோக்கில் உருவாக்க முடியும்.

பொதுமக்களின் கருத்துக்கு வடிவம் தந்து, வெளிக்காட்டும் பணியையும் தலையங்கம் செய்யலாம். நமது நாட்டில் விடுதலை இயக்கம் நடைபெற்ற பொழுது, பெரும்பாலும் மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் பணியைத் தலையங்கங்கள் செய்தன.

வலியுறுத்தியும் தலையங்கங்கள் வெளி வந்தால் பொது மக்களின் கருத்தை அந்த நோக்கில் உருவாக்க முடியும்.

பொதுமக்களின் கருத்துக்கு வடிவம் தந்து, வெளிக்காட்டும் பணியையும் தலையங்கம் செய்யலாம். நமது நாட்டில் விடுதலை இயக்கம் நடைபெற்ற பொழுது, பெரும்பாலும் மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் பணியைத் தலையங்கங்கள் செய்தன.

வாசகர்களுக்கு சிலவற்றைக் கற்றுத் தருகின்ற கருவியாகவும் தலையங்கம் அமையலாம். ‘தினமணி’ ஆசிரியர் திரு. ஏ.என்.சிவராமன் இப்படிப்பட்ட விளக்கத் தலையங்கங்கள் எழுதுவதைக் காணலாம்.

சமுதாயத்தில் சில சிக்கல்கள் தோன்றும் பொழுது, அவற்றின் இயல்பையும், மேற்கொள்ள வேண்டிய தீர்வுகளையும் பற்றியத் தலையங்கங்கள் தீட்டலாம். எடுத்துக்காட்டாக, சமயச் சண்டைகள் நடைபெறும் காலங்களில் அவற்றைக் கண்டித்தும், சர்வ சமய சமரசத்தை வற்புறுத்தியும் எழுதி, வெளிவரும் தலையங்கம் சமுதாயப் பலனைத் தோற்றுவிக்கும்.

மக்களின் நலனைக் காக்கவும் நாட்டின் வளத்தைப் பேணவும் தலையங்கங்கள் எழுதலாம். நல்ல இதழாசிரியர் காலத்தின் தேவையை உணர்ந்து தலையங்கம் எழுதுவார்.

**யார் எழுதுவது?** : ஒரு காலத்தில் ஓரிதழின் தலையங்கத்தை அதன் ஆசிரியர் எழுதுவது தான் மரபாக இருந்தது. இன்று சூழ்நிலை மிகவும் மாறிவிட்டது.

மிகப் பெரிய நாளிதழ்களில் தலையங்கம் எழுதுவதற்கென்றே தனிக்குழுவை வைத்திருக்கின்றனர். ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், வல்லுனர்கள் கொண்ட இக்குழுவில் உள்ளவர்கள் தலைப்பை ஒட்டி, யார் எழுதுவதெனத் தீர்மானித்து எழுதுவார்கள்.

சில வேளைகளில் ஒரு சிக்கலைப் பற்றிச் சிலர் அமர்ந்து சிந்திக்க அவர்களில் ஒருவர் கூட்டுக் கருத்தை விளக்கும் வகையில் தலையங்கம் வரையலாம்.

யார் தலையங்கம் எழுதினாலும், தலையங்கம் எழுதுபவர்களின் பொறுப்பு மிகுதி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எதனைப்பற்றித் தலையங்கம் எழுதினாலும் அதனைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொண்டு, பின் காய்தல் - உவத்தல் இல்லாமல் தலையங்கத்தை எழுத வேண்டும்.

**நல்ல தலையங்கத்தின் இயல்புகள்** : ஒரு சிறந்த தலையங்கத்தின் இயல்புகள் இலைதானென்று திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற முடியாது.

இருந்தாலும், தலையங்கம் எழுதுபவர், சிறந்த தலையங்கமாக அமையச் சிலவற்றைக் கருத்தில் கொள்ளலாம்.

சிறந்த தலையங்கம் தெளிவான நடையில், வலுவான கருத்துக்களோடு அமைந்திருக்கும். கருத்துக்களைக் கூறும் முறையில் குழப்பம் இருக்கக் கூடாது.

எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப நடை அமைய வேண்டும். கருத்துக்களை முறைப்படுத்திச் சுவையாகவும் சுருக்கமாகவும் தலையங்கத்தை அமைக்க வேண்டும்.

தலையங்கம் ஒரு கட்டுரை போல நீண்டதாக இருக்க கூடாது ஒரு வாக்கியத்திலிருந்து, ஆயிரம் சொற்களுக்குள் தலையங்கம் அமையலாமென்று கருதுகின்றனர்.

தலையங்கத்தில், சுற்றி வளைக்காமல், எடுத்த எடுப்பிலேயே சிக்கலைக் கூறி, விளக்கி, கருத்துக்களைத் தொகுத்து அடுக்கி, இறுதியில் முடிவயையும் கூற வேண்டும். படிக்கின்றவர்களுக்கு அலுப்பு ஏற்படக்கூடாது.

தலையங்கம் எழுதுபவரின் தனித்தன்மை, அறிவாற்றல், நடை, பொருளைக் கூறும் முறை ஆகியவை சிலரின் தலையங்கங்களுக்குத் தனிப்புகழைத் தேடித் தந்திருக்கின்றன.

தலையங்கம் எழுதுகின்றவர் அச்சமின்றி, சுதந்திரமாகக் கருத்துக்களைக் கூற வேண்டும். குறிப்பாக, சமுதாய-பொருளாதாரக் கேடுகளைப் பற்றி எழுதும் பொழுது மிகவும் துணிச்சல் தேவை.

**தலையங்கம் எழுதுவோருக்குச் சில அறவிதிகள்** : அமெரிக்காவில் தலையங்கம் எழுதுவோரின் தேசிய மாநாட்டில், தலையங்கம் எழுதுவோர் பின்பற்ற வேண்டிய சில அற விதிகளைத் (Code of Ethics) தொகுத்தளித்துள்ளனர். அதன் முன்னுரையாக, ‘‘தலையங்கம் எழுதுவோர், ஓர் அறிவியலாளரைப் போல, தமது சமுதாயத்திற்கும், தொழிலுக்கும் நம்பிக்கையுள்ளவராக இருக்க வேண்டுமானால், என்ன விளைவு ஏற்படுமானாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் உண்மையைப் பின்பற்ற வேண்டும்.’’ என்று குறித்துள்ளனர்.

அந்த அறவிதிகளின் அடிப்படைக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறலாம்:-

1. தலையங்கம் எழுதுவோர் விவரங்களை நேர்மையாகவும் முழுமையாகவும் கூற வேண்டும்.
2. அவர் தம்மிடமிருக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் கூறுகின்ற விவரங்களை ஆதாரமாகக் கொண்டு, சமுதாய நலனை முன்னிறுத்தி, அறிவார்ந்த முடிவுகளை வழங்க வேண்டும்.
3. தன்னலநோக்கோடு தலையங்கம் எழுதக்கூடாது.
4. தலையங்கம் எழுதுவர், தாமும் தவறுடையவன் தான் என்ற உணர்வோடு இருக்க வேண்டும். மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தால், அவற்றையும் ‘வாசகர் கடிதங்களாக’ வெளியிடுவது சிறந்தது.
5. தாம் முதலில் எழுதிய தலையங்கம் தவறான விவரங்கள், கருத்துக்கள் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதை அறிந்தால், அதனை மாற்றி, திருத்தி எழுதத் தயங்க கூடாது.

6. தம்முடைய சரியான, ஆதாரமான நம்பிக்கையைக் கூறுவதில் துணிச்சல் இருக்க வேண்டும். மனசாட்சிக்கு எதிராக எதுவும் எழுதக்கூடாது.
7. தம்மோடு தொழிலில் ஈடுபட்டவர்கள், உயர்ந்த நிலையில் தொழில் நேர்மையோடு செய்யும் பணிகளுக்கு ஆதரவு தர வேண்டும்.

**தலையங்கப் பொருள்** : இதனைப் பற்றித் தான் தலையங்கம் எழுதவேண்டுமென்று வரையறுக்க முடியாது. எதைப் பற்றியும் தலையங்கம் எழுதலாம். கூடியவரை மொத்த சமுதாயத்திற்கும் தொடர்புடையன பற்றி, சமுதாயத்தைப் பாதிப்பன பற்றித் தலையங்கம் எழுதலாம்.

ஏதாவது திட்டவட்டமாகச் சொல்ல வேண்டிய செய்திருந்தால் மட்டும் தான் தலையங்கம் எழுத வேண்டும். இடத்தை நிரப்புவதற்காக எதையாவது எழுதக் கூடாது.

சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியையோ, செய்தியையோ மையமாக வைத்துக் கொண்டு தலையங்கம் தீட்டலாம். எடுத்துக்காட்டாக, இடைத்தேர்தல், அமைச்சரவை மாற்றம் போன்றவற்றைக் கூறலாம்.

தலையங்கத்திற்கு தக்க, கவரக் கூடிய தலைப்புத் தர வேண்டும். சரியாக அமையும் தலைப்பு தலையங்கத்தின் அகமதிப்பைக் கூட்டும்.

ஆர்தர் பிரிஸ்பேனே (Arthur Brisbane) என்பவர் ‘‘தலையங்கம் எழுதுபவருக்குக் கற்றுக் கொடுக்க, தாக்க, காக்க, புகழ நான்கு வகை வாய்ப்புகள் கிடைக்கின்றன’’ என்கிறார். தலையங்கப் பொருளைத் தெரிந்தெடுக்கும் பொழுதே எதற்காகத் தெரிந்தெடுக்கின்றோம் - வாசகர்களுக்கு அதனைப் பற்றிக் கற்றுக் கொடுக்கவோ, அதனை ஆதரிக்கவோ, தாக்கவோ, புகழவே என்பதைத் தீர்மானித்துக் கொள்வது நல்லது.

**தலையங்கத்தின் வகைகள்** : தலையங்கம் பலவகைகளாக வரலாம். இப்பொழுது பொதுவாக ஆங்கிலச் செய்தித்தாள்களில் மூன்று வகையான தலையங்கங்கள் வெளிவருகின்றன.

மிகவும் முக்கியமான பொருள் பற்றி முதல் தலையங்கமும் அடுத்த நிலைப் பொருள் பற்றித் துணைத் தலையங்கமும் எழுதுகின்றனர்.

மூன்றாவது தலையங்கம் பொதுவாக மேற்போக்காக எழுதப்பெறுவதாக இருக்கும்.

ஆசிரியர் தமது கருத்தை வலுவாகக் கூறும் வகையில் தலையங்கத்தை அமைக்கலாம். ஒரு மேற்கோளை மட்டுமே தலையங்கமாக வெளியிடலாம். நெருக்கடிக்காலத்தில், செய்தித்தாள்கள் முழுஉரிமையோடு செயல்பட இயலவில்லை. அப்பொழுது சில இதழ்கள் தலையங்கம் எழுதாமல் வெற்றிடமாகவே வெளியிட்டு தங்களது எதிர்ப்பை உணர்த்தின.

நிறைவுரை : செய்தித்தாளின் ஒரு சிறப்பான உறுப்பாகத் தலையங்கம் இருக்கின்றது. சில இதழ்களின் தலையங்கங்களை அரசியல் தலைவர்கள் மேற்கோள்களாகக் காட்டுவதைக் காணலாம். சில இதழ்களின் தலையங்கங்களை மக்கள் பெரிதும் போற்றிப் புகழ்கின்றனர்.

காந்தியடிகளைச் சிறந்த தலையங்கங்கள் எழுதியவராக இதழியல் வல்லநர்கள் போற்றுகின்றனர்.

அவர் ‘ஹரிஜன்’ , ‘யங் இந்தியா’ இதழ்களில் எழுதிய தலையங்கங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர். காலத்திற்கேற்ற பயனுள்ள பொருளைத் தேர்ந்து, எளிமையாக, ஆணித்தரமாகத் தலையங்கங்கள் எழுதுவதில் காந்தியடிகள் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஓர் இதழின் மொத்தச் சிறப்பிற்குத் துணை செய்யக் கூடியது தலையங்கம். ஆதலால், அதில் தனிக்கவனம் செலுத்த வேண்டியது இதழாசிரியரின் கடமையாகும்.

**இதழ்களில் விளம்பரம்**

எந்த இதழைப் புரட்டினாலும் அது நாளிதழாக வார திங்கள், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழாக இருந்தாலும் , சிறிய, நடுத்தர, பெரிய இதழாக இருந்தாலும் வட்டார மாநில, தேசிய இதழாக இருந்தாலும் அதன் தன் அளவிற்கும் புகழக்குமேற்ப விளம்பரங்கள் வெளியிட்டிருப்பதைக் காணலாம். தற்காலத்தில் விளம்பரமெ இல்லாத இதழ்கள் இல்லை என்று கூறலாம். காந்தியடிகள் விளம்பரம் இல்லாமல் இதழை நடத்தியது ஒரு வித விலக்கு என்றே கூறலாம்.

விளம்பரம் என்பது இதழின் உள்ளடக்கப் பகுதிகளில் ஒன்றாகிவிட்டது. செய்திகள், கதை, கட்டுரைகள் வெளியிடுவதைப் போன்றே விளம்பரங்களையும் வெளியிடுகின்றனர்.

விளம்பரம் (Advertisement) என்பது குறைந்த செலவில் நிறையப் பேருக்கு, அவர்களை வாங்கத் தூண்டும் வகையில் கருத்துக்களை, பொருள்களை, பணிகளைப் பற்றிக் கவர்ச்சியாகச் சொல்லுகின்ற ஒரு முறையாகும்.

விளம்பரம் செய்கின்றவர் அதற்காகக் கட்டணம் செலுத்துகின்றார். அவரது தலையாய விளம்பர நோக்கம், தான் விற்பனை செய்ய விரும்பும் பொருள் பற்றிய விவரங்களை மொத்தச் சமுதாயத்திற்கோ, அல்லது ஒரு பகுதியினருக்கோ அறிவித்து விற்பனையைக் கூட்டுவதாகும்.

வேறுபாடு: ‘விளம்பரம்’ என்ற சொல்லை அதே பொருள் தரும் வேறு கலைச்சொற்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

விளம்பரம் வேறு, ‘பிரசாரம்’ அல்லது ‘கருத்துக்களைப் பரப்புதல்’ (Propaganda) வேறு கருத்துக்களைப் பரப்புவது வாணிப நோக்கத்தோடு அமைய வேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக புகை பிடித்தல், மதுக் குடித்தல் போன்றவற்றின் தீமைகளை விளக்கிப் பிரசாரம் செய்வதைக் கூறலாம். ஓர் எடுத்துக்காட்டு பிரசாரத்தின் நோக்கம் பொதுவாக ஒரு கருத்து, அல்லது கொள்கைக்கு ஆதரவு திரட்டுவதாக, அதனைப் பரப்புவதாக இருக்கும்.

விளம்பரத்தை ‘விற்பனை செய்தல்’ அல்லது ‘அங்காடிப் படுத்ததல்’ (Marketing) என்ற சொல்லிலிருந்தும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். விற்பனை என்ற சொல் மிகவும் விரிந்த பொருளைக் கொண்டது. உற்பத்தி செய்வது, ஆதாயத்தில் பொருளை விற்பது, நுகர்வோருக்கு மனநிறைவை அளிப்பது ஆகிய எல்லாம் ‘அங்காடிப்படுத்துதலில்’ அடங்கும். விற்பனையில் ஓர் உள்ளடக்கப் பகுதி தான் விளம்பரம்.

சிலர் விளம்பரத்தையும் மக்கள் தொடர்பையும் (Public relations) ஒன்றெனக் கருதகின்றனர். ஆனால், இரண்டும் ஒன்று போல் தோன்றினாலும் அவை இயல்பாலும் நோக்கத்தாலும் வேறுபடுகின்றன. பொதுத் தொடர்பு என்பது ஒரு நிறுவனத்திற்கும் மக்களுக்கும் இடையில் நல்ல எண்ணத்தையும், சரியான தொடர்பையும் உருவாக்கத் திட்டமிட்டு முயல்வதாகும். விற்பனையைப் பெருக்குவது பொதுத்தொடர்பின் நோக்கமாக இருக்காது.

**தனிச் சிறப்பு** : இதழ்களின் விளம்பரம் இன்றை உலகில் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. வணிகர்களும் உற்பத்தியாளர்களும் மட்டும் விளம்பரம் செய்வதில்லை. தனிமனிதர்களும் அரசும் பல்வேறு வகையான நிறுவனங்களும்

விளம்பரங்களின் மூலம் பலவற்றைத் தெரிவிக்கின்றன. காணாமல் போனவரைத் திரும்ப அழைக்க, மணமகன்-மணமகள் தேட, வேலை வாய்ப்புகளைத் தெரிவிக்க, புதிய பொருள்கள் விற்பனைக்கு வந்திருப்பதை அறிவிக்க, ஏலக்குத்தகைகளைக் கூற என்று பலவற்றிலும் விளம்பரங்கள் கைகொடுக்கின்றன. இன்று விளம்பரங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படுத்தாதவர்களே இல்லை என்று கூறலாம்.

“விளம்பரம் இன்றைய தொழில்-வாணிப உலகின் உயிர் மூச்சு வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய இரத்த ஓட்டம் என்றெல்லாம் விளம்பரத்தை வர்ணிக்கின்றனர் விளம்பரம் இல்லையேல் பல பணிகள் முடங்கிவிடும்.

1976-77 இல் நமது நாட்டில் அரசும் பொதுத்துறை நிறுவனங்களும் மட்டுமே விளம்பரத்திற்காக ரூ.120 கோடி செலவிட்டிருப்பதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை அறியலாம். இதழ்களில் விளம்பரங்களுக்காக மட்டும் 65 கோடி ரூபாய் செலவிட்டுருக்கின்றனர்.

**நோக்கங்கள் :**

விளம்பரங்களின் நோக்கங்களையும் அவற்றால் ஏற்படக் கூடிய பயன்பளையும் எண்ணற்றவைகளாக அடுக்கி, சில வேலைகளில் மிகைப்படுத்திக் கூறுகின்றனர். அவற்றையெல்லாம் கீழ்க்கண்டவாறு தொகுத்து கூறலாம்:-

- ஒரு புகழ்பொருள் அல்லது பணி விற்பனைக்கு வந்திருப்பதாக அறிவிக்க
- புதிதாகப் பொருள்களை வாங்குபவர்களின் எண்ணிக்கையையும் பெருக்க
- விற்பனை முறை, விலை, கட்டு, இடம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கூற
- விலையில் தள்ளுபடி, மொத்தமாக வாங்கினால் சலுகை போன்றவற்றை விளக்க
- நேரடியாக பொருள்களின் சிறப்புத் தன்மைகளை எடுத்துக் கூறி விற்க
- வேண்டிய விவரங்களைக் கேட்டுப்பெறுவதை அறிவிக்க
- விளம்பர வழிமுறைகளைக் பரிசோதனை செய்ய
- பொருள்களை இருப்பு வைத்திருப்பவர்களைப் பற்றிச் சில்லறை விற்பனையாளர்களுக்குக் கற்பிக்க
- விற்பனை குறையாமல் கட்டிக்காக்க
- பொருள்களைப் பற்றி அடிக்கடி நினைவுப்படுத்த
- சரியான ஆட்களைத் தெரிந்தெடுக்க
- முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்க
- ஏற்றுமதியை ஊக்குவிக்க
- வாணிப வெற்றிகளை, சாதனைகளை விரிவாக்க-விவரங்களைப் பிரபலப்படுத்த
- பொதவாக, சில குறிப்பிட்ட தேவைகளை உருவாக்க.

- ஒரு குறிப்பு வாணிப அடையாளத்தை மக்கள் மனங்கொள்ளச் செய்ய
- சில்லறை விற்பளையாளர்களுக்குத் துணைசெய்

இது முடிவு பெற்ற பட்டியல் அன்று இதிலிருந்து விளம்பரங்கள் செய்வதற்கான காரணங்களையும் அறிந்து கொள்ளலாம். பணம் செலவிட்டு விளம்பரம் செய்கின்றவர்கள் செலவுக்கேற்ப ஆதாயம் கிடைத்தால் தான் விளம்பரம் செய்வார்கள்.

**விளம்பரங்களின் வகைகள் :**

இதழ்களில் வெளிவருகின்ற விளம்பரங்களைப் பல முறைகளில் வகைப்படுத்துகின்றனர். குறிப்படத்தக்க விளம்பர வகைகளை இங்குத் தொகுத்துக் கூறலாம்.

1. **பொருள் விளம்பரம் (Product Advertisement)** : பல்வேறு வகையான பொருள்களைப் பற்றியும் பணிகளைப் பற்றியும் வருகின்ற விளம்பரங்களைப் பொருள் விளம்பரம் என்கின்றனர். பொருள்களைப் பற்றிய விவரங்களைக் கூறி, அவற்றை வாங்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தூண்டும் வகையில் இத்தகைய விளம்பரங்கள் இருக்கும்.
2. **நிறுவன விளம்பரம் (Institutional Advertisemtnt)** : இந்த வகை விளம்பரம் ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றி இல்லாமல் ஒரு நிறுவனத்தின் பெருமையைப் பேசுவதாக இருக்கும். ஓர் உற்பத்தி அல்லது விற்பனை நிறுவனம் பற்றிய உயர்வான எண்ணம் மக்களிடம் ஏற்பட்டால், இயல்பாக அந்த நிறுவனத்தின் பொருள்களை மக்கள் விரும்பி வாங்குவார்கள். நிறுவனத்தின் சோதனைகளையும் சாதனைகளையும் விளக்குவதாக விளம்பரம் அமையலாம்.
3. **அறிவிப்பு விளம்பரம் (Informance Advertisement)** : சில பொருள்களை வாங்குகின்றவர்கள் அவற்றைப்பற்றி எல்லா விவரங்களையும் சீர்தூக்கிப்பார்த்து வாங்குவார்கள். எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குபவர்களைக் கூறலாம். சில விளம்பரங்கள், பொருள்கள், அங்காடிக்கு வந்துவிட்டதை அறிவிப்பதாக இருக்கலாம். ரயில், கப்பல், விமானம் புறப்படும் காலத்தைக் கூறும் விளம்பரங்கள் இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.
4. **நிதி விளம்பரங்கள் (Financial Advertisements)**: நிதி நிறுவனங்கள், வங்கிகள், சீட்டி நிறுவனங்கள் போன்றவை முதலீட்டையும் கடன் வாங்குவதையும் தூண்டத் தருகின்ற விளம்பரங்களை நிதி விளம்பரங்கள் என்கின்றோம். இவை வெறும் புள்ளிவிவரங்களை மட்டும் கூறாமல் நகைச்சுவை உணர்வோடு, மக்களைக் கவர்வதாகவும் இருந்தால் நல்ல பலன் விளையும்.
5. **வகைப்படுத்தப் பெற்ற விளம்பரங்கள் : (Classified Advertisements)**: விளம்பரங்கள் ‘கல்வி’, ‘பொது வேலைவாய்ப்புகள்’ , ‘நிதி’, ‘வாணிபம்’, ‘மணமகன் தேவை’, ‘காணவில்லை’ என்பது போல வகைப்படுத்தித் தலைப்பிட்டு, பிரித்து வெளியிடுவது ஒருவகையாகும். இவை தந்தி போலச் சிறியனவாக, ஆனால், முக்கியமான விவரங்களை உள்ளடக்கியவைகளாக இருக்கும். இத்தகைய விளம்பரங்களை ‘வரி’ விளம்பரங்கள்’ என்றும் கூறுவார்கள். இவற்றால் சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களும் பயனடைவார்கள். இவற்றால் இதழ்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும்.

6. **சில்லறை விளம்பரம் (Retail Advertisements)** : வெளிநாடுகளில் சில்லறை விற்பனைகளுக்காகத் தனி விளம்பரங்கள் வருகின்றன. பெரும்பாலான பெண்கள் அவற்றைப் பார்த்தே பொருள்களை வாங்குகின்றனர்.
7. **தொழில் விளம்பரம் : (Industrial Advertisements)** : தொழில்கள் தொடர்பாக மூலப் பொருள்கள், எந்திரங்கள் பற்றிய விளம்பரங்கள் இந்த வகையைச் சேரும்.
8. **கூட்டுறவு விளம்பரம் (Co-opeerative Advertisements):** கூட்டுறவு நிறுவனங்கள் தருகின்ற விளம்பரங்களையும் சில நிறுவனங்கள் ஒருங்கிணைந்த கூட்டுறவு விளம்பரம் என்று கூறலாம். இவை பொதுவானவைகளாக எல்லா வகையான நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றவையாக இருக்கும்.
9. **அரசு விளம்பரங்கள் (Government Advertisement):** வேலைக்கு ஆள் எடுப்பதற்கு, சிலவற்றை அறிவிப்பதற்கு ஏலக் குத்தகை வாங்குவதற்கு அரசு விளம்பரங்கள் தருகின்றது.
10. **வாணிப விளம்பரம் (Trade Advertisemtnts)** : பொருளாதாரம் பணிகளையும் விற்பனை செய்யும் நோக்கில் பெரிய வாணிப, தொழில் நிறுவனங்கள் இத்தகைய விளம்பரங்களை வெளியிடுவதைக் கூறலாம். இவை சில்லறை விற்பனையாளர்களுக்கும் உதவியாக இருக்கும்.
11. **சட்ட விளம்பரம் (Legal Advertisements)** : திருமணவிலக்கு, சொத்து தகராறு போன்றவை பற்றிச் சட்டத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் வெளியிடும் விளம்பரங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை.

**சில குறைகள் :**

இதழ்களில் வெளிவருகின்ற விளம்பரங்களால் விளைகின்ற சில தீமைகளையும் சுட்டிக்காட்டலாம்.

திறமையாக, கவர்ச்சியாகச் செய்யப்படுகின்ற விளம்பரங்கள் தேவையற்ற, பயனற்ற மதிப்பற்ற பொருள்களைக் கூட வாங்கும்படி மக்களைத் தூண்டிவிடுகின்றன. விளம்பரத்திற்காக இலட்சக் கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றனர். இதனால் நாட்டுப் பொருளாதாரம் எந்த அளவில் நன்மையடைகின்றதென்பது கேள்விக்குரியது.

தவறான விளம்பரங்களை நம்பிப் பலர் ஏமாறுகின்றனர். சிகரெட், மது போன்றவற்றிற்குத் தருகின்ற விளம்பரங்கள் சமுதாய நலனைப் பாதிக்கின்றன.

விளம்பரங்களிலுள்ள குறைகளைப் போக்கத் தனிச்சட்டங்கள் தேவை. இதழ்கள் அற உணர்வோடு செயல்பட்டால் மட்டும் தான் இத்தகைய குறைகளைக் குறைக்க இயலும்.

நெறிப்படுத்துக :

விளம்பரங்கள் இன்றியமையாதவை, தவிர்க்க முடியாதவை என்ற நிலை வந்து விட்டது. இந்த நிலையில் வருகின்ற விளம்பரங்களை நெறிப்படுத்துவது தேவையாகும்.

இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாட்டில் ஆக்க பூர்வமான முறையில் விளம்பரங்களைப் பயன்படுத்த வேண்டும். சில இதழ்கள் பாதிக்குமேல் விளம்பரங்களை வெளியிட்ட, இதழின் நோக்கத்தையே புறக்கணிக்கின்றன. இத்தகைய போக்கு, வளர்ச்சிக்கு நல்லதன்று.

முறைப்படுத்தப்பெற்ற விளம்பரங்கள் வெளி வருவதால் இதழ்களும் மக்களும் பயனடைவார்கள்.

**மாதிரி வினாக்கள்:**

1. இதழியலில் மொழிநடையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக?
2. ஒரு இதழின் தரத்தை மதிப்பிடுவதற்கு தலையங்கம் எவ்வாறு துணைநிற்கிறது என்பதை நிறுவுக?
3. செய்தித்தாளில் விளம்பரத்தின் முக்கியதுவத்தை மதிப்பீடு செய்க?

**இவ்வலகிற்கான பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

1. தங்க மணியன் - பத்திரிக்கை மொழி நடை - மாணிக்கம் பதிப்பகம் - திருச்சி
2. விநாயக மூர்த்தி – விளம்பரக்கல்வி – பால முருகன் பதிப்பகம் - மதுரை.

## குறிப்பு

## அலகு –3
## செய்தி

**செய்தியாளர் – விளக்கமும் வகைகளும்**

நாளேட்டிற்கு வேண்டிய செய்திகளை இனங்கண்டு நாடித் தேடிச் சென்று, சேகரித்து, தொகுத்துத் தருபவர்கள் செய்தியாளர்கள். செய்தியாளர்கள் இல்லையென்றால் செய்திகள் இல்லை. செய்திகள் இல்லையென்றால் செய்தித் தாட்கள் இல்லை.

“ஒரு கொத்தனாருக்கு (கட்டிடம் கட்டுபவருக்கு) செங்கல் எப்படி முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு செய்தி நிறுவனத்திற்கு செய்தியாளர். ஒரு செய்தித் தாள் என்பது அதனுடைய செய்தியாளர்கள் எப்படி உருவாகின்றார்களோ அப்படித் தான் அமையும்” என்கிறார் எம்.வி.காமத்.

“ஒரு செய்தித்தாளின் பெருமையும் நம்பிக்கையும் பெரிதும் அதனுடைய செய்தியாளர்களையே சார்ந்துள்ளன. அவர்களால் ஒரு செய்தித்தாளை ஆக்கவோ அழிக்கவோ முடியும். அவர்கள் தான் ஒரு செய்தித்தாளிற்கு வாழ்வளிக்கும் குருதி போன்றவர்கள்”.

“தொழில்முறை செய்தியாளர்கள் வாசகரின், பார்வையாளரின் அல்லது கேட்பவரின் அமர்த்தப்பட்ட கண்களாகவும், காதுகளாயும், கால்களாகவும், மூளையாகவும் திகழ்கின்றனர், ஒரு செய்தியாளர் வாசகரின் சிந்திக்கும் பதிலாளியாவார் (Thinking Agent)”, என்றும், ‘செய்தியாளர் இதழியலின் இதயமாவார்” என்றும், ஜேம்ஸ் எம்.நீல் என்பவரும் சூசானே எஸ்.பிரவுன் என்பவரும் கூறுகின்றனர்.

ஒரு செய்தித்தாளின் அடிப்படையாகச் செய்தியாளர் திகழ்கின்றார். செய்தித்தாளுக்கு வேண்டிய மூலப்பொருட்களைத் திரட்டித் தருகின்ற அருமையான, கடினமான, சுவையான பணி அவருடையது. அவர் சாதாரண மனிதர்தானென்றாலும், தொழிலைச் செய்கின்றபொழுது சகலகலா வல்லவராகப் பணியாற்ற வேண்டியதிருக்கின்றது.

சிறந்த செய்தியாளர்கள் வரலாறு படைத்திருக்கின்றார்கள். கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல, பல செய்திகளை வெளிக்கொணர்ந்து பெருமையும் புகழும் பெற்ற செய்தியாளர்கள் இருக்கின்றனர். ஆதலால் தான் அமெரிக்காவில் செய்தி நிறுவனத்தை (Associated Press) அமைத்த மேல்வைல் இ.ஸ்டோன் (Melvile E.Stone), “ஓர் அறிவார்ந்த ஆசிரியரைவிட அறிவார்ந்த செய்தியாளர் மிகவும் மதிப்புடையவர்” என்று கூறுகின்றார்.

பொதுவாக எல்லோரும் ஏதாவது செய்திகளைப் பெற்று மற்றவர்களிடம் பரப்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் எல்லோரும் செய்தியாளர் ஆவதில்லை. செய்தியாளர் 1. அவர் செய்திகளைப் பரப்புகின்ற வாசகர்களின் (Audience) எண்ணிக்கை; 2. தருகின்ற செய்தியின் பயன்பாடு; சுவை; 3. செய்யும் தொழிலில் பெற்றிருக்கும் அறிவு, செய்யும் முறை, நோக்கம் ஆகியவற்றால் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றார்.

செய்தியாளர் வகைகள்: செய்தியாளர்களை அவர்கள் செய்கின்ற பணியின் இயல்பினை ஒட்டி வகைப்படுத்தலாம்.

1. **நகரச் செய்தியாளர்கள் (City Reporters)**: எந்த இடத்திலிருந்து செய்தித்தாள் வெளிவருகின்றதோ, அங்கு செய்திகளைத் திரட்டும் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களை நகர அல்லது உள்ளூர் (Local) செய்தியாளர்கள் என்கின்றனர். இவர்கள் வட்டார மக்கள் விரும்பிய படிக்கின்ற சுவையான செய்திகளைச் சேகரித்துத் தருகின்றன.

2. **நகர்புறச் செய்தியாளர்கள் (Mofussil Reporters):** மாநிலத்தின் மாவட்டத் தலைநகரங்களில் இருந்து கொண்டு செய்திகளைச் சேகரித்து அனுப்புகின்றவர்களை நகர்ப்புற செய்தியாளர்கள் என்று கூறலாம்.

3. **தேசியச் செய்தியாளர்கள் (National Correspondents):** நாட்டின், மாநிலங்களின் தலைநகரங்களில் இருந்து கொண்டு செய்திகளைத் தொகுத்துத் தருகின்றவர்கள் தேசியச் செய்தியாளர்களாவார்கள்.

4. **வெளிநாட்டுச் செய்தியாளர்கள்: (Foreign Correspondents):** வெளிநாடுகளில் தங்கி, உலகச் செய்திகளைத் திரட்டித் தருகின்ற பணியை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் செய்கின்றனர்.

பொதுவாக, ஒரு செய்தித்தாளில் நேரடிப் பணியாளராக இல்லாமல், அனுப்புகின்ற செய்திகளின் அளவிற்கேற்பப் பணம் பெறுகின்றவர்களைப் 'பகுதிநேர செய்தியாளர்' (Reporter) என்கின்றனர். ஓரிதழின் முழுநேர ஊழியராக இருந்துகொண்டு செய்தி திரட்டுபவரை 'செய்தியாளர்' (Correspondents) என்றுக் குறிப்பிடுகின்றனர். நாடாளுமன்ற சட்டமன்றச் செய்திகளை வழங்குபவர்களை 'மன்றச் செய்தியாளர்கள்' (Lobby Correspondents) என்றழைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியோ, வெளிநாடு செல்லும் தலைவர்களைத் தொடர்ந்து சென்றோ, எல்லோரும் அறிய விரும்பும் நாட்டு நடப்புக்களையோ பற்றி செய்திகளைத் திரட்டித் தருபவர்கள் 'சிறப்புச் செய்தியாளர்கள்' (Special Correspondents) எனப் பெயர் பெறுகின்றனர்.

செய்தியார்களைச் செய்யும் தொழிலின் திறமையின் அடிப்படையில் வகைப்படுத்துவதுமுண்டு. (1) பார்ப்பதை அப்படியே எழுதுபவர் செய்தியாளர் (Reporter) (2) பார்ப்பதோடு கூட, தான் ஊகித்துணர்வதையும் சேர்த்துத் தருபவர் விளக்கச் செய்தியாளர் (Interpretative Reporter) (3) பார்க்காதவற்றைப் பற்றிக் கூட, அதன் பொருள் இதுதானென்று தீர்மானித்து, நயம்படத் தருபவர் செய்தி வல்லுநர் (Expert Reporter).

**2. செய்தியாளர் பணிகள், பொறுப்புக்கள்**

செய்தியாளர் உண்மையில், தகவல்களைப் பரப்பும் சமுதாயக் கல்வியாளராகப் பணியாற்றுகின்றார். ஒரு வகையில் அவரது பணி சமுதாயத் தொண்டாகும். மக்களாட்சியில், நாட்டின் அன்றாட நடப்புக்களை உடனுக்குடன் தெரிவித்து, மக்கள் விழிப்போடு செயல்படத் தூண்டுகின்ற பணியைச் செய்தியாளர் மேற்கொள்கின்றார்.

கடினமான பணி: செய்தியாளரின் பணி மிகவும் கடினமானதாகும். இருபத்தி நான்கு மணிநேரமும் அவர் விழிப்போடு செய்திகளைத் தேடி அலைய வேண்டும். எங்கிருந்து செய்தி, எப்படி வெடித்துச் சிதறுமென்று கூறமுடியாது.

நாளிதழில் ஒவ்வொரு செய்தியாளர் 'செல்ல வேண்டிய இடத்தையும் (Beat)' என்ன 'பணி' (Assignment) செய்ய வேண்டுமென்பதையும் தலைமைச் செய்தியாளர் ஒதுக்குவார். ஆனால் பணியைச் செய்து முடிக்க கடினமாக உழைக்க வேண்டும். ''தூங்காமை கல்வி, துணிவுடைமை'' உள்ள செய்தியாளர்கள் 'கருமமே கண்ணாய்' உழைத்தால் சிறப்பாகச் செய்திகளைத் தேடிக் கண்டு, திரட்டித் தந்து புகழ் பெற முடியும்.

ஆபத்தான பணி: செய்தியாளர் நடக்கும் பாதையில் மலர்கள் தூவப்பட்டிருப்பதில்லை. நெருஞ்சி முள் காட்டிற்குள் நடை பயில்பவர்களைப் போன்றே செய்தியாளர்கள் பணிபுரிய வேண்டியுள்ளது. உண்மைகளை வெளிக்கொணரும் பணியைச் செய்வதால், அதனால் பாதிக்கக் கூடியவர்கள் எப்பொழுதும் செய்தியாளர்களுக்குப் பாதகங்கள் செய்யத் தயங்கமாட்டார்கள். செய்தியாளர்கள் அடிதடிக்கும் அவமானத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகின்றன. செய்தியாளர்கள் எதற்கும் துணிந்தவர்களாக இருக்க வேண்டும்.

செய்தியாளர்களைச் சுட்டுக் கொன்ற நிகழ்ச்சிகளும் கூட நடைபெற்றிருக்கின்றன.

**செய்தித் திரட்டும் பணி:** எது செய்தியாகும் என்பதை முதலில் தெரிந்தெடுத்து, அந்த செய்தி உண்மையானதா என்பதை அறிந்து, செய்தி மூலத்தை அணுகி, செய்தியைத் திரட்டி தருவது தான் செய்தியாளர் பணி காலத்தோடு போட்டியிட்டு விரைந்து செயல்படுகின்ற செய்தியாளர் வெற்றி பெறுகின்றார்.

செய்தியைத் திரட்டுவதில் சில நிலைகள் உள்ளன.

1) செய்தியாளர் செய்திக்குத் தன்னை வெளிப்படுத்திக் (Exposure) கொள்ள வேண்டும் அதாவது, செய்தியின் மூலத்தோடு நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும். முடிந்தால் செய்திக்குரிய நிகழ்ச்சி நடந்த இடத்தை அடைந்து, நேரடியாகச் செய்தியைப் பெற வேண்டும். அல்லது செய்தி மூலமாக இருப்பவரை அணுகிச் செய்தியை அறிந்து கொள்ள முயலவேண்டும்.

2) நடந்தவற்றைப் பார்க்க (Perception) வேண்டும். விருப்பு, வெறுப்பின்றி நேரடியாகக் காணக்கூடியவற்றைக் கவனித்து நோக்க வேண்டும். உண்மையை அறிந்து எழுத இப்படி பார்வையிடுதல் துணை செய்கின்றது. அறிக்கைகளாகவோ, புள்ளி விவரங்களாகவோ செய்திகள் கிடைத்தால் அவற்றைப் புரிந்து படித்து, அவற்றிலுள்ள செய்திகளை மட்டும் தெளிவான முறையில் வழங்குவது செய்தியாளர் பணி.

3) பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் நினைவில் பதித்துக் கொள்ள (Retention) வேண்டும். செய்தியாளருக்கு நினைவாற்றல் என்பது கைவந்த கலையாக மாற வேண்டும். முதலில் குறிப்புகள் எடுத்துக் கொண்டு பின்பு விரித்து எழுத நினைவாற்றல் துணைசெய்கின்றது. பதிவு செய்யும் கருவிகளைப் (Tape Recorder) பயன்படுத்தலாம்.

4) கிடைக்கின்ற விவரங்களில் எவை சரியானவை என்பதைத் தீர்மானித்து தெரிந்தெடுக்க (Selective Judgment) வேண்டும். எந்த நிலையிலும் செய்தியில் பொய்மை கலந்து விடக்கூடாது. "ஐயத்துக்குரியதை விட்டுவிட வேண்டும்" (When In Doubt, Leave it out) என்பது செய்தியாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளில் ஒன்று.

5) எதனைப் பெரிது படுத்தித் (Amplify) தரவேண்டும் என்பதை அறிந்து, அதனையே செய்தியாக, சரியான கோணத்தில் எழுதித் தர வேண்டும். நிறைய விபரங்களைச் சேகரித்து இருக்கலாம். எல்லாவற்றையும் செய்தியாக்க வேண்டியதில்லை. முக்கியமானவற்றையும், குறிப்பிடத்தக்க மனிதர்களையும் சேர்த்து, பின்னிப் பிணைத்து சுவையான, பயனுள்ள செய்திகளைப் படைத்து தருதல் செய்தியாளர் பணியாகின்றது.

**பொறுப்புக்கள்:** செய்தியாளர் மேற்கொள்வது சமுதாயப் பொறுப்பான பணியாகும். செய்தித்தாட்களில் வெளிவருவனவற்றை நம்பிப் பெரும்பாலான மக்கள் செயல்படுகின்றனர். "அச்சிட்டது உண்மையாகவே", இருக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையைக் கட்டிக்காக்கும் வகையில் செய்தியாளர் நடந்து கொள்ள வேண்டும்.

சிலசெயல்கள் உண்மையில் நடந்திருக்கலாம். அதற்கான தக்க ஆதாரங்களும் செய்தியாளரிடம் இருக்கலாம். ஆனால் அவற்றை அப்படியே வெளியிட்டால் சில தனிமனிதர்களோ, சமுதாயமோ பாதிக்கப்படுமானால், அவற்றை வெளியிடக் கூடாது. எடுத்துக்காட்டாக கற்பழிப்புச் செய்தியில் கற்பழக்கப்பட்டவரின் பெயரை வெளியிடுவது நல்லதல்ல. சாதி, சமயப்

பூசலைத் தூண்டி சமுதாயத்தின் அமைதியைக் குலைக்கக் கூடிய விவரங்களை வெளியிடக்கூடாது.

கூடியவரை தங்களது செய்தி மூலங்களை இரகசியங்களாகக் காப்பாற்ற வேண்டியது செய்தியாளர்கள் கடமையாகும். சான்றுகளை வெளியிடாமல் வைத்துக்கொள்ள சட்டப் பாதுகாப்பும் இருக்கின்றது. சில வேளைகளில் செய்திகளைத் தருகின்றவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ள விரும்புவதில்லை.

பேட்டி (Interview) மூலம் விவரங்களைச் சேகரிக்கும் பொழுது, பேட்டியாளர் வெளியிட வேண்டாமென்றக் குறிப்போடு விளக்கத்திற்காகச் சிலவற்றைக் கூறலாம். அவை சுவையானதாக இருந்தாலும் அவற்றைச் செய்தியில் சேர்க்கக் கூடாது.

செய்தியாளர் தான் ஒரு நிறுவனத்தைச் சார்ந்தவர் என்பதை மறந்துவிடக்கூடாது. தான் சார்ந்திருக்கும் நிறுவனத்தின் நற்பெயரைக் கட்டிக் காப்பது என்றும் அவரது கடமையாகும். தான் சேகரிக்கும் செய்திகளைத் தனது நிறுவத்திற்கே தர வேண்டும். வேறு எந்த வகையிலும் ஆதாயம் கருதி திரட்டிய செய்திகளைச் செய்தியாளர் பயன்படுத்தக் கூடாது.

### 3. செய்தியாளரின் பண்புகள்

ஒரு செய்தியாளர் சிறந்த செய்தியாளராகத் திகழ வேண்டுமானால் அவரிடம் சில தகுதிகளும் பண்புகளும் இருக்க வேண்டும். அவற்றை இங்கு விளக்கலாம்.

பண்புகள் (Attributes): இதழியலாளர்களுக்குரிய எல்லாத்தகுதிகளும் பண்புகளும் செய்தியாளர்களுக்கும் தேவை. அவற்றில் தலையாய பண்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

1. **செய்திமோப்பத்திறன்:** (Nose for News) செய்தியாளர் செய்திகள் கிடைக்குமிடத்தை மோப்பம் பிடிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். செய்தியைக் கண்டவுடன் அவர்களது மூக்கு வியர்க்க வேண்டும். அவர்களது செய்தி உள்ளுணர்வு எப்பொழுதும் விழித்திருக்க வேண்டும். நல்ல செய்தியாளர் எப்பொழுதும் செய்திக்குப் பசித்திருப்பவராகவும், செய்தியைக் கண்டு கொள்ள விழித்திருப்பவராகவும், செல்லும் முறையில் தனித்திருப்பவராகவும் விளங்க வேண்டும்.
2. **நல்ல கல்வியறிவு:** செய்தியாளர் போதுமான அளவு கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும். எல்லாவற்றைப் பற்றியும் ஓரளவு அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும். அவர்களுக்கு எல்லாத்துறைகளும் ‘அத்துபடி’ யாகியிருந்தால் தான், அவற்றைப் பற்றிச் செய்திகளை நுட்பமாகவும், ஆழந்தும், முழுமையாகவும் வழங்கமுடியும்.
3. **சரியாகத் தருதல்:** செய்திகளைச் சரியாகவும் துல்லியமாகவும் (Accuracy) தருகின்ற பண்பு செய்தியாளருக்கு வேண்டும். எதனையும் ஊகமாக, சரிபார்க்காது எழுதுவது பலவேளைகளில் தொல்லையாகிவிடும். “எதனையும் முதலில் பெற வேண்டும்; அதனையும் சரியாகப் பெற வேண்டும்”, என்பது தான் செய்தியாளரின் குறிக்கோளாயிருக்க வேண்டும்.
4. **விரைந்து செயல்படல்:** செய்தியாளர் வியக்கத்தக்க வகையில் விரைவாய்ச் (Speed) செயல்பட வேண்டும். செய்தித் தாளின் இறுதிப் பக்கம் தயாரகுமுன்பு, திறமையான செய்தியாளர் சேகரித்த செய்திகளை அனுப்புவார். “செய்தியைச் சரியாகப் பெற வெண்டும்; உடனேயும் பெற வேண்டும்”, என்பதனை மறந்து விடக்கூடாது.

5. **நடு நிலை நோக்கு (Objectivity):** செய்தியாளர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு ஆட்படக் கூடாது. நடுநிலை நின்று செய்திகளைச் சேகரித்து அனுப்ப வேண்டும். சொந்தக் கருத்துக்களைச் செய்திகளோடு சேர்த்துக் கூறக் கூடாது. செய்தியின் முக்கியத்தை மாற்றவோ கோணத்தை வேறுபடுத்தவோ வண்ணம் பூசவோ முயலக்கூடாது.

6. **செய்தி திரட்டும் திறன்:** செய்தியை இனங்கண்டு செய்தி கிடைக்கும் இடத்தை அடைந்த பின் உண்மையான விவரங்களைத் (Facts) திரட்ட வேண்டும். சேகரித்தவற்றுள் முக்கியமானவற்றைத் தெரிந்து, முறைப்படுத்தி, செய்தியாக வடிவமைத்துத் தரும் ஆற்றல் செய்தியாளர்களுக்கு வேண்டும். இந்தத் திறனைப் பயிற்சியின் மூலமாகவும் பட்டறிவின் வாயிலாகவும் தான் பெற இயலும்.

7. **பொறுமையும் முயற்சியும்:** செய்தியாளருக்கு மிகுந்த பொறுமைக்குணம் (Perseverance) வேண்டும். பதற்றப்படவோ அவசரப்படவோ கூடாது. 'பதறிய காரியம் சிதறும் என்பது பழமொழி. செய்தியை அறிந்தவர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களிடம் உண்மையை வரவழைத்து, செய்தியாக எழுதி அலுவலகத்திற்கு அனுப்புகின்ற வரை பல்வேறு இடர்பாடுகளை மேற்கொள்ளலாம். மனத்தளர்ச்சியின்றி, 'முயற்சி திருவினையாக்கும்' என்ற தெளிவோடு செயல்படுகின்ற செய்தியாளர்களால் தான் செயற்கரியன செய்ய முடியும்.

8. **சொந்த முறை:** செய்தியாளர் செய்திகளைத் திரட்டுவதிலும் தனக்கென்றொரு தனிமுறை (Originality) உருவாக்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்களை அப்படியே பின்பற்றினால் தனித்தன்மையை உருவாக்க முடியாது. சிறந்த செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டி தருவதில் தனி முத்திரை இருக்கும்.

9. **நல்ல தொடர்புகள்:** செய்தியாளர் பல வகையான மனிதர்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பலதரப்பட்ட, பல நிலையிலுள்ள மக்களோடு அன்பான தொடர்பு இருந்தால், செய்திகளைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். மக்கள் தான் செய்திகளின் மூலங்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

10. **நம்பிக்கையைக் கட்டிக் காத்தல்:** செய்திகளைத் தருகின்றவர்கள் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைச் செய்தியாளர்கள் கட்டிக் காக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் செய்தி வழங்குபவரைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. செய்தி தருகின்றவருக்கும் கொடுக்கும் வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்ற வேண்டும்.

11. **நேர்மை:** செய்தியாளர் மிகவும் நேர்மையாக (Honesty) நடந்து கொள்ள வேண்டும். செய்திகள் இல்லாத இடத்தில் பொய்மையாகச் செய்தியை உருவாக்குவதோ, கிடைத்த செய்தியை வேண்டுமென்றே வெளியிடாமல் புதைத்து விடுவதோ இதழியல் அறமாகாது.

12. **கையூட்டுப் பெருமை:** செய்தியாளர்கள் கையூட்டைக் கருதியோ, வேறு நன்மைகளையும் சலுகைகளையும் எதிர்பார்த்தோ செய்திகளை மாற்றவோ, திருத்தவோ, பொய்மைப் பரப்பவோ கூடாது. சிலர் புகழ் பெறுவதற்காகச் செய்தியாளரைப் பயன்படுத்திக் கொள்ள முயல்வார்கள் அன்பளிப்புகள், விருந்துகள் வழங்கி செய்தியாளர்களைச் சிலர் விலை கொடுத்து வாங்க நினைப்பார்கள். செய்தியாளர்கள் சோதனைகளுக்கு ஆட்படாமல், சாதனைகளைச் செய்வதிலேயே குறியாக இருக்க வேண்டும்.

13. **செயல் திறன்:** செய்தியாளர் நுட்பமாகவும் திறமையாகவும் தந்திரமாகவும் (Tact) செயல்பட வேண்டும். சூழ்நிலைக்கேற்பச் செயல்படும் முறையை மாற்றிக் கொண்டு பணிபுரிய வேண்டும்.

14. **ஏற்கும் ஆற்றல்:** புதிய இடங்களுக்குச் செல்லும் பொழுதும், புதிய மனிதர்களைப் பார்த்துப் பழகும் பொழுதும், அதற்கேற்றாற்போல தன்னை மாற்றிக் கொண்டும், புதியனவற்றை ஏற்றுக் கொண்டும் (Adaptability) செயல்படுதல் தேவையாகும்.

15. **தன்னம்பிக்கை:** செய்தியாளர் தளராத தன்னம்பிக்கையோடு (Self-Confidence) பணி செய்ய வேண்டும். 'என்னால் முடியும்', 'செயற்கரியன செய்வேன்', என்ற தன்னம்பிக்கை இருந்தால், பலவற்றை எளிதாகச் செய்ய முடியும்.

16. **இனிய ஆளுமை:** செய்தியாளர் இனிய ஆளுமையை (Personality) வளர்த்துக் கொள்ள வேண்டும். காண்பவர்களைக் கவரும் வகையில் பொலிவான தோற்றமும், இன்மையாய்ப் பழகும் பண்பும் கொண்ட செய்தியாளர்களால் பலவற்றை எளிதாகச் செய்ய முடியும்.

17. **தெளிவாகக் கூறும் ஆற்றல்:** செய்தியாளர் எதனையும் தெளிவாக எடுத்துரைக்கும் (Clarity of Expression) ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். பேசுவதிலும் எழுதுவதிலும் தெளிவு இருக்க வேண்டும். நேர்கண்டு செய்திகளைச் சேகரிக்கின்ற பொழுது தெளிவாக விவரங்களைக் கேட்டறிய வேண்டும். செய்திகளை எழுதுகின்ற பொழுதும் தெளிவு தேவை.

18. **மரபுகளைப் பற்றிய அறிவு:** சமுதாய, சமய செய்திகளைத் திரட்டித் தரும் பொழுது மரபுகளை அறிந்திருக்க வேண்டும். மரபுகளுக்கு முரண்படும் வகையில் செய்திகளைக் கொடுக்க நேரிட்டால் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

**19.** **சட்டத்தெளிவு:** எப்படிப்பட்ட செய்திகளை வெளியிட்டால் சட்டப்படி குற்றமாகி விடுமென்பதைச் செய்தியாளர் அறிந்திருக்க வேண்டும். சட்டத்தெளிவின்றி எதையும் செய்தியாக்கினால் அவரும் இடர்ப்பாட்டுக்குள்ளாகி, செய்தித்தாளுக்கும் தொல்லைகளை ஏற்படுத்துவார். குறிப்பாக, சட்டமன்ற நாடாளுமன்ற செய்திகளை வெளியிடும்பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

### செய்தி (News)

#### 1. செய்தி – விளக்கம்

செய்தித்தாளின் மூலப்பொருள் 'செய்தி'. செய்தி இல்லையேல் செய்தித்தாள் இல்லை. செய்தி என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் செய்தியைப் புரிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

ஆங்கிலச் சொல்: செய்தி என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலத்தில் 'நியூஸ்'(News) என்கின்றோம். 'நியூஸ்' என்ற சொல்லில் இரண்டு பொருள்கள் உள்ளன.

(1) 'நியூ' (New) என்றால் 'புதியது' என்று பொருள் இதனைப் பன்மையில் கூறும் பொழுது 'நியூஸ்' அதாவது 'புதியன' என்று பொருள்படுகின்றது.

(2) 'நியூஸ்' (News) என்ற ஆங்கிலச் சொல் நான்கு ஆங்கில எழுத்துக்களால் உருவானது. நான்கு ஆங்கில எழுத்துக்களும் நான்கு திசையைக் குறிக்கின்றன. 'என்' N என்ற எழுத்து 'வடக்கையும்' (North), E என்ற எழுத்து கிழக்கையும் (East), 'டபிள்யூ' W என்ற எழுத்து 'மேற்கையும்' (West), S என்ற

எழுத்து தெற்கையும் (South) குறிக்கின்றன. அதாவது, நான்கு திக்குகளிலிருந்தும் கிடைப்பது செய்தி என்ற பொருளில் அதற்குரிய சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல் உருவானதாகக் கூறுவார்கள்.

தமிழ்ச் சொல்: 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்புப் போல 'செய்தி' என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தினாலும் அதற்கும் தமிழில் தனிப் பொருள் கூறலாம். செய்தி என்ற சொல்லை, செய் + தி என்று பிரித்தால் 'செய்' என்ற பகுதி, 'செய்தது, செய்வது' என்ற தொழிலைக் குறிக்கின்றது. ஆதலால், 'தி' என்ற விகுதி சேர்ந்து, 'செய்தி' என்ற தொழிலாகு பெயராகுகின்றது என்றும் கூறலாம்.

'செய்ததோ, செய்கின்றதோ, செய்வதோ' தான் செய்தியாகின்றது. எங்கு எது நடந்தாலும் அது உடனே செய்தியாகக் கருதப்படுகின்றது. செய்யப்படாதது எதுவும் செய்தியாவதில்லை.

**அகராதி விளக்கம்:** புகழ்பெற்ற சேம்பர்ஸ் அகராதி (Chambers Dictionary) 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "புதிதாகக் கேட்கப்படுகின்ற ஒன்று இப்பொழுதான் நடைபெற்ற ஏதாவது ஒன்றைப் பற்றிய முதல் தகவல்", என்று விளக்கம் தருகின்றது.

**2. இலக்கணம்:** 'இதுதான் செய்தி' என்று பலர் இலக்கணம் வகுக்க முயல்கின்றனர். ஆனால் எந்த இலக்கணமும் முழுமையானதாக அமையவில்லை மேலும் செய்திக்குத் தருகின்ற விளக்கம் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது.

நீண்ட நெடுங்காலமாக, "நாய் மனிதனைக் கடித்தால், அது செய்தி அல்ல; ஆனால் மனிதன் நாயைக் கடித்தால், அது செய்தி", என்ற ஓர் ஆங்கில இதழாசிரியர் கூறியதை, செய்திக்கு விளக்கமாகப் பலரும் எடுத்துக் குறிப்பிடுவதுண்டு. இந்த எடுத்துக்காட்டு நடைமுறைக்கும், இயற்கைக்கும் மாறுபட்ட புதுமையானது செய்தியாகின்றதென்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

செய்திக்குத் தருகின்ற பல விளக்கங்களில் குறிப்பிடத்தக்கவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

"எதனையாவது வெளிக்காட்டுவது செய்தி"

"நேற்று நீங்கள் எதனைத் தெரிந்திருக்கவில்லையோ அது இன்றையச் செய்தியாகின்றது."

"நடைமுறையிலிருந்து, சாதாரணமானவற்றிலிருந்து மாறுபட்ட எதுவும் செய்தியாகும்"

"சிலர் மறைக்க நினைப்பது செய்தியாகின்றது".

"ஒரு சமுதாயத்தில் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்ற அவர்களால் புரிந்து கொள்ளக்கூடிய எந்த ஒரு நிகழ்ச்சியும், கருத்தும், எண்ணமும் செய்தியாகும்.

"பெரும்பாலான மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஒரு செய்தித்தாள் அச்சிடுவதும், வானொலி ஒலிபரப்பும் எதுவும் செய்தியாகின்றது".

"செய்தி என்பது செய்தித்தாள் உருவாக்குவது."

"பெருந்தலைவர்கள் சொன்னவை செய்திகளாகும்".

"நல்ல செய்திகள் செய்திகளாவதில்லை".

"வாசகர்களுக்கு முக்கியமான, சுவையூட்டும் நடப்பு நிகழ்ச்சிகளின், உண்மைகளின் தொகுப்புக்களே செய்திகள்."

‘‘வாழ்க்கைக்கு சுவை தரும் எதுவும், அது வெளிப்படும் முறைகளில் செய்தியாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.’’

‘‘செய்திகள் என்பவை பால் உணர்வு, பணம், குற்றம் ஆகியவற்றோடு தொடர்புடையவை.’’

‘‘மிகப்பெரிய, புகழ்பெற்ற பெயர்கள் செய்திகளாகின்றன’’

‘‘இன்றையச் செய்திகள் நாளைய வரலாறு’’.

‘‘மக்களைப் பற்றி, மக்களுக்காக மக்களால் எழுதப்படுபவை செய்திகள்.’’

செய்தி பற்றிய எல்லா விளக்கங்களையும் இணைத்துத் தரும் முறையில், செய்தியினை, ‘‘ஒரு கருத்து, நிகழ்ச்சி, சிக்கல் பற்றிய உண்மையான, சரியான, நடுநிலையான குறிப்பு; உண்மையானதாக, நிகழ்காலத்தோடு தொடர்புடையதாக, மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நடைமுறைக்கு மாறுபட்டதாக இருக்கும் சிலவற்றைப் பற்றிய விளக்கம்.’’ என்று ஆர்.ராமசந்திர ஐயர் கூறுகின்றார்.

**3. செய்திக்களங்கள்**

ஒன்று செய்தியா இல்லையா என்பதை முதலில் செய்தியாளர் தீர்மானித்து செய்திகளைச் சேகரிக்கின்றனர். அவர் திரட்டுகின்ற எல்லாம் செய்திகளாக வெளிவருவதில்லை. ஆசிரியர் குழு செய்திகள் எனக் கருதுவதே செய்தித்தாளில் அச்சாகின்றன. செய்தித்தாளில் அச்சாகும் எல்லாவற்றையும் வாசகர்கள் செய்திகளாக எண்ணுவதில்லை. சிலவற்றைத் தேவையற்றவை என்று படிக்காமல் ஒதுக்குகின்றனர். ஆனால் பொதுவாக ஒன்றைச் செய்தி மதிப்புடையதாகக் கருத அதில் என்னென்ன தன்மைகள் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

1. கால அண்மை (Timeliness): செய்திகள் ‘சுடச்சுட’ இருக்க வேண்டும். புதுமலர்களைப் பெண்கள் விரும்புவது போல புதிய செய்திகளையே மக்கள் படிக்க விரும்புகின்றனர். ‘காலம்’ என்பது செய்திக்கு உயிர் மூச்சு; காலம் கடந்த செய்தி உயிரற்ற உடல் போன்றது. அதற்கு மதிப்பு இல்லை.

2. இட அண்மை (Proximity): தங்களுக்கு அருகில், தங்களைச் சுற்றி நடப்பதில் இயல்பாக மக்களுக்கு ஆர்வம் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒருவர் தில்லியில் நடைபெற்ற ஒன்றைவிட சென்னையில் நடைபெற்ற ஒன்றைப் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றார். பக்கத்து மாநிலத்தில் ஆட்சி மாறுவதைப் பற்றிச் சாதாரண மக்கள் கவலைப்படுவதில்லை. தங்களது மாநிலத்தில் அமைச்சரவை மாற்றம் ஏற்பட்டால் அதுவே பொதுப் பேச்சாகின்றது.

3. உடனடியானவை (Immedicay): செய்திகளை உடனுக்குடன் தர வேண்டும். முதலில் வரும் செய்திக்கு மதிப்பு அதிகம். ஆதலால் தான் செய்தித்தாட்கள் செய்திகளை முதலில் பெற்று வெளியிடப் போட்டியிடுகின்றன. செய்திகளை முந்தித் தரும் இதழ்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுகின்றன.

4. முதன்மையானவை (Prominence): எவை நாட்டில் முதன்மையான இடத்தையும், புகழையும் பெறுகின்னவோ அவை செய்திகளாகப் போற்றப்படுகின்றன. முதன்மை பெறும் மனிதர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை செய்தித்தாளில் இடம் பெறுகின்றன.

5. அளவு (Sixe): செய்தியின் கருப்பொருள் மட்டுமல்ல, அது தொடர்புடைய மக்களின் பரப்பளவை ஒட்டியும் செய்தியாகின்றது. புகழ்பெற்ற எழுத்தாளின் இறுதி ஊர்வலத்தில் பத்துப்பேர் மட்டுமே வந்திருந்தால் செய்தியாகின்றது. முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் இறுதி ஊர்வலத்தில் இதுவரை சென்னையில் யாருடைய இறுதி ஊர்வலத்திலும் கூடாத அளவிற்கு மக்கள் சேர்ந்ததும் குறிப்பிடத்தக்க செய்தியாகின்றது.

6. நிகழ்வித்திலேயே கிடைப்பவை (Spot News): ஒரு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து நேரடியாக பங்கு பெற்றவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் தரும் செய்தி சிறப்பிடம் பெறுகின்றது. விபத்து நடந்த இரயிலில் பயணம் செய்து, உயிர்த்தப்பியவர், விபத்தைக் கண்ணால் கண்டபடி விவரிப்பது சிறப்புச் செய்தியாகும்.

7. விளைவுகளை உடையவை (Consequences): பின் விளைவுகளை ஏற்படுத்தும் எந்த நிகழ்ச்சியும் நடவடிக்கையும் மக்களின் ஆர்வத்தை தூண்டும் செய்திகளாகின்றன. வங்கிகளை நாட்டுடைமையாக்கினால் பல பொருளாதார விளைவுகளை எதிர்பார்க்கலாம். ஒரு கட்சியில் புகழ்பெற்ற ஒருவரை அந்தச் கட்சியிலிருந்து விலக்கினால் அரசியல் விளைவுகள் ஏற்படும்.

8. வியப்புக்குரியவை (Oddity): செய்தியில் புதுமையானதாக, வியப்பிற்குரியதாக ஏதாவது இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அதனை அறிந்து கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டுவார்கள். ஒருவன் தனது குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் அழித்துவிட்டால் அது நடைமுறை இயல்புக்கு மாறுபட்ட செய்தியாகின்றது.

9. மோதுபவை (Confilict): முரண்படுபவையும் மோதுபவையும் செய்தியின் தன்மையைப் பெறுகின்றன. மனமொத்து வாழ்கின்ற கணவனும் மனைவியும் செய்தியாவதில்லை. ஆனால் விவாகவிலக்கு செய்தியாகின்றது.

10. ஐயப்பாட்டிற்குரியவை (Suspencw): ஏன், எதனால் நடைபெற்றதென்று வெளிப்படையாகத் தெரியாதவற்றில் செய்திகள் உள்ளன. குற்றங்களைப் பற்றிய செய்திகள் இப்படிப்பட்டவைகளாகும்.

11. உணர்வு பூர்வமானவை (Emotional Appeal): மக்களின் உணர்வுகளைத் தூண்டக் கூடிய நிழக்ச்சிகளை உடனடியாக செய்திதாட்கள் வெளியிட வேண்டும். இந்தியாவின் முன்னாள் தலைமையமைச்சர் சுடப்பட்டதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### 4. செய்திகளின் வகைகள்

செய்திகளை அவற்றின் தன்மையை ஒட்டிப் பலவகையாகப் பகுப்பது (Classification) உண்டு. அவற்றில் தலையாய பகுப்புகளை விளக்கலாம்.

1. எதிர்பார்க்கும் செய்திகள்; எதிர்பாரத செய்திகள்: ஒன்று இப்பொழுது நடைபெறும் என்பதை அறிந்திருப்போம். அது நடைபெறும் பொழுது எதிர்ப்பார்த்த செய்தியாகின்றது. ஆதலால் அதனை எதிர்பார்க்கும் செய்தி (Predictable News) என்கிறோம். தேர்தல் நடைபெறுவது, தலைமையமைச்சர் வருகை, பலத்த மழைக்குப் பிறகு வெள்ளம் வருதல் ஆகியவை எதிர்பார்க்கும் செய்திகள்.

யாரும் சிறிதும் எதிர்பாரத நிலையில் நடைபெறுவது எதிர்பாராத செய்தி: (Unpredictable News) இரயில் விபத்து, புயலடித்தல், சுனாமி, அரசியல் தலைவரின் கொலை போன்றவை இப்படிப்பட்டவை.

2. நேரடிச் செய்தி; விளக்கச் செய்தி: ஒன்று எப்படி நடைபெற்றதோ அதனை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல வெளியிடுவது நேரடிச் செய்தி (Straight). சட்டமன்ற அவைத்தலைவர் சில உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்ததை அப்படியே நடந்தது நடந்தபடி கூறினால் நேரடிச் செய்தி. ஆனால், நடந்ததை விளக்கும் பொழுது, என்ன காரணங்களினால் சட்டமன்ற அவைத்தலைவர் அந்த நடிவடிக்கை எடுத்தாரென்றும், அதற்கு அவருக்கு அதிகாரம் உண்டாவென்பதையும் சேர்த்து செய்தியாக வெளியிடுவது விளக்கச் செய்தி (Explantory News) எனப்படும்.

3. கடினமான செய்திகள்; மெதுவான செய்திகள்: அமெரிக்காவில் செய்திகளைக் கடினமான செய்திகள் (Hard News), மெதுவான செய்திகள் என்றும் பிரிக்கின்றன. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டாத, அலசி ஆராயும் விவரமான செய்திகள் கடினமான செய்திகளாகும். நிதியமைச்சரின் வரவு-செலவுத் திட்டம். அறிவியலறிஞர்களின் மாநாட்டுச் செய்திகள் போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை.

உடனடியாக வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுபவை மெதுவான செய்திகளாகும் (Soft News). திரைப்பட வெளியீடு, தேர்தல் முடிவுகள் போன்றவற்றை மெதுவான செய்திகளாகக் கருதலாம். ஆனால் இவற்றைச் சூடான செய்திகள் (Hot News) என்றும் கூறுவதுண்டு.

மேலும் செய்திகளைப் புலனாய்வுச் செய்திகள் (Investigative) தொடர் செய்திகள் என்றும் வகைப்படுத்துவதுண்டு

**5. செய்தி சேகரித்தல்**

செய்தியை இனங்கண்டு கொண்ட பின்னர் செய்தியாளர் செய்தியைத் திரட்டும் பணியில் ஈடுபடுகின்றனர். செய்தியைப் பெறுதல் (Getting the Information) என்பது துப்பறிதல் போன்றதாகும். 'என்ன? ஏன்? எப்பொழுது? எப்படி? எங்கே? யார்?' என்ற ஆறு கேள்விகளுக்கும் சரியான, முழுமையான விடைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதென்பது, கடலில் மூழ்கி முத்துக் குளிப்பது போன்ற அருமையான பணியாகும்.

**குறிப்பிட்ட இடங்கள்:** சில செய்தியாளர்களுக்குச் செய்தி திரட்டுவதற்குச் சில இடங்களைக் குறிப்பிட்டிருப்பார்கள். இதனை ஆங்கிலத்தில் 'பீட்' (Beat) என்பார்கள். தமிழில் செய்திக்களம் எனக் கூறலாம். ஒவ்வொரு செய்தியாளருக்கும் எந்தெந்த இடங்கள் அல்லது அலுவலங்கள் என்பதை ஒதுக்கியிருப்பார்கள். அவர்கள் நாள்தோறும் அங்கு சென்று செய்திகளைத் திரட்டுவார்கள்.

செய்திகளின் மூலங்களாக (Sources) இருக்கும் அமைச்சகங்கள், காவல் நிலையம், மருத்துவமனை, நீதிமன்றம் போன்ற செய்திக்களங்களுக்கு நாள்தோறும் செய்தியாளர்கள் செல்வார்கள். அங்கு சிலரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு செய்திகளைப் பெற்று வருவார்கள்.

ஒதுக்கீட்டுப் பணிகள் (Assignments): செய்திகள் எங்கு எப்பொழுது வெடித்துக் கிளம்புமென்று கூறமுடியாது. ஓரிடத்தில் விபத்து என்று தெரிந்தவுடன் செய்தியாளரைச் செய்தித்தாளின் செய்தியாசிரியர் அந்த இடத்திற்கு அனுப்புவார். தலைமையமைச்சரின் சுற்றுப் பயணத்தில் செய்திகளைத் திரட்ட ஒருவரை அனுப்பலாம்.

ஒவ்வொரு நாளிதழிலும் எப்பொழுதும் அலுவலகத்தில் ஒன்று அல்லது இரண்டு செய்தியாளர்கள் காத்திருப்பார்கள். அவர்களைத் தேவைக்கேற்ப செய்தியாசிரியரோ, தலைமைச் செய்தியாளரோ பயன்படுத்திக் கொள்வர்.

ஒதுக்கீட்டுப் பணிகளைச் செய்கின்ற செய்தியாளர்கள் தனித்திறமை கொண்டவர்களாக இருக்க வேண்டும். புதிய இடங்களில், சூழ்நிலைக்கேற்ப விரைந்தும், புது முறைகளைப் பின்பற்றியும் செய்திகளைத் திரட்டும் ஆற்றல் பெற்றவர்களாலேயே ஒதுக்குப் பணிகளை வெற்றிகரமாகச் செய்ய இயலும்.

**1. செய்தி திரட்டும் முறைகள்**

செய்திகளைத் திரட்ட செய்தியாளர் பொதுவாகச் சில முறைகளைப் (Methods) பின்பற்றுகின்றனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றைத் தனித்தனியாக விளக்கலாம்.

**(I) நிகழ்ச்சியில பங்கேற்றல் (Participating in the action):** செய்தியாளர் நடைபெறும் நிகழ்ச்சியில் நேரடியாகப் பங்கேற்று, அவரும் செய்தியில் ஒரு பகுதியாகிச் செய்தியைச் சேகரிப்பது ஒரு முறையாகும். பொதுவாகச் செய்தியாளர் செய்தியிலிருந்து ஒதுங்கி நின்று நடு நிலையில் செய்திகளைத் திரட்ட வேண்டுமென்றுதான் எதிர்பார்ப்பார்கள். சூழ்நிலையின் காரணமாகவோ, தேவை கருதியோ செய்தியாளர் நேரடியாகப் பங்கு பெறலாம்.

செய்தியாளர் செல்லும் வண்டி விபத்துக்குள்ளாகும் பொழுது அவரே செய்தியினைத் தனது நிலையிலிருந்து விளக்கலாம். அரசியல் ஊர்வலங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபாடு கொண்டு பங்கேற்கும் ஒருவர், செய்தியாளராகச் செய்திகளைத் திரட்டிக் கொடுக்கலாம். வெளிநாடுகளில் போர்களில் பங்கேற்று செய்திகளைத் திரட்டித் தந்த புகழ்பெற்ற செய்தியாளர்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, 'இலண்டன் டைம்ஸ்' இதழின் செய்தியாளர் இந்தியச் சீனப் போரின் போது போர்க்களம் சென்று செய்திகளைத் திரட்டியதைக் கூறலாம். நமது நாட்டில் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' செய்தியாளர் தில்லியிலுள்ள சிறைச்சாலையின் நிலைபற்றி அறிய, தானே சிறைப்பட்டு, செய்திகளைத் திரட்டித் தந்து புகழ்பெற்றார்.

ஒரு செய்தியாளர் செய்தியில் பங்கேற்கின்ற பொழுது செய்தி அனுபவத்தின் அடிப்படையில் கிடைக்கின்றது. உண்மையான செய்தியாக இருக்கும் செய்தியாளர் உணர்வு பூர்வமாகவும், சுவையாகவும் செய்தியினைக் கூற இயலும்.

ஆனால், நேரடியாகச் செய்தியில் பங்கு பெறும்பொழுது, செய்தியாளரால் நடுநிலையில் நின்று செய்தியினைக் கூற இயலாது.

**(ii) நிகழ்ச்சியின் பார்வையாளராகுதல்:** நிகழ்ச்சியைச் சென்று பார்வையாளராகக் கவனித்து (Observing the Action) செய்தியைத் திரட்டுதல் பொதுவான முறையாகும். விளையாட்டுப் போட்டிகள், புகழ்பெற்ற விசாரணைகள், சட்டமன்ற நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றைச் செய்தியாளர்கள் சென்று பார்வையாளர்களாகக் கவனிக்கின்றனர். சில இடங்களில் செய்தியாளர்களுக்குத் தனி இடங்களை ஒதுக்கியிருப்பார்கள். ஒரே நிகழ்ச்சியினைக் கவனிக்க ஒன்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் செல்லலாம்.

பார்வையாளர்களாகச் செல்கின்ற செய்தியாளர்கள் விழிப்போடிருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும். அந்த நிகழ்ச்சியின் பின்புலத்தை முதலிலேயே நன்கு அறிந்திருக்க வேண்டும். நிகழ்ச்சியின் இயல்பு, விதிமுறைகள் போன்றவற்றையும் தெளிவாக அறிந்திருப்பது தேவையாகும். எடுத்துக்காட்டாக, சட்டமன்றத்திற்குப் பார்வையாளராகச் செல்லும் செய்தியாளர் சட்டமன்றத்தின் விதிமுறைகளையும் நடைமுறைகயையும் தெரிந்திருக்க வேண்டும்.

இந்த முறையின் தனிச்சிறப்பு செய்தியாளரே நேரடியாகச் செய்தியினைக் கவனிப்பதாகும். மற்றவர்களைச் சார்ந்து செய்தியைப் பெறும் பொழுது செய்தி உண்மையானதாகக் கிடைக்காது. செய்தியாளரே நேரடியாகப் பார்க்கின்றபொழுது நிறைய விவரங்களைத் திரட்டலாம்; அவை நம்பத்தகுந்தவைகளாக, சரியானவைகளாக இருக்கும்.

ஆனால், மிகப்பெரிய நிகழ்ச்சியின் பார்வையாளராகச் செல்பவருக்கு அந்த நிகழ்ச்சியை முழுமையாகப் பார்க்க இயலாது. ஏதாவது ஒரு பகுதியைத்தான் கவனித்து எழுத இயலும் எடுத்துக்காட்டாக, திருச்செந்தூர் கந்தர் ஷஷ்டி விழாவினைப் பார்த்து எழுதுகின்ற செய்தியாளர் விழா தொடர்பான எல்லாவற்றையும் நேரடியாகப் பார்க்க இயலாது.

**(iii) கேள்விகள் கேட்டல் (Asking Questions):** ஒரு நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்களைக் கண்டு அவர்களிடம் கேள்விகள் மூலம் செய்திகளைப் பெறுவது ஒரு முறையாகும். இதனைச் சிறப்பாகத் திட்டமிட்டு நேரடிப் பேட்டியாக (Interview) அமைத்துக் கொள்ளலாம். தேவைகருதி தொலைபேசி மூலமாகவோ, கடிதங்கள் மூலமாகவோ கேள்விகளைக் கேட்டு விடைகளைப் பெறுவதும் உண்டு.

பேட்டியின் மூலமாகச் செய்திகளைப் பெறுகின்ற பொழுது முதலிலேயே நன்கு திட்டமிட வேண்டும். கேட்க வேண்டிய கேள்விகளை முதலிலேயே தொகுத்து முறைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். நேர்கோணலில் நடந்த ஒன்றைப் பற்றிய, விளக்கத்தையோ, கருத்தையோ, நடைபெறப் போகும் ஒன்றைப் பற்றியோ கேட்கலாம்.

சில வேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் சேர்ந்து பேட்டியில் பங்கு பெறலாம். அரசியல் தலைவர்களின் பேட்டிகள் இப்படி அமைகின்றன.

பேட்டிகளில் ஒருவரின் கருத்துக்கள் நன்கு வெளிப்பட வாய்ப்பு இருக்கின்றது. பேட்டியில் பங்குகொள்ளும் செய்தியாளரின் திறமைக்கேற்பப் பேட்டி பயனுடையதாக அமையும். ஆனால் பேட்டியில் சரியான புள்ளி விவரங்கள் நிறையக் கிடைக்குமென்று எதிர்பார்க்க இயலாது.

**(iv) படித்தறிதல் (Reading):** செய்திகளைத் திரட்டுவதற்காகச் செய்தியாளர் நிறையப் படிக்க வேண்டியதிருக்கின்றது. அரசின் அறிக்கைகள், வாணிபக் குழுக்களின் வெளியீடுகள், அரசியல் கட்சிகளின் அறிக்கைகள், நிதியமைச்சர் அளிக்கும் வரவு-செலவுத் திட்டங்கள் போன்றவற்றைப் படித்துத்தான் செய்தியாளர்கள் நிறைய விவரங்களைத் திரட்டுகின்றனர். குறிப்பாக, நாளேட்டின் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு செய்திகளை எழுதுபவர்கள் நிறையப்படிக்க வேண்டியுள்ளது.

**(v) அறிவியல் ஆய்வு முறைகளைப் பயன்படுத்துதல் (Using Scientific Research Technoques):** செய்தியாளர் அறிவியல் ஆய்வு முறைகளையும், அவற்றை எப்படி பயன்படுத்துவதென்பதையும் அறிந்திருக்க வேண்டும். சமுதாய இயல் ஆய்வாளர்கள் சில அறிவியல் முறைகளைப் பின்பற்றி உண்மைகளைக் கண்டறிகின்றனர். புள்ளி இயல் (Statistics) இதற்குத் துணை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, பொதுமக்களின் கருத்துக்களை அறிய ‘கூறெடுப்பு விசாரணை’ (Sample Survey) நடத்தலாம்.

**2. செய்திகளைப் பெறும் வழிமுறைகள்**

செய்தித்தாட்கள்அவை வெளியிடுகின்ற செய்திகளைப் பல்வேறு வழிமுறைகளில் பெறுகின்றன. ஒரு செய்தித்தாள் தனது வளத்திற்கும், செய்தித்தாளின் அளவுக்கும் ஏற்ப செய்திகளைப் பெறும் முறைகளை அமைத்துக்கொள்ளும் விரிவாகப் பலவகைச் செய்திகளை வெளியிட விரும்பும் பெரிய நாளேடுகள் எல்லா வகையான செய்தி வழிமுறைகளையும் பயன்படுத்தும். இதில் சில குறிப்பிடத்தக்க செய்தி வழிமுறைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

**(i) உள்ளூர் செய்தியாளர்கள் (Local Reporters):** பெரிய நாளேடுகள் உள்ளூரில் நடைபெறுகின்ற செய்திகளை நேரடியாகத் திரட்டித்தரச் செய்தியாளர்களை வைத்திருக்கின்றன. இவர்கள் செய்தி மூலங்களுக்குச் சென்று, நேரடியாகச் செய்திகளைத் திரட்டித் தருவார்கள்.

**(ii) வெளியூர் நிருபர்கள் (Correspondents):** வெளியூர்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டியனுப்ப நியமிக்கப் பெற்றிருப்பவர்களை நிருபர்கள் எனக் கூறலாம். இவர்கள் கடிதங்களின் (நிருபர்கள்) மூலம் முன்பு செய்திகளை அனுப்பியதால் இப்பெயர் பெற்றனர். இவர்கள் செய்திதாட்களின் முழு நேர ஊழியர்களாகவோ, பகுதிநேர ஊழியர்களாகவோ இருப்பார்கள். சில இதழ்கள், உள்நாட்டில் பெரிய நகரங்களில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நிருபர்களை வைத்திருக்கின்றன. இவர்கள் அஞ்சல்களின் மூலமோ, தந்தி, தொலைபேசி வாயிலாகவோ செய்திகளை அனுப்புவார்கள்.

**(iii) சிறப்புச் செய்தியாளர்கள் (Special Reporsters):** உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ சில இடங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளைப் பற்றிச் செய்திகளைத் திரட்டியனுப்ப, தேர்ச்சி பெற்ற செய்தியாளர்களை அனுப்பிச் செய்திகளைத் திரட்டுவார்கள். எடுத்துக்காட்டாக, உலகத் தமிழ் மாநாடு, கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாடு போன்றவற்றிற்கு அனுப்பும் செய்தியாளர்களைக் கூறலாம்.

**(iv) ஆர்வலர்கள் மூலம் செய்திகள்:** சிலர் ஆர்வத்தின் காரணமாகச் செய்திகளைத் திரட்டி நாளிதழ்களுக்குத் தருவார்கள். வேறு பணிகளைச் செய்து கொண்டு செய்திகளைத் திரட்டுபவர்களைப் ‘பகுதி நேரச் செய்தியாளர் (Stringer) என்றும் ஆர்வலர்’ (Liner) என்றும் கூறுவர். இவர்கள் அனுப்புகின்ற செய்தியின் அளவுக்கு ஏற்ப ஊதியம் பெறுகின்றனர்.

சில வேளைகளில் மன்றங்களின் செயலாளர்களும் செய்திகளை நடத்துகின்றவர்களும் பொதுமக்கள் தொடர்பு அலுவலர்களும் தாங்களே விரும்பி வந்து செய்திகளைத் தருவார்கள். இப்படிப்பட்ட செய்திகள் உண்மையானவைதானா என்பதைச் சரிபார்த்து வெளியிடுவது நல்லது.

**(v) வானொலியும் (Redio) தொலைகாட்சியும் (T.V):** வானொலியும் தொலைக்காட்சியிலும் சில செய்திகள் முன்னதாக வர வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றைச் செய்தித்தாட்கள் பெற்று வெளியிடலாம்.

**(vi) அரசின் அறிக்கைகள்:** அரசின் பல்வேறு துறைகளும் இதழ்களில் வெளியிடுவதற்காகச் செய்திக் குறிப்புக்களையும், அறிக்கைகளையும் வெளியிடுகின்றன. அவை செய்திகளாகச் செய்தித்தாட்களில் இடம் பெறுகின்றன. சில முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது தலைவர்கள் தங்களது கருத்துக்களை அறிக்கைகளாக வெளியிடுவதும் உண்டு.

**(vii) செய்தி நிறுவனங்கள் (News Agencies):** செய்திகளைத் திரட்டித் தருவதற்கென்றே சில அமைப்புகள் உள்ளன. இவை தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் அமைந்துள்ளன. இவற்றில் உறுப்பினர்களாகச் சேர்ந்து செய்தித்தாட்கள் செய்திகளைப் பெறுகின்றன.

**செய்தி நிறுவனங்கள்**

சமுதாயத் தொடர்புகள் உயிரோட்டமானதாக அமைய செய்திகள் - தகவல்கள் - துணை செய்கின்றன. உள்நாட்டுக்குள்ளும், நாடுகளுக்கிடையிலும் செய்திகள் தடையின்றி சுழன்று கொண்டிருக்க, தக்க, திறமையான அமைப்புக்கள் இருந்தால் தான் செய்திகள் உடனுக்குடன், சரியாக, விரைவாக கிடைக்க முடியும்.

ஒவ்வொரு செய்தித்தாளும் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் உலகெங்கும் தானே நிருபர்களை அனுப்பிச் செய்திகளைத் திரட்ட முடியாது. அப்படித் திரட்ட முயன்றால் நிறையச் செலவு ஆகும். முழுமையாகச் செய்திகளைத் திரட்டுவதென்பது நடைமுறையில் இயலவும் செய்யாது. ஆதலால் தான் செய்திகளைத் திரட்டித்தரத் தனிசெய்தி நிறுவனங்கள் தோன்றியுள்ளன.

செய்தி நிறுவனங்கள் கட்டணம் பெற்றுக் கொண்டு நாளிதழ்களுக்குச் செய்திகளை வழங்குகின்றன. ஒவ்வொரு நாளிதழும் அதனுடைய வளத்திற்கும், தேவைக்கும் ஏற்ப ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்களின் உறுப்பினராகிச் செய்திகளைப் பெற்று வெளியிடுகின்றன.

செய்தி நிறுவனங்கள் உலகெங்கும் செய்திகளைத் திரட்டும் செய்தியாளர்களை வைத்துக் கொண்டு, பிற செய்தி நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டும் திறமையாகச் செய்திகளைத் திரட்டித் தருகின்றன. இவை விரைந்து செய்திகளை அனுப்ப அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி பெருந்துணை செய்கின்றது. கடந்த இருபதாண்டுகளில் செய்திகளை அனுப்புவதில் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

கம்பியில்லாத்தந்தி, தொலைப்பேசி, கடலடித்தந்தி (cable) தொலை தூரத்தில் அச்சிடுகின்ற 'டெலிபிரிண்டா' (Telepreinter) 'டெலக்ஸ்' முறைகள், விண்வெளித் தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் செயற்கைகோள் செய்தியனுப்பும் முறை (Satellite System) நேர்படி ஒளிப்பட அனுப்பு முறை (Facsimile Transmission) ஆகியவை தகவல் அனுப்புவதில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. உடனுக்குடன் உலகெங்கும் செய்திகளை அனுப்ப இந்தப் புதிய முறைகள் துணைசெய்கின்றன.

**வரலாற்றுப் பின்புலம்**

**முதல் செய்தி நிறுவனம்:** உலகில் முதன் முதலில் சார்லஸ் ஹாவாஸ் என்னும் பிரெஞ்சுக்காரர் 1825 இல் பாரிஸ் நகரில் ஒரு செய்தி நிறுவனத்தை அமைத்தார். இதனை ஒரு செய்திக் கழகமாக அமைத்த அவர் செய்திகளைத் திரட்டி அனுப்ப ஐரோப்பாவில் பல இடங்களிலும் செய்தியாளர்களை நியமித்திருந்தார். அஞ்சல் மூலமாகவும், ஆட்சிகளின் வாயிலாகவும் புறாக்களைப் பயன்படுத்தியும் செய்திகளை அனுப்பினர்.

தொடக்க காலத்தில் வணிகர்கள், செல்வர்கள், அரசியல் வல்லுநர்கள் தான் ஹாவாசின் செய்திக் கழகத்திடமிருந்து செய்திகளைப் பெற்றுக் கொண்டனர். 1835 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இதழ்கள் இந்த நிறுவனத்திடமிருந்து செய்திகளைப் பெற்றுப் பயன்படுத்தின. ஆதலால் செய்தி நிறுவனத்தின் வருவாய் கூடியது; நிறுவனம் வளர்ந்தது.

சார்லஸ் ஹாவாஸ் தேவைக்கேற்பத் தனது நிறுவனத்தை வளர்த்துக் கொண்டார். இலண்டன், ரோம், வியன்னா போன்ற தலைநகரங்களில் கிளைகளை அமைத்தார். இலண்டனிலிருந்து ராய்ட்டர் செய்தி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு செய்திகைளப் பெற்றார். கடலடித் தந்தி முறை செய்திகளை அனுப்பப் பெரிதும் துணை செய்தது. இந்த நிறுவனம் 1875 இல் நியூயார்க்கிலிருந்த அசோகியேடட் பிரஸூடன் (Associated Press) கூட்டுறவின் அடிப்படையில் செய்திகளைப் பரிமாறிக் கொண்டது.

இப்பொழுது ஏஜென்சி பிரான்சி பிரஸ் (Agence France Press-AFP) என்றழைக்கப்பெறும் இந்த நிறுவனம் பிரெஞ்சு அரசு வழங்கும் மானியத்தொகை உதவியில் நடைபெறுகின்றது. இது அரசின் மேற்பார்வையில் செயல்பட்டாலும் சுதந்திரமாகச் செய்திகளைத் திரட்டித் தருகின்றது.

பெர்னார்டு உல்ப்: சார்லஸ் ஹாவாஸின் செய்தி நிறுவத்தில் பணியாற்றிய பெர்னார்டு உல்ப் 1848-இல் ஜெர்மனியில் ஒரு செய்தி நிறுவனத்தைத் தொடங்கினார். இவர் முதலில் வாணிபப் பொருட்களின் விலை

விவரங்களைத் தொகுத்து, வாணிப நிறுவனங்களுக்குத் தரும் பணியைத்தான் மேற்கொண்டார். காலப்போக்கில், அரசியல், சமுதாய செய்திகளையும் இவரது நிறுவனம் திரட்டித் தந்தது.

உல்பின் நிறுவனம் வடக்கு ஐரோப்பாவில் அப்பொழுது அமைக்கப்பெற்ற அஞ்சல், தந்தி முறையை நன்கு பயன்படுத்திக் கொண்டு வளர்ந்து, ஹாவாஸ், ராய்ட்டர் நிறுவனங்களோடு செய்திப் பரிமாற்றங்கள் வைத்துக் கொண்டது.

இந்த நிறுவனம் பல்கேரியா, ருமேனியா, கிரீசு, ரஷ்யா, துருக்கி போன்ற பல்வேறு நாடுகளிலும் கிளைகளை அமைத்துக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டது. இந்த வகையில் உலகச் செய்தி நிறுவன அமைப்பிற்கு இது முன்னோடியாகத் திகழ்ந்தது என்று கருதலாம்.

முதல் உலகப் போருக்குப் பின் இதனுடைய வளர்ச்சி குன்றியது. ஹிட்லரின் கண்பார்வையில் இது கருகி வாடி விட்டது.

**ராய்ட்டர் நிறுவனம்:** ஹாவாஸ் செய்தி நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றிய பால் சூலியல் ராய்ட்டர் என்ற ஜெர்மனிய யூத இளைஞர் 1851 இல் இலண்டனில் வாணிபச் செய்திகளைத் திரட்டித்தர ஒரு செய்தி நிறுவனத்தை அமைத்தார். முதலில இவருக்குச் செய்தித்தாட்களின் ஆதரவு கிடைக்கவில்லை. முன்பே செய்தி திரட்டுவதில் இவர் பெற்றிருந்த அனுபவம் இவரது வளர்ச்சிக்கு உற்ற துணையாகியது. 1856க்குப் பிறகு டைம்ஸ் போன்ற இலண்டன் இதழ்கள் இவரிடமிருந்து செய்திகளைப் பெற்றன. அதன்பிறகு இவரது நிறுவனம் விரைந்து வளர்ந்தது. ஹாவாஸ், உல்ப் ஆகியவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, தனது நிறுவனம் உலக நிறுவனமாக வளர சூலியஸ் ராய்ட்டர் பாடுபட்டார்.

இப்பொழுது நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செய்தி நிறுவனங்கள் அமைந்துள்ளன. இவை எல்லாம் தொழில் நுட்ப, அறிவியல் வளர்ச்சியின் விளைவாக, கடந்த சில ஆண்டுகளாகக் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளன. அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் விளக்கலாம்.

**அசோசியேடட் பிரஸ் (Associted Press of America):** இந்த நிறுவனத்தை 1848 இல் நியூயார்க் நகரிலிருந்த ஆறு செய்தித்தாட்கள் இணைந்து, ஆதாய நோக்கமின்றி, கூட்டுறவு செய்தி நிறுவனமாக அமைந்தன. தொடக்க காலத்தில், இது உறுப்பினர்களுக்கு மட்டுமே செய்திகளை வழங்கியது. ஆனால் 1843இல் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எல்லாச் செய்தித்தாட்களும் செய்திகளை வழங்குகின்றது.

‘A.P நிறுவனம்’ இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரிய அளவில் இந்நிறுவனம் வளர்ந்துள்ளது. உலகத்தில் மிகப்பெரிய செய்தி நிறுவனங்களில் ஒன்றாக இருக்கும் இந்த நிறுவனம் 1977இல் 108 உலக நாடுகளுக்குச் செய்தி வழங்கியது. அமெரிக்காவில் மட்டும் 1,320 செய்தித்தாட்களும் 3,400 ஒலிபரப்பு நிலையங்களும் இதன் உறுப்பினராக இருந்தன.

இந்த நிறுவனம் அமெரிக்காவில் 107 நகரங்களில் செய்தியாளர்களை வைத்திருக்கின்றது. 60 வெளிநாடுகளில் இது செய்திகளைச் சேகரிக்கின்றது.

ராய்ட்டர் (Reuter): 1850இல் பிரான்சில் தொடங்கப்பெற்று இந்த நிறுவனம் 1851இல் இலண்டனுக்குச் சென்றது. முதலில் தனிக் குடும்பச் சொத்தாக இந்த நிறுவனம் இப்பொழுது நான்கு பத்திரிகை நிறுவனங்களுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. இந்தப் பத்தீகை அமைப்புகள் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளோடு தொடர்பு கொண்டவை.

ராய்ட்டர் உலகச் செய்தி நிறுவனமாகச் செயல்படுகின்றது. இது 60 நாடுகளில் அலுவலகம் வைத்திருக்கின்றது 130 பகுதிகளுக்குச் செய்திகளை வழங்குகின்றது.

**ஏஜென்சி பிரான்சு பிரஸ் (Agence France Press):** 1835இல் சார்லஸ் ஹாவாஸ் நிறுவிய ஹாவாஸ் செய்தி நிறுவனத்தின் தொடர்ச்சியாக 1944 முதல் இந்த நிறுவனம் செயல்படுகின்றது. முதல் உலகச் செய்தி நிறுவனம் என்ற பெருமைக்குரிய ஹாவாஸ், 1940இல் பிரெஞ்சு அரசு இதனை விலைக்கு வாங்கி நடத்தியது, பின்னர் ஜெர்மானியர்கள் இதனைக் கைப்பற்றினர். பிரெஞ்சுக்காரர்களின் போராட்டத்தின் விளைவாக தலைமறைவு செய்தி நிறுவனங்கள் தோன்றின. சுதந்திர பிரெஞ்சுக்காரர்கள் (Free French) ஏஜென்சி பிரான்காய்ஸ் இன்டிபென்டின்டஸ் (Agence Granciase Independence) என்ற அமைப்பினை இலண்டனில் நிறுவினர். இவற்றிலிருந்து 1944இல் ஏஜென்சி பிரான்சு பிரஸ் (AFP) உருவானது இதற்கு ஆண்டுதோறும் அரசு மானியம் வழங்கியது.

1957 முதல் சட்டத்தின் மூலம் இதனைத் தனித்தியங்கும் நிறுவனமாக மாற்றினார். இதனுடைய நிர்வாகத்தில் பிரெஞ்சு செய்தித்தாள்களும், வானொலி, தொலைக்காட்சியினரும் பொதுமக்களின் சார்பாளர்களும், செய்தி நிறுவனத்தின் ஊழியர்களும் பங்கு பெறுகின்றன.

இந்த நிறுவனம் 167 நாடுகளில் தனது அமைப்பினை வைத்திருகின்றது. 152 நாடுகளுக்குச் செய்திகளை பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிய, ஜெர்மானிய போர்ச்சுகீசிய, அரபிய மொழிகளில் வழங்குகின்றது.

**யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் (United Press International):** 1907 இல் தொடங்கப் பெற்ற ஸ்கிரிப்ஸ் யுனைடெட் பிரஸ் அசோசியேசன் (Scripp’s United Press Association), 1909 இல் நடைபெற்ற ஹர்ஸ்டஸ் இன்டர்நேஷனல் நியூஸ் சர்வீஸ் (heart’s International News Servie) ஆகிய நிறுவனங்களை இணைந்து 1958இல் யுனைடெட்பிரஸ் இன்டர்நேஷனஸ் (UPI) என்ற இந்தச் செய்தி நிறுவனத்தை அமைத்தனர்.

தனியாரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஒரே உலகச் செய்தி நிறுவனம் இதுதான். இதற்கு 92 நாடுகளில் 7079 கட்டணம் செலுத்தும் உறுப்பினர்கள் உள்ளனர். 1978இல் இதன் வருவாய் 75 மில்லியன் அமெரிக்கன் டாலர்களையும் தாண்டி விட்டது.

**டாஸ் (Telegrafnoe Agentsvo Sovetskovo Soiuza):** சோவியத் ரஷ்யாவின் செய்தி நிறுவனமாக 1918 முதல் டாஸ் (Tass) நிறுவனம் செயல்படுகின்றது. இதனை 1925 வரை ரோஸ்டா (Rosta) என்று அழைத்தனர்.

இந்த நிறுவனம் சோவியத் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றது. இது அரசையும், பொதுவுடைமைக் கட்சியையும் சார்ந்த நிறுவனமாகும்.

டாஸ் நிறுவனம் 110 நாடுகளில் செய்திகளைத் திரட்ட 40 அலுவலங்களையும் 61 தனிச் செய்தியாளர்களையும் வைத்திருக்கின்றது. உலகச்செய்தி நிறுவனங்ளோடு செய்தி பரிமாற்ற ஏற்பாடு செய்திருக்கின்றது.

**இந்தியச் செய்தி நிறுவனங்கள்**

நமது நாட்டில் ‘பாம்பே டைம்ஸ்’ இதழ் இலண்டன் ராய்ட்டர் நிறுவனத்திடமிருந்து 1860 முதல் வெளிநாட்டுச் செய்திகளைப் பெற்று வெளியிட்டது. 1878 இல் ராய்ட்டரின் நிறுவனம் பம்பாயில் ஒரு கிளையை நிறுவி, இந்திய இதழ்களுக்குச் செய்திகளை வழங்கியது. ஆங்கில அரசின் கெடுபிடிகளால் இது மெதுவாக வளர்ந்தது.

இந்தியச் செய்தி நிறுவனத்தை முதன் முதலில் அமைத்த பெருமை கே.சிராய் (K.C.Ray) என்பவருடையதாகும். ராய், அரசின் செல்வாக்குப் பெற்றிருந்த ‘பயணியர்’ (Pioneer) இதழின் ஹென்ஸ்மேன் (Hensman) என்பவரோடு போட்டியிடும் நோக்கில், ‘ஸ்டேட்ஸ்மேன்’ (Statemsman) ‘இங்கிலீஸ் மேன்’ (Englishman), ‘இந்தியன் டெய்லி நியூஸ்’ (Indian Daily

News) ஆகிய இதழாசிரியர்களோடு சேர்ந்து ‘இந்தியாவின் அசோசியேடட் பிரஸ’ (Associated Press of Indian) என்னும் நிறுவனத்தை அமைத்தார். அவர் அந்த நிறுவனத்தின் இயக்குநராகச் செயல்பட விரும்பினார். ஆனால் அவரோடு சேர்ந்த இதழாசிரியர்கள் அதனை ஏற்கவில்லை. ஆதலால் அதனை விட்டு விலகி, ‘பிரஸ் பீரோ’ (Press Bureau) நிறுவனத்தை அமைத்தார்.

ராய் ‘பிரஸ் பீரோ’ நிறுவனத்தின் கிளைகளை கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் அமைத்தார். ஒவ்வொரு இதழும் மாதம் ரூ.350 கட்டணம் செலுத்தியது. பின்னர் நிதி நெருக்கடி ஏற்பட்ட பொழுது ராய் அந்த நிறுவனத்தை ராய்ட்டர் நிறுவனத்தோடு இணைத்தார். பின்னர் ‘இந்தியன் நியூஸ் ஏஜென்சி’ (Indian News Agency) என்ற நிறுவனத்தைத் தொடங்கி 1947 வரை நடத்தினார்.

காந்தியடிகளின் இயக்கம் வலுப்பெற்ற பொழுது சதானந்த் (Sadanand) ‘பிரி பிரஸ் இந்திய நியூஸ் ஏஜென்சி’ (The Free Press of India News Agency) என்ற அமைப்பினை மற்றைய புகழ் பெற்ற இயக்குநர்களோடு சேர்ந்து தொடங்கினார். அரசின் கட்டுப்பாடுகளினால் ‘பிரி பிரஸ் இந்தியா’ நிதி நெருக்கடிக்கு ஆளானது. இந்த நிறுவனத்திடமிருந்து செய்திகளைப் பெற்று வெளியிடும் இதழ்களை அரசு அபராதம் விதித்து நெருக்கியது. ஆதலால் சதானந்த 1930 இல் ‘பிரிபிரஸ்ஜார்னல்’ (Free Press Journal) என்னும் இதழைத் தொடங்கினார். ஆனால் 1935இல் இதழை நிறுத்த வேண்டியதாயிற்று.

பி.சென் குப்தா (B.Sen Gupta) ‘பிரி பிரஸி’ லிருந்து விலகி, ‘இந்திய யுனைடெட் பிரஸ்’ (The United Press of India) என்னும் செய்தி நிறுவனத்தை அமைத்து, அதன் நிர்வாக இயக்குநராகச் செயல்பட்டார். அதன் தலைவராக டாக்டர் பி.சி.ராய் இருந்தார். இது தொடக்க காலத்திலிருந்தே நிதித் தொல்லைக்கு ஆளானது 1948க்குப் பிறகு வளர்ச்சி பெற்றது.

நமது நாட்டில் இப்பொழுது நான்கு பெரிய செய்தி நிறுவனங்கள் தொலை அச்சு (Teleprinter) வசதியுடன் செயல்படுகின்றன.

இந்தியாவில் பிரஸ் டிரஸ்ட் (Press Trust of India): ‘பிடிஐ’ (PTI) என்றழைக்கப் பெறும் இந்தச் செய்தி நிறுவனத்தை 1947 ஆகஸ்டில் இந்தியாவில் ஏழு செய்தித்தாட்கள் சேர்ந்து கூட்டுப்பங்கு நிறுவனமாக அமைத்தன. இந்த நிறுவனம் 1-2-1949 முதல் செயல்படத் தொடங்கியது. இது ராய்ட்டரின் இந்தியக் கிளை நிறுவனமாக இருந்த இந்தியாவின் அசோகியேடட் பிரசின் (Associated Press of India-API) பணிகளை மேற்கொண்டது.

இது ஆதாய நோக்கமின்றி செயல்படும் நிறுவனமாகும். இதனுடைய விதிகளின்படி இந்தியாவில் தொடர்ந்து வெளியாகும் செய்தித்தாட்கள் மட்டுமே இதில் பங்கு பெற முடியும். இது கிடைக்கும் ஆதாயத்தைப் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிக்காமல் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்றது.

இந்த நிறுவனத்தின் ‘நிர்வாகத் தலைமையகம் பம்பாயில் இருக்கின்றது. ஆனால் இது தில்லியிலிருந்து தனது செய்திப் பணிகளைக் கவனிக்கின்றது. இந்திய அசோசியேட்டட் பிரசிடமிருந்து இது பணிகளை ஏற்ற பொழுது 30,000 கிலோ மீட்டருக்கு இது தொலை அச்சு முறையைப் பெற்றிருந்தது. இது இப்பொழுது 60,000 கிலோ மீட்டர் தொலைவாக வளர்ந்துள்ளது. இந்தச் செய்தி நிறுவனம் சராசரி ஒரு நாளைக்கு 1,00,000 சொற்கள் செய்திகளாக அனுப்புகின்றது. இவற்றில் ஏறத்தாழ 40 சதவிகிதம் பன்னாட்டுச் செய்திகள்.

இந்த நிறுவனத்தில் 1,100 முழுநேர ஊழியர்கள் உள்ளனர். 297 பகுதிநேரச் செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டி அனுப்புகின்றனர். நியூயார்க், இலண்டன், மாஸ்கோ, கோலாம்பூர் போன்ற உலகின் முக்கிய

நகரங்களில் இதனுடைய முழுநேரச் செய்தியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் தவிர 19 வெளிநாட்டு செய்தி மையங்களில் பகுதி நேர செய்தியாளர்கள் பணியாற்றுகின்றனர். மூன்று உலகச் செய்தி நிறுவனங்கோளாடும் செய்திகளைப் பெற இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டுள்ளது.

'பிடிஐ' நிறுவனம் மூன்று வகைகளாகத் தனது செய்திப் பணிகளைப் பிரித்துள்ளது. 'ஏ பணி' (A Service) மையப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு நாள்தோறும் சுமார் ஓர் இலட்சம் சொற்களை வழங்குகின்றது. இவற்றில் 60 சதவீதம் 'பி பணி' (B Service) வாடிக்கையாளர்களுக்கும் 40 சதவிகிதம் 'சி பணி' (C Service), வாடிக்கையாளர்களுக்கும் வழங்குகின்றது. சிறிய செய்தித்தாட்களுக்கு 'பொதுப்பணி' (General Service) ஏற்பாடு செய்கின்றது. செய்திப்பணி தவிர சிறப்புப்பணிகள் (Speical Services) பொருளாதார பணி (Economic Service) பணப்பணி (Money Service) ஆகியவற்றையும் செய்கின்றது. 10,000 இதழ்களுக்கு மேல் வெளியிடும் ஆங்கிலச் செய்திதாட்கள், 'ஏ பணிக்கு' மாதம் ரூ.8,400 கட்டணம் செலுத்துகின்றது. இப்பொழுது ஏறத்தாழ 1,000 பேர் கட்டணம் செலுத்தி செய்திகளைப் பெறுகின்றனர்.

இந்தியாவின் யுனைடெட் நியூஸ் (United news of India): 1958இல் இந்தியாவின் யுனைடெட் பிரஸ் (United Press of India) கலைக்கப்பட்ட பொழுது 'யூ என் ஐ' (UNI) என்ற செய்தி நிறுவனத்தை எட்டு செய்தித்தாள்கள் சேர்ந்து உருவாக்கின. இது 1961 முதல் செயல்படுகின்றது.

கடந்த 26 ஆண்டுகளில் இந்த நிறுவனம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. இப்பொழுது இது 64 தொலை அச்சு அலுவலங்கங்களோடு சுமார் 60,000 கிலோ மீட்டர் தூர இடங்களுக்குத் தொலை அச்சு மூலம் செய்திகளை அனுப்புகின்றது. ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் சொற்களைச் செய்தியாக வழங்குகின்றது.

தில்லியிலிருந்தும் இந்த நிறுவனத்தில் 550 பேர் பணி செய்கின்றனர். நாட்டின் பல்வேறு செய்தி மையங்களில் 164 முழு நேர செய்தியாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் 199 பகுதி நேரச் செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டுகின்றனர்.

இது கட்டணம் செலுத்துகின்றவர்களுக்கெல்லாம் ஒன்று போல செய்திகளை வழங்குகின்றது. 'பிடிஐ' போல இது வகைப்படுத்தி செய்திகளை வழங்குவதில்லை. 'பிடிஐ' விட இதற்கு கட்டணம் செலுத்திப் பெறும் இதழ்கள் மிகுதியாக உள்ளன.

'யு என் ஐ' நிறுவனம் பொருளாதாரப் பணி, (Economic Service) வேளாண்மைப் பணி (Agriculture Service), பின்புலப்பணி (Buack Grounder Service), சக்திப் பணி (Energy Service), நிதி செய்திப் பணி (Financial News Service) ஆகிய பல்வேறு சிறப்புச் செய்திப் பணிகளை வழங்குகின்றது. இப்பொழுது இது இந்தியிலும் செய்திகளைத் தருகின்றது. செய்தித்தாள் வெளியிடும் இதழ்களின் எண்ணிக்கைக்கேற்ப கட்டணம் வசூலிக்கின்றது.

**ஹிந்துஸ்தான் சமாச்சார் (Hindustan Samachar):** எஸ்.எஸ். ஆப்தே (S.S. Apte) என்பவர் தனியார் வரையறுக்கப் பெற்ற பங்கு நிறுவனமாக, 1948இல் ஹிந்துஸ்தான் சமாச்சார் என்ற செய்தி நிறுவனத்தை அமைத்தார். பல்வேறு இந்திய மொழிகளில் செய்திகளை வழங்கும் முதல் நிறுவனமாக இது உருவானது. தேவநாகரி தந்தி மூலம் முதலில் பம்பாய், தில்லி, பாட்னா, நாக்பூர் ஆகிய இடங்களுக்கு மட்டும் செய்திகளை அனுப்பினார். 1957இல் தேவநாகரி தொலை அச்சு அமைக்கப் பெற்றபின் இதனுடைய பணி பெருகியது. தகவல் அனுப்புவதற்கான செலவுகள் உயர்ந்ததால் ஆப்தேயால்

இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை. ஆதலால் 1957இல் இதனை ஹிந்துஸ்தான் சமாச்சார் கூட்டுறவு சங்கமாக மாற்றினார்.

இதனுடைய தலைமையகம் தில்லியில் உள்ளது. இது 54 தொலை அச்சு அலுவலகங்கோளடும் 5 பிற அலுவலங்களோடும் பணிபுரிகின்றது. 25,000 கிலோமீட்டர் தொலைவுக்கு தொலை அச்சு மூலம் செய்திகளை வழங்குகின்றது. ஒரு நாளில் 48,000 சொற்களில்

சமாச்சார் பாரதி: (Samchar Barathi): இரண்டாவது இந்திய மொழிகள் செய்தி நிறுவனமாக 1966இல் சமாச்சார் பாரதி செய்தி நிறுவனத்தை உருவாக்கினார். இது 1967 முதல் செயல்படத் தொடங்கியது. 1970இல் இதன் 50 சதவிகித்திற்கு மேற்பட்ட பங்குகளை பீகார், குஜராத், இராஜஸ்தான், கர்நாடகா ஆகிய மாநில அரசுகள் வாங்கின.

இது இந்தியில் முக்கியமாக செய்திகளை வழங்குகின்றது. குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் செய்திகளைத் தருகின்றது.

**நேர்காணல்**

செய்திக்கு மூலமாக இருப்பவரை, அல்லது தானே செய்தியாகும் ஒருவரைப் பேட்டி காண்பது, செய்தி திரட்டுவதில் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. சில வேளைகளில் சிறப்புக் கட்டுரைகள் எழுதுவதற்குப் பேட்டி ஒரு நல்ல முறையாக அமைகின்றது. ஆதலால் செய்தியாளர்கள் பேட்டி நடத்தும் கலையைக் கற்றிருப்பது தேவையாகும்.

செய்தியாளரின் பணிகளில் மிகவும் சுவையானது பேட்டி நடத்துவதாகும். இதழியலாளருக்கு உற்சாக மூட்டுவதாகவும் பலவற்றை அறிந்து கொள்ளும் வழிமுறையாகவும் பேட்டி விளங்குகின்றது.

''பேட்டி இல்லையேல் செய்திகள் இல்லை''; ''செய்தி மூலங்களில் முதன்மையானது பேட்டி''; ''பேட்டி நடத்தத் தெரியாதவர் செய்தியாளராக முடியாது'', என்று பலவகையாகக் கூறி பேட்டியின் சிறப்பை வலியுறுத்துகின்றனர்.

''பேட்டி ஒரு கலை, அதற்கு அறிவும் அனுபவமும் வேண்டும்'',

**1. நேர்காணல்– விளக்கமும் நோக்கமும்**

ஒருவரோடு தொடர்பு கொண்டு (நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடிதம் வாயிலாகவோ) விவரங்களைக் கேட்டு அறிவதை பேட்டி என்கின்றோம்.

பேட்டி நடத்த குறைந்தது இருவர் வேண்டும். ஒருவரைப் பலரோ (தலைவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தல்) பலரை ஒருவரோ (செய்தியாளர் கூட்டமாக இருப்பவர்களிடம் தகவலைக் கேட்டறிதல்) நடத்துகின்ற பேட்டிகளும் இருக்கலாம்.

விளக்கம்: ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி (Concise Oxford English Dictionary) பேட்டி (Interview) என்ற சொல்லுக்கு ''மனிதர்கள் நேருக்கு நேராகச் சந்தித்தல்; அதாவது கூட்டம் நடத்தக் காணுதல், செய்தித்தாளில் பணியாற்றுகின்ற ஒருவரும் வெளியிடுவதற்காகத் தகவல்களைத்தர அவர்தேடும் ஒருவரும் கூடிப் பேசுதல்'', என்று பொருள் தருகின்றது.

இருவரோ சிலரோ பலரோ கூடி உரையாடுவது பேட்டியாகாது. வெளியிடும் நோக்கத்தில் கேள்விகள் கேட்க, அதற்குத் தக்க விடைகள் கிடைக்கும் பொழுது அது பேட்டியாகின்றது.

பேட்டியில் கேட்கப் பெறுகின்ற கேள்விகள் தகவல்களைப் பெறுவதற்காகக் கேட்கப் பெறுபவை, நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையில் கேட்கின்ற கேள்விகள் போன்றவை அல்ல இவை. மேலும், பேட்டி இயல்பாக, இறுக்கமற்ற சூழலில் அமையவேண்டும். கட்டுப்பாடோ, நெருக்கடியோ அச்சுறுத்தலோ பேட்டியில் இருக்கக்கூடாது.

**நோக்கங்கள்:**

ஒவ்வொரு பேட்டியும் ஏதாவது ஒரு நோக்கத்தோடு நடத்தப் பெறுகின்றது. நோக்கமற்ற நேர்காணலும் உரையாடலும் நண்பர்களின் பொழுது போக்குப் பேச்சாக இருக்குமே தவிர பேட்டியாகாது. ஆதலால் பேட்டி நடத்துபவர் பேட்டியின் நோக்கம் பற்றித் தெளிவாக இருக்க வேண்டும். பொதுவாக பேட்டி நடத்துவதற்கான நோக்கங்களைச் சுட்டிக் காட்டலாம்.

1. **நடப்பினை அறிய:** நடந்து கொண்டிருக்கின்ற சில சுவையான நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களையும், கருத்துக்களையும் அறிய தொடர்புடையவர்களைப் பேட்டி காணலாம். எடுத்துக்காட்டாக, ஓர் அரசியல் கட்சி உடைகின்ற பொழுது வெவ்வேறு அணிகளின் தலைவர்களைப் பேட்டி காணலைக் கூறலாம்.
2. **நிகழ்ச்சியின் விவரங்களை வெளிக்கொணர:** நடைபெறப் போகும் ஒரு நிகழ்ச்சியின் விவரங்களை அறிந்து வெளியிப் பேட்டி நடத்தலாம். ஒரு மாநாடு நடைபெறுவதற்கு முன்னால் அதன் அமைப்பாளரோடு பேட்டி கண்டு, நிழச்சியின் விவரங்களை அறிந்து வெளியிடப் பேட்டியைப் பயன்படுத்தலாம்.
3. **கண்ணோட்டத்தை வெளிப்படுத்த:** தலைவர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள் போன்றோரின் ஆளுமை, தனித்தன்மை ஆகியவற்றை வெளிப்பத்தவோ, அவர்களது கண்ணோட்டத்தை, கருத்தை வெளிப்படுத்தவோ பேட்டி நடத்தலாம்.

**பயன்கள்:**

ஒரு பேட்டியினால் பல நன்மைகள் கிடைக்கின்றன. இவற்றை 'பேட்டியின் பயன்கள்'(Funciotns of Interview) என்றும் கூறுவார்கள் முக்கியமான பயன்களைத்

தொகுத்துக் கூறலாம்.

1. **செய்திகளை உருவாக்குதல்:** தலைவர்களை ஆட்சியாளர்களைப் பேட்டி கண்டு வெளியிடுகின்ற பொழுது புதிய செய்திகள் உருவாகின்றன. அவர்கள் தங்களது கொள்கைகளையோ, செயல் திட்டங்களையோ விளக்கும் பொழுது, அவற்றிலிருந்து செய்திகள் பிறக்கின்றன. எடுத்துக்காட்டாக, கல்வியமைச்சர் தாய்மொழி மூலம் மருத்துவக் கல்வி வழங்க எடுக்கப் போகும் நடவடிக்கைகளைப் பேட்டியில் விளக்கினால், அது நாட்டிற்குப் புதிய செய்தியாகின்றது.
2. **வேறுபாடுகளை வெளிக் கொணர்தல்:** சில குறிப்பிட்ட தலைவர்களுக்கிடையில் கருத்துக்களில் வேறுபாடுகள் இருக்கலாம். அவற்றை மக்கள் இனங்காணப் பேட்டிக் கட்டுரைகள் துணை செய்கின்றன. எடுத்துக்காட்டாக, சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு பற்றி மாறுபட்ட கருத்துடையவர்களைக் கூறலாம்.
3. **பொது மக்கள் கருத்து உருவாக்குதல்:** ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி மக்கள் கருத்துக்களைப் பேட்டி கண்டு அறிந்து வெளியிடும் பொழுது, ஒரு பொதுக் கருத்து உருவாக வழி பிறக்கின்றது. வரதட்சனை பற்றிய பேட்டிக் கட்டுரைகள் வரதட்சணைக்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்க துணை செய்யும்.
4. **அதிகாரபூர்வமான விளக்கங்களை அறியத் துணை செய்தல்:** சில வேளைகளில் அரசு அறிவித்த கொள்கை, அல்லது செயல்திட்டம் தெளிவில்லாமல் இருக்கலாம். அதனைப்பற்றிய அதிகாரப்பூர்வமான விளக்கத்தைத் தக்கவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள பேட்டி துணை செய்கின்றது.

எடுத்துக்காட்டாக, புதிய கல்வி கொள்கை பற்றிக் கல்வியமைச்சர் வழங்கும் பேட்டியைக் கூறலாம்.

5. **கண்டுபிடிப்புகள், திட்டங்கள் - விளக்குதல்:** நாட்டிற்குப் பயன்படக் கூடிய கண்டுபிடிப்புகள் பற்றி விளக்கமாய் அறியப் பேட்டி துணை செய்கின்றது. கண்டுபிடித்தவரை பேட்டி கண்டு எழுதினால் பல விளக்கங்கள் கிடைக்கும். சிலர் வெற்றிகரமாக நடத்தும் சில திட்டங்களின் விவரங்களையும் பொது மக்கள் அறிந்து கொள்ள அவர்களைப் பேட்டி கண்டு எழுதுதல் உதவுகின்றது.
6. **பாலமாக அமைதல்:** சமுதாயத்தில் புகழ் பெற்று விளங்குகின்றவர்களுக்கும், வாசர்களுக்கும் இடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் ஆற்றல் மிக்க வழிமுறையாக பேட்டி இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, புகழ்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர் கபில்தேவை பேட்டி கண்டு ஒரு கட்டுரை வெளிவரும் பொழுது, படிக்கின்றவர் தானே நேரில் கபில்தேவை பார்த்து பேசிய மகிழ்ச்சியைப் பெறுகின்றார்.
7. **பல்வேறு கருத்துக்கள் வெளிவர வாய்ப்பு:** ஒருவரது பேட்டி கட்டுரை வெளிவரும் பொழுது, அவர் கூறும் கருத்துக்களை ஆதரித்தும் எதிர்த்தும் பல கருத்துக்கள் வெளிவரக் காணலாம்.
8. **சுவையான கட்டுரை கிடைத்தல்:** பேட்டிக் கட்டுரைகள் படிக்கச் சுயையானவைகளாக அமையும். பேட்டியாளரின் சொற்களையும், செய்கைகளையும் புகைப்படங்கள் துணையோடு உயிரோட்டமாக விளக்க இயலும்.

## 2. பேட்டி அல்லது நேர்காணலின் வகைகள்

## (Types of Intervies)

பேட்டிகள் பேட்டி நடத்துகின்றவரின் திறமையையும் அணுகுமுறையையும் ஒட்டிப் பலவகைகளாக அமைகின்றன. ஒவ்வொரு பேட்டியாளருக்கும் ஏற்ப பேட்டி முறை மாறலாம். ஜான் ஹோஹன்பர்க் (John Hohenberg), ''வியத்தகு விளைவுகளைத் தருகின்ற பேட்டிகள் பெரும்பாலும் எதிர்பாரத திருப்பங்களைக் கொண்டிருக்கும். பேட்டி தருகின்ற மனிதர்களின் வண்ணங்களுக்கேற்ப அவை பல வகைகளாக அமையும். அவற்றை நடத்துகின்றவரின் இதழியல் ஆற்றலுக்கேற்ப அவற்றின் விளைவு இருக்கும்'' என்று கூறுகின்றனார். பொதுவாகப் பேட்டிகளைக் கீழ்க்கண்ட வகைகளாகப் பகுத்து விளக்கலாம்.

(i) தெருவில் காண்பவர் பேட்டி (Man in the Street Interview) தெருவில் காண்கின்ற ஒருவரை நிறுத்தி, எதனைப் பற்றியாவது கருத்தக்களை அறியப்பேட்டி நடத்தலாம். எடுத்துக்காட்டாக, தேர்தல் காலங்களில், போட்டி இடுபவர்களின் வெற்றி வாய்ப்புக்களை அறிய, வழியில் சந்திக்கும் வாக்காளர்களைக் கண்டு பேட்டி நடத்துதல் துணை செய்யும்.

இந்த வகையான பேட்டி மிகவும் எளிதானது. யாரோடும் முன்கூட்டி பேட்டிக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய தேவையில்லை. எதிரில் வருகின்றவரை நிறுத்தி வைத்துப்பேட்டியை நடத்தி முடியும்.

தெருவில் சந்திக்கின்றவரிடம் பேட்டியைப் பெறுதல் சில வேளைகளில் மிகவும் கடினமான பணியாகலாம். ஏனெனில் பேட்டி தருபவரிடம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மேலும் அவரது பதில்கள் நேரடியாக இல்லாமல் சுற்றி வளைத்து அமையலாம். ஆதலால் பொறுமையாக முயன்று தான் இத்தகைய பேட்டிகளில் உண்மையைப் பெற இயலும்.

(ii) தற்செயல் பேட்டி (The Casual Interview): முன் கூட்டித் திட்டமிடாமல், எதிர்பாராமல் செய்தியாளர் சில குறிப்பிடத் தக்கவர்களைச் சந்திக்க நேரலாம். எங்காவது விருந்திலோ, சிற்றுண்டிச் சாலையிலோ, பொது

இடங்களிலோ தற்செயலாகச் சந்தித்து எந்தவித நோக்கமுமின்றி பேசத் தொடங்கலாம். பேச்சின் போக்கில் ஏதாவது ஒரு செய்தியின் நுனி அகப்படும் அதனை மேலும் மேலும் தோண்ட ஒரு பெரிய செய்தி கிடைக்கலாம்.

உலகப்புகழ்பெற்ற ஒரு பெரிய பேட்டி இப்படித்தற்செயலாக அமைந்ததாகும். 'நியூயார்க் டைம்ஸ்' (New Youk Times) இதழில் வாஷிங்டனின் தலைமை செய்தியாளரான ஆர்தர் கிராக் (Arthur Krock) என்பவர் 1950இல் அமெரிக்கத் தலைமை நீதிபதி பிரட்வின்சன் (Fred Vinson) அளித்த விருந்திற்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ட்ருமனைச் (Truman) சந்தித்துப் பேட்டி கண்டார். இந்தப் பேட்டி ஆர்தர் கிராக்கிற்கு சிறந்த இதழியலாளருக்கான 'புலிட்ஜர் விருதினைப்' (Pulitzer Prize) பெற்றுத் தந்தது.

(iii) ஆளுமை விளக்கப் பேட்டி (The Personality Interview): புகழ்பெற்ற ஒருவரையோ, புகழ்பெறாவிட்டாலும் சோதனை முயற்சியில் சாதனையாளராக இருக்கும் ஒருவரையோ அவரது ஆளுமைத்தன்மையை வெளிக்கொணரும் வகையில் பேட்டி கண்டு சிறப்பக் கட்டுரை வரையலாம். நடிகர்கள், அரசியல் தலைவர்கள், முதலமைச்சர், விளையாட்டு வீரர் போன்றவர்களின் பேட்டி புகழ் பெற்றவர்களின் பேட்டி வகையைச் சேர்ந்ததாகும். பாம்புப் பண்ணை வைத்து, பாம்புகளோடு நெருங்கிப் பழகும் ஒருவரைப் பேட்டி கண்டு சிறப்புக் கட்டுரை எழுதுவது புகழ்பெற்றவரின் ஆளுமை விளக்கப் பேட்டியாகும்.

(iv) செய்திப் பேட்டி (News Interview): செய்தியைப் பெறும் நோக்கில் ஒரு செய்தியாளர் செய்திதரும் ஒருவரைப் பேட்டி காண்பது செய்திப் காண்பது செய்திப் பேட்டியாகும். இந்தப் பேட்டியில் செய்தியினைப் பெறுவது ஒன்றுதான் நோக்கமாக இருக்கும். அதற்காகத் தயாரித்து வைத்திருக்கும் கேள்விகளைப் பேட்டியில் கேட்பார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் உண்ணாவிரதம் இருந்தால், அதற்கான காரணங்களை அறிந்து வெளியிட பேட்டி காண்பதை கூறலாம்.

(v) செய்திக் கூட்டம் (News Conference): செய்தி தருகின்றவர் செய்தியாளர்களை மொத்தமாக அழைத்து செய்தியை வழங்க கூட்டம் நடத்தலாம். அந்தக் கூட்டம் ஒருவகைப் பேட்டியாக அமையும். செய்தியாளர்கள் செய்தி தருகின்றவரிடம் கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம். தனது கருத்தைப் பரப்பிப் பெயர் பெறும் நோக்கில் ஒருவர் செய்திக் கூட்டம் நடத்தலாம். உயர்நிலைப் பொறுப்பில் உள்ளவர்களும் செய்திக் கூட்டம் நடத்தலாம். இப்படிப்பட்ட கூட்டங்களில் ஒரு செய்தியாளரே தொடர்ந்து கேள்விகள் கேட்கக் கூடாது. "கேட்கின்ற கேள்வி சிறியதாக, இனியதாக, உடன்பாட்டுத்தன்மையானதாக இருக்க வேண்டும். அது தகவலைப் பெறுவதாக இருக்க வேண்டும். கேள்வி கேட்பவரின் கருத்துக்களை உறுதிப்படுத்துவதாக மட்டும் இருக்கக் கூடாது. செய்தி தருகின்றவர் தான் பேசிக் கொண்டிருக்க வேண்டுமே தவிர செய்தியாளர் பேசிக் கொண்டிருக்கக் கூடாது,"2 என்று எம்.வி.காமத் குறிப்பிடுகின்றார்.

(vi) செய்திச் சுருக்கம் (Briefing) தருதல்: செய்திகளைத் தருவதில் புதிய முறையாக செய்திச் சுருக்கம் தருதல் அமைந்துள்ளது. ஓா அமைச்சரகத்தின் சார்பில் செய்திகளைத் தருகின்றவர் செய்தியாளர்களை அழைத்து தயாரித்து வைத்திருக்கும் செய்திக் குறிப்பினை வழங்குவார். இப்படி அமைச்சரகத்தின் சார்பில் பேசுபவர் பொதுவாக செய்தியாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பார். தேநீர் விருந்தோடு செய்திகளை வழங்குவார். இதில் மிகுதியாகக் கேள்விகள் கேட்க வேண்டிய தேவை இருக்காது.

(vii) காலைச் சிற்றுண்டி கூட்டம் (The Breakfast Meeting): குறிப்பிடத்தக்க பன்னாட்டுத் தலைநகரங்களில் செய்திச் சுருக்கம் தரப் புதியமுறை ஒன்றைப் பின்பற்றுகின்றனர். செய்தியின் முக்கியத்துவத்தை ஒட்டி தெரிந்தெடுத்த செய்தியாளர்கள் சிற்றுண்டிக்கு அழைப்பார்கள். மிகவும்

நெருக்கமான முறையில் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டே செய்திகளை பரிமாறிக் கொள்வார்கள்.

(viii) தொலைபேசிப் பேட்டி (The Telephone Interview): செய்திகளை விரைந்து சேகரிக்கும் வழிமுறையாக, தொலைபேசிப் பேட்டி வளர்ந்து வருகின்றது. செய்தியாளர் இருந்த இடத்திலிருந்து கொண்டே செய்தியினைப் பேட்டியின் மூலம் திரட்டலாம். இந்த முறையில் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

தொலைபேசியின் மூலம் பேட்டி நடத்துவதில் சில குறைகளும் உள்ளன. தொலைபேசியில் இருவரும் தொடர்ந்து பேச வேண்டும். சில விநாடிகள் பேசாமிலிருந்தாலும் தொடர்பு பாதிக்கப்படும். நேரடிப் பேட்டியில் பேட்டியளிப்பவரின் முகபாவங்களை, கண்ணைப் பார்த்து உணர்வுகளையும், பேசுவது உண்மைதானா என்பதையும் அறிந்து கொள்ளலாம். தொலைபேசியில் இந்த வாய்ப்பு இல்லை. மேலும் தொலைபேசியில் எல்லோரையும் தொடர்பு கொள்ள முடியாது.

தொலைபேசிப் பேட்டியில் தொடக்கத்திலேயே செய்தியாளர் முழுக்கத் தன்னை அறிமுகம் படுத்திக் கொள்ள வேண்டும். இப்பேட்டியில் குரல் தான் முதலிடம் பெறுகிறது. ஆதலால் தெளிவாக, இனிமையாக பேச வேண்டும்; சத்தம் போடக் கூடாது, பேட்டி சுருக்கமாக இருப்பது நல்லது.

(ix) அடைகாத்தல் பேட்டி (Incubated Interview): சில வேளைகளில், கொள்கைகளை உருவாக்குகின்றவர்கள், தங்களது கருத்துக்களை எப்படியாவது தணிக்கக்கருதி அதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்கள் யாரும் கேட்காமலே, கேட்டதைப் போலப் பாவித்து செய்திகளை வலிந்து கூறி பொதுமக்களிடம் அவை சென்றடையச் செய்வார்கள். இத்தகைய பேட்டியினை செய்தியாளர்கள் ‘அடைகாத்தல் பேட்டி’ எனக் கூறி, ஒதுக்க முயல்வார்கள்.

(x) பட்டம் பறக்கவிடும் பேட்டி (Kite-Flying Interview): செய்தியாளர் ஏற்பாடு செய்து நடத்தும் பேட்டியை, சில முக்கியமானவர்கள், தங்களுக்குச் சாதமாகப் பயன்பத்திக் கொள்வார்கள். தங்களது கருத்துக்களைப் பேட்டி நடத்துபவர் கருத்துப் போல வெளியிடச் செய்து விடுவார்கள். ஆதலால் தான் இப்படி அமைந்துவிடும் பேட்டியை ‘பட்டம் பறக்கவிடும் பேட்டி’ என்கின்றனர். இப்படி பேட்டி அமைந்து விடாமல் பேட்டி நடத்துபவர் கவனமாக இருக்க வேண்டும்.

(vi) தொடர் முயற்சி (Persistence): பேட்டி பயனுள்ளதாக அமைய, கேட்கும் கேள்விகளுக்குச் சரியாக திட்டவட்டமான விடைகளைப் பெற பேட்டி எடுப்பவர் தொடர்ந்து முயலவேண்டும். பேட்டி தருபவர் தயங்கிய நிலையில் நத்தை போல் தனக்குள் சுருங்கிக் கொள்ளலாம். அவரை வெளிக்கொணர தொடர்ந்து முயற்சி செய்வது தேவையாகும். எதற்காகப் பேட்டி என்பதை அடிக்கடி நினைவுபடுத்தி, பேட்டி வழி தவறிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பேட்டி முடிந்தவுடன் அவசரப்பட்டு வெளியேறக் கூடாது, பேட்டியில் ஒத்துழைத்தற்கு நன்றி கூறுவதோடு, பேட்டி நன்கு நடைபெற்றதாகக் கூறி சிறிது நேரம் பொதுவாகப் பேசி விட்டு வர வேண்டும். சில வேளைகளில் இப்படிப் பேட்டியை முடித்துவிட்டுப் பேசும் பொழுதும் சில பயனள்ள விவரங்களை கிடைப்பதுண்டு.

பேட்டிப் பதிவு: பேட்டியை நடத்திக் கொண்டே குறிப்பும் எடுப்பது ஓர் அறிய பணியாகும். குறிப்பை எழுதும் பொழுது அதனால் பேட்டியின் தொடர்பு அறுபடாமலும், பேட்டி தருபவர் கவனம் சிதறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். சுருக்கொழுத்து கற்றிருந்தால் பேட்டிக்கு உதவியாக இருக்கும். இப்பொழுது பலர், ஒலிப்பதிவு நாடாக்களைப் (Tape Recorders) பயன்படுத்துகின்றனர்.

**புகைப்படங்கள்**

இந்தியச் செய்தித்தாட்களில் புகைப்படங்களில் பங்கு இப்பொழுது கூடி வருகின்றது. நாளிதழ்களில் இப்பொழுது நிறையப் படங்களை வெளியிடுகின்றனர். நாளிதழ்களில் வெளியிடும் வார மலர்களிலும், வார, மாத இதழ்களிலும் வண்ணப் புகைப்படங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

ஆயிரம் சொற்கள் சொல்ல முடியாதவற்றை ஓர் அருமையான அழகுப் புகைப்படம் கூறிவிடுகின்றது. கற்றோரையும் கல்லாதவரையும் சின்னஞ்சிறுவர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் பார்க்கவும், ரசிக்கவும், புரிந்து கொள்ளவும் தூண்டுகின்ற ஆற்றல் புகைப்படங்களுக்கு இருக்கின்றது. ஆதலால் தான் செய்திகளின் வெளியீட்டில் புகைப்படங்கள் பெரும் பங்கு பெறுகின்றன.

**மூலங்கள்:** பெரிய செய்தித்தாட்கள் தங்களது பணியாளர் குழுவில் புகைப்படக்காரர்களை வைத்திருக்கின்றனர். அவர்களைப் 'பார்வைச் செய்தியாளர்கள்' (Visual Reporters) என்று கூறலாம். அவர்கள் தனியாகவோ செய்தியாளர்களோடு சேர்ந்தோ செய்திகளுக்கேற்ற புகைப்படங்களை எடுக்கின்றனர். அவர்கள் எவற்றைப் படமெடுக்க வேண்டுமென்று செய்தியாசிரியர் குறிப்பிட்டிருப்பார். அவற்றோடு கூட எதிர்ப்படும் செய்தியாகும் காட்சிகளையும் படமெடுத்துத் தருவார்கள்.

சில செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டும்பொழுது அவற்றோடு தொடர்புடைய புகைப்படங்களையும் எடுக்கின்றனர். புகைப்படக் கலையை அறிந்திருக்கும் செய்தியாளருக்கு புகைப்படக் கருவி ஓர் ஆற்றல் மிக்க ஆயுதமாகத் துணை செய்கின்றது.

வளர்ந்து வருகின்ற நாடுகளில் செய்தி நிறுவனங்கள் செய்திகளை வழங்குவதோடு புகைப்படங்களையும் வழங்குகின்றன. இப்பொழுது புகைப்படங்களை திறமையாக எடுத்துத் தருகின்ற புகைப்படச் சேவை நிறுவனங்கள் வளரத் தொடங்கியுள்ளன.

இப்பொழுது சில தனிப்பட்ட புகைப்படங்காரர்களும் தாங்களே புகைப்படங்களை எடுத்து (வெளியிட) இதழ்களுக்கு அனுப்புகின்றனர். இவர்கள், இதழ்களில் எழுதுகின்ற தனிப்பட்ட எழுத்தாளர்கள் போன்றவர்கள். இவர்கள் எடுத்த படங்களை வெளியிட்டால், இதழ்கள் இவர்களுக்குப் பணம் தருகின்றன.

விளக்கம்: எல்லாப் புகைப்படங்களும், இதழ்களில் வெளியிடும் தகுதி பெறுவதில்லை. செய்தித்தாட்களில் இடம் பெறும் புகைப்படங்களில் சில இயல்புகள் இருக்க வேண்டும்.

ரெங்கசாமி பார்த்தசாரதி, ''ஒரு படம் சொற்களால் சொல்ல முடியாத செய்தியினைச் சொல்ல வேண்டும். எழுத்தறிவற்ற ஓர் ஆணோ, பெண்ணோ, குழந்தையோ ஒரு படத்தை 'வாசிக்க' இயல வேண்டும். ஒரு நல்ல படம் வாழ்க்கையின் செய்தியைக் கூறுகின்றது. அது நகைச்சுவையை, பாவங்களை, துன்பத்தை, ஆழ்ந்த உணர்வினை, சொற்களை விட மிகுந்த ஆற்றலுடன் கூறுகின்றது,'' என்கின்றார்.

நல்ல செய்தித்தாள் படங்களின் இயல்புகளைப் பற்றிக் கூறுகையில், ''நல்ல செய்தித்தாள் படங்கள் உடனடியாகக் கவனத்தை ஈர்க்க வேண்டும். வாசகர்களின் மீது அவை ஏற்படுத்துகின்ற உணர்வின் தாக்கத்தை வைத்துதான், அவற்றின் தரத்தை நிர்ணயிக்க வேண்டும். நல்ல செய்தித்தாளின் படங்கள் உண்மையைக் கூறுகின்றன. மேலும், மிகவும் முக்கியமாக, நல்ல செய்தித்தாள் படங்கள் ஒரு செய்தியைக் கூற வேண்டும்'' என்று கென்னத் பிளம் குறிப்பிடுகின்றார்.

**சிறப்புக்கள்:** சொற்களில் ஒன்றைக் கூறுவதைவிட புகைப்படங்களின் மூலம் ஒன்றை விளக்குவதில் சில நன்மைகள் உள்ளன.

சொற்களால் உணர்த்த முடியாதவற்றைப் பார்க்கக் கூடிய படங்கள் வெளிக்கொணர்ந்து விடுகின்றன. செய்திகளின் முழுமையை விளக்க அவை பெரிதும் உதவுகின்றன. விரைந்து படிக்கின்ற வாசகர் செய்தியின் ஏதாவது ஒரு பகுதியை மனங்கொள்ளாமல் போகலாம். ஆனால் படத்தையாரும் பார்க்காமலோ அவற்றின் உட்பொருளை உணராமலோ, இருப்பதில்லை.

வாசகர் பார்க்கும் ஒரு பார்வையிலேயே படம் கூறும் செய்தியினைப் புரிந்து கொள்வார். ரயில் விபத்தின் படத்தைப் பார்த்தவுடன் அதன் கொடுமையினை அறிந்து கொள்ளலாம்.

செய்தியினைச் செப்பினிடுகின்ற பொழுது அவற்றின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மாற்றம் ஏற்படலாம். ஆனால் புகைப்படங்களை அப்படி மாற்றி வெளியிட முடியாது.

செய்திக் கட்டுரைகளுக்கும், சிறப்புக் கட்டுரைகளுக்கும் புகைப்படங்கள் வளம் சேர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, பிரயாணக் கட்டுரைகளைக் கூறலாம். புகைப்படங்கள் கவர்ச்சியாக இருந்தால் அவற்றைப் படிப்பவர்கள் கட்டுரைகளைப் படிப்பார்கள்.

வாசகர் புகைப்படங்களை விரைவாகவும் எளிதாகவும் புரிந்து கொள்கின்றனர். கண்ணால் நேரடியாகப் பார்ப்பதால், அவை வாசகரின் உள்ளத்தில் எளிதாகத் தடம் பதித்து விடுகின்றன. இதனால் வாசகர் அவற்றை மறக்காமல் நினைவில் வைத்திருக்க முடிகின்றது.

கட்டுரைகள் உயிரோட்டமுள்ளவைகளாகவும், சுவையாகவும், யதார்த்தமாகவும் அமையப் படங்கள் உதவுகின்றன. சிறந்த விளக்கப்படங்கள் இருந்தால் கட்டுரைகளின் அளவைக் கூடக் குறைத்து கொள்ளலாம்.

**படங்களின் வகைகள்:** செய்தித்தாட்களில் வெளிவரும் புகைப்படங்களைத் கீழ்க்கண்ட முறையில் வகைப்படுத்தலாம்:-

1. **செய்தி நிகழ்ச்சிப் படங்கள் (News Event Photo):** செய்தியாகும் ஒன்றினை வெளிக்காட்டும் படங்கள் இந்த வகையைச் சேர்ந்தவைகளாகும். எடுத்துக்காட்டு முதலமைச்சர் பதவி ஏற்றல், பரிசு வழங்கல், இரயில் விபத்து, ஊர்வலம்.
2. **உருவப் படங்கள் (Portrait Picture):** செய்தியில் வருபவர்களை அறிமுகப்படுத்தும் படங்களை வெளியிடலாம். நோபல் பரிசு பெற்றவர்களின் படங்கள், அமைச்சரவையில் இடம் பெறுபவர்களின் படங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.
3. **கவர்ச்சிப் படங்கள் (Cheese Cake Shots):** பெண்கள் பாலுணர்ச்சிகளைத் தூண்டுபவை, காதலை வெளிக்காட்டுபவை போன்ற கவர்ச்சிப் படங்கள் தனிவகைகளாகும்.
4. **செயல் விளக்கப் படங்கள் (Action Shots):** ஒரு செயலைச் செய்கின்ற பொழுது எடுக்கின்ற படங்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு. உயரம் தாண்டும் நிலையில், தலைமையமைச்சர் ஜீப் ஓட்டும் நிலையில், கூட்டம் ஒன்றைத் தாக்கும் நிலைமையில் அமைகின்ற படங்கள் செயல் விளக்கப் படங்களாகும்
5. **வடிவமைப்புப் படங்கள் (Pattern Shots):** விளம்பர நோக்கில் உற்பத்தி செய்த பொருட்களின் வடிவமைப்பு வெளிப்படும் வகையில் எடுக்கப்பெற்ற படங்களைச் செய்தித்தாட்கள் வெளியிடலாம். டி.வி.ஸ்கூட்டர் போன்றவற்றின் படங்கள் இப்படி அமைபவைகளாகும்.
6. **உற்பத்திப் படங்கள் (Product Shots):** பொதுவாக உற்பத்தி செய்கின்றவை பற்றிய பலவகைப் பொருட்களை விளக்கும் படங்களை வெளியிடலாம்.

**செப்பனிடுதல்:** புகைப்படங்களை எடுத்தது எடுத்தபடி செய்தித்தாளில் வெளியிடுவதில்லை. செய்தியாசிரியரோ புகைப்படப் பிரிவு ஆசிரியரே படத்தில் தேவை இல்லாதவற்றை அகற்றி, எப்படி? அதனை வெளியிட வேண்டுமென்று முடிவு செய்கின்றார். இப்படி வேண்டாதவற்றை அகற்றி வெளியிட வேண்டியவற்றைத் தீர்மானித்தலை வெட்டுதல் (Crop or Trim) என்று கூறுகின்றனர். படம் தெளிவாக அமைய இது உதவுகின்றது.

படத்தை வெட்டுகின்ற (Trimming) பணியைக் கலை உணர்வோடு செய்ய வேண்டும். வாசகர் நோக்கில் படத்தைப் பார்த்து தேவையற்றவற்றை அகற்ற வேண்டும். படத்தைச் செங்குத்தாகவோ, படுக்கை நிலையிலோ எப்படி வெளியிட வேண்டுமென்பதையும் ஆசிரியர் தீர்மானித்துக் கூற வேண்டும். படத்தின் தாக்கமும் விளைவும் எதிர்பார்க்கும் வகையில் அமைய இவை துணை செய்கின்றன.

**படத் தலைப்பிடுதல்: (Caption):** ஒவ்வொரு புகைப் படத்தையும் ஒரு விளக்கத் தலைப்போடோ, குறிப்போடோ வெளியிட வேண்டும். ஒரு செய்திக்கு எப்படி தலைப்பு (Head Line) முக்கியமோ, அப்படியே ஒரு படத்திற்கும் தலைப்பு முக்கியம் வாசகர் முதலில் படத்தைப் பார்த்துவிட்டு, பின்பு தலைப்பினைப் படித்து மேலும் விவரங்களைத் தெரிந்து கொள்ள முயல்கின்றனர்.

நல்ல தலைப்பு படத்திற்கு மேலும் சிறப்பினைத் தருகின்றது. சுமாரான படம் கூட நல்ல தலைப்பினால் வாசகரின் உள்ளத்தைத் தொடுகின்றன. மோசமான தலைப்பு நல்ல படத்தின் மேன்மையைச் சீர் குலைத்து விடும். ஆதலால் தலைப்பை வரைகின்றவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தலைப்பு படத்தினைப் பற்றிய எல்லா விவரங்களையும் கூறுவதாகவும், சுவையானதாகவும் இருக்க வேண்டும். “சிறந்த புகைப்படத் தலைப்பு நேரடியாக, சுருக்கமாக, வளமானதாக அமைய வேண்டும். சின்னஞ்சிறு வாக்கியத்தில் உயிரொட்டமுள்ள நிகழ்காலத்தில் படத்தைப் பற்றிக் கூறவேண்டும். படத்தலைப்பு குறுகியதாக இருக்க வேண்டும் அதுவே செய்தியல்ல, படம் குறிப்பதைச் சுற்றி வளைக்காமல், வீணான சொற்களைப் பயன்படுத்தாமல் கூற வேண்டும். செய்தியோடு சேர்ந்த படத்தின் தலைப்பு, படத்தை மட்டுமே விளக்க வேண்டும். படத்தலைப்பு வெளியிட்ட படத்திலிருந்து எவ்வகையிலும் மாறுபடக் கூடாது” என்று ரெங்கசாமி பார்த்தசாரதி கூறுகின்றார்.

எம்.வி.காமத் படத் தலைப்பினைக் கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பகுக்கின்றார்:-

1. செய்தியின் ஒரு பகுதியாக வரும் படத்தினை விளக்குகின்ற தலைப்பு ஒரு வகை. இது சுருக்கமாக இருக்க வேண்டும்.
2. ஓரிடத்தில் படத்தையும் மற்றுமொரு இடத்தில் செய்தியையும் வெளியிட்டு, வாசகர்களை என்னவென்று அறியத் தூண்டும் தலைப்பினை வெளியிடலாம். எடுத்துக்காட்டாக மன்மோகன் சிங்கும் கருணாநிதியும் சேர்ந்து சிரிக்கும் படத்தை ஓரிடத்தில் வெளியிட்டு, “இவர்கள் ஏன் சிரிக்கின்றார்கள்?” (விவரம் ஆறாம் பக்கத்தில் காண்க) என்று வெளியிடலாம்.
3. செய்தி இல்லாமல், படமே செய்தியாக இருந்தால் தலைப்பு முழுமையானதாக இருக்க வேண்டும்.
4. செய்திகளுக்கு ஆதாரமில்லாமல், புகைப்படத்தை மட்டும் வெளியிட்டால், புகைப்படம் எடுக்கப் பெற்ற சூழலையும் தலைப்பில் சேர்த்துக் கூற வேண்டும்.

உலகமெங்கும் படங்களோடு கூடிய இதழ்கள் வாசகர்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. ‘நியூார்க் டைம்ஸ்’ (The New York Times) ‘நேஷனல் ஜாகிரபி’ (The National Geography) ஆகிய வெளிநாட்டு இதழ்களையும் ‘தி வீக்’ (The Week) போன்ற நமது நாட்டு இதழ்களையும் படங்களால் புகழ்பெற்ற இதழ்களுக்குச் சான்றுகளாகக் கூறலாம் இப்பொழுது ஹிந்து இதழின் வெளியீடான பிரண்ட் லைன் (Frontline) புகைப்படங்களின் மூலம் இதழ்களில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது.

**கேலிச்சித்திரங்கள் கருத்துப்படங்கள்**

நாளிதழ்களில் கேலிச்சித்திரங்களும் கருத்துப்படங்களும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. பல சொற்களில் தலையங்கம் எழுதி உணர்த்த முடியாத கருத்துக்களைக் கூடக் கேலிச் சித்திரங்களும் கருத்துப்படங்களும் எளிதாக உணர்த்துகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரத் துறைகளில் உள்ள குற்றங்குறைகளை, நகைச்சுவையோடு, ஆனால் குண்டு பாய்வதைப் போல குறிப்பாகத் தாக்கி வீழ்த்தும் வகையில் கேலிப்படங்கள் அமைகின்றன.

தமிழ்நாட்டில் முதன்முலாகக் கருத்துப்படங்களை வெளியிட்ட பெருமை மகாகவி பாரதியாரைச் சேரும். ஆங்கிலேயர்களின் ஆட்சியின், கொள்கைகளின் குறைகளை ‘இந்தியா’ இதழில் கேலிச் சித்திரங்களில் மூலம் புரட்சிகராமான முறையில் படம் பிடித்துக் காட்டினார். இப்பொழுது பெரும்பாலும் எல்லாச் செய்தித்தாட்களும், வார, மாத இதழ்களும் கருத்துப் படங்களையும் கேலிச் சித்திரங்களையும் வெளியிடுகின்றன. கருத்துப்படங்களைப் ‘படத்தலையங்கங்கள்’ என்று கருதலாம்.

**விளக்கம்:** கருத்துப்படங்களுக்கும் (Cartoon) கேலிச் சித்திரங்களுக்கும் (Caricature) மிகவும் நுட்பமான வேறுபாடுகள் உள்ளன.

கருத்துப்படங்கள் ஒரு மையக் கருத்தை எடுத்துரைக்கும் வகையில் எளிமையான படங்களைக் கொண்டவைகளாக இருக்கும். குறைவான சொற்களிலோ சொற்களே இல்லாமலோ கருத்தை விளக்குவார்கள். எடுத்துக்காட்டாக, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிளவுபட்டதை இரட்டை இலைச் சின்னம் இரண்டாகப் பிரிந்திருப்பதன் மூலம் காட்டுவதைக் கூறலாம். இங்கு, எந்தக் கருத்தினை உணர்த்த விரும்புகின்றார்களோ அதனை மட்டுமே பெரிதாக வரைந்து காட்டுவார்கள்.

கேலிச்சித்தரங்கள் பெரும்பாலும் சில மனிதர்களை, அவர்களின் கொள்கைகளாகக் கேலிச் செய்வதற்காக வரையும் படங்களாகும். கேலிச்சித்திரங்கள் தீட்டுகின்றவர்கள் வரைகின்ற தலைவரின் ஓரியல்பை சுட்டிக்காட்டி வரைந்து, அவரைக் கேலி செய்யும் வகையில் படத்தை அமைப்பார்கள். எடுத்துக்காட்டாக, இந்திராகாந்தியின் படத்தை நீண்ட மூக்கோடும், எம்.ஜி.ஆர் படத்தை கருப்புக் கண்ணாடி, குல்லாவோடும் வரைந்ததைக் கூறலாம்.

தனித்திறமை: கேலிச்சித்திரங்களையும், கருத்துப் படங்களையும் வரையும் ஓவியர்களிடம் சில தனித்திறமைகள் இருக்க வேண்டும். அவர்கள் நகைச்சுவையுடன் ஒன்றை உணர்த்தும் ஆற்றல் பெற்றவர்களாகவும், கற்பனைத் திறனோடு, எதனையும் விரைந்தறியும் அறிவுக் கூர்மையும் பெற்றவர்களாகவும், விழிப்புணர்ச்சியோடு நாட்டின் நடப்புக்களையும், தலைவர்களின் நடவடிக்கைகளையும், உற்று நோக்கிக் கவனித்து கூட்டுக்கலவையாகக் கேலிப்படம் உருவாக வேண்டும்.

கேலிச்சித்திரக்காரர் விரைவாகப் படங்களை வரைய வேண்டும். தனிமனித ஆதாயம் கருதியோ, யாரையும் அச்சுறுத்துவதற்காகவோ, மற்றவர்களின் மனதைப் புண்படுத்தும் நோக்கத்திலோ படங்களை வரையக் கூடாது. படங்களை உண்மையின் அடிப்படையில், மக்களுக்கு சிலவற்றைக் கூறவும், சிந்திக்க வைக்கவுமே வரைய வேண்டும்.

**வகைகள்:** பொதுவாகக் கருத்துப் படங்களை அவற்றை வெளியிடும் முறையின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

1. **தலையங்கக் கருத்துப்படம் (Edotpraoa; Cartoon):** ஆசிரியரின் தலையங்கத்திற்கு அரண் செய்யும் வகையில் தலையங்கத்தை ஒட்டி சில கருத்துப் படங்களை இதழ்களில் வெளியிடுவார்கள். ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்றவற்றில் இத்தகைய படங்களைக் காணலாம்.
2. **அரசயில் கருத்துப்படங்கள் (Politial Cartoon):** அரசியல் நடவடிக்கைகளைக் கிண்டல் செய்ய வெளியிடும் கருத்துப் படங்கள் இந்த வகையைச் சார்ந்தவைகளாகும்.
3. **கட்டத்திற்குள் கருத்துப்படம் (Box Cartoon):** வாசகர்களின் கருத்தைக் கவர, ஒரு கட்டம் கட்டி கருத்துப் படங்களை வெளியிடலாம் தினந்தந்தியில் வெளிவரும் 'ஆண்டிப் பண்டாரம்' இந்த வகையைச் சேர்ந்தது.

நாளிதழ்கள் கருத்துப்படம், கேலிச்சித்திரம் ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்று வருகின்றன.

**தலைப்பு**

ஒரு செய்திக்குத் தலைப்பு என்பது அந்தச் செய்தியின் கருப்பொருளாகும். விரல்விட்டு எண்ணக் கூடிய சொற்களில் பார்த்தவுடன் மொத்தச் செய்தியையும் புரிந்து கொள்ளும் வகையில் அமைவது தலைப்பு எடுத்துக்காட்டு, 10.06.2009 இல் 'தின மணியில்' வெளிவந்த முதன்மைத் தலைப்பு:

**"புலிகளை விட முக்கியமானது தமிழர் பிரச்சனை**

**தமிழர்களுக்கு சட்டபூர்வமான உரிமை –**

**ராஜபட்ச அரசுக்கு மன்மோகன் கண்டிப்பு"**

விளக்கம்: "தலைப்புச் செய்தி கரடு முரடாக, முழுமையற்றதாக, அதிர்ச்சியூட்டுவதாகப் பெரும்பாலும் இருக்கும். அதனுடைய நோக்கம் வாசகரை நிறுத்தி வைத்துப் பார்க்க வைப்பதாகும். துலைப்பு, செய்தியாளரின் கவனத்தை ஈர்த்து, செய்தியைப் படிக்கக் கட்டாயப்படுத்துகின்றது".

நல்ல தலைப்பு ஆற்றல் மிக்கதாக, சரியானதாக, கவர்ச்சியானதாக, கண்ணில் பட்டவுடன் சுண்டி இழுப்பதாக இருக்கும். இது இதழின் செல்வாக்கினைக் கூட்டும். 'நல்ல தலைப்பு', செய்தியின் திறவு கோலாக அமைகிறது. அது செய்தியை விளம்பரப்படுத்துகின்றது; செய்திச் சுருக்கத்தை மாத்திரை வடிவில் வாசகர்கட்கு அளிக்கின்றது; பத்திரிகையை அழகு, படுத்துகிறது.

ஒரு செய்தியின் அலங்கார வளைவு தலைப்பு. அது தான் செய்திக்கு வழிகாட்டி, தலைப்பு செய்தியை உரத்துக் கூறுகின்றது;

**தலைப்பிடுபவர்:** பொதுவாக நாளிதழ்களில் செய்திக்குத் தலைப்புத் தரும் பணியைச் செய்தியைச் செப்பனிடுகின்ற துணையாசிரியர் செய்கின்றார். அவர் தலைப்புச் செய்தியை எழுதுவதற்கு ஆசிரியர் அல்லது செய்தி ஆசிரியர் அல்லது தலைமைத் துணையாசிரியர் தந்த வழிகாட்டுதலைப் பின்பற்றுவார்.

பிள்ளைக்குப் பெயரிடுவது போல செய்திக்குத் தலைப்புத் தருவதும் கடினமான பணியாகும். தலைப்பையும் விரைவாகத் தீர்மானிக்க வேண்டும். செய்தித்தாளில் அந்தச் செய்திக்குக் கிடைக்கும் இடத்தின் அளவை ஒட்டித் தலைப்பினை அமைக்க வேண்டும். காலமும் (Time) செய்தித்தாளின் இட அளவும் (Space) தலைப்பிடுபரைக் கட்டுப்படுத்தும் காரணிகளாகும்.

தலைப்பை எழுதுகின்றவர் நல்ல மொழியறிவு பெற்றவராக இருக்க வேண்டும். சொல் வளமிக்கவர்களால் புதிய முறைகளில் தலைப்பினை எழுத முடியும். ஆதலால் தான், ‘‘நல்ல தலைப்பு என்பது ஒரு கலைப்படைப்பு; ஒரு நிகழ்ச்சியின் ஓவியம்’’ என்று கூறுகின்றனர். சிறந்த ஓவியர் ஓரிரு கோடுகளில் ஓவியம் தீட்டி, கூற வந்த உயிர்ப்பொருளை உணர்த்தி, பார்ப்பவரை வியக்க வைக்கின்றார். சிறந்த தலைப்பும் எழுதுபவரின் கைவண்ணத்தால் ஓவியமாய் ஒளிர வேண்டும்.

**தலைப்பின் பணிகள் (Functions):** ஒரு தலைப்பு சில முக்கியமான பணிகளைச் செய்ய வேண்டுமென எதிர்ப்பார்க்கின்றோம். அவை:

1. **சாரத்தைக் கூறல்:** செய்திதலைப்பு வாசகருக்குச் செய்தியின் சாரத்தைக் கூற வேண்டும். சுருக்கமாக, பார்த்தவுடன் செய்தியின் உயிர்நாடி வாசகரின் கவனத்தைத் தொட வேண்டும்.
2. **முக்கியத்துவத்தை உணர்த்துதல்:** செய்தியின் தலைப்பைப் பார்த்தவுடன் அதன் முக்கியத்துவம் வாசகருக்குத் தெரிய வேண்டும். இதற்கு, தலைப்பில் பயன்படுத்துகின்ற சொற்கள் மட்டுமின்றி, அவற்றை அச்சிட்டிருக்கின்ற முறை எழுத்துக்களின் அளவு, மொத்தத்தில் தலைப்பின் அளவு ஆகியவையும் உதவுகின்றன.
3. **வாசகரைக் கவர்தல்:** வாசகர் செய்தியின் மூலம் கவரப்பட்டால் தான் செய்தியைப் படிப்பார். விறுவிறுப்பும், துடிதுடிப்பும் நிறைந்த உயிர்த்துடிப்பான செய்தித்தலைப்பு வாசகர்களைக் கவரும்.
4. **கவர்ச்சியான தோற்றமளித்தல்:** ஒரு செய்தித்தாளுக்குக் கவர்ச்சியான தோற்றத்தைத் தலைப்பு தருகின்றது. வார மாத இதழ்களுக்குக் கவர்ச்சியான வண்ண அட்டை இருக்கின்றது. செய்தித்தாளுக்குத் தலைப்புக்கள் தான் கவர்ச்சியை அளிக்க வேண்டும்.
5. **விற்பனையை கூட்டுதல்:** செய்திகளின் தலைப்பு காரசாரமாக இருந்தால் வாசகர்கள் செய்தித்தாளை வாங்கிப் படிப்பார்கள். செய்தித்தாளை விற்பனை செய்கின்றவர்கள், செய்தித் தலைப்புகளை உரத்துக்கூறி, மக்களை வாங்கத் தூண்டுகின்றனர்.

**கவனிக்க வேண்டியவை:** தமிழகத்தில் சாதாரண மக்களுக்காக முதன் முதலில் செய்தித்தாள் நடத்திய அமரர் சி.பா.ஆதித்தனார், ‘‘ஒரு செய்தியைப் பற்றி ஒருவர், இன்னொருவரிடம் முதலில் எதைச் சொல்லுகின்றாரோ, அதைத்தான் தலைப்பில் கொண்டு வர வேண்டும்’’, என்று வழிகாட்டும் குறிப்போடு, ‘‘தலைப்புப் போடுவதற்கு முன்பு கீழ்க்கண்ட மூன்று வேலைகள் இருக்கின்றன’’:

1. பெரிய தலைப்புக் கொடுத்து வெளியிடத் தகுந்த செய்தி தானா என்று முதலில் பார்க்க வேண்டும் (Chossing The Topic).
2. பிறகு சாரம் எடுக்க வேண்டும்.
3. துடிப்புக் கொடுத்து (Dramatising It) தலைப்புப் போட வேண்டும்4 என்று கூறுகின்றார்.

**எழுதும் பொழுது கருத வேண்டியவை:** தலைப்பினை எழுதும் பொழுது மனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைத் தொகுத்துக் கூறலாம்.

1. தலைப்பு செய்தியின் உள்ளீடாக இருக்கின்ற செய்வினை (Action of the Story) மையமாகக் கொண்டு அமைய வேண்டும். ஏனெனில் அது தான் உடனடியாக வாசகரை ஈர்க்கும்.
2. செய்தியின் சிறப்புக் கூறு (Feature) தலைப்பில் வெளிப்பட வேண்டும்.

3. தலைப்பு எதனையாவது ஒன்றைத் திட்டவட்டமாகவும் சுருகக்கமாகவும் கூற வேண்டும், அது செய்தியில் அடங்கியுள்ள விவரங்களைச் சார்ந்து நிற்க வேண்டும்.
4. சராசரி வாசகருக்கு விளங்கக் கூடியதாக இருக்க வேண்டும், சாதாரண வாசர்கள் செய்தியை முழுமையாகப் படிக்காமல், தலைப்பினைப் படித்தே செய்தியைப் புரிந்து கொள்ள முயல்கின்றன.
5. செய்தியின் முகப்புப்பகுதியை (முதல் பத்தியை) அடிப்படையாகக் கொண்டு தலைப்பினை வரைவது நல்லது.
6. செய்தியை முழுக்கப் படித்துப் புரிந்து கொண்ட பின்னரே தலைப்பினை எழுத வேண்டும்.
7. செய்தியிலுள்ள முக்கியச் சொற்களைக் கொண்டு தலைப்பினை அமைக்கலாம். செய்தியின் உயிர்த்துடிப்பு தலைப்பில் ஒலிக்க வேண்டும்.
8. பயன்படுத்துகின்ற வினைச் சொற்கள் அழுத்தமானவைகளாக, செயலைக் குறிப்பினவாக, அழகு வாய்ந்தனவாக இருக்க வேண்டும்.
9. செய்வினையில் (Active Voice) எழுதுகின்ற தலைப்பே சிறப்பாக இருக்கும்.
10. சொல்லையோ தொடரையோ திரும்பத்திரும்பபயன் படுத்தக் கூடாது.
11. எளிய சொல்லமைப்பு தலைப்புக்கு இனிமை கூட்டும்.
12. தலைப்பின் வடிவமைப்பு எப்படி அமைகின்றதென்பதைக் கவனிக்க வேண்டும்.
13. எதுகைமோனையுடன் அமையம் தலைப்பு எழுச்சி மிக்கதாய் இருக்கும்.
14. மிகுதியாக எழுத்துக்களைக் கொண்ட நீண்ட சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.
15. தலைப்பு ஒரு கருத்தை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும். பலவற்றைக் கூறி வாசகரைக் குழப்பக் கூடாது.

**தலைப்பின் வகைகள் (Types of Headline):** தலைப்பினை இப்படித்தான் அச்சிட வேண்டுமென்ற விதி எதுவுமில்லை. தலைப்பு கலையழகோடு கவர்ச்சியாக அமைய வேண்டுமென்று கூறலாம். செய்தித்தாளில் வெளிவரும் தலைப்புகை (i) அவற்றின் அமைப்பு முறையினை ஒட்டியும் (ii) இயல்பினை ஒட்டியும் வகைப்படுத்தலாம்.

அமைப்பின் அடிப்படையில் வகைகள்: செய்தியை அச்சிடும் அமைப்பு முறையின் அடிப்படையில் தலைப்புக்களைக் கீழ்க்கண்ட வகைகளாகப் பகுக்கலாம்.

கூம்புத் தலைப்பு: (Pyramid Headline): இந்த வகைத் தலைப்பு, கோபுர அமைப்பில், முதல் வரி சிறியதாகவும், பின் வரும் வரிககள் அவற்றை விட நீளமானதாகவும் அமையும். எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட தலைப்பினைக் கூறலாம்.

**தமிழ்நாடு**

**சட்டப் பேரவைத் தேர்தல்**

**மே மாத இறுதியில் நடைபெறலாம்**

தலைக்கீழ் கூம்புத்தலைப்பு (Inverted Pyramid, Headine): கோபுரத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்த முறையில் இத்தகைய தலைப்பு அமையும். முந்திய தலைப்பின் தோற்றத்திலிருந்து நேர்மாறுபட்டதாக இருக்கும். முதல் வரி மிகப் பெரியதாகவும் பின் வரும் வரிகள் உள்ளடங்கியவைகளாகவும் இருக்கும். எடுத்துக்காட்டு:

**இந்தியப் பொருளாதாரப்**

**பேராசிரியருக்கு**

**நோபல் பரிசு**

இடப்பக்கம் தள்ளிய தலைப்பு (Flush Left Headline): ஒன்றுக்கு மேற்பட்ட வரிகளில் அமையும் தலைப்பில் முதல் ஒன்று அல்லது இரண்டு வரிகள் வலப்பக்கம் தள்ளி அமையலாம். எடுத்துக்காட்டு:

**மாணவர்களின்**

**ஆக்கப்பணி**

**மக்கள் பாராட்டு**

வலம் தள்ளிய தலைப்பு (Flush Right Headline): முதல் வரி வலப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு அமையலாம். எடுத்துக்காட்டு:

**அரசு அறிக்கைகள்**

**வட்டார மொழியில்**

**இருக்க வேண்டும்**

(குறிப்பு:- ஒன்றுக்கு மேற்பட்ட வரிகளில் தலைப்பு வரும் பொழுது வரிகளை இடமும் வலமும் தள்ளியும், ஒரு பக்கம் ஒன்று போலவும் மறுபக்கம் தள்ளியும் பல அமைப்பு முறைகளில் அச்சிடலாம்).

உடுக்குத் தலைப்பு (Waist Line): உடுக்கின் உருவம் போல தலைப்பு அமையும். முதல் வரியும் மூன்றாம் வரியும் நீண்டிருக்க அடைவரி குறுகியதாக இருக்கும். எடுத்துக்காட்டு:

**விடுமுறையில்**

**மாணவர்**

**ஆக்கப்பணி**

அறுகோணத் தலைப்பு: மேல்வரியும் கீழ்வரியும் சிறியதாகவும் நடுவரி பெரியதாகவும் தோற்றத்தில் அறு கோணம் போல அமையும் தலைப்பு ஒருவகையாகும். எடுத்துக்காட்டு:

**மருத்துவக்கல்வி**

**தமிழ் வழி கற்பிக்க**

**அரசு முடிவு**

முழுப்பக்கத் தோரணத் தலைப்பு (Streamer of Banner Head Line): செய்தித்தாளிலுள்ள எட்டுப்பத்திகளுக்கும் மேலாக, முழுப்பக்க அளவில் அமைகின்ற தலைப்பினைத் தோரணத் தலைப்பு எனலாம். பெரும்பாலும் முதல் பக்கத்தில் மிகவும் முக்கியச் செய்தி இத்தகைய தலைப்போடு வெளிவரும்.

கிடை நிலைத்தலைப்பு (Cross Line): ஒரு பக்கத்திலுள்ள எட்டுப்பத்திகளிலும், அமையாது, ஒன்று முதல் ஏழுபத்திகளுக்குள் அமையும் தலைப்புக்கு கிடைநிலைத் தலைப்பு என்று பெயர்.

இயல்பின் அடிப்படையில் பகுப்பு: தலைப்புக்களை அவற்றின் இயல்பை ஒட்டிக் கீழ்கண்ட வகைகளாகப் பகுக்கலாம்:-

உந்து தலைப்பு (Kicker Headline): வாசகர்களை உந்தும் வகையில், முதலில் சிறு தலைப்புப் போட்டு அதனை அடிப்கோடிட வேண்டும். அதனைத் தொடர்ந்து செய்தியின் சாரத் தலைப்பு (Topical Headline) வழங்குவது ஒரு வகையாகும். எடுத்துக்காட்டாக 31.01.88 தினமணியில் வந்த கீழ்கண்ட செய்தியைக் கூறலாம்:-

**பிரதமருடன் பேச்சு**

**நிதிக்கமிஷன் பணியை மாற்ற**

**முதல்வர்கள் வலியுறுத்தல்**

கேள்வித் தலைப்பு (Question Headline): தலைப்பினை கேள்விக்குறியோடு அமைத்தால் அதனைக் கேள்வித் தலைப்பு என்று கூறலாம். எடுத்துக்காட்டு:

**விரைவில் தமிழ்நாட்டில்**

**தேர்தல் நடக்குமா?**

மேற்கோள் தலைப்பு (Quotation Headline): யாராவது ஒருவர் கூறியதை மேற்கோள் குறியோடு செய்தித் தலைப்பாக, வெளியிடுவது மேற்கோள் தலைப்பெனப்படும். எடுத்துக்காட்டு:

**“கல்வியை வாணிப மாக்காதீர்கள்” – பிரதமர்**

**இவ்வலகிற்கான பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

வெ. கிருட்டிணசாமி ‘ தகவல் தொடர்பியல்’ ( மணிவாசகன் பதிப்பகம் சென்னை-108)

**மாதிரி வினாக்கள்:**

1. செய்தியாளர் - விளக்கம் தருக?
2. செய்தியாளர் - பணிகளையும் பொறுப்புக்களையும் எழுதுக?
3. செய்தியாளர்களை எடுத்தெழுதுக?
4. செய்தி விளக்கம் தருக?
5. செய்திகளின் வகைகள் யாவை?

குறிப்பு

## அலகு – 4
## நாட்டுப்புற இலக்கியம்

### நாட்டுப்புற இலக்கியமும் எழுத்திலக்கியமும்

வாய்மொழி இலக்கியங்களே உலகில் முதலில் தோன்றின என்பதையும் எழுத்து முறை வழக்கிற்கு வருமுன்னர் எல்லா இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களாகவே இருந்தன என்பதையும் வரலாறு நமக்குக் காட்டுகின்றது. ஆங்கிலத்தில் Unwritten Literatur, Popular literature, Oral literature, Primitive literature, Folk literature என்று குறிப்பிடுவனவெல்லாம் வாய்மொழி இலக்கியங்களாகும். வில்லியம் பாஸ்கம் என்பவர் வாய்மொழியாக வழங்குபவற்றை Verbal art என்று குறிப்பிடுகின்றார். தமிழில் எழுதா இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் என்றெல்லாம் குறிப்படுவர். நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஆதியில்லை அந்தமில்லை. மனித இனம் தோன்றியபோது அதுவும் தோன்றியது. மனிதனும் சமூகமும் மாறுவதற்கேற்ப அதுவும் மாறிக்கொண்டு வருகின்றன. சமுதாய மாற்றத்தை முதலில் நாட்டுப்புற இலக்கியத்தில் தான் காணலாம். பழைமைக்கும் பழைமையாய் புதுமைக்கும் புதுமையாய் விளங்குவது நாட்டுப்புற இலக்கியம்.

எழுத்துமுறை வந்த பின்னர் எழுத்திலக்கியம் (Written Liteature) தோற்றம் பெற்றன. Writtem literature, Classical literature என்ற சொற்றொடர்கள் எழுத்திலக்கியத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இலக்கியம் என்றாலே எழுத்திலக்கியத்தைத் தான் பெரும்பாலும் குறிப்பிடுகின்றன. செந்நெறி இலக்கியம், மரபிலக்கியம், உயர் இலக்கியம் ஏட்டிலக்கியம், எழுத்திலக்கியம் என்றெல்லாம் வாய்மொழி இலக்கியத்திற்கு மாறானவற்றைக் குறிப்படுகின்றனர்.

நாட்டுப்புற இலக்கியம் கட்டுப்பாடு அற்றது. மலையருவியாக, காட்டு மல்லிகையாகக் கருதப்படுவது அனைவரும் பொருள் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமையும் இனிமையும் உடையது. ஆனால், எழுத்திலக்கியம் யாப்பிற்குக் கட்டுப்பட்டது. சீரும் தளையும் அடியும் சிதைந்துவரின் புலவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கற்றோர் மட்டும் படித்து இன்புறுவதற்காக எழுந்த எழுத்திலக்கியம் கல்வியோடு தொடர்புடையதுமாகும். நாட்டுப்புற இலக்கியத்தில் உள்ளத்து உணர்வுகளைக் காணலாம். 'படைப்பாளியே நடையாக அமைகிறான்' என்பது நாட்டுப்புற இலக்கியத்திற்குப் பொருந்தும். மக்களுக்காக மக்களால் ஆக்கப்படுவது நாட்டுப்புற இலக்கியம். எனவே, இதனை மக்கள் இலக்கியம் என்றும் பயன்பாட்டிலக்கியம் என்றும் கூறுவர். நாட்டுப்புற இலக்கியத்தில் சில வடிவ அமைப்புகளைக் காணலாம். ஏட்டிலக்கியத்தில் வடிவ அமைப்புகள் காணப்படினும் நாட்டுப்புற இலக்கியம் போன்று விதிமுறையாக அமையவில்லை. 'பண்ணோடு பாடாத பாடல் இறகில்லாப் பறவை போன்றது. பண்ணோடு பாடும்போது பறவை இறக்கை விரித்து விண்ணில் பறப்பது போல இருக்கும்' என நாட்டுப்புறவியல் அறிஞர் சத்தியமூர்த்தி கூறுகிறார். எழுதப்படும் எழுத்திலக்கியம் கட்புலனின் துணை கொண்டு வாசிப்பதற்குரியதாகும். மரியா எட்வர்ட் லீச் அவர்களின் கருத்துப்படி, ஐந்து பண்புகள் நாட்டுப்புற பாடல்களை ஏட்டிலக்கியத்தினின்றும் வேறுபடுத்துகின்றது. 1. குறையுரை (Under Statement) 2. நினைவில் கொள்ள மரபுத் தொடரைப் (Formula) பயன்படுத்தல் 3. குறிப்பாகக் காட்டுதல் 4. கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் செயலாகக் காட்டுதல் 5. பாதுகாத்து வைத்தல், நடை முதலியன.

நாட்டுப்புற இலக்கியத்திற்கும் எழுத்திலக்கியத்திற்கும் கற்பனை, உவமை, வருவகம், எதுகை, மோனை, அந்தாதி போன்ற பொதுப் பண்புகளைக் காணலாம். நாட்டுப்புற இலக்கியக்கூறான உள்ளடக்கம், வடிவக்கூறு அமைப்புமுறை எழுத்திலக்கியத்தில் ஊடுருவி நிற்பதைக் காணலாம். கர்நாடக சங்கீதம் நாட்டுப்புற இசையினின்றும் கிளைத்திருக்க வேண்டும். அது போன்றே நாட்டிய நாடகமும் நாட்டுப்புறக் கலையினின்றே வளர்ந்திருக்க வேண்டும். வாய்மொழி இலக்கியத்தை நிலைத்த அமைப்புடையவை (fixed phrase genre) (பழமொழி, விடுகதைகள் உதாரணம்) என்றும் மாறிச் செல்லும் அமைப்புடையவை (free phrase genre) என்றும் (பாடல், கதை, கதைப்பாடல்கள் உதாரணம்) இருவகையாகப் பகுப்பர். வாய்மொழி இலக்கியத்தை உரைநடையில் அமைந்தது, கவிதை நடையில் அமைந்தது என இருவகையாகவும் பகுப்பர். எழுத்திலக்கியம் தனித்த நோக்கும் கலைத்திறமும் செயற்கைப் புனைவும் கொண்டது. நாட்டுப்புற இலக்கியத் தாக்கம் எழுத்திலக்கியத்தில் காணப்படுகின்றது. ஆனால், எழுத்திலக்கியத்தில் இரண்டறக் கலந்து மறைந்தும் போவதில்லை. ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் காணப்படினும் அவை தனித்தனி நிலைபேற்றின. ஆனால், எந்த மனித இன வரலாற்றிலும் எந்த இனமும் நாட்டுப்புற இலக்கியம் இன்றி எழுத்திலக்கியம் மட்டும் பெற்றிராது.

எழுத்திலக்கியம் பெரும்பாலும் செந்தமிழ் நடையில் அமைந்திருக்கும். ஆனால், நாட்டுப்புற இலக்கியம் பெரும்பாலும் பேச்சு நடையில் அமைந்திருக்கும். எழுத்திலக்கியம் பெருந்தெய்வங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆனால், நாட்டுப்புற இலக்கியம் சிறு தெய்வ வழிபாட்டைப் போற்றுகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் நூற்பயன் என்பர். இக்குறிக்கோளை எடுத்தியம்புகிறது எழுத்திலக்கியம். எழுத்திலக்கியம் இலட்சிய வாழ்க்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இலட்சிய வாழ்க்கை உண்மை வாழ்க்கையினின்றும் வெகு தூரத்தில் உள்ளது. மனிதனுடைய பெருமைகளையும் நன்னோக்கங்களையும் புலவர்கள் கதையாகவும் நீதி நூலாகவும் வகுத்துப் புனைகின்றனர். நாட்டுப்புறவியல் பேரறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் கூறுவது இவண்கண் ஆழமாகச் சிந்திக்கத்தக்கது. குற்றமே இல்லாத காவிய நாயகனைப் படைக்கின்றனர் ஆனால், நடைமுறையில் குற்றமே இல்லாத மனிதனை உலகில் காண முடியுமா? உலக இயற்கையையும் மனிதனுடைய குறைகளையும் சமூகத்தின் ஊழல்களையும் உள்ளவாறே சொல்லி இன்புறும் வழக்கம் மக்களிடையே உள்ளது. குண நலன்களை எழுத்திலக்கியம் எடுத்தியம்புகின்றது. குற்றங்களை நாட்டுப்புற இலக்கியம் எடுத்தியம்புகின்றது. கற்பின் சிறப்பைக் காவியம் பாடுகின்றது. நாட்டில் நடைபெறும் கூடாவொழுக்கத்தை நாட்டுப்புற இலக்கியம் எடுத்தியம்புகின்றது. அறிவாலும் திருவாலும் ஒத்த இளமையுடையவர்களைக் காதலன் காதலியாகக் காவியம் காட்டுகின்றது. அறுபது வயது கிழவனை மணந்த பருவப்பெண்ணின் உணர்ச்சிகளை நாட்டுப்புற இலக்கியம் எடுத்தியம்புகின்றது. வாழ்கையில் நம்மைச் சுற்றி நடைபெறும் நிகழ்ச்சிகளை எழுத்திலக்கியத்தில் காண முடியாது. உள்ளதை உள்ளவாறே கூறி மறுமலர்ச்சியை உண்டாக்கவதாக முன்னேற்ற எழுத்தாளர்கள் இன்று கூறுகின்றனர். ஆனால். அதற்குரிய விதையும் வேருமாக நாட்டுப்புற இலக்கியங்கள் உள்ளன.

மனித உள்ளத்தின் ஆழத்தையும் அங்கே தோன்றி எதிரொளிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் எழும்

இயற்கையான எண்ணத்தையும் இன்ப துன்பங்களையும் ஆசாபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புற இலக்கியங்களில் காண்கிறோம். எனவே, ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். நாட்டுப்புறப் பாடலில் உணர்ச்சி இருக்கும். ஓசை இன்பம் இருக்கும். தாளக்கட்டு இருக்கும். சொல் தொடை நயமிருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும். இதனால் தான் நாட்டுப்புறப் பாடல்களைத் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மல்லிகைக்கும் மலையினின்று விழும் அருவிக்கும் ஒப்பிடுகின்றனர். மனித உணர்வின் வடிகாலாகவும் கட்டுப்பாடற்ற கற்பனை நிறைந்த களஞ்சியமாகவும் திகழ்கின்றன. மனித இனத்தின் சரிதத்தை, அதன் வாழ்வை. முடிவைச் சித்தரிக்கின்றன.

நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய பண்புகளைக் காண்போம்.

1. வாய்மொழியாகப் பரவப்படுவது (It is oral).
2. மரபு வழிப்பட்டது (It is traditional)
3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது (It exists in different versions)
4. ஆசிரியர் அற்றது (It is usually anonymous)
5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது (It tends to become for formularized)

நாட்டுப்புற இலக்கியங்கள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறவியல் பேரறிஞர் டார்சனும் நாட்டுப்புற வழக்காற்றியல் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். வில்லியம் பாஸ்கம் அவர்களும் நாட்டுப்புற வழக்காறுகள் எல்லாம் வாய்வழி வெளிப்படுத்தப்படுபவை என்கிறார்.

வாய்மொழி இலக்கியத்தின் இரண்டாவது பண்பு மரபாகும் (Tradition) மரபு என்ற சொல் நடுநாயகமாகக் கருதப்படுகின்றது. வீரயுகப் பாடல்கள் மரபாலேயே அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல்களும் மரபு என்ற பண்பு இருப்பதால் தான் பல தலைமுறைகளாக எழுத்திலக்கிய செல்வாக்கிடையேயும் வாழ்ந்து வருகின்றன என்பது குறிப்படத்தக்கது.

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் வாய்மொழியாகப் பாடப்படுவன ஒருவரே ஒரு பாட்டை இரண்டு முறை பாடினால் அப்பாட்டில் வேறுபாட்டைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் தம் முன்னோர் பாடுவதைக் கேட்கின்றனர். கேட்டதை நினைவுப்படுத்திப் பாடுகின்றனர். அவ்வாறு நினைவுப்படுத்திப் பாடும்போது சிலவற்றை மறக்க நேரிடும். மறந்து விட்டதற்கு ஈடாக சில சொற்களையோ சில அடிகளையோ புகுத்திப்பாடுவர். இவ்வாறு பாடல்களை மாற்றிப் பாடுவதற்கு மூன்று காரணிகள் அடிப்படையாக அமைகின்றன.

1. நிலவியல் சூழல் (Veographical environment)
2. சமுதாயச் சூழல் (Social environment)
3. வட்டார வழக்கு வேறுபாடு (Dialect variation)

பலர் பாடியதைக் கேட்டு நினைவில் வைத்துப் பாடுவதால் பல்வேறு வகையான திரிபு வடிவங்கள் கிடைக்கின்றன. நாட்டுப்புறப்பாடல்கள் இடம் விட்டுப் பெயர்ந்து செல்லும் இயல்பினதாலும் அவை பல்வேறு வடிவங்களாகத் திரிபடைகின்றன.

ஆசரியர் பெயர் அறியவொண்ணாமை வாய்மொழி இலக்கியத்தின் தன்மையாகும். ஆசிரியர் பெயர் தெரியாமை (anonymity) வீரயுகப் பாடல்களின் (Heroic poetry) இயல்பாகக் கூறப்படுகின்றது. பேளரா (Nowra) அவர்கள் ஆசிரியரின்மைக்கு ஒரு விளக்கம் தருகின்றார். 'ஆசிரியரின்மைக்குரிய காரணத்தை எளிதாக விளக்கலாம். ஒவ்வொரு பாடலும் பாடப்படும்போது ஒரு முறை நிலைபேறு அடைகின்றது. அப்போது பார்வையாளர்கள் அதனைப் பாடிய புலவன் யார் என்பதை அறிந்திருப்பார்கள். அதனால் அவன் தன் பெயரைத் தன் பாடலில் சொல்ல வேண்டியதில்லை' என்கிறார் பௌரா. ஆனால் பௌராவின் கூற்று எனக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பெரும்பாலான நாட்டுப்பாடல்கள் மக்கள் பாடல்களாகவே தோன்றுகின்றன. பழமொழி, விடுகதை போன்ற நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஆசிரியர் பெயர் அறிதல் இயலாத தொன்றாகும். இவை மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியின் விளைவாகப் பரிணமிக்கவை ஆகும். எனவே, நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஆசிரியர் இன்மை ஒரு முக்கியகூறாகக் கருதப்பட வேண்டும்.

நாட்டுப்புற இலக்கியங்கள் ஒருவடிவ அமைப்பிற்குட்பட்டது. ஒருவித வாய்ப்பாட்டுக்கள் அடங்கக் கூடியது. இவ்வியல்பு அமைப்பியல் (Structural) ஆய்வுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. எந்தவொன்றையும் வகைப்படுத்த வேண்டுமெனின் அதன் உள்ளமைப்பை ஆராயவேண்டும். வரையறை செய்வதற்குப் பாடம் (Text), அமைப்பு (Structure), சூழல் (context) முதலிய மூன்று படிநிலைகளைக் கொள்ள வேண்டும். வாய்பாடு என்பது பெரும்பாலும் எவ்வித மாற்றமுமின்றி ஒரு குறிப்பிட்ட சூழலில் தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தப்படும் ஒரு குறிப்பிட்ட சொற்றொடராகும். நாட்டுப்புற இலக்கியங்களை நன்கு ஆராயின், அவைகள் ஒருவித வாய்பாட்டிற்குள் அடங்கியிருப்பது தெற்றென விளங்கும்.

ஏட்டிலக்கியத்தில் ஏதேனும், ஒரு வரி திரும்பத் திரும்ப (Repetition) வரின், அது கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படும் என்பர். ஆனால், நாட்டுப்புறப் பாடல்களில் சில அடிகள் திரும்பத் திரும்ப வருதல் இயல்பாகும். ஏனென்றால் நாட்டுப்புறப் பாடல்களை நினைவில் வைத்துப் பாடுவதாலும், பாடியது மறவாமல் இருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கினை எழுத்திலக்கியத்திலும் எழுத்திலக்கியச் செல்வாக்கினை ஓரளவு நாட்டுப்புற இலக்கியத்திலும் காண்கிறோம். ஒன்றின் தாக்கம் மற்றத்தில் இருப்பினும் இரண்டும் வெவ்வேறு நிலையில் வளர்ச்சி பெற்று வளர்ந்து கொண்டே உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எழுத்திலக்கியங்கள் அனைத்தும் நாட்டுப்புற இலக்கியங்களினின்றும் முகிழ்த்தனவராகயிருந்தும், வளர்ச்சி வெவ்வேறாக இருப்பதும். இரண்டிற்குமிடையே பெருத்த இடைவெளி இருப்பதையும் காணமுடிகிறது. ஒன்றின் வளர்ச்சி மாற்றத்தையொட்டியே உள்ளது என்பதும் குறிப்படத்தக்கது.

**நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு**

எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கினைக் குறித்து முதன்முதலில் பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் 'வாய்மொழி இலக்கியம்' (1964) என்ற நூலில் தொட்டுக்காட்டிச் செல்கின்றார். டாக்டர் சு. சண்முகசுந்தரம் அவர்கள் 'நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு' (1960) என்று தனி நூலே எழுதியுள்ளார்கள். நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கை சங்க காலம் முதற்கொண்டு தற்காலம் வரை தொகுத்தும் வகுத்தும் கால நிரல்பட ஆய்ந்து எழுதியுள்ளார்கள். எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கிச்

செல்வாக்கைப் போன்று, நாட்டுப்புற இலக்கியத்தில் எழுத்திலக்கியச் செல்வாக்கையும் ஆராய வேண்டும். இத்தகைய ஆய்வகள் பல்வகையிலும் நலன் பயக்கும்.

பாரி மகளிர் பாடும் ‘அற்றைத் திங்கள்’ பாடலும் மாண்ட மன்னனுக்காகப் பாடும் ‘முல்லையும் பூந்தியோ’ பாடலும் ஒப்பாரியின் சாயலே வெளிப்படுத்தி நிற்கின்றன. டாக்டர். கைலாசபதி அவர்கள் சங்க இலக்கியத்திலுள்ள வீரயுகப் பாடல்கள் எல்லாம் நாட்டுப்புறப் பாடல்களே என்கிறார். பரிபாடலில் முருகன் முன் ஆடியும் பாடியும் விழாவாக அமைக்கின்ற அப்பெருநாளைப் பற்றிய பாடலும்,

‘ஒரு திறல், யாணர் யாழின் தீங்குரலெழ

ஒரு திறம், யாணர் வண்டின் இமிர் இசையெழ

ஒரு திறம், கண்ணார் குழலின் கரைபு எழ

………………….. ……………… ……………

…………………. …………………… ……

(பரி 17.12.21)

நாட்டுப்புறப் பாடலை போன்று உள்ளது. ஐங்குறு நூற்றில் நாட்டுப்பாடல் பண்பு உள்ளதாக தமிழவன் கூறுகிறார். சங்க இலக்கியத்தில் விடுகதை இயல்பு இருப்பதாக (குறுந்தொகை 203) டாக்டர். ச.வே. சுப்பிரமணியம் கூறுகின்றார். மக்கள் வழக்கில் வழங்கிய பழமொழிகள் வள்ளவர் எடுத்தாண்டுள்ளார். ‘கற்றலின் கேட்டலே நன்று’ பழமொழி

‘கற்றலனாயினும் கேட்க’ (குறள்)

‘யானையால் யானையாத்தற்று’ (பழமொழி)

‘விமைனயால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானை யாத்தற்று’ (குறள் 678)

சிலம்பில்தான் முழுக்க முழுக்க நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கைக் காண்கிறோம். சிலப்பதிகார மங்கல வாழ்த்தும் கானல் வரியும் வேட்டுவ வரியும் ஆய்ச்சியர் குரவையும் குன்றக் குரவையும் வாழ்த்துக்காதையும் அக்கால மக்கள வாய்மொழியாக இசைத்த பாடல்களை நமக்கு நினைவூட்டுகின்றது. வரியும் குரவையும் நாட்டுப்புறப் பாடல்களே எனத் தமிழ்பேரறிஞர் டாக்டர். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகிறார். சிலம்பில் வாய்மொழிச் செல்வாக்கு உண்டு என் டாக்டர் நா. வானமமாலை கூறுகிறார். சிலப்பதிகாரம் தெருக்கூத்தின் முன்னைய வடிவம் என் டாக்டர். மு. சண்முகம்பிள்ளை கூறுகிறார். ‘புறநானூற்றில் பேகன் மனைவியாகக் கண்ணகி வருகின்ற காரணத்தாலும் ஒரு முலையைத் திருகி எறிந்த மங்கை ஒருத்தி பற்றிய செய்தி வருவதாலும் மக்கள் மத்தியில் இருந்த கதை தான் சிலப்பதிகாரம்’ என்பார் வையாபுரிப்பிள்ளை அவர்கள். சிலம்பின் கதையே நாட்டுப்புறக் கதை என்பது இவர் கூற்று.

‘ஞாயிறு போற்றதும் திங்களைப் போற்றதும்’ போன்றவை நாட்டுப்புற மக்களின் இறைவழிபாட்டை உணர்த்துகின்றன. பழங்கால மக்களின் வழிபாட்டு எச்சங்கள் என வானமாமலை கூறுகின்றார். ‘மலையிடைப் பிறவா மணியோயென்கோ’ தெம்மாங்கை நினைவூட்டுகின்றது. சிலம்பு வாழப்பாடல்கள் நாட்டுப் பாடலே நாட்டுப்புறவியல் அறிஞர். கி.வா. ஜகந்நாதன் அவர்களும் கூறுகிறார்.

கானல்வரி

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடைஅது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்த செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழிகாவேரி'.

குரவைக் கூத்தினையும் அது ஆடும் போது பாடும் வாய்மொழிப் பாடல் வகையினையும் காண்போம். குரவை என்பதனை,

'குரவை என்பது கூறுங்காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வரைக்கும் இயல்பிற்றென்ப'

எனவும்,

குரவை என்பது எழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து
அந்நிலைக் கொட்ப நின்றாடலாகும்

என்றும் விளக்கியுள்ளார் அடியார்க்கு நல்லார்.

வாழ்த்துக் காதையில் அம்மானைவர், கந்துகவரி, ஊசல்வரி, உலக்கைக் குற்றம் பாடல் முதலியன வாய்மொழி இலக்கியவகையைச் சார்ந்ததாகும்.

அம்மானைவரி

'புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யார் அம்மானை?
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடலோ ரம்மானை' (29:17)

கந்துவரி

'பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந்தெழுந்துலாய்
மின்னுமின் விளங்கொடி வியன் நிலத் திழிந்தெனத்
தென்னவன் வாழ்கவாழ்வென்று சென்று பந்தடித்துமே
தேவார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே'. (29:12)

ஊசல்வரி

'ஒரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்'

வள்ளைப்பாட்டு

தீங்கரும்பு நல்உலக்கையாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லமைப்பார் புகார் மகளிர்
ஆழிக்கொடித் திண்டேர் செம்பியன் வம்பலத்தார்ப்
பாழித் தடவரைத்தோள் பாடலே பாடல்

பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்' (29:26)

'புகையுள விடத்து நெருப்புண்டு(29:87) என்ற பழமொழியையும் 'பிசியும் நொடியும் பிறர் வாய்க்கேட்டு' (22:62) என விடுககையைப் பற்றியும் மணிமேகலை மூலம் அறிகிறோம்.

திருப்பாவையில் வாய்மொழிப் பாடல்கள் நிறைய காணப்படுகின்றன.

சிற்றஞ்சிறு காலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரை யடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றவேல் எங்களைக் கொள்ளாமற் போகாது.' (29)

'அச்சோப் பருவம்' ஒன்றினை அழகாகப் பாடுகின்றார் பெரியாழ்வார்.

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்
தக்கதி தன்றென்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய
சக்கரக் கையனே அச்சோ அச்சோ
சங்கிடத் தானே அச்சோ அச்சோ.' (1.8.7)

குலசேகரர் தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

'மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்ந்தவனே
தேன் இலங்கைக் கோன்முடிக்ள சிந்துவித்தாய் செம்பொன் சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தெம் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலே.' (பெரு-8.1)

'திருத்தாணோக்கம்' என்ற ஆடல்வகையை மாணிக்கவாசகர் நமக்கு நினைப்பூட்டுகின்றார்.

பந்தாட்டப்பாடலை சீவகசிந்தாமணி (பாடல் 151, 925, 1101, 1953) மூலம் அறிகிறோம்.

உலக்கைப் பாடல் எனும் வள்ளைப் பாலொன்றைப் பெருங்கதை (இலா, எண் 51-52) குறிப்பிடுகின்றது. சூளாமணியில் தாலாட்டு 'ஒலுறுத்தல்' என்ற சொல்லால் மண்டோதரி புலம்புவதும் ஒப்பாரிக்குச் சிறந்த சான்றுகளாகும். குரவைப் பாடலையும் வள்ளைப் பாடலையும் ஊசல் பாடலையும் கழங்கு, அம்மானைப் பாடல்களையும் அரிச்சந்திரபுராணம் குறிப்பிடுகின்றது. அப்பர் பழமொழியை இறுதியில் வைத்துப் பாடல் பாடியுள்ளார். (ப.251)

பிற்காலத்தில் எழுத்த கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களில் வரும் மறம், சம்பிரதம், களிமதங்கியார் போன்ற பாடல்களும் வாய்மொழி இலக்கிய வகையைச் சார்ந்தனவாகும். கலம்பகம், பிள்ளைத்தமிழ், பரணி உலா, தூது பள்ளு, சிந்து, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியங்கள் இடம் பெற்றன.

'ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியர் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமே ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த்தாண்டன்

காடாவற்று முன்தோன்றல் கைவேலைப்பாடி

காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்'

-நந்திக்கலம்பகம் - 33.

'நற்றா ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே – உற்றகலாப்
பண்கள்முதற் பெண்களோடும் பாலரொடு நாடகமாம்
பெண் கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயோ?'

தமிழ் விடுதூது 32,33

'கூளப்ப நாயக்கன் காதலிலும்' வாய்மொழி இலக்கியச் சாயலைக் காணலாம்.

'காந்தர்வ நியாயமெனக் கண்டவுடமேன இணங்கித்
தேர்ந்திடு கல்யாணமே சோபன கல்யாணமன்றோ!
கானாரும் வள்ளிதனைக் கந்தனார் கூடியதும்
மானாள் சுபத்திரையை வாள்விஜயன் கூடியதும்
தாங்களே சம்மதித்ததோ தாய்தந்தை சம்மதித்ததோ
மாங்குயிலே என்னை மருவுவதே காரியம் காண்'.

எனத் தலைவன் தலைவியைக் களவிற் புணர விரும்பும் நிலையினை ஆசிரியர் எடுத்தியம்புகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்களையொட்டி அமைந்த பள்ளுவையும் குறவஞ்சியையும் காண்போம். இவ்விரண்டு இலக்கியங்களும் முழுக்க முழுக்க நாட்டுப்புறப் பாடல்களால் அனைந்தவை என்று கூறிவிடலாம்.

இப்பள்ளு இலக்கியங்கள் 'உழத்திப் பாட்டு' போன்ற நாட்டுப்புறப் பாடல்களையெல்லாம் நமக்க நினைவுறுத்துகின்றன. மழையைப் பற்றிய பாடல் ஒன்றைக் காண்போம்.

'கொங்கு மின்னல் ஈழ மின்னல்
எங்கு மின்னது – கருங்
குயிலோ லிக்க மஞ்சள்நிற
வேளிவெ றிக்குது. - திருமலை முருகன் பள்ளு – 50'

குறவஞ்சி இலக்கியங்களிலே மிகச்சிறந்தது குற்றாலக்குறவஞ்சி. இதுவும் நாட்டுப்புறப் பாடல்களாகமைந்த இலக்கியமாகும். மலை வளத்தைப் பற்றிக் குறத்தி கூறுவதைக் காண்போம்.

'ஓடக் காண்பது பூம்பனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கல்
வருந்தக் காண்பது சூல்உளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண் கிணிக்கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர் தென் ஆரியர் நாடே.'

சிங்கனும் சிங்கியும் பலவிடங்களில் அலைந்து பின் ஒன்று சேர்கின்றனர். அவர்கள் பாடும் பாடலாக ஆசிரியர் நமக்கு இதைக் காட்டுகின்றார்.

‘தென்னாடெலா முனைத் தேடித் திரிந்தேனே சிங்கா – அப்பால்
இந்நாட்டில் வந்தென்னை யெப்படி நீ கண்டாய் சிங்கா?
நன்னகர் குற்றால நாதரை வேண்டினேன் சிங்கி – மணிப்
பன்கைம் பூண்டாரைப் பாடிக்கொள்வோமடா சிங்கா
பாடிக்கொள்வாரெவா ஆடிக்கொள்வாரெவர் சிங்கி – நீ தான்
பாடிக் கொண்டாற் போதும் ஆடிக்கொள்வேனேடா – சிங்கா
பார்க்கப் பொறுக்குமோ பாவிஎன் ஆவிதான் சிங்கி – முன்னே
ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறாகளோ சிங்கா.’

சித்தர் பாடல்களிலும் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கைக் காண்கிறோம். நாவல்களிலும் புதுக்கவிகைளிலும் இன்றைய திரைப்படங்களிலும் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கைக் காண்கிறோம்.

காலப்போக்கில் சமுதாயத்தில் எத்தனையோ மாற்றங்கள் பிரிவுகள் புகுந்துவிட்டன. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பிரிவுகள் தோன்றலாயின. காலப்போக்கில் வாய்மொழி இலக்கியத்தைத் தாழ்ந்தோர் உடைமையாக்கி (Proletariams) உயர்ந்தோர் (Aristrocratic) தமக்கென வேறு இலக்கியங்களைப் படைத்துக் கொண்டனர். சொத்துள்ளவர்கள் தமக்கென ஓர் உயர்கலையைப் பேணினர். சொத்தில்லாத உழைப்பாளி மக்கள் நாட்டுக்கலையைத் தமதாக்கிக் கொண்டனர். அன்றிலிருந்து இரண்டு வகையான கலைகளும் சமூகத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. ஒன்று உழைப்போர் கலைகள் மற்றது சுகிப்போர்கலைகள். இரண்டும் இரண்டு வர்க்கங்களைப் பிரதி பலித்தன.

நாட்டுப்புற இலக்கியத்திற்கும் எழுத்திலக்கியத்திற்குமுள்ள உறவையும் தொடர்பையும் விளக்கிஇ நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கனைப் பற்றி ஓரளவு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

குறிப்புகள் (References)

| | |
|---|---|
| சு. சண்முகசுந்தரம் | நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு<br>மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1980. |
| அ.மு.பரமசிவானந்தம் | வாய்மொழி இலக்கியம், தமிழ்க்கலைப் பதிப்பகம்,<br>சென்னை, 1964. |
| தே. லூர்து | நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்,<br>திருநெல்வேலி, 1976. |


**நாட்டுப்புறக் கதைகள்**

நாட்டுப்புற இலக்கிய வகைகளில் நாட்டுப்புறக் கதையும் ஒன்றாகும். மக்கள் கூட்டம் கூட்டமாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்றபோதும், கால்நடை மேய்ச்சலுக்காக அலைந்து திரிந்த போதும் அவற்றைக் கதையாக மக்கள் கூற ஆரம்பித்தனர். ஆதிமனிதன் தனது அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னது தான் கதையின் தொடக்கம் என்பர் சிலர். உலகெங்கிலும் கதைகள் வழங்கப்படுகின்றன. தமிழகத்தின் கிராமப் புறங்களில் இன்றும் பாட்டிமார்கள் தம் பேரக்குழந்தைகளுக்குக் தை சொல்வதைக் காணலாம். தமிழகத்திலே வாய்மொழியாகவே கூறுகின்ற கதைகள் தொல்காப்பியர் காலந்தொட்டு இருந்தமையை அறிகிறோம். தொல்காப்பியர், கதைகளைப் பற்றிக் கூறும் போது,

'பொருள் மரபில்லாதப் பொய்மொழியானும்

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்'

(தொல்.செய்.173)

என்று இருவகைக் கதைகளைப் பற்றிக் குறிப்பட்டுச் செல்கிறார். உலக நாடுகளிலே நமது இந்தியா தான் நாட்டுப்புறக் கதையில் முதலிடம் வகிக்கின்றது. பஞ்சதந்திரக் கதையின் கூறுகளை ஈசாப் கதையிலும் அரபுக் கதையிலும் காணலாம். இந்திய, எகிப்திய, கிரேக்க, ரோமனியப் பழங்கதைகளே உலகில் புகழ்பெற்றவைகளாகும்.

ஏதேனும் நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு எழுந்ததே இக்கதைகளாகும். நாட்டுப்புற மக்களின் கற்பனை, அறிவ, நுணுக்கம், எண்ணங்கள் ஆகியவற்றை இக்கதைகளில் காணலாம். ஆனால், அதே நேரத்தில் அளவ கடந்து கற்பனையையும் காண்கிறோம். நீதியை வெளிப்படையாகவே கூறுகின்ற தன்மையையும் காணலாம். பண்டைக்கால மக்கள் உலகத்தைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் கதைகளைப் புனைந்தனர். பழங்கால மனிதன் தான் நடந்து கொண்டு விதத்தையும் செயல்களையும் விளக்குவதற்குக் கதைகளைப் புனைய ஆரம்பித்தான். காலப்போக்கில் இக்கதைகள் கற்பனைக் கதைகளாகவும் இதிசாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை ஆராய, பழங்கதைகளையும் ஆராய வேண்டும்.

மானிடவியலாளர்கள், சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், தத்துவவியலாளர்கள் அவரவர்கள் நோக்கில் கதைகளுக்கு விளக்கம் கூறுகின்றனர். இயற்கை மாறுதல்களையும் உற்பாதங்களையும் உருவகங்களால் விளக்குவதற்ககாக் கதைகள் ஏற்பட்டன எனப் பொதுவிளக்கம் அளிக்கின்றனர். இயற்கையின் வளம், பிறப்ப, இறப்பு போன்றவற்றை விளக்குவது பழங்கதைகள் என்கிறார் மானிடவியல் பேரறிஞர் கர்.ஜேம்ஸ் பிரேஜர் (Frazer). ஆசை நிறைவேறுவதற்குரிய கருவி பழங்கதைகள் என்கிறார் உளவியல் பேரறிஞர் பிராய்டு (குசநனர) மனிதகுலத்தின் நனவிலி மனக்கனவுகளைக் காட்டுவது பழங்ககைகள் என்கிறார் யுங் (Jung) என்னும் பேரறிஞர்.

நாட்டுப்புறக்கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். மரபு வழிப்பட்டதாகும். பல நூற்றாண்டுக்காலமாக மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வருவதால், திரிபடைவதைக் காண்கிறோம். இக்கதைகளின் மூல ஆசிரியர் யார் என அறியவொண்ணாமையும் ஒரு வித வாய்ப்பாட்டுக்கள அடங்கும் தன்மையுடையன என்பதும் நாட்டுப்புறக் கதைகளின் இயல்புளாகும்.

உலகில் தொன்றுதொட்டு நாட்டுப்புறக் கதைகள் வழங்கி வந்தாலும், அ∴து அச்சேறிய காலம் 16ம் நூற்றாண்டாகும். தமிழில் 1867 ஆம் ஆண்டு வீராச்சாமி நாயக்கர் 'மயில் ராவணன் கதை'யை வெளியிட்டார். தமிழில் அச்சேறிய நாட்டுப்புற கதைகளைத் தொகுத்து காண்போம்.

| | | |
|---|---|---|
| 1867 | வீராச்சாமி நாயக்கர் | மயில் ராவணன் கதை |
| 1871 | ----------- | விக்கிரமாதித்தன கதை |
| 1873 | சி. | கதா சிந்தாமணி (மரியதை |

| | | |
|---|---|---|
| | மாணிக்கமுதலியார் | இராமன் கதை) |
| 1886 | பண்டித நடேச சாஸ்திரி | திராவிட மத்தியகாலக் கதைகள் |
| 1886 | பண்டித நடேச சாஸ்திரி | தக்காண பூர்வ கதைகள் |
| 1891 | புஷ்பரத செட்டியார் | விநோதரமஞ்சரி |
| 1897 | இராஜேந்திரம் பிள்ளை | பூலோக விநோதக் கதைகள |
| 1933 | கஸ்தூரி அய்யங்கார் | பஞ்சதந்திரக் கதைகள் |
| 1953 | அனவரத விநாயகம்பிள்ளை | |
| 1970 | எஸ்.லீலா | |
| 1975 | அ.லெ.நடராசன் | |
| 1952 | ------------- | ஈசாப் கதைகள் |
| 1952 | வாணன் | உலக நாடோடிக் கதைகள் |
| 1954 | கா.அப்பாதுரை | நாட்டுப்புறக் கதைகள் |
| 1955 | இராமச்சந்திரன் (மொழிபெயர்ப்பு) | டெக்கமாரான் கதைகள் |
| 1958 | அர.இராமநாதன் | இராயர் அப்பா |
| 1977 | கி.மா. பக்தவத்சலம் | தெனாலிராமன் கதைகள் |
| 1957 | க.அ. இராமசாமிப்புலவர் | தென்னாட்டுப் பழங்கதைகள் |
| 1957 | அ.லெ. நடராசன் | அரபுக் கதைகள் |
| 1964 | வை.கோவிந்தன் | பழங்காலக் கதைகள் |
| 1965 | வை.கோவிந்தன் | ஈசாப் குட்டிக் கதைகள் |
| 1966 | கி. ராஜநாராயணன் | தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள் |

| | | |
|---|---|---|
| 1968 | எல்லார்வி | குழந்தைகளுக்கான நாடோடிக் கதைகள் |
| 1968 | எஸ்.கே.ஸ்வாமி | போதிசத்துவர் கதைகள் |
| 1969 | K.A. Seethalakshmi | Folktales of Tamil Nadu |
| 1970 | வை.கோவிந்தன் | பாரதநாட்டு பாட்டிக் கதைகள் |
| 1974 | வை.கோவிந்தன் | குழந்தைக் கதைகள் |
| 1977 | கி. ராஜநாராயணன் | தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள் |
| 1978 | அ.லெ.நடராசன் | அலாவுதீனும் அற்புத விளக்கும் |
| 1979 | இரா. இளங்குமரன் | தமிழ்நாட்டுப் பழங்கதைகள் |

இக்கதைகளில் தெனாலிராமன் கதை, மரியாதை இராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை போன்றவைகள் மக்களிடையே பெருமளவில் வழக்கிலுள்ளவைகளாகும். இதைப் போன்றே மேலே நாட்டிலும் சாசர் எழுதிய ‘காண்டர்பரி’க் கதைகள், டானியல் டீபோ (Daniel Defoe) எழுதிய ‘ராபின்சன் குருஸோ’, ஸ்விப்ட் (Swift) எழுதிய ‘கலிவரது பிரயாணங்கள்’, டென்னிசன் எழுதிய ‘அரசர் கதைகள் (Idylls of the kind), கிரீம் சகோதரர்கள் எழுதிய தேவதைக் கதைகள் (fairy tales), சார்லஸ் பெர்ரால்ட் (Charles Perrault) எழுதிய ‘தேவதைக் கதைகள்’ மற்றும் அரபுக்கதைகள் உலகில் அனைவராலும் விரும்பிப் படிக்கும் கதைகளாகும். சிறந்த நீதிகளைப் போதிக்கும் பஞ்சதந்திரக் கதையும் உலகப் புகழ் பெற்றவையாகும். பஞ்சதந்திரத்தையொட்டி நாராயண பண்டிதரால் எழுதப்பட்ட இதாதெசம் மித்தரபேத, சுகிரதுலாப, சமா, சந்தி என நான்க பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குணாட்டியர் எழுதிய பிருஹத் கதையைக் கதைக்களஞ்சியம் என்றே கூறுவர். காதரித் சாகரம், வேதாள பஞ்ச விம்சதி, சகசப்கி, கதாகுகம மஞ்சரி போன்றவை வடமொழியில் மிகப் புகழ்பெற்ற நாட்டுப்புறக் கதைகளாகும்.

வகைப்படுத்துதல்

நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறக் கதைகளைப் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்துகின்றனர். பெரும்பாலும் நாட்டுப்புறவியலாளர்கள் நாட்டுப்புறக் கதைப் பாடல்களே நான்க பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

1. மனிதக் கதைகள் (Human Stories) - காதல் கதைகள, விகடக் கதைகள், உல்லாசக் கதைகள், வேடிக்கைக் கதைகள், நீதிக்கதைகள, பிரயாணக் கதைகள் முதலியன.

2. மிருகக் கதைகள் (Animal Stories)

3. மந்திரக் கதைகள; (Magic Stories)

4. தெய்வக் கதைகள் (god's Stories)

ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்களது தமது 'The Tales' என்ற நூலில் கதைகளைப் பின்வருமாறு தொகுத்தும் வகுத்தும் கூறுகிறார்.

1. வீட்டுக் கதைகள்
2. இயற்கை கடந்த பகைவர்கள்
3. மந்திரங்களும் அதிசயங்களும்
4. காதலர்களும் மணமானவர்களும்
5. கடமை
6. நன்றி
7. உறவினர்கள்
8. மேலான சக்திகள்
9. உண்மைக் கதைகள்
10. விகடங்களும் கட்டுக்கதைகளும்
11. பிராணிகளின் கதைகள்
12. கட்டுக்கதைகளும் மரபுக் கதைகளும்

எனப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து ஆராய்ந்துள்ளார்.

ஆனால் பெரும்பாலான ாட்டுப்புறவியலாளர்கள் மேற்கண்ட நான்க பெரும்பிரிவைப் பற்றித்தான் குறிப்பிட்டுள்ளனர்.

1. **மனிதக் கதைகள்**

மனிதர்களைப் பற்றியும் மனித உணர்வுகளைப் பற்றிய கதைகளும் மனிதக் கதைகளின்பாற்படும். அரசர்களைப் பற்றிய கதைகளும் இதில் அடங்கும், காதல், உல்லாசம், நீதி, பிரயாணம் போன்றவற்றைப் பற்றிய கதைகளும் இவற்றின் கண் அடங்கும்.

**2. மிருகக் கதைகள்**

மிருகங்களைப் பற்றிய கதைகளை மிருகக் கதைகள் என்பர். சில கதைகளில் மிரகங்கள் பேசுவதாகவே கூறப்பட்டிருக்கும். மனிதர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை மிருகங்கள் மீது ஏற்றிக் கூறுவர். நடைமுறையில் கூட, தான் சொல்ல வேண்டிய கருத்துக்களை மிருகங்கள் மீது ஏற்றிக் கூறுவர். நடைமுறையில் கூட, தான் சொல்ல வேண்டிய கருத்துக்களை மற்றவர்கள் இப்படிக் கூறுகின்றார்கள் என்று கூறுகின்ற நிலையைக் காண்கிறோம். சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு மிருகக்கதைகள் மூலம் நீதிகளைப் போதிப்பதுண்டு. மிருகங்கள் பேசுவதாகக் கூறப்படுவது இறந்தால் ஆவி தனியே பிரிந்து பறவை, விலங்கு உருவில் புகுந்து கொள்ளும் என்ற ஆவியுலகக் கோட்பாடு (யுைெஅளைஅ) காரணமாகியிருக்கலாம். அதனால் தான் சிலர் உண்பதற்கு முன் காக்கை, குருவிகட்கு அன்னமளிப்பகை காணலாம். இறந்த முன்னோர் பறவை உருவில் வருவதாக நம்பப்படுவதேயாகும். மிருகங்களுக்கு மட்டுமின்றி மரம், செடி, கொடிகளுக்கும் பேசும் சக்தி இருப்பதாகக் கூறப்படுவதற்கு ஆவியுலகம் கோட்பாடே காரணமாகும். மிருகக் கதைகளில் கதையின் முடிவு நீதி போதனையாகயிருப்பின் அதனையும் 'Fables' என்பர். மிருகக் கதைகளில் மிருகங்களில் இயல்புகளையும் குணாதிசயங்களையும் கூறுவதை விட, மனித

இனத்திற்கு நீதியைப் போதிப்பதே குறிக்கோளாக உள்ளது. நன்றியுள்ள, நாய், தந்திர குணமுள்ள நரி போன்ற கதைகளின் தலைப்பே நமக்கு உணர்த்துகின்றது.

**3. மந்திரக் கதைகள்**

இவை மந்திர தந்திரங்களைப் பற்றிய கதைகளாகும். இக்கதைகளில் மந்திரவாதிக்கு முக்கிய இடம் உண்டு. பேய, பிசாசுக் கதைகளும் இவற்றில் அடங்கும். மனித இன வரலாற்றில் பழங்கால மனிதன் இயற்கையை வெல்ல, மந்திர தந்திரங்களை உண்டாக்கினான். அக்காலகட்டத்தில் இத்தகைய கதைகள் தோற்றம் பெற்றன எனக் கூறலாம். மக்கள் தாம் கூற விரும்பும் கருத்துக்களை மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றின் மீது ஏற்றிக் கூறப்படுவதைக் காணலாம். இக்கதைகளின் மூலம் மக்களின் பழங்கால எண்ணங்கள் வெளிப்படுகின்றன.

**4. தெய்வக் கதைகள்**

தெய்வங்களைப் பற்றிய கதைகளில் உலகப் படைப்புகளைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கும். ஞாயிறு, திங்கள, காற்று, பூமி பற்றிய புராணக் கதைகளும் இவற்றின்கண் அடங்கும். புராணக் கதைகள் பழங்கால சமூகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன. சூரியன, சந்திரன் தெய்வங்களைப் பற்றிய பழங்கால மக்களது எண்ணங்களைப் புராணக் கதைகள் பிரதிபலிக்கின்றன.

**இப்பாடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு – மணிவாசகர் பதிப்பகம்

**மாதிரி வினா:**

1. நாட்டுப்புறவியலில் எழுத்திலக்கிய தாக்கம் பற்றி எழுதுக?
2. நாட்டுப்புறக் கதைகள் பற்றி எழுதுக?

## குறிப்பு

## அலகு – 5
## நாட்டுப்புறக் கலைகள்

### நாட்டுப்புறக் கலைகள்

மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாக மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகளே நாட்டுப்புறக் கலைகள் எனலாம். நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் ஜீவ ஊற்றாகும். அவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இயற்கையறிவும் ஆழ்ந்த உணர்ச்சியும் எளிமையும் நேரடித் தன்மையும் இக்கலைகளில் மறைந்திருக்கின்றன. இயற்கையோடியைந்த கலைகள் சமயத்துடனும் பின்னர் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. அழகியல் உணர்வு இக்கலைகள் மூலம் பிரதிபலிக்கின்றது.

கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று பிரிவுகளாக கொள்ளலாம் : 1. தொன்மைக் கலை (Primotive art) 2. நாட்டுப்புறக் கலை (Folk art) 3. செம்மைக்கலை (Classical art). தொன்மைக்கலையைப் பழங்குடி மக்களிடையேயும் நாட்டுப்புறக்கலையை நாட்டுப்புற மக்களிடையேயும் செம்மைக் கலையைச் சற்று முன்னேறிய மக்களிடையேயும் காணலாம். இயற்கையோடியைந்து வாழ்ந்த காலத்தில் தொன்மைக் கலை தோன்றியிருக்க வேண்டும். நாகர்கள் (Nagas) கோண்டு இன மக்களின் நடனம் காட்டிலுள்ள அபாயங்களைக் குறிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. சௌராஷ்டிர மீனவர்களின் நடனம் ஆரவாரிக்கும் கடலையும் சமவெளி மக்களது நடனம் இயற்கையின் அமைதியையும் குறிக்கின்றது. நடனங்கள் தட்ப வெப்பநிலைக்கேற்றவாறு மாற்றமடைகின்றன. பழங்குடி மக்களிடையே காணப்படும் நடனம் வீர நடனமாகும். இயற்கைச் சூழலில் எழுந்த கலைகள் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்க வேண்டும். பின்னர் சமய அடிப்படையில் கலைகள் வளர்ச்சி பெற்றன. புனிதத்தையும் பேராற்றலையும் அடிப்படையாகக் கொண்டு பல நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன. ஆரம்ப காலத்தில் கெட்ட ஆவிகளினின்றும் காப்பாற்றுமாறு தெய்வங்களை வேண்ட பல கலைகள் தோன்றின. எனவே கலைகளைச் சமூகச் சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். சமூகக் கலைகள் உழைப்பின் பலன், காதல், சமூக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கலைகளும் சமயமும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. மக்களின் சமய உணர்வு, சமுதாய வாழ்க்கை, நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை விளக்கும் தன்மையுடையனவாக நாட்டுப்புறக்கலைகள் விளங்குகின்றன. வீரக் கலைகள் அனைத்துச் சமூகச் சார்புக் கலையின் பாற்படும்.

### கரக ஆட்டம்

தலையில் குடத்தை வைத்து ஆடும் ஆட்டத்திற்குக் கரகாட்டம் என்று பெயர். ‘கரகம்’ என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி, கங்கை, பூங்குடம் என்ற பொருளைத் தருகிறது. சிலம்பில் கூட கரக ஆட்டத்தைக் ‘குடக்கூத்து’ என்று குறிப்படப்பட்டுள்ளது. கரக ஆட்டம் ஆடும் போது பத்து வரை எண்களைக் குறிப்பிட்டு, பாட்டு பாடுவர்.

ஒண்ணும் கரகமாடி எங்க முத்துமாரி
ஒசந்த கரகமாடி எங்க முத்துமாரி

ரெண்டாம் கரகமாடி எங்க முத்துமாரி

ரத்தின கரகமாடி எங்க முத்துமாரி

கரக ஆட்டம் மாரியம்மன் திருவிழாவுடன் தொடர்புடையதாகும். மாரி சொரிந்து நாட்டில் வளம் கொழிக்க வேண்டுமென்பது தான் இதன் நோக்கமாகும் சமய உணர்வில் முகிழ்ந்து இக்கலை. தொழிலுணர்வுக் கலையாகவும் நடத்தப்படுகின்றது. சமயவுணர்வு கரகம் தண்ணீராலும் தொழில் நோக்குடைய கரகம் அரிசியாலும் நிரப்பபட்டிருக்கும். கரக ஆட்டம் இன்று தெய்வ வழிபாடாகவும், கலை வழிபாடாகவும் உள்ளது.

**கோலாட்டம் :**

இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டம் கோலாட்டமாகும். கோலாட்டத்தில் ஆரம்ப காலத்தில் இறைவனை வாழ்த்திப் பாடும் பாடல்களே இடம் பெற்றிருந்தன. கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்று கோல்களை முன்னும் பின்னும் திரும்பி மாறி மாறி அடித்து விளையாடுவர். கண்களைப் பற்றிக் கோலாட்டம் பாடல்கள் பாடுவர். பின்னர் சமூகத்தைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் கோலாட்டம் பாடல்கள் எழுந்தன. கோலாட்டத்தை வட மொழியில் ‘தண்டவாஸ்யா’ என்றும், இராஜஸ்தானில் ‘சுண்டியராஸ்’ என்றும் கூறுவர். காஞ்சிப்புராணத்தில் ‘செவ்வாய்ச்சியர் கோலாட்டம்’ என்று குறிக்கப்பட்டுள்ளது.

பின்னல் கோலாட்டம் : ஆடுபவரது கரங்கள் கயிறுகளால் கட்டப்பெற்று உயரே ஓரிடத்தில் கட்டப்பட்டு இருக்கும். சுற்றச் சுற்ற பின்னல்கள் போடப்படும். மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்படும். பல்வகை வண்ணங்களாலான பின்னல் காண்பதற்கு கவர்ச்சியாக இருக்கும். பின்னல் கோலாட்டம் ‘மோபோல்’ நடனத்தைப் போன்றிருக்கும்.

**கும்மியாட்டம் :**

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மியாட்டம் மிக முக்கியமானதொன்றாகும். கும்மி ஆட்டத்தைக் குஜராத் கர்பா நடனத்துடனும், இராஜஸ்தான் கும்மார் ஆடலுடனும் தொடர்புபடுத்துவர். பெண்கள் விளக்கைச் சுற்றி நின்று கும்மியடிப்பர். கிராமப் புறங்களில் நடைபெறும் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் திருவிழாக் காலங்களில் முளைப்பாரியைச் சுற்ற நின்று பெண்கள் கும்மியடிப்பர். அப்படிக் கும்மியடிக்கும் போது பாடல்களும் பாடுவர். காலப்போக்கில் கும்மிப் பாடல்கள் இலக்கியத்தில் தனிப் பிரிவாக வளரத் தொடங்கின. அரிச்சந்திரன் கும்மி, வள்ளியம்மை கும்மி, சிறுத்தொண்டநாயனார் கும்மி என்ற நூல்களும் நபியுல்லாக் கும்மி, ஞான உபதேசப் பேரின்பக் கும்மி போன்ற இஸ்லாமிய, கிறிஸ்தவக் கும்மிகளும் உண்டு.

**ஒயிலாட்டம்:**

பொதுவாகக் கும்மி என்பது பெண்கள் ஆடும் ஆட்டமாயினும் ஒயிலாட்டம் ஆடவர்களாலேயே ஆடப்படுவாதாகும். ஆடவர்கள் தலைப்பாகை முதலியவற்றை அணிந்து கொண்டு கைக்குட்டையேந்தி காலில் சலங்கைக் கட்டிக்கொண்டு ஆடுவர். பழங்கதையோ வரலாற்றையோ இசையோடு பாடி ஆடுவர். அத்துடன் அந்தந்த வட்டாரக் கதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பர். திருநெல்வேலியில் கட்டபொம்மனுக்கும், மதுரையில் மதுரைவீரனுக்கும், கோவையில் வள்ளித் திருமணத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

‘தேரோடும் எங்கள் சீரான மதுரையிலே
ஊரார்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்

என்றும்,

‘சிறகை விரித்தால் மயிலாட்டம்
சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம்
சீறிப்பாய்ந்தால் புலியாட்டம்
திரையில் மறைந்தால் நிழலாட்டம்

என்றும் பாடுவது இங்குக் குறிப்படத்தக்கது.

**பொய்க்கால் குதிரையாட்டம் :**

பொய்க்கால் குதிரையாட்டத்தைப் புரவியாட்டம் என்றும் கூறுவர். குதிரையின் உருவத்தை அட்டைகளாலும் மூங்கில் கீற்றுக்களாலும் செய்து பல வண்ணத் துணிகளால் ஒப்பனை செய்வர். குதிரையின் முதுகுப் புறத்தில் ஆள் அமர்வது போன்று நிற்கச் சிறிது இடம் விடப்பட்டிருக்கும். அவ்வாறு அமர்பவரின் காலில் சலங்கை கட்டப் பட்டிருக்கும். குதிரையாட்டம் ஆடும் போது நையாண்டி மேளம் முழங்கப்படுகின்றது. சிலம்பில் இவ்வாட்டம் ‘மரக்கால் ஆட்டம்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மராட்டிய மன்னர்கள் காலத்தில் இது தஞ்சையில் நடத்தப்பட்டதாக அறிகிறோம். பொய்க்கால் குதிரையாட்டத்தின் தாயகம் தஞ்சை ஆகும். மராட்டிய மன்னர்கள் இக்கலைக்குப் பேராதரவு அளித்தனர்.

நாட்டுப்புறத் தெய்வமான அய்யனாருக்கும் குதிரைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. குதிரைக்கும் சமய உணர்வுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

**மயிலாட்டம் :**

மயில் போன்று உருவம் செய்து மயில் தோகையால் அலங்காரம் செய்து, மயிலாட்டம் ஆடுவர். மயிலாட்டம் ஆடுபவர்கள் முருகக் கடவுள் போன்று வேடம் பூண்டு. கையில் வேலையும் வைத்திருப்பர். மயிலாட்டம் பார்ப்பதற்கே மிக அழகாயிருக்கும். முருக வணக்கத்தின் அடிப்படையின் இம்மயிலாட்டம் தோன்றியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. இவ்வாட்டமும் சமய உணர்வுடன் ஒன்றிக் கலந்துள்ளது.

**கூத்து :**

கிராமங்களில் திறந்த வெளிகளில் நாட்டுப்புறக் கலைஞர்களால் நடத்தப்படுகின்றது கூத்து, கூத்து பழமையின் சின்னமாக, பண்பாட்டின் எச்சமாக விளங்குகின்றது. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகமெனின் மிகையாகாது. நாட்டுப்புற மக்களின் எண்ணம், செயல், பண்பாடு, வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டுவதே இக்கலை. கூத்து பற்றியே ஒரு பழமொழி வழங்குகின்றது.

‘‘கூத்தாடி கிழக்கே பார்ப்பவன்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்’’

இதிலிருந்தே கூத்தானது விடியும் வரை நடைபெறும் என்பது தெரிகிறது. ஆண்களே இடம் பெற்ற இக்கூத்தில் பெண்களும் இடம் பெறலாயினர். கூத்துக்கான செய்திகளைப் புராண இதிசாசங்களிலும் மக்களது வாழ்க்கை முறையிலிருந்தும் எடுத்துக் கூறினர். அந்தந்த இடங்களுக்கேற்ப கூத்துக்கள் மாறுபடுவதுண்டு.

கூத்துக்கள் பல வகைப்படும்

தெருக்கூத்து கழைக்கூத்து பாவைக்கூத்து

மரப்பாவைக் கூத்து தோற்பாவைக்கூத்து

**தெருக்கூத்து :**

தெருவிலே நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து எனப்படும். தெருக்கூத்து நாடோடி கூத்து வகையைச் சார்ந்ததாகும். நாடகமேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்தவெளி அரங்கிலும் இக்கூத்து இரவு முழுவதும் நடைபெறும் எனத் தமிழ்க்கலைக் களஞ்சியம் கூறுகிறது. பாரதக்கதைஇ இராமாயணக்கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைத் தெருக்கூத்தாக நடிக்கின்றனர். ஆடலும் பாடலும் இக்கூத்தின் முக்கிய அம்சமாகும்.

மழையை வேண்டுவோர் விராட பருவத்தையும், மணம் விரும்புவோர் மீனாட்சி கல்யாணத்தையும், பிள்ளை பேறு வேண்டுவோர் சத்தியவான் சாவித்திரியையும் நடத்துவர்.

**தோற்பாவைக்கூத்து :**

தோற்பாவைகளின் நிழல்கள் மூலம் இக்கூத்தை நடத்திச் செல்வதால் தோற்பாவை நிழல் கூத்து என்கின்றனர். அந்திராவில் இதனை ‘தோலு பொம்மலாடா’ என்றும், மைசூரில் ‘தொகலு பொம்மை ஆடா’ அல்லது ‘சக்கல கொம்பே அடா’ என்றும், கேரளாவில் ‘தோல் பாவைக்கூத்து’ அல்லது ‘நிழற்காட்சி’ என்றும், ஒரிஸ்ஸாவில் ‘ராவன் சாய’ என்றும், மகாராஷ்டிராவில் ‘சா்ம பகுலி நாட்யா’ என்றும் வழங்குவர்.

பாவைக் கூத்தில் மூன்று முதல் ஆறு பேர் இருப்பர். பாவைகளை இருவர் ஆட்டுவர். இருவர் பாடுவர். பாவைக்கூத்துக்களை ஒரு காலத்தில் மன்னர்கள் ஆதரித்து வந்தனர். திறந்தவெளி அரங்கில் வெள்ளைத்திரை கட்டப்பட்டிருக்கும். உள்ளே ஒரு விளக்கைத் தொங்க விட்டிருப்பர். விளக்குக்கும் திரைக்குமிடையில் பாவைகள் இயக்கப்படும். காலில் கட்டையணிந்து ஒலி எழுப்புவர்.

இதனை நடத்தபவர்களில் பெரும்பாலோர் மராட்டிய ராவ்ஜீக்கள், மற்ற மாநிலங்களில் கோயில் விழாவின் போது நடத்துகின்றனர். தமிழகத்தில் முழுக்க முழுக்க இக்கலை மக்களை நம்பித்தான் உள்ளது. தமிழகத்தில் இராமாயணம், நல்ல தங்காள் கதை, அரிச்சந்திரன் கதையைத் தோற்பாவை கூத்து மூலம் நடத்துகின்றனர். இராமாயணம் போன்ற கதைகளைத் தோற்பாவைக் கூத்து மூலம் காண்பதால் மழை பொழியும் என மக்கள் நம்புகின்றனர்.

முதன் முதலில் பாவைக்கூத்து சைனாவில் நடத்தப்பட்டதாகவும், பின் இந்தோனேசியா வழியாக இந்தியாவுக்கு வந்ததாகவும் கூறுவர்.

**நாட்டுப்புற நம்பிக்கைகள் :**

‘நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு (common Denominator) எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் (Talor) அவர்கள். வாழ்க்கை முறைகளின் கூட்டுச்சேர்க்கை பண்பாடு என்கிறார்

மாலினோவஸ்கி (Malionowski). பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் இதன்கண் அடங்கி விடுகின்றன. பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவயையாகும். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிகற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாக தொடர்ந்து வரக் காண்கிறோம்.

நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும், மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

**பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்**

பண்டைக்காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் வாழும் பழங்குடி சமதாய வரலாற்றை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். பண்டைத் தமிழரிடையே நிலவிய நம்பிக்கைகளையும் சகுனங்களையும் இவண்கண் சுருக்கமாக காண்போம். கி.பி. 5ம் நூற்றாண்டைச் சார்ந்த ‘ஆசாரக் கோவை’ மூலம் பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறிகிறோம்

தொல்காப்பியத்திலே ‘நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும்’ (தொல்பொருள் - 91) எனக் குறிப்பிட்டுள்ளது. ‘புள்’ எனக் குறிப்பட்டது முன்னா் பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பினவாக அமைந்துள்ளதை ‘வாய்ப்புள்’, ‘பறவாப்புள்’ எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

‘கூகை அலறினால் சாவு வரும்’.

என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது:

‘அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்’. (புறம் - 280)

‘காகம் கத்தினால் விருந்தினர் வருவர்’ என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

‘மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடைய மரபினின் கிளையோடார’.

(குறுந்தொகை-391)

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும் பொழுது காகம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர்.

பண்டைக் காலத்தில் காட்டிடையே மக்கள் செல்லும் போது ஆறரலைக் கள்வர் மிகுந்த தொல்லைக் கொடுத்துக் கொண்டேயிருப்பர். ஆறரலைக் கள்வர் நடமாட்டத்தைக் ‘கணந்துள்’ என்ற பறவை சத்தம் எழுப்பி மற்றவர்கட்கு எச்சரிக்கை விடுத்த செய்தியையும் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

‘ஆற்றய லிருந்த இருந்தோட்டஞ்சிறை

நெடுங்காற் கணந்தள் ஆளறிவுறீ,

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்.’

(குறுந்தொகை-350)

ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும் போது நல்வார்த்தைக் கேட்பதும் நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. இந்த நம்பிக்கை இன்றும் நிலவுவகைக் காணலாம். தொல்காப்பியர் இதனைப் ‘பாக்கத்து விரிச்சி’ எனக் குறிப்பிடுகின்றனர். இதனை விரிச்சி நிற்றல், வாய்ப்புள், பறவாப்புள், நற்சொல், வாய்ச்சொல் என்றும் வழங்குகின்றனர். கனவு காணல், பல்லி சொல்லுதல், கண்துடித்தல் பற்றிய நம்பிக்கைகளையும் காண்கிறோம். உடம்பிலுள்ள ஒரு பகுதி துடிப்பது முதலியவற்றைக் கொண்டு எதிர் காலத்தை க் கணிப்பதும் உண்டு. இடது கண் துடிப்பது பெண்களுக்கு நல்லது என எட்கர் தெர்ஸ்டன் (Edgar Thurston) கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. எதிர்நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

‘நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே’ (கலித்தொகை – 110)

‘நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்’ (ஐங்குநுறுாறு-2180)

அடியார்க்கு நல்லார் ‘கனாநூல்’ பற்றியும் குறிப்பிடுகின்றார். இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவதை இன்றும் காண்கிறோம்.

நம்பிக்கைகளின் வகைகள்

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன.

1. குழுந்தை பற்றிய நம்பிக்கைகள்
2. பிள்ளைப் பேற்று நோன்பு

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்துவிட வேண்டும் என விரும்புவர்.

குழந்தை இல்லையெனின் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டும் என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வருதல் உண்டு. ‘அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம்’ என்ற பழமொழியே வழங்குகிறது. அரசமர வழிபாடு மலட்டுத்தன்மையைப் போக்கவல்லது எனச் சங்கர் சென்குப்தா குறிப்பிட்டுள்ளார். வெள்ளிக்கிழமை விரதமும் பாம்புப்புற்று வணக்கமும் பிள்ளைப் பேற்று நோன்புகளாகும்.

**1.2 கண்ணேறு கழித்தல்**

குழந்தைகளுக்குக் கண்ணேறு கழிப்புச் செய்வதுண்டு. சில கண்களுக்கத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. எனவே, அத்தகையோரது கண்பட்டால் குழந்தைக்கு நோய்நொடி வரும் என்று நம்புகின்றனர். எனவே தான் ‘கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது’ என்று கூறவர். கண்ணேறு பட்டதைக் கழிப்பதற்காகச் சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழிந்து விடுமென மக்கள் நம்புகின்றனர்.

‘கண்ணான கண்ணார்க்கு கண்நோக்கம் வராமல்

சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு

என்ற பாடல் கண்ணேறு கழிக்கும் முறையைக் கூறுகின்றது. இதனைத் ‘திருஷ்டி கழித்தல்’ என்று கூறுவர்.

புதுவீடு கட்டும் போது பூசணிக்காயில் மனித உருவமிட்டுக் கரும்புள்ளி இடுதலும், விளைந்த நிலத்தில் வைக்கோல், துணி முதலியவற்றால் உருவம் செய்து கரும்புள்ளி இடுதலும் கண்ணேறு கழித்தல் என்ற நம்பிக்கையில் செய்வதாகும்.

**1.3 காது குத்தல்**

குழந்தைக்குச் சிறு காயம் ஏற்பட்டால் எமன் அக்குழந்தையைத் தூக்கிச் சென்று விடுவான் என்ற நம்பிக்கையின் காரணமாகக் காதுகுத்தும் வழக்கம் தமிழ்நாட்டில் தோன்றியிருக்க வேண்டும். காது குததும் வழக்கம் தமிழ்நாடு மட்டுமின்றி ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. காது குத்தும் போது ஏதேனும் உலோகத்தையும் அணிவிப்பர். தீமை தரும் ஆவிகள் தலை, வாய், மூக்கு, காது ஆகிய உறுப்புகள் வழியாக எளிதில் புகுந்துவிடும் என்ற நம்பிக்கையில் காதில் துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சக்தியாக காதில் ஏதேனும் ஓர் உலோகத்தை அணிவித்தல் காது வழியாக தீய ஆவி நுழைவதை தடுத்து விடலாம் என்ற நம்பிகையில் இப்பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். காதுகுத்தும் சடங்கிற்கு இத்தகைய நம்பிக்கைகள் அடிப்படைக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

**1.4 குழந்தை கொடி சுற்றிப் பிறத்தல்**

குழந்தை கொடி சுற்றிப் பிறந்தால் அதன் தகப்பனாருக்கு ஆகாது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. “கொடி சுற்றிப் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது, மாலை சுற்றிப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது’ என்ற பழமொழி இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம்.

1.5. முதல் குழந்தை பெண்ணாகியிருப்பின் அக்குடும்பத்திற்கு வளம் சேரும்.

1.6 மூன்று பெண் பிள்ளைகளுக்கு அடுத்துப் பையன் பிறத்தலும் மூன்று ஆண் பிள்ளைகளுக்கு அடுத்துப் பெண் பிள்ளை பிறத்தலும் அழகல்ல.

1.7 குழந்தையின் அருகே இரவில் வௌவால் பறந்தால் நல்லதல்ல.

1.8 கா்ப்பிணி, படுத்து எழுந்திருக்கும் போது வலது கையை ஊன்றினால் ஆண் குழந்தை பிறக்கும்.

1.9 குழந்தை பிறக்கும் போது தலைமயிா் குறைவாகயிருந்தால் பெற்றோா்க்குக் கடன் தொல்லை குறைவாகயிருக்குமென்பா்.

1.10 குழந்தை பிறக்கையில் தலைமயிா் அடா்த்தியாகயிருந்தால் பெற்றோா்க்குக் கடன் தொல்லை அதிகமாயிருக்கும் என்பா்.

**2. திருமணம் பற்றிய நம்பிக்கைகள் :**

2.1 இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும். மற்றொரு குடும்பம் தாழ்நிலை அடையும்.

2.2 திருமணத்திற்குப் பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக் கூடாது.

2.3 திருமணம் பற்றிய கனவு நல்லதன்று

2.4 மணமான பெண் மாப்பிள்ளை வீட்டில் நுழையும் போது, வலதுகாலை எடுத்து வைத்து வர வேண்டும்.

2.5 ஆடி மாதத்தில் பெண் பாா்த்தால் நல்லதல்ல.

2.6 சுமங்கலிகள் தான் திருமணச்சடங்கில் பங்கு பெற வேண்டும்

2.7 திருமணமான மணமக்களை மஞ்சள் கலந்த அரிசியால் வாழ்த்த வேண்டும்.

2.8 கணவன் வீட்டிற்கு வந்தவுடன் மணப்பெண்ணானவள் உப்பிலோ அல்லது நெல்லிலோ கை வைக்க வேண்டும்.

2.9 புதுமணத் தம்பதிகள் புதுவீட்டில் குடியேறக் கூடாது

2.10 ஆடி மாதத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாக இருக்கக் கூடாது. ஆடி மாதத்தில் உறவு ஏற்படின் கோடைக் காலமான சித்திரையில் குழந்தை பிறக்கும். அது தாயுக்கும் சேயிக்கும் உடல்நிலை கருதி (health point of view) நல்லதல்ல என்ற எண்ணத்தில் இப்படியொரு நம்பிக்கை தோன்றியிருக்கலாம்.

**3. கடவுள் பற்றிய நம்பிக்கைகள்**

3.1 இறைவன் அருளால் மக்கட்பேறு கிட்டுமென அனைவரும் நம்புகின்றனர்.

3.2 அபிஷேகம் செய்தல்

வாழ்வில் துன்பம் நேரும் போது இறைவனிடம் முறையிட்டுப் பால், தேன் போன்றவற்றை இறைவனின் படிமத்திற்கு அபிஷேகம் செய்தால் நோய் தீரும் என மக்கள நம்புகின்றனர். பழனி முருகன் கோவிலுக்கு மக்கள் பால் அபிஷேகம் செய்வது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**3.3 மாரியம்மனைப் பற்றிய நம்பிக்கை**

நாட்டில் மழை பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுமென நம்பினர் மக்கள். மாரியை வேண்டி வரங்கிடந்தமையால் தான் மாரி எனப்பட்டாளோ என எண்ணி வேண்டி உள்ளது. நாட்டில் உண்டாகும் அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்றும், அதனை நீக்குவதும் மாரிதான் என்றும் மக்கள் நம்புகின்றனர். அத்தகைய மாரிக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாவிட்டால் பிழைக்க முடியாது என்று மக்கள் நம்பினர் என்பதை,

'ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது

மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா.'

என்ற வரிகள் காட்டுகின்றன.

3.4 கோயிலில் பூக்கட்டிப் போட்டுச் சிறுகுழந்தைகளை எடுக்கச் சொல்லி நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.

3.5 தும்பிக்கையானைப் பாடினால் துன்பங்கள் வாரா என்று மக்கள் நம்பினர்.

"தும்பிக்கை உள்ளவரே துன்பங்கள் வாராமல்

நம்பிக்கை வைத்தெந்தன் நாவில் குடியிருந்து

……………………………வாக்கருளும்."

3.6 மாரியம்மன் பேர் நினைத்தால் பில்லி, பிசாசு, சூன்யம், வைப்பு முதலியவை பறந்தோடும் என மக்கள் நம்பினர்.

"உன்பேர் நினைத்தால் பில்லி பிசாசு பறந்தோடுமம்மா."

………………………………

**3. நோய்கள் பற்றிய நம்பிக்கைகள்**

நாட்டுப்பற்று மருத்துவம் (Folk Mediciene) பல நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும். மேலே நாட்டு மருத்துவ முறைகளினால் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடைமுறைகளும் நாட்டுப்புற

நம்பிக்கையாகக் காட்சி தருகின்றன. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற மருந்தினை நம்பிக்கை அடிப்படையில் பயன்படுத்துகின்றனர்.

4.1 அம்மை நோய் தெய்வக் குறை என நம்பி மாரிக்கு வழிபாடு செய்து, வேப்பிலையைப் பயன்படுத்துகின்றனர்.

4.2 இரட்டையர் தடவனால் சுளுக்குப் போய் விடும் என நம்புகின்றனர்

4.3 நோய்களைத் தெய்வங்கள் தீர்க்குமென்றும் அதற்கு நேர்த்திக் கடநே நல்ல மருந்து என்றும் நம்புகின்றனர்.

4.4 'அயிரம் பேரை (வேரை)க் கொன்றவன் அரைவைத்தியன்' என்ற பழமொழி நாட்டுப்புற மருத்துவத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆயிரம் மூலிகையைக் கொன்றாலும் அரை வைத்தியன் தான் ஆக முடியும் என நம்புகின்றனர்.

**5. வீடு பற்றிய நம்பிக்கைகள்**

5.1 இரவில் வீடு பெருக்கினால் குப்பையை வெளியே கொட்டக்கூடாது.

5.2 ஐந்தாவது பெண்ணும் ஆறாவது ஆணும் பிறந்தால் வீடு சிறப்புறும்

5.3 மாடு அசைத்து தின்னும் வீடு அசையாமல் தின்னும், (நம்பிக்கை பழமொழியாகி விட்டது)

5.4 கர்ப்பமான பெண்கள் இருக்கும் வீட்டில் குளவி கூடு கட்டும்

5.5. கர்ப்பிணிகள் எட்டாம் மாதம் தாய் வீடு செல்லக்கூடாது.

5.6 சிவப்பு எறும்பு சாரிசாரியாக வந்தால் வீட்டிற்கு கெட்டது.

5.7 செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கோ, புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கோ வரக்கூடாது.

5.8 தென்திசை நோக்கி வீடு இருப்பது நல்லது என்பர்.

5.9 தைமாதத்தில் புது வீட்டில் குடியேறுவது நல்லது

5.10 பிணம் வீட்டில் இருக்கும் போது அடுப்பு மூட்டக்கூடாது

5.11 வடதிசை நோக்கி வீடு கட்டுவது நல்லதல்ல.

5.12 விருந்தினர் சென்றதும் வீட்டைப் பெருக்கினால் அவர்களது தொடர்பு அத்துடன் அறுந்து விடும்.

5.13 விறகுச் சுமையை அவிழ்த்த பின்னரே வீட்டினுள் கொண்டுவர வேண்டும்.

5.14 புதுவீடு கட்டி முடிந்தால் எலுமிச்சையையும் பூசணியையும், வீட்டின் முன் உடைத்தாலோ அல்லது இரண்டாக்கினாலோ, கெட்டது விலகும்.

5.15 புது வீட்டிற்குச் செல்லும் போது உப்பையும் எடுத்துச் செல்ல வேண்டும்

5.16 நிலைப்படியில் தலையை வைத்துப் படுத்தால், லெட்சுமி தங்கமாட்டாள்.

5.17 காலையில் வீட்டின் பின்கதவுகள் தான் முதலில் திறக்கப்பட வேண்டும்.

5.18 இரவில் உப்பைச் சக்கரை எனக் கூறுவர்

5.19 இரவில் உப்பு, அரிசி, எண்ணெய் முதலியவற்றை மற்றவர்கட்குத் தரக்கூடாது. தந்தால் தரித்திரம் வரும்.

**6. உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகள்**

6.1 காலால் உணவை போஜனம் கிடைக்காது

6.2 கைராசிப்படி உணவின் சுவை அமையும்

6.3 பெண்களுக்கு மாறுகண்ணும் வலது தோள்பட்டையில் கரிய அல்லது நீல நிறத்தில் நீண்ட மச்சமும் இருந்தால் உணவு கஷ்டம் ஏற்படாதென்பர்.

6.4 மனைவி தன் பாத்திரத்திலுள்ள உணவைக் கணவன் பாத்திரத்தில் இடலாகாது. கணவன் மனைவிக்கு இடலாம்.

6.5 வாயிலிட்ட உணவைத் திரும்பத் தட்டில் இடக்கூடாது.

6.6 ஆடைகளுள் சில அதிர்ஷ்டத்தையும் வேறு சில துரதிர்ஷ்டத்தையும் தரும் என நம்புகின்றனர்.

6.7 சுமங்கலிகள் வெண்ணிற ஆடை அணியலாகாது.

6.8 திருமணப் பெண்ணிற்கு அனுப்பும் ஆடைகளில் கறுப்பு, வெள்ளை நிறங்கள் இருத்தலாகாது.

6.9 நகத்தில் பூ வளர்ந்தால் புத்தாடை கிடைக்கும்

6.10 புத்தாடைகளைச் செவ்வாயன்று வாங்கவும் உடுக்கவும் மாட்டார்கள்

6.11 புத்தாடைகளை அணியப் புதன் நல்லநாள்

6.12 புத்தாடைகளைச் சனியன்று உடுப்பது நல்லதல்ல

6.13 புத்தாடையை அணிந்து கொண்டு உறங்கக் கூடாது

6.14 விதவைகள் புத்தாடையை நனைத்து உடுக்க வேண்டும்

6.15 நடுவிரலில் மோதிரம் அணிவது நல்லதல்ல

6.16 பெண்கள் கைவளையலின்ற இருக்ககூடாது

6.17 தங்கவளையல் அணிந்தாலும் ஒரு கண்ணாடி வளையலாவது அணிந்திருக்க வேண்டும்.

6.18 பெண்கள் நெற்றியில் திலகம் எப்பொழுதும் இட வேண்டும்

6.19 தலையில் சூடும் மலர் நீண்ட நேரம் மணமுடையதாக இருந்தால், வருகிற மாமியார் நல்லவராகயிருப்பார்.

6.20 மோதிரக் கல் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களது நட்சத்திரத்திற்கேற்றாற்போல் நிறங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கெடுதி நேரும்.

**7. மரணம் பற்றிய நம்பிக்கைகள்**

7.1 ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஏகாதசியன்றோ இறந்தால் அவர் பெரும்பேறு செய்ததாக நம்பப்படுகின்றது.

7.2 சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் மற்றொரு சாவு விரைவில் நடைபெறும் என்று நம்பினர். எனவே தான் 'சனிப்பிணம் தனியே போகாது' என்று கூறுகின்றனர். சில இடங்களில் சனியன்று இறந்த பிணத்துடன் கோழியையும் புதைப்பர்.

7.3 மூத்த குழந்தை இறப்பின் வீட்டினுள்ளே புதைப்பர்

7.4 இறந்த அன்று மழை பெய்தல் நல்லது.

7.5 இறந்தவர் வாயில் அரிசி போட வேண்டும்.

7.6 இறக்கும் முன்னர் ஒருவர் விரும்பும் பொருளை அளித்தால் அவர் உயிர் எளிதில் பிரியும் என்பர்.

7.7. இறந்தவர்க்குரிய சடங்குகளை அனுஷ்டிக்கா விட்டால் தீங்கு நேரும்

7.8 இறந்தவர்களோடு அவர்கள் விரும்பிய பொருள்களையும் புதைப்பர்

7.9 மரண ஊர்வலம் எதிரே சென்றால் போகும் காரியம் வெற்றியடையும்.

7.10 மரண வீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிய வேண்டும்.

7.11 மரண வீட்டிற்குச் செல்பவர்கள் குளித்த பின்பு தான் வீடு திரும்ப வேண்டும்.

7.12 மரணம் அடைந்த நேரம் பகல் என்றால், நிறைநாழி நெல் பிணத்திற்கருகில் வைக்க வேண்டும்.

7.13 மரண வீட்டிற்குச் சென்று 'போய் வருகிறேன்' என்று கூறக்கூடாது. அப்படிக் கூறினால் அந்த வீட்டில் அடுத்து ஒரு சாவு நிகழும் என்று நம்புகின்றனர்.

7.14 மரண வீட்டில் பெண்கள் மாரடித்து அழுதால், மறு உலகம் கிட்டும் என் நம்புகின்றனர்.

7.15 இறந்தவர்க்குச் செய்யும் ஈமக்கிரியையால் இறந்த உயிர் வீடுபேறு அடையும் என நம்புகின்றனர்.

8. பயணம் பற்றிய நம்பிக்கைகள்

8.1 பயணத்திற்குப் புறப்படும் போது 'போய் வருகிறேன்' எனக் கூற வேண்டும்

8.2 வருடப் பிறப்பன்று பிரயாணம் மேற்கொள்ளக்கூடாது.

8.3 ஞாயிற்றுக்கிழமையன்று பயணம் மேற்கொள்ளக்கூடாது.

8.4 வெளியூர்ப் பயணம் செல்லும் போது சீயக்காய்தூள் எடுத்துச் செல்லக்கூடாது

8.5 பயணம் மேற்கொள்ளும் போது 'எங்கே போகிறாய்'? எனக் கேட்கக்கூடாது.

8.6 ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும் போது மூவராகச் சேர்ந்து செல்லக்கூடாது.

8.7 மழை தூறும் போது வீட்டை விட்டுப் புறப்படக்கூடாது.

8.8 கடவுளைத் தொழுதுவிட்டுப் பயணம் மேற்கொள்ளுதல் வேண்டும்

8.9 பயணம் புறப்படும்பொழுது ஏதேனும் கெட்ட சகுனத்தைக் காண நேரிட்டால், மீண்டும் வீட்டிற்கு வந்து சிறிது நேரம் அமர்ந்து தண்ணீர் அருந்திவிட்டு மீண்டும் புறப்பட வேண்டும்.

8.10 பயணம் புறப்படும் போது எண்ணெய் வணிகனையோ, ஒற்றைப் பார்ப்பனனையோ காண்பது கெட்ட சகுனமாகும்.

8.11 பயணம் புறப்படும் போது தாயையும் சேயையும் காண்பது நல்லது.

8.12 பயணம் புறப்படும் போது சவ ஊர்வலத்தைக் காண்பது நல்லது.

8.13 பயணம் புறப்படும் போது அழுக்குத் துணியோடு வரும் வண்ணானைக் காண்பது நல்லது.

8.14 பயணம் புறப்படும் போது வெளுத்த துணியைக் கொண்டு வரும் வண்ணானைக் காண்பது நல்லதல்ல

8.15 பயணம் செல்லும் போது கன்னிப்பெண்கள் நிறைகுடத்துடன் வருதல் நல்லது.

**9.6 எமன் பற்றிய நம்பிக்கைகள்**

தமக்கு விதிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் எமன் வந்து உயிரைக் கவர்ந்து செல்வதாக மக்கள் நம்புகின்றனர். அவரவர் செய்த நன்மை, தீமைகளுக்கேற்ப உயிர் வெவ்வேறு உலகங்களுக்குச் செல்வதாக மக்கள் நம்புகின்றனர்.

**9.7 தலை எழுத்து, விதி பற்றிய நம்பிக்கைகள்**

மக்கள் தங்களுக்கு ஏற்படும் நன்மை, தீமைகளுக்கெல்லாம் தாங்கள் பிறக்கும் பொழுதே தங்கள் தலையில் பிரமன் எழுதி வைத்திருப்பது தான் காரணமென்று நம்புகின்றனர். ஒருமுறை எழுதிய எழுத்தை மறுபடியும் அழித்து எழுதப்போவதில்லை என்றும் நம்புகின்றனர். 'தலை எழுத்தைச் சிரைத்தால் போகுமோ?' என்ற பழமொழி இந்நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டு தங்கள் தலை எழுத்தே காரணம் என்றும் விதியே காரணம் என்றும் அமைதியாகச் செல்லும் போக்கே இந்நம்பிப்கைக்குக் காரணமாகும். இந்திய சமுதாயம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பெரும் மாற்றங்கள் ஏற்படாமல் தேங்கிக் கிடப்பதற்கு இந்த விதிக் கொள்கையே காரணமாகும்.

10 சோதிடம்இ பஞ்சாங்கம், இராசிப் பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள்

10.1 சோதிடம் பார்க்கம் பழக்கம் நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் இன்றும் உள்ளது. பிறந்த நேரத்தை வைத்து அதன் வருங்காலத்தைச் சொல்லுவார்கள். திருமணம் செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சாதகப் பொருத்தம் பார்ப்பதுண்டு. சோதிடங்கள் தெய்வங்களின் பெயர்களைக் கோள்களுக்கு இட்டு வழங்குகின்றன. திருத்தக்க தேவர் காலத்திலேயே குழந்தை பிறந்தவுடன் சாதகம் எழுதுவதும் திருமணத்திற்குச் சாதகம் கேட்பதும் இருந்தது என்பதால் அக்கால மக்கள் சோதிடத்தில் வைத்திருந்த நம்பிக்கை தெரிய வருகிறது. கையிலுள்ள ரேகையைப் பார்த்து வருங்காலத்தைப் பற்றிக் கூறுவதுமுண்டு. இதனை 'ரேகைப் பார்த்தல்' என்பர். விண்ணியல் நிகழ்வுகளே வாழ்வியல் நிகழ்ச்சிகளை நிச்சயிக்கின்றன என்று மக்கள் நம்பத் தொடங்கிய நிலையில் சோதிடம் வளர்ச்சியுற்றது.

11.1 அதிகாலை கனவு பலிக்குமென நம்புகின்றனர்.

11.2 கனவில் சாவைக் காண்பது நல்லது

11.3 கனவில் திருமணத்தைக் காண்பது நல்லதன்று

11.4 கனவில் மலத்தைத் தொட்டதாகக் கண்டால் செல்வம் பெருகும்

11.5 கனவில் பன்றிஇ பூ, பெண்கள், ஆடு, பச்சைமரம், விறகு முதலியவற்றைக் காண்பது நல்லதல்ல

11.6 கனவில் ஆகாயவிமானத்தைக் கண்டால் வரவிக்கின்ற ஆபத்தைக் குறிக்கும்

11.7 கனவில் ஆமையைக் கண்டால் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

11.8 கனவில் ஆப்பிள் பழங்களைக் கண்டால் வாழ்க்கையில் வெற்றி ஏற்படும்.

11.9 கனவில் இரும்பைக் கண்டால் துன்பங்கள் நேரும்

11.10 கனவில் உப்பைக் கண்டால் செல்வம் சேரும்

11.11 வெள்ளியைக் கனவில் கண்டால், வாழ்க்கையில் வெற்றியும் வேசியர் உறவும் ஏற்படும்.

11.12 எழுதிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டால், நல்ல செய்திகள் வரும்.

11.13 ஏர் உழுவதாகக் கனவு கண்டால், எடுத்த காரியங்கள் தாமதமாக வெற்றியடையும்.

11.14 கழுகு வட்டமிடுவதாகக் கனவு கண்டால், தீமை வரும்.

11.15 காகத்தைக் கனவிலே கண்டால், மரணச்செய்தி வரும்.

11.16 கிணற்றில் நீந்துவதாக கனவு கண்டால், எடுத்த காரியம் வெற்றிபெறும்

11.17 கோயிலைக் கனவிலே கண்டால், குடும்பத்தில் எதிர்ப்பு உண்டாகும்.

11.18 பொற்சங்கிலியை அணிவது போலக் கனவு கண்டால் நல்ல அறிகுறியாகும்

11.19 சந்திரனைக் கனவில் கண்டால், காதலில் வெற்றி ஏற்படும்.

11.20. ஒருவர் தாமே இறந்து விட்டதாகக் கனவு கண்டால், ஆயுள் பெருகும்

11.21 சிறைச்சாலையில் இருப்பதாகக் கனவு கண்டால், பேரும் புகழும் உண்டாகும்.

11.22 சீட்டு ஆடுவதாகக் கனவு கண்டால், மனக்கவலை ஏற்படும்.

11.23 மணியோசையைக் கேட்பதாகக் கனவு கண்டால் திருமணம் நடைபெறும்

11.24 மனைவியைத் தவிர மற்றப் பெண்களுடன் உறவு கொள்வதாகக் கனவு கண்டால் ஆபத்துகள் நேரும்

11.25 சூரியன் உதயமாவதாகக் கனவில் கண்டால், எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

11.26 சூரிய கிரகணம் பிடித்திருப்பதைக் கனவில் கண்டால், கெடுதி உண்டாகும்.

11.27 தேர்வு எழுதுவதாகக் கனவு கண்டால், உத்தியோக உயர்வு ஏற்படும்.

**12. சகுனங்கள் (நிமித்தங்கள்) பற்றிய நம்பிக்கைகள்**

சகுனம் பார்க்கும் நம்பிக்கை உலகெங்கிலும் காணப்படுகின்றது. பண்டைத் தமிழர் இதனைப் புள், நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும். நிமித்தங்கள் அனைத்தும் நம்பிக்கையின்பாற்பட்டன. நிமித்தங்களை அவற்றின் செயற்பாட்டு விளைவு கருதி இருவகையாகப் பரிக்கலாம். நற்செயலையும் நற்பயனையும் அறிவிக்கும் குறியினை நன்னிமித்தம் என்றும், தீச்செயலையும் தீமையையும் அறிவிக்கும் குறியினைத் தீ நிமித்தம் என்றும் வகைப்படுத்தலாம். இதனையே நாட்டுப்புற வழக்கில் நல்ல சகுனம் என்றும், கெட்ட சகுனம் என்றும் கூறுவர். ஒரு செயலைத் தொடங்கும்போது நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் நன்மையாக முடியும் என்றும், தீய சகுனம் தோன்றினால் அச்செயல் தோல்வியடையும் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் சகுனங்களில் பெரும் நம்பிக்கையுடையவர்கள். அவற்றுக்குரிய காரணகாரியத் தொடர்பு தெரியவிட்டாலும் முன்னோர்கள் நம்பியதால் இவர்களும் நம்புகின்றனர். கன்னிப் பெண் தண்ணீர் குடத்துடன் வருதல், வண்ணான் அழுக்கு துணியுடன் வருதல், பிணம் எதிரே வருதல், சுமங்கலியைக் காணல் போன்றவற்றை நல்ல சகுனம் என்றும், விதவை எதரேவரல், பூனை குறுக்கிடுதல், ஒற்றைப் பார்ப்பான் எதிரே வரல் போன்றவற்றைக் கெட்ட சகுனம் என்றும் கருதுகின்றனர். சகுனத்தில் மக்கட்கு நம்பிக்கை உண்டு என்பதைப் பழமொழியே எடுத்துக்காட்டுகின்றன.

‘ஆந்தை அலறினாலும் காக்கை எச்சமிட்டாலும் தீது என்பர்’

‘நீர் நிறைத்துவரினும் திருநீறு அணிந்தவரினும் நல்லது என்பர்.’

சகுனங்களைச் சிந்தனை நிலை, சொல், நிலை, செயல் நிலை என்ற மூன்று நிலைகளில் காணவேண்டும். சிந்தனை நிலையாவது ஏதாவது ஒரு செயல் பற்றியோ அல்லது பொருள் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கையில் காணப்படும் சகுனங்கள், சொல் நிலையாவது ஏதாவது ஒரு செயலைப் பற்றி

பேசிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் சகுனங்கள், செயல் நிலையாவது ஏதாவது ஒரு செயலைத் தொடங்குவதற்காகப் புறப்படும்போது காணப்படும் சகுனங்கள். இன்றைய நிலையில் பெரும்பாலும் பயணம் புறப்படும் போது தான் சகுனங்கள் பார்க்கப்படுகின்றன.

12.1.1 தாயும் பிள்ளையுமாக வருதல்

12.1.2 கோயில் மணியடித்தல்

12.1.3 சுமங்கலிகள் வருதல்

12.1.4 கருடனைக் காண்பது நல்லது

12.1.5 திருவிழாவைக் காணல்

12.1.6 எருக் கூடையைக் காணல்

12.1.7 யானையைக் காண்பது நல்லது

12.1.8 நரி இடமிருந்து வலமாகச் செல்லல்

12.1.9 பாம்புகளில் ஆணும் பெண்ணும் பிணைந்திருப்பதைக் காணல்

12.1.10 கருடன் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் செல்லல்

12.1.11 கழுகு வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் செல்லல்

12.1.12 காகம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லல்

12.1.13 கழுதை கத்துதல்.

12.1.14 பசு கன்றுக்குப் பால் கொடுத்தலைக் காணல்

12.1.15 அணில் வீட்டிற்குள் வருதல்

நாம் பயணத்தை மேற்கொள்ளும் பொழுது மலர், மஞ்சள், குடை, கிளி, மான், பழம், பசு, இரட்டைப் பிராமணர் பல்லாக்கு, வெண்ணெய், தயிர், மோர், மயில், இரட்டை விதவைப் பெண்கள், யானை, தேர், தாமரை, மலரைக் காணுதல் போன்றவைகள் நல்ல சகுனங்களாகும். பசு, புலி, யானை, முயல், கோழி, நாரை, புள்ளிமான், கொக்கு ஆகியவை வலப்பக்கமாக வந்தால், நினைத்த காரியங்கள் வெற்றியமையும். எருமை, பன்றி, கரடி, குரங்கு, நாய், கீரிப்பிள்ளை, ஆடு ஆகியன இடப்பக்கமாக வந்தால் நல்ல சகுனங்களாகும்.

**12.2 கெட்ட சகுனங்கள்**

12.2.1 பூனை குறுக்கே போதலும் எதிர்ப்படுதலும் கெட்ட சகுனம்

12.2.2 ஒற்றைப் பிராமணனைக் காணல்

12.2.3 விதவையைக் காணல்

12.2.4 எண்ணெய்ப் பானை எதிர்ப்படல்.

12.2.5 விறகுடன் வருபவரைக் காணல்

12.2.6 மண்வெட்டியுடன் எதிர்ப்படல்.

12.2.7 தும்மல் ஒலி கேட்டல்

12.2.8 ஆந்தை அலறல்

12.2.9 கருடன் இடப்பக்கத்திலிருந்து வலமாகச் செல்லல்

12.2.10 காகம் வலமிருந்து இடமாகச் செல்லல்

12.2.11 நாய் குறுக்கே செல்லுதல்

12.2.12 போர் வீரனைக் காணுதல்

12.2.13 நாய் ஊளையிடுவதைக் கேட்டல்

12.2.14 அம்பட்டனைக் காணல்

12.2.15 வண்ணான் வெளுத்த துணியுடன் வருதலைக் காணல்

12.2.16 முக்காடிட்டவரைக் காணல்

பயணத்தை மேற்கொள்ளும்போது கோடரி, கத்தி, கடப்பாரை, வீட்டுக்குத் தூரமான மங்கை, பாம்பு, குரங்கு, ஆடு, கழுதை, நெருப்பு, நோயாளி, விறகு சுமை, ஏணி முதலியவற்றைக் காண்பது கெட்ட சகுனமாகும்.

**12.3 பல்லி சகுனம்**

மனிதரால் பார்க்கப்படும் சகுனங்களில் மிக முக்கியமானது பல்லி சகுனம். நமது சமுதாயத்தில் பல்லி சகுனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததால் 'கௌரி சாஸ்திரம்' என்ற நூலிலேயே நமது முன்னோர்கள் இயற்றியுள்ளனர். பல்லிசகுனம் என்பது சொல் பலன், விழும் பலன் என இரண்டு வகைப்படும். பல்லி சொல் எண்ணிக்கயைக் கொண்டு பலன் சொல்லுவர். எண்ணிக்கை மட்டுமின்றி திசையை வைத்தும் கிழமையை வைத்தும் பலன் சொல்லுவர். பல்லி விழும் பலனையும் நமது முன்னோர்கள் கண்டுணர்ந்துள்ளார்கள்.

சிரசில் - மரணம்

மூக்கில் - நோய்

வயிற்றில் - குழந்தை

குறியில் - கேடு

முழங்காலில் - கலகம்

பாதத்தில் - பிணி

இடக்கையில் - மரணம்

வலக்கையில் - பெரியசாவு

உடம்பில் - தீர்க்காயுள்

பல்லி உடம்பில் விழும் இடத்திற்கு இடம் வேறுபட்ட பலனை உணர்த்துகின்றது. இத்துடன் பல்லிகளின் வகைஇ நிறம், இருப்புநிலை முதலியவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**1.3 மந்திரங்கள் பற்றிய நம்பிக்கைகள்**

சமயங்கள் தோன்றுவதற்க முன்னுள்ள நிலையை மந்திர ஆற்றலின் நம்பிக்கைமிக்க காலகட்டமாகக் கருதுவர். மந்திரம் என்பது போலச் செய்தல் (Imitative) என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. நாம் செயல் புரிந்து அது போல செயல் புரிய இயற்கையினைச் செயற்பட வைப்பதே அதன் நோக்கமாகும். தம்மைப் போலவே இயற்கைக்கும் ஆசைகளும் உணர்ச்சிகளும் இருக்கும் என்று நம்பினர். சூரிய ஒளியில் குதூகலித்துப் புன்முறுவல் செய்வதும் சூறாவளியில் கடஞ்சினமுற்றுக் கர்ஜிப்பதும் இயற்கை இயங்குவதாக நம்பி அதற்கு உணர்ச்சிநிலையையும் உயிர்நிலையும் கற்பித்தனர். இந்தக் கற்பனையிலிருந்து தான் மந்திரம் தோன்றியது எனலாம். இயற்கைக்கும் ஆவி உண்டு என நம்பினர். மாயமந்திரங்களால் ஆவியைக் கட்டுப்படுத்தவும் திருப்திப்படுத்தவும் முனைந்தனர். காலப்போக்கில் மாயமந்திரங்களை இயற்கையைக் கட்டுப்படுத்தவும்இ பகைவர்களை அழிக்கவும், நோயைக் குணப்படுத்தவும் பயன்படுத்தினர். நான்மணிக்கடிகை எனும் நூல் மந்திரத்தால் நாகப்பாம்பினைக் கட்டுப்படுத்தலாம் எனக் கூறுவது இங்குக் குறிப்படத்தக்கது.

**நாட்டுப்புற இயலும் மொழியிலும்**

## (Folklore and Linguistics)

மனிதனின் பிறப்போடு பிறப்பாய் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்த நிற்பது மொழி. தமது கருத்தைப் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக இருப்பது மொழி. மனிதவாழ்விலும் நாகரிகத்திலும் மொழியின் பங்கு மிகச் சிறப்பானதாகும். அம்மொழியைப் பற்றிய ஆய்வை மொழியியல் என்கிறோம். ஒரு மொழியின் இயல்பை உள்ளவாறு ஆராய்ந்து கூறுவது விளக்க மொழியியல். பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றத்தை ஆராய்வது வரலாற்று மொழியியல். மொழியில் ஏற்படும் மாற்றங்களை ஒலியன்யல் மாற்றம், உருபனியல் மாற்றம், சொற்றொடரமைப்பு மாற்றம், சொல் பொருள் மாற்றம் என்ற பிரிவின் கீழ் ஆராயலாம்.

நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியல், சமூகவியல் முதலியவற்றிற்குமுள்ள தொடர்பை நோக்க, நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமுள்ள தொடர்பு மிகக் குறைவானதேயாகும். அதுவும் ஒரு பக்கத் தொடர்பகும். 19ம் நூற்றாண்டில் இவ்விரண்டு துறைகளும் வளர்ந்தபோது, மொழியியல் அறிஞர்கள் இத்துரையில் ஈடுபாடு கொண்டனர். மொழியியல் ஆய்வு நெறி முறை நாட்டுப்புறவியல் ஆய்வு முறைக்கு மாதரியாக அமைந்தது. பின்னிஸ் அய்வு நெறி மொழியியலில் பயன்படுத்தப் பெறும் ஒப்பியல் முறை (Comparitive method) இங்கேயும் பயன்படுத்துதல் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறவியலின் தந்தை எனக் கருதப்படும் ஜேக்கப் கிரீம் (கி.பி. 1785 – 1863) அவர்கள் மொழிநூல் (Philology) துறையைச் சார்ந்தவர். இவர் மொழியியலில் பயன்படும் ஒப்பு ஆய்வை நாட்டுப்புற இயலுக்கும் பயன்படுத்தினார். மொழியை மீட்டுருவாக்கம் செய்தது போன்று புராணங்களையும் மீட்டுருவாக்கம் செய்து அது போன்றப் பரவிய நாடுகளைப் பற்றி ஆய்வு செய்தார். வட மொழியிலும் ஒப்பாய்விலும் வல்லுநரான மாக்ஸ்முல்லர் (கி.பி. 1823 – 1900) இத்துறையிலும் ஈடுபட்டு ஜேக்கப் கிரீமின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் புராணங்களை ஆராயலானார்.

ஓப்பு ஆய்வு நெறிமுறைகள் நாட்டுப்புறவியலில் காணப்படுவதை மறுக்க முடியாது. 20ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் அமெரிக்க நாட்டு மானிடவியல் பேரறிஞர் போவாஸ் (Boas) போன்றோர்கள் அமெரிக்க இந்தியர்களிடையே காணப்படும் நாட்டுப்புறக் கதைதளைச் சேகரித்து மொழி ஆய்வு செய்தனர். நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமுள்ள தொடர்பு வளரலாயிற்று, நாட்டுப்புறவியலில் பயன்படுத்தப்படும் அமைப்பில் முறை (Structural method) இத்தொடர்பை மேலும் வலுப்படுத்தியது. நாட்டுப்புறவியலும் மொழியியலின் ஒரு கூறான Discourse – analysis – க்குப் பெருந்துணை புரிவதையும் இங்குக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ருஷ்ய நாட்டுப்புறவியல் பேரறிஞர் பிராப்பின் ‘Morphology of folktales’ என்ற நூலின் முலம் நாட்டுப்புறவியலில் அமைப்பில் ஆய்வுமுறை வளரலாயிற்று. ஆலன் டாண்டல் (Alan Dundes) அவர்கள் மாறாத அலகு (Constant unit) மாறும் அலகு (Variable unit) என்பதனைக் கென்னத் பைக்கின் (Kenneth l.Pike) எமிக் (Emic) எடிக் (Etic) உடன் தொடர்பு படுத்திக் காட்டுகின்றனர். லெவிஸ்ட்ராஸ் (Levistrauss) அவர்கள் புராணங்களை ஆராய அமைப்பில் முறையைப் பயன்படுத்தினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. லெவிஸ்ட்ராஸ் அவர்கள் மொழியானது ஒலியனியல், உருபனியல் நிலையில் ஓர் அமைப்புக்கு உட்பட்டது என்பதைக் கண்டறிந்தார். அதே போன்று

நாட்டுப்புறக் கதைகளும் புராணக்கதைகளும் ஓர் அமைப்புக்குட்பட்டது என்பதைக் கண்டறிந்தார்.

'இராஜா - இராணி

இடையன் - இடைச்சி'

என்பதில் ஆண், பெண் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் சமூக உயர்வு தாழ்வு என்ற நிலை வெளிப்படவில்லை. பொகடரேவ்வும் (hogatyrev) ஜேக்கப்ஸனும் (Jakobsobn) சசூரின் மொழி (Language) பேச்சு (Parole) என்ற வேறுபாடு நாட்டுப்புறவியலுக்கும் பொருந்தும் என்று கூறுகின்றனர். வாய்மொழி சார்ந்த நாட்டுப்புறவியல் பேச்சு ஆய்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஏனெனில் நாட்டுப்புற வழக்காறுகள் எழுதப்படா மரபு வகையைச் சார்ந்தனவாகும். நாட்டுப்புற இயலானது வாய்மொழியாகப் பரவுவதாலும் மரபு வழிப்பட்டதாலும் ஆசிரியர் பெயர் அறியாமையாலும் சமூகத்தினின்று மறைய வாய்ப்புண்டு என வாதிடுகின்றனர். ஆனால், ஆலன் டாண்டஸ் போன்றோர்கள் நாட்டுப்புற வழக்காறுகள் கல்லாதவர்களிடம் மட்டுமின்றி கற்றவர்களிடமும் காணப்படுகின்றன என்று கூறுகிறார்.

நாட்டுப்புற இலக்கியங்கள் பேச்சு வழக்கினை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் மொழியியலாளர்கள் பேச்சுத் தமிழை ஆராய்ந்து, விளக்க இலக்கணம் (Descriptive grammer) எழுதுகின்றனர். நாட்டுப்புறப்பாடல்களைக் கூர்ந்து நோக்கின் ஆந்தந்த வட்டார வழக்கினைக் காணலாம். பேச்சுத்தமிழில் காணப்படும் மாற்றங்களையும் அறியலாம். 17ஆவது நூற்றாண்டைச் சார்ந்த இராமப்பய்யன் அம்மானை மூலம் அக்கால பேச்சு வழக்கை நன்கு அறிகிறோம். 'வைப்பாளன்' போன்ற வழக்கறிந்த சொற்களையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் சேகரிக்க முடிகின்றது. சமூக மொழியியல் ஆய்வுக்கும் இப்பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றது. சமூகத்தில் காணப்படும் வேறுபாட்டிற்கேற்ப அவர்களது பாடல்களிலும் வேறுபாட்டினைக் காண்கிறோம்.

நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்கும் உள்ள தொடர்பினை அமைப்பில் பள்ளி (Structural Schol) தோன்றியது மூலம் நன்கு அறியலாம். 1960 ஆம் அண்டளவில் உருவான அமைப்பில் கோட்பாடு இன்றைய நாட்டுப்புற ஆய்வில் மிகச்சிறந்த கோட்பாடாகக் கருதப்படுகின்றது. இக்கோட்பாடு முறையினால் வகைப்படுத்துதல் எளிமையாகின்றது. நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமிடையே உள்ள கொள்வினை, கொடுப்பனையை ஆய்வுக்கோட்பாட்டில் கண்டோம். நாட்டுப்புற இலக்கியங்கள் மொழியியல் ஆய்வுக்குப் பயன்படுவதையும் இவ்விரண்டிற்குமுள்ள தொடர்பினையும் ஓரளவ கண்டோம்.

இவ்வாறு நாட்டுப்புறவியல், மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவ இயல், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே நாட்டுப்புற இயல் ஆய்வு என்பது இன்று பல்துறை இணைந்த ஆய்வாகப் (Intericiplinary study) பரிணமித்துள்ளது.

**இப்பாடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்:**

| | |
|---|---|
| சு. சண்முகசுந்தரம் | நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1980. |
| அ.மு.பரமசிவானந்தம் | வாய்மொழி இலக்கியம், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1964. |
| தே. லூர்து | நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், திருநெல்வேலி, 1976. |

**மாதிரி வினாக்கள்:**

1. நாட்டுப்புறவியலில் ஒயிலாட்டம் இடம் பெறும் விதத்தைச் சுருக்கி வரைக:-
2. தெருக்கூத்து – குறிப்பு தருக?
3. நாட்டுப்புறநம்பிக்கைகள் குறித்து கட்டுரை வரைக:-

## குறிப்பு

## குறிப்பு